Koviloor Digital Library

Acc
No 25133

பேராசிரியர்
சுந்தரம்பிள்ளை
இயற்றிய

மனோன்மணீயம்

விளக்கமும்
விமர்சனமும்

பி.ஸ்ரீ.

Koviloor Digital Library

Koviloor Digital Library

72-4

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இயற்றிய

மனோன்மணியம்

அன்பளிப்பு :
தஞ்சாவூர்
நடராஜ பிள்ளை உலகநாதன் M.A.B.T

விளக்கம் – விமர்சனம்
பி.ஸ்ரீ.

பதிப்பாசிரியர்:
முல்லை பி.எல். முத்தையா

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
25133

அன்பளிப்பு :
தஞ்சாவூர்
நடராஜ பிள்ளை உலகநாதன் M.A.B.T

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41–B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை– 600 098.
☎: 26251968, 26359906

Koviloor Digital Library

Title : MANONMANIAM

Copyright : Publisher

First Edition : 1992

Revised Edition : June, 2007

Code No : A 313

ISBN : 81-234-0078-0

No. of pages : x + 308 = 318

Price : Rs.75.00

Type set : NCBH Computers

Printed at : Cossmic Printers Chennai-05

Koviloor Digital Library

பி.ஸ்ரீ. அறிமுக உரை

மனோன்மணியம் என்ற இந்த நாடகத்தை ஆசிரியரே முதலாவதாக 1891–ல் வெளியிட்டார். அடுத்த ஆண்டில் 'கமலாம்பாள் சரித்திர' ஆசிரியரான திரு. ராஜமையர் இந்நாடகம் பற்றிய விமர்சனம் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். அந்தக் கட்டுரை சென்னைக் கிறிஸ்துவ கலாசாலைப் பத்திரிகையில் பிரசுரமாகி, ஆங்கிலப் பயிற்சியுடையவர்களுக்கு இந்நூலின் அருமை பெருமைகளை நன்கு உணர்த்தியது. ஷேக்ஸ்பியரின் போக்கைத் தழுவி அந்த மகா நாடகங்களின் கருத்துப் பொருத்தத்துடன் ஒரு புதிய இலக்கியப் பெரு முயற்சி வெற்றி பெற்றுவிட்டதாக அந்த நாளிலேயே தமிழும் ஆங்கிலமும் ஒருங்கே பயின்றிருந்த அறிஞர்களும் இலக்கிய ரசிகர்களும் கருதுவாராயினர்.

இந்த நாடக நூல் கலாசாலை வகுப்புகளில் அடிக்கடி பாடமாக உபயோகிக்கப் பெற்று வருகிறது. ஆங்கிலம் அறியாத பொதுமக்களாலும் பிரியமாக வாசிக்கப்பட்டு வருகிறது. நாடக மேடைகளில் நடிப்பதற்கும் இந்த நாடகத்தை இசைவித்து உபயோகித்துக் கொள்வதுண்டு. இம்முயற்சியைப் பின்பற்றி இதற்கு ஈடாக வேறொரு தமிழ் நாடக நூல் நாளது வரை தோன்றாததே இதன் தனிச் சிறப்புக்கு ஒரு தக்க சான்றாகும்.

பதிப்பாசிரியப் பண்பில் டாக்டர் சாமிநாதையருக்கு நிகராகத் திகழ்ந்து, தமிழ்ப் பெரும்புலமையுடன் ஆங்கிலத்திலும் தக்க பயிற்சியும் நிகரற்ற ஆராய்ச்சித் திறனும் வாய்க்கப் பெற்றிருந்த எனது பேரன்பர் காலஞ்சென்ற பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை 36 ஆண்டுகளுக்கு முன் இந்நாடக நூலுக்கு ஒரு நல்ல பதிப்பை அளித்து உதவினார். அந்தப் பதிப்பின் ஒரு தனிச் சிறப்பு ஆங்கிலத்தில் திரு.கே.என். சிவராஜ பிள்ளை எழுதியிருந்த விவரமான குணச்சித்திர ஆய்வுரை ஆகும்.

Koviloor Digital Library

அத்தகைய சிறப்பு வாய்ந்த விமர்சனக் கட்டுரைகள் தமிழில் எழுதப் பெறவேண்டும் என்ற ஆசை தூண்ட, 'தினமணி' ஆசிரியர் திரு. ஏ.என். சிவராமனது விருப்பத்திற்கு இணங்கி, சுமார் பத்தாண்டுகளுக்கு முன் 'தினமணி'ப் பத்திரிகையில், 'மனோன்மணியம் விளக்கமும், விமர்சனமும்' என்ற தலைப்பில், சில கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதிவந்தேன். அக்கட்டுரைகள் பொதுவாகத் தமிழறிஞர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றதுடன், 'மனோன்மணிய' நாடகப் பிரியர்களின் உள்ளத்தைச் சிறப்பாகக் கவர்ந்தன. அவை முற்றும் திருந்திய வடிவில், இந்நூலுக்கு ஒரு விசேஷ முன்னுரையாக அமைந்திருக்கின்றன. இந்த நாடக பொக்கிஷத்திற்கு இம்முன்னுரை ஒரு திறவுகோலாக உதவும் என்று நம்புகிறேன்.

அறுபத்திரண்டு ஆண்டுகட்குமுன் மனோன்மணிய ஆசிரியர்.' டாக்டர் உ.வே. சாமிநாதையருக்கு எழுதிய அருமையான கடிதம் ஒன்றும் இப்பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது 1935ஆம் ஆண்டில் இது 'கலைமகள்' இதழில் வெளிவந்தது. காரியாலயத்தினர் இசைவு பெற்று, தில்லித் தமிழ்ச் சங்கத்தார் உதவியது.

பி.ஸ்ரீ.

Koviloor Digital Library

டாக்டர் உ.வே. சா. அவர்களுக்கு பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 1896-இல் எழுதிய கடிதம்

(மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள், டாக்டர் சாமிநாதையரின் நண்பர்களில் ஒருவர்; மனோன்மணிய நாடகத்தின் பகுதிகள் பாடமாக வைக்கப்பட்ட காலங்களில் ஐயரவர்களை வேண்டி அவர்கள் செய்த திருத்தங்களை விருப்பத்தோடு ஏற்று மகிழ்ந்தவர்.)

சிவமயம்

தயவு செய்து அனுப்பித்த எழுத்தும் திருத்தங்களும் கைசேர்ந்தன. நேற்று சாயரக்ஷை வரையும் இரண்டு பிரசங்கங்கள் எழுதி வாசிக்க வேண்டிய அவசர அலுவல் வழக்கமானவற்றோடு தொடர்ந்து கொண்டமையால் சற்று சாவகாசமில்லாமல் மறுபடிக்கும் வந்தனத்திற்கும் காலம் தாழ்த்தமை மன்னிக்க வேண்டுகிறேன். திருத்தங்களைக் கவனித்து மேலும் யாதேனும் சந்தேகம் தோற்றுகிறவைகளைத் தெரிவித்துக்கொள்வேன். வியாதியோடு இவ்வளவு எனக்காகச் சிரமம் எடுத்துக்கொண்டதற்காக மனப்பூர்வமாக நன்றி பாராட்டுதலன்றி மற்றென்ன உபசாரம் யான் சொல்லத் தக்கது? கண் வியாதிகள் அறிந்த நல்ல வைத்தியரிடம் அன்றிச் சாதாரணமானவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு யாதும் பிரயோகிக்கத் தக்கதன்றே. இப்போது ஏது தன்மையிலிருக்கிறதென்று அறிய அவாவுகிறேன். தாங்கள் தமிழுக்கு ஒருகண். தங்கள் கண்ணுக்கு வருத்தமென்று கேட்க மனம் சகிக்கிறதில்லை. இனியும் தங்களால் ஆக வேண்டுமவை அனந்தம். சகாயத்திற்கு ஒன்றோ இரண்டோ ஆள் அவசியம். அவ்வகைச் செலவிற்கு என்ன செய்யக் கூடியதாக இருக்கும்? என்னாலியன்றவை செய்ய ஆயத்தம். தஞ்சாவூரில் மகா– ா– ாஸ்ரீ கல்யாணசுந்தரமய்யர் அவர்களை யான்

Koviloor Digital Library

சென்ற ஆண்டு கண்ட காலை இவ்வகையான முயற்சிக்குத் தாம் அனுகூலிக்கும் விருப்பமுடையவராகப் பேசினர். அவர்கள் ஒரு வாக்குச் செலவிடுவதனால் மடங்களில் அழியும் பொருளில் எவ்வளவு இதில் கதியடையக் கூடாததாகும்? அவர்களைத் தாங்கள் ஏன் பிரேபிக்கலாகாது? சாது சேஷய்யர் அவர்கள் மூலமாயினும் இலகுவில் நிறைவேறலாமே. தாங்கள் இனித் தனியே யாவும் பார்க்கலாமென்ற எண்ணத்தைத் தயவுசெய்து விட்டுவிட வேணும். சஹாயத்திற்கு ஆளின்றி இனியும் முயற்சிக்கில் எங்ஙனம் தங்கள் நேத்திரவியாதி வலுத்துவிடுமோ என்று அஞ்சியிவ்வளவு எழுதலானேன். நம்மனையார் தேக நிலையைக் கருதும்போது, "இருதலைக் கொள்ளியினுள்ளெறும்பு" என்றே யுண்மையாய் எண்ணவேண்டியதாக இருக்கிறது. உழைத்தால் சரீர உபாதி துணிபாக நிற்கிறது. உழைக்காவிட்டால் சரீர மிருந்தென்ன பயனென்ற சோகமும் அப்படியே. ஏது செய்ய? கடவுள் இச்சை போல நடக்கட்டும்.

திரு அனந்தை
(29-11-1986)
16, கார்த்திகை

தங்கள் நண்பன்
பி. சுந்தரம்பிள்ளை

Koviloor Digital Library

மறுபதிப்புக்காக மலர்ந்த கவிதை

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை
செய்யுளாக
'மனோன்மணியம்' நாடகத்தை
இயற்றித் தந்தார்
பாயிரமாய் அவர் செய்த
தமிழ்வணக்கம்
பாடத்திட்ட நூல்களெல்லாம்
மணக்குதன்றோ

காதல் வீரம் சூழ்ச்சி நேர்மை
தியாகமெல்லாம்
கவிமழையாய்ப் பொழிந்து தந்தார்
இனிமையாக
பாத்திரங்கள் பேசுகின்ற
பாங்கு எல்லாம்
பசுமரத்தில் பொன் ஆணிபோல்
பதியுமன்றோ

மஞ்சள் கூடக் கயவன் கை
தொட்டுவிட்டால்
கரியாக மாறுகின்ற
தன்மை சொன்னார்
மந்திரியின் சொல்கேட்டு
மன்னன் மதி
கெட்டுப்போகும் நிலை சொல்லி
நீதி சொன்னார்

Koviloor Digital Library

பதவி ஆசை பல தீங்கு
செய்திருக்கும்
நாட்டைக் காட்டிக்கொடுக்கின்ற
கேடு செய்யும்
தர்மத்தைச் சூது கவ்வி
வதைத்திட்டாலும்
தர்மமே வெல்லும் என்ற
நெறியைச் சொன்னார்

நன்மை செய்வோர் சொல்
அம்பலம் ஏறவில்லை
கடைசியிலே நல்லோர் சொல்
வென்றதன்றோ
உண்மை-ஊமையாயிருந்து
வருந்தினாலும்
ஒருநாள் அது புகழ் அடையும்
உறுதி சொன்னார்

நாயகியும் நாயகனும்
சந்திக்காமல்
கனவிலே காதல்கொண்டு
கனிந்திருந்தார்
போர் வந்து காதல் தடை
யுற்றபோதும்
காலத்தின் கருணையாலே
இணைந்துகொண்டார்

சுந்தரனார் பெயரினிலே
பல்கலைக்கழகம்
பல கலைகள் கற்பித்து
உயர்ந்து ஓங்கும்
இந்நூலைக் கற்பவர்கள்
நல்லவண்ணம்
வாழும் முறை கண்டுணர்ந்து
உயர்வார் திண்ணம்.

—பதிப்பகத்தார்

(ஆசி. [illegible])

Koviloor Digital Library

உள்ளுறை

		பக்கம்
1. மனோன்மணியமும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும்	★★	1
2. மனோன்மணியம் கதைச் சுருக்கம் – விளக்கம் – விமர்சனம்	★★	9
3. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை முகவுரை	★★	76
4. மனோன்மணியம் பாயிரம்	★★	88
உரைக் குறிப்புகள்	★★	282

Koviloor Digital Library

Koviloor Digital Library

1

மனோன்மணியமும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும்

மறுமலர்ச்சியின் வித்து

தமிழின் மறுமலர்ச்சிக்கு மூலகாரணம் பாரதியின் புரட்சிக் கவிதைதான் என்று இந்நாளில் சாதாரணமாய்க் கூறுவதுண்டு. பாரதியின் கவிதையும் பழைய தமிழ்க் கவிதையின் பரம்பரையிலே ஊறி வந்ததுதான். முக்கியமாக இராமலிங்கசுவாமி, பாரதியார் கவிதைக்கு ஒருவாறு வழி காட்டியவர் எனலாம். எனினும், இராமலிங்கசுவாமியின் கவிதையை மறுமலர்ச்சித் தமிழ் என்று சொல்லமுடியாது.

சாதி சமய பேதங்கள் ஒழிய வேண்டுமென்றும் 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்'போக வேண்டுமென்றும் இராமலிங்கசுவாமி புரட்சிகரமான கொள்கைகளைப் பாடியிருந்த போதிலும், அவர் வரையில் வாழையடி வாழையாக வந்த பழைய தமிழ்க் கவிகளில் கடைசியானவர் இராமலிங்கர் என்றுதான் சொல்ல வேண்டும். பாரதியாருக்கு முன் எவரை யாவது புதுமைக் கவி என்று குறிப்பிட வேண்டுமென்றால், மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளையைத்தான் அப்படிச் சொல்லமுடியும்.

புதிய கருத்துக்கள், புதிய நடை

மனோன்மணியத்தில் எத்தனையோ புதுமைக் கருத்துக்களைப் பார்க்கலாம்; ஆங்கில இலக்கியக் கருத்துக்களையும் விஞ்ஞானக் கருத்துக்களையும் பார்க்கலாம். 'சைகாலஜீ' என்ற புதிய உளநூற் கருத்துக்களையும் பார்க்கலாம்.

எத்தனை பெட்டியுள்
வைத்துநாம் பூட்டினும்,
வானுள மின்னொளி
'வடக்கு நோக்கி'யைத்,

Koviloor Digital Library

தான் அசைத்(து) ஆட்டும்
தன்மைநீ கண்டுளை ?
போதம் கரைந்து, மேல்
பொங்கிடும் அன்பைப்
பூத யாக்கையோ
தடுத்திடும் ? புகலாய் !

என்று இராமலிங்க சுவாமி போன்ற ஒரு கவிஞர் பாடியிருக்க முடியுமா? ஆங்கிலக் கல்வியிலும் கலைகளிலும் ஊறிப்போன ஆசிரியர் சுந்தரம்பிள்ளையின் தனிச்சிறப்பு வாய்ந்தவர்க்கு இது.

ஆங்கிலக் கவி மரபிலும் ஆங்கில நாடக மரபிலும் ஈடுபட்ட இவருள்ளம் ஆங்கில நடையின் போக்கையும் தமிழிலே கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. இதற்கு ஓர் உதாரணம்:

இருசரம் இன்றி
எப்போ ரிடையும்
ஏகார் மதியோர்;
இதில்வரு கே(டு) என் ?

இப்பகுதி தமிழ் ஒன்றே தெரிந்த பண்டிதர்களுக்குச் சரியாக விளங்குவதில்லை. இருசரம் என்பது வில்லம்பு, சொல்லம்பு என்ற இரண்டையும் குறிக்கும் என்று உரை எழுதினார், நவீன உரையாசிரியர்களில் தலைசிறந்து விளங்கிய பண்டிதர் சடகோபராமானுஜாசாரியர். ஆங்கிலப் பயிற்சியுள்ளவர்களுக்கோ 'He has two strings to his pow' என்ற ஆங்கில வாக்கியம் ஞாபகத்திற்கு வந்துவிடும். ஓர் உபாயம் பயன்படாவிட்டாலும் வேறோர் உபாயத்தில் காரியசித்தி செய்துகொள்ள உத்தேசிக்கிறான் என்பது கருத்து. ஆனால் இப்படித் தமிழரை மயக்கவைக்கும் ஆங்கில மரபை அபூர்வமாகத்தான் ஆசிரியர் கையாளுகிறார்.

பொதுவாக, இந்த ஆசிரியரின் புதுமைத் தமிழ் ஆங்கில நடையையும் தனதாக்கிக்கொள்ளுகிறது. புதுமைகளான ஆங்கில நயங்களையும் பொருளழகையும் தமிழாக்கித்தான் உபயோகித்துக்கொள்கிறது.

ஊக்கமே பாக்கியம்;
உணர்விலார் வேறு
பாக்கியம் ஊழ்எனப்
பகர்வ தெலாம் பாழ்

Koviloor Digital Library

என்று விதியைப் பழிக்கும் புதுமைக் கருத்து எவ்வளவு இயற்கையாகத் தமிழாகிவிடுகிறது!

இன்னும் ஓர் உதாரணம் பார்க்கலாம். கிரகங்களின் செயலென்றும், நட்சத்திரங்களின் செயலென்றும் சோதிட சாஸ்திரிகள் சொல்லுகிறார்களல்லவா? அந்த நம்பிக்கையையும் கண்டிக்கும் செய்யுட் பகுதி ஆங்கிலக் கருத்துகளைத் தழுவிய போதிலும், எப்படி அருமையான தமிழாகிவிடுகிறது பாருங்கள்:

வான் காடதனில்
வறிதே சுழலும்
மின்காள்! வேறும்
உளதோ விளம்பி
மதியிலா மாக்கள்
விதியென நும்மேல்
சுமத்தும் சுமையும்,
தூற்றும் சும்மையும்,
உமக்கிடு பெயரும்
உருவமும் தொழிலும்,
அமைக்கும் குணமும்,
அதில்வரு வாதமும்
யுக்தியும் ஊகமும்
சக்தியும் பகைமையும்
ஒன்றையும் நீவிர்
உணரீர்!

அன்பளிப்பு :
தஞ்சாவூர்
நடராஜபிள்ளை உலகநாதன் M.A.B.T

பாரதிக்கு முன்னமே

சோதிட நிந்தனை போன்ற புதுமைக் கொள்கைகளில் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை பாரதியாருக்கும் ஒரு வழிகாட்டிதான்.

சோதிடம் தனை இகழ் என்பது போன்ற புதிய ஆத்திசூடி வாக்கியங்களில் சில, மனோன்மணியக் கருத்துக்களின் எதிரொலிகளோ என்று சொல்லும்படி இருக்கின்றன.

தேசபக்திக் கருத்துக்கள் சிலவற்றிலும்கூட மனோன்மணிய ஆசிரியர் பாரதியாருக்கு வழிகாட்டினாரோ என்று கூடச் சிலர் வாதிக்கும்படி அத்தகைய கருத்துக்களையும் இந்த நாடக நூலில் காணலாம்.

Koviloor Digital Library

ஆசிரியர் சுந்தரம்பிள்ளையும் சுதந்திரத்தை உயிராக வற்புறுத்தியிருக்கிறார். உரிமைகளுக்காகப் பாடுபட வேண்டும் என்கிறார். தேசாபிமானமும் அக்கிரமத்தைக் கண்டு கொதித்தெழும் நெஞ்சும் இன்றியமையாதன என்கிறார். பாஷாபிமானமும் தேசாபிமானமுமே பொருளாக மதிக்கத்தக்கவை என்கிறார்.

அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபிமானம் உள்மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு ?

என்ற அடிகளில் பாரதியாரின் தேசபக்தி வெற்றியையும் வீர வெறியையும் கூடப் பார்க்கிறோமல்லவா?

பாரதிக்கு முன்னமே இத்தகைய புதுமைத் தமிழ் நூல் ஒன்று தோன்றியது தமிழர்களின் பாக்கியம் என்றே சொல்லவேண்டும். இந்நூலைத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்தென்றும்: பாரதியாரையும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையையும் இம்மறுமலர்ச்சியின் ஆரம்ப விளைவு என்று கருதலாம்.

எனவே, தமிழ் மறுமலர்ச்சியில் சிரத்தையுள்ளவர்கள் எல்லாம் மனோன்மணியத்தை நன்றாகக் கற்கவேண்டும். மறுமலர்ச்சியின் முதலாவது முயற்சியே இவ்வளவு தூரம் வெற்றியடைந்திருப்பது பாராட்டத்தக்கதல்லவா?

தமிழில் ஒரு புதிய படைப்பு

இந்த நாடகம் 1891ஆம் ஆண்டில், அதாவது பாரதியார் பள்ளிச் சிறுவராகவும் விளையாட்டுப் பிள்ளையாகவும் இருந்த காலத்திலேயே அச்சேறி உலாவத் தொடங்கிவிட்டது. இது ஷேக்ஸ்பியர் நாடகங்களின் ரகத்தைச் சேர்ந்தது. லிட்டன் பிரபு செய்யுளாக ஆக்கியிருந்த இரகசிய வழி (The Secret Way) என்னும் ஆங்கிலக் கதையை முதல் நூலாகக்கொண்டது. எனினும் ஆங்கிலக் கதையை முதல் நூலாகக்கொண்டது. எனினும் மனோன்மணியத்தைத் தமிழர்கள் ஒரு புதிய கலா சிருஷ்டியாக முதல் நூலாகவே மதிக்கும்படி வெற்றி பெற்றிருக்கிறார் ஆசிரியர். லிட்டன் பிரபுவின் கதையை ஒரு தமிழ்க் கதையாகவோ உருமாறிப் பிறக்கும்படி இவர் செய்துவிட்டார். தமிழ்ச் சரித்திர சம்பந்தமான ஒரு கதையோ என்று கூடப் பிரமிக்குமாறு செய்திருக்கிறார்.

Koviloor Digital Library

நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்களையெல்லாம் லிட்டனின் ஆங்கிலக் கதையிலும் காண்கிறோம். கதாநாயகியான மனோன்மணி, அவள் தந்தையான ஜீவகன், இவர்களுடைய ஞானத் தந்தையான – அதாவது குருவான – சுந்தரமுனிவர், மந்திரியான குடிலன், சேரமன்னனாகிய புருஷோத்தமன் இவர்கள் எல்லாம் இரவல் பாத்திரங்களே. மனோன்மணிய சுந்தரமுனிவருக்கு பக்தி அதிகம். குடிலனுக்கு வஞ்சனை அதிகம். அவ்வளவுதான்.

கதாநாயகியும் அவளுடைய தந்தையும் நாடகப் பாத்திரங்களாவதற்கு இன்றியமையாத மாறுதல்களையே பெற்றிருக்கிறார்கள். மற்றபடி கதையின் முக்கிய அம்சங்களில் கூட இந்த நாடகம் முதல் நூலாகிய ஆங்கிலக் கதையின் போக்கைத் தழுவியே செல்லுகிறது. கதையை நாடகமாக்குவதற்காகக் கூட்டியும் கழித்தும் ஆசிரியர் கையாண்டிருக்கும் உபாயங்களோ, ஷேக்ஸ்பியரைத் தழுவிய ஒரு புதுமுறை.

எனினும், கதையைத் தமிழ்க் கதையாக்கி நாடகத்தையும் தமிழ் நாடகமாக்கிவிட்ட அறிவுத் திறமையை யாரே பாராட்டாமலிருக்க முடியும்?

உயர்ந்த லட்சியங்களையும் வேதாந்தக் கொள்கைகளையும் தமிழருள்ளத்திற்கு அமுதமாகும்படி அமைத்திருக்கும் ரீதியும் பாராட்டத்தக்கது. எப்படிப் பார்த்தாலும் இந்த நாடகத்தைத் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய சிருஷ்டி என்றும், தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்து என்றும் தைரியமாகச் சொல்லலாம்.

பழமைக்கும் புதுமைக்கும் பாலம்

மனோன்மணியத்தைத் தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்தாக மதிப்பிடுவதோடு, பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலமாகவும் கருதலாம். பாயிரத்துடனும் கடவுள் வணக்கத்துடனும் இந்த நாடகம் ஆரம்பம் ஆவதே பழமையோடு உள்ள தொடர்பை ஒருவாறு வற்புறுத்திக் காட்டுகிறது.

வேத சிகையும் விரிகலையும் மெய்யன்பர்
போதமும் போய்த்தீண்டாப் பூரணமே! – பேதமற
வந்தெனைநீ கூடுங்கால் வாழ்த்துவர் யார்? வாராக்கால்
சிந்தனையான் செய்ம்முறைஎன்? செப்பு?

Koviloor Digital Library

என்று கடவுள் வணக்கம் செய்துகொண்டு ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் பின்பற்றி எழுந்த இந்நாடகத்தைத் தொடங்குவது சற்று விசித்திரமாகவே இருக்கிறதல்லவா?

இத்தகைய வேதாந்தப் போக்கு நாடகத்தின் ஒவ்வோர் அங்க முடிவிலும் தன்னை வெளியிட்டுக் கொள்வதைக் காண்கிறோம். இந்த நாடகக் கதையைத் தத்துவ சோதனை செய்கிறவர்களுக்கும் அனுகூலமாய் அமைந்திருப்பதாக ஆசிரியரே தமது முகவுரையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கடவுள் வணக்கத்தை அடுத்து தமிழ் வணக்கமும் செய்துகொள்கிறார் ஆசிரியர். தமிழைத் தெய்வமாக்கி வழிபடுவதும் ஒரு பழைய சம்பிரதாயம்தான்.

மறைமதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்கு
இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பில் பாடை
அனைத்தும் வென்(று) ஆரியத்தோ(டு)
உறழ்தரு தமிழ்த் தெய்வத்தை
உள் நினைந்(து) ஏத்தல் செய்வோம்

என்பது சிவநேசர் ஒருவரது வாக்கு.

கடலாடை உடுத்த நிலமடந்தையின் வதனம்போல விளங்குகிறதாம் பரதகண்டம். அந்த வதனத்திலே பிறை போன்ற நெற்றியாகப் பிரகாசிக்கிறதாம் தட்சிணப் பிரதேசம். அந்த நெற்றியிலே இட்ட திலகம்போலத் திகழுகிறதாம் தமிழ்நாடு, தமிழகம் என்ற திலகத்தின் வாசனைதான் தமிழ்மொழி என்கிறார் ஆசிரியர்.

இத்தமிழ் மொழியை,

எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே!

என்று இவர் உளங்குளிர வாய் குளிர அழைக்கிறார்.

இவ்வளவு நாட்டுப் பற்றுடனும் மொழிப் பற்றுடனும் தமிழ்த் தெய்வத்தை வாழ்த்தும் வாழ்த்து இது.

Koviloor Digital Library

பல் உயிரும் பல உலகும்
படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம் பொருள்முன்
இருந்தபடி இருப்பது போல்,
கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலையா ளமும் துளுவும்
உன் உதரத்(து) உதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம் போல் உலகவழக்(கு)
அழிந்தொழிந்து சிதையா உன்
சீர்இளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே.

கன்னடம் முதலிய தென்னக மொழிகளுக்குத் தமிழே தாய் என்றே கூறுகிறவர் வங்காளி, ஹிந்தி முதலிய ஆரிய மொழிகளைப் பெற்றெடுத்த வடமொழிபோல் நம் தாய்மொழி இறந்துபோய்விடவில்லை என்கிறார். பல உலகங்களையும் உயிர்களையும் படைத்துக் காத்து அழிக்கும் பரம்பொருள் போல் இன்னும் என்றும் இளமையாகவே இருக்கிறாளாம் தமிழ்த்தாய்.

உலகிலுள்ள மற்ற மொழிகளை வென்றுவிட்ட போதிலும், ஆரியத்தோடு 'உறழ்தரு தமிழ்த் தெய்வம் என்றும் 'இருமொழியும் நிகர்' என்றுமே பாடியிருக்கிறார் பழைய சிவநேசர். அத்தகைய தமிழ்க் காதலையும் வென்று விடுகிறது ஆசிரியர் சுந்தரம்பிள்ளையின் தமிழ்க் காதல்.

ஆனால் 'பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல் தமிழும் வளர்ச்சி பெறாமல் இருந்தபடி இருக்கிறது என்றோ, இருந்தபடியோ இருந்துவிடவேண்டும் என்றோ ஆசிரியர் கருதவில்லை. 'பூர்வார்ஜிதச் சிறப்பெல்லாம் பூர்வீகர்கள் சிறப்பு. அந்த அந்தத் தலைமுறையர்களுக்கு அவர்கள் தாமே ஈட்டிய பொருளளவும் சிறப்பேயொழிய வேறில்லை.... அருமையாகிய பூர்வ நூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற் கடமையோடு, அவ்வழியே முயன்று, அந்தக் காலநிலைக்கு ஏற்றவாறே புது நூல்களை இயற்ற முயலுதல் தமிழ்நாடு என்னும் உயர்குடியில் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறையாருக்கும் உரித்தான இரண்டாம் கடமையாய் ஏற்படுகின்றது' என்பது இவர் கொள்கை. இக்கொள்கையோடுதான் இவரே இந்த நாடகம் அமைக்கத் துணிந்தார்.

Koviloor Digital Library

திரு.சி.வை. தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர், திரு. ஆறுமுக நாவலர் போன்றவர்களைத் தமிழ்த் தெய்வத்தின் பழைய நகைகளைப் புதுப்பித்தவர்கள் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். புதிய புதிய நூல்களை இயற்றித் தமிழை அழகு செய்கிறவர்களைத் தமிழ்த் தெய்வத்திற்குப் புதிய அணிகள் செய்துபோடுகிறவர்கள் என்கிறார், இப்புதியவர்களில் இவரும் ஒருவர்.

"நான் அப்படிப் பிரமாதமாக நகை ஒன்றும் என் அருமைத் தமிழ்த் தாய்க்குச் செய்து போடவில்லை; இந்த நாடகத்தைத் தன் காலின் சிறு விரலுக்கு ஒரு 'மிஞ்சி'யாகத் தமிழன்னை ஏற்றுக்கொண்டாலும் அதுவே போதும்" என்று அவையடக்கமாகச் சொல்லுகிறார் ஆசிரியர். இந்தப் பணிவையும் அன்பையும் மட்டுமல்ல இந்தப் பணியையும் தமிழன்னை ஒரு நல்ல புதிய ஆபரணமாக மனமுவந்து ஏற்றுக்கொண்டாள் என்பது உறுதி.

இவர் தம் புதுப்பணியைக் குறிக்கும்போது 'நாற்கவிப் புதுப்பணி' என்றுதான் சொல்லுகிறார். பழைய மரபிலே வந்த ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்ற நால்வகைக் கவிகளோடு கூடிய புதுப் பணி என்று இவர் கூறுவதிலிருந்து இவருடைய புதுமை வேறு, பாரதியாரின் புத்தப் புதுமை வேறு என்று ஊகித்துக் கொள்ளலாமல்லவா?

இந்த நாடகம் ஏறக்குறைய வாசக நடைக்குச் சமமான பாவால் பெரும்பாலும் ஆக்கப்பட்டிருந்தாலும், இதுவும் பழைய அகவற்பாவே. பாரதியார்போல் புதிய சந்தம், நாடோடிமெட்டு முதலியவற்றை இவர் கையாளவில்லை. இராமலிங்க சுவாமியைப் போல் கும்மி. கண்ணி முதலிய மெட்டுக்களையும் கையாளவில்லை. புதிய புதிய கருத்துக்களையும் பழைய பாவகையிலேயே அமைத்திருக்கிறார்.

இவற்றையெல்லாம் ஆலோசிக்கும்போது மனோன்மணியத்தைப் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகச் சொல்வது பொருத்தம் என்றே தோன்றுகிறது.

Koviloor Digital Library

2

மனோன்மணியம்

கதைச் சுருக்கம் - விளக்கம் - விமர்சனம்

ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் தமிழ்க் காதலும் ஆராய்ச்சிக் காதலும் இவரை மனோன்மணியம் என்ற இந்த இலக்கிய நாடகத்தைச் செய்யுமாறு தூண்டிவிட்டன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் நாடகத் தமிழானது தன் பூர்வ நிலை தாண்டி ஏன் இலக்கியமாகப் பரிணமிக்கவில்லை என்பது குறித்து இவரது நுண்ணறிவு ஆராய்ந்து பார்த்திருக்கவேண்டும்.

நாடகத் தமிழ் தன் பழைய நாட்டிய வடிவு அல்லது கூத்து வடிவிலேயே அடங்கி நின்று, நாடக இலக்கியமாக நம் மக்களிடையே மலர்ச்சி பெறாமல் போனதற்குப் பல காரணங்கள் உண்டு. இசையுடன் நடைபெற்ற நாட்டியம் ஒருவகை இசை நாடகமாகப் பரிணமித்தபோதிலும் இயற்றமிழுடன் கலந்து நாளடைவில் காளிதாசரின் சாகுந்தலம் போன்ற நாடக இலக்கியத்தை அளிக்காமற் போனது தமிழிலக்கியத்திற்கு ஒரு மகத்தான நஷ்டம் என்பதை நன்கு உணர்ந்துகொண்டதும், இத்துறையில் ஒரு நல்ல நாடக நூல் இயற்றித் தமிழ்ப்பணி புரியவேண்டும் என்ற அவா நமது ஆசிரியரின் உள்ளத்தை ஆட்கொண்டது.

வடமொழியிலுள்ள நாடகங்களுக்கு ஒப்பாகத் தமிழில் ஒன்றும் இல்லையே என்று ஆசிரியர் வருந்தியபோதிலும், இவர் உள்ளம் ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆராய்ந்து அத்தகைய பாணியில் நாடகமொன்றைத் தமிழில் இயற்ற வேண்டுமென்றே துணியலாயிற்று. ஆங்கில இலக்கிய வானில் நிகரின்றி ஒளிவீசும் ஷேக்ஸ்பியரின் மேதைத் தனம்தான் இவர் இதயத்தைப் பெரிதும் வசீகரித்தது.

சுந்தரம்பிள்ளை தமது நாடகத்துக்கு உரிய கதையையும் தமிழர் கதைகளிலிருந்தோ, இதிகாச புராணக் கதைகளிலிருந்தோ தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை; தாமாக ஒரு கதையைக் கற்பித்துக்கொள்ளவும் இல்லை. லிட்டன் பிரபு எழுதிய ஆங்கிலக் கதையை அல்லவா எடுத்துக்கொண்டார்! அந்த இரவல் – கதையைத்தான் எப்படித் தமிழில் தமிழர் மனோபாவத்திற்கு ஒரு புது விருந்தாகும்படி அமைத்துக்கொண்டிருக்கிறார்!

Koviloor Digital Library

1. கதாநாயகி

மனோன்மணியத்தின் கதாநாயகியான மனோன்மணி ஆங்கில மூலக்கதையில் ஆர்க்கியோப் (Argiope) என்ற பெயருடன் தோற்றம் அளிக்கிறாள். இவளுடைய விவாக ஏற்பாடு, திருமணம் குறித்த தூது, பாதுகாப்பான ஓர் இடத்துக்கு இவளை அனுப்பத் தந்தை உடன்படுவது முதலிய அம்சங்களும், இறுதியாகக் காதலன் இவளைச் சந்திப்பது, மாலையிடுவது ஆகிய நிகழ்ச்சிகளும் மூலக்கதையைப் பின்பற்றி அமைந்திருப்பனவே.

மனோன்மணி தோன்றுகிற காட்சிகள் அதிகமாய்க் காணப்படவில்லை. எனினும் இவளது உருவ அழகும் குண அழகும் நம்மை ஆரம்பத்திலேயே வசீகரித்துவிடுகின்றன. முதல் அங்கத்தின் முதற்களத்திலேயே சுந்தர முனிவர் ஜீவக மன்னனை நோக்கி.

உன்னையும் உன்குலத்து உதித்த நம்மனோன்மணி
தன்னையும் சங்கரன் காக்க! தயாநிதே!
அன்பும் அறமுமே யாக்கையாக் கொண்ட
நின்புதல்வியை யான் காண நேசித்தேன்

என்று கூறுவது கதாநாயகியைக் காணவேண்டுமென்ற விருப்பத்தை நம் உள்ளத்திலும் அதிகரிக்கச் செய்கிறது.

ஒரு நகரவாசி இவளை 'மனோன்மணி அன்னை' என்று குறிப்பிடுகிறான். அன்பே உயிராக அழகே உடம்பாகக் கருணையும் அறிவும் அழகும் ஓர் உருவாகத் தோன்றியவள் என்று சொல்லி வாழ்த்துகிறான். இவளது சிறப்பானது தென்றற் காற்றிலே கலந்துவரும் ஒரு திவ்ய பரிமளம் போல் நம்மை வசீகரித்து, நம் உள்ளத்திலே இவளுக்கு ஆசிரியர் அளித்திருக்கும் ஸ்தானத்தை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்ப் பெண்களுக்குரிய சிறந்த பண்புகளுடன் மனோன்மணியாக மாறிப் பிறந்துவிடுகிறாள் மூலக்கதையில் வரும் பெண்மணி.

இவளது குணச்சித்திரம் நம் கண்முன் படிப்படியாக வளரவில்லை. காதல் விஷயமாக இவள் நிலை மாறுபடுவதைக் காண்கிறோம்; ஆனால் இது தக்க பருவத்தில் எந்தக் கன்னிப் பெண்ணுக்கும் ஏற்படக்கூடிய

Koviloor Digital Library

மனமாற்றம்தான். நாடகப் பாத்திரத் தன்மையில் வளர்ந்து மனோன்மணியின் குணச்சித்திரம் ரஸிக உள்ளத்திற்குத் திருப்தி அளிக்காவிட்டாலும், இவளது மனத் தூய்மையும் ஆன்ம சௌந்தரியமும் இந்தக் குணச்சித்திரத்தை நமது நினைவில் பதிந்து நிற்கச் செய்துவிடுகின்றன.

முதல் அங்கத்தில் இரண்டாம் களத்தில் நாம் முதலில் மனோன்மணியைச் சந்திக்கிறோம். கதாநாயகியும் தோழி வாணியும் கழல் விளையாடுகிறார்கள். கன்னிமாடத்திலே அப்போது இருவரும் மாறிமாறிப் பாடிக்கொண்டே ஆடும் போது, தங்கள் உள்ளத்தை ஒருவருக்கொருவர் புலப்படுத்துகிறார்கள். இந்த நிலையில் காதலை வாழ்க்கையின் ராஜசக்தியாக மனோன்மணி ஒப்புக்கொள்ளவில்லை.

மனோன்மணிக்கும் காதல் உணர்ச்சி தோன்றும் என்பதைச் செவிலித்தாய் குறிப்பிடும்போது, "நெருப்பையும் கறையான் அரிக்குமோ?" என்கிறாள் இவள். இதே மனோன்மணி காதலுணர்ச்சிக்கு வசமானதும் தன் மன அமைதியை இழந்து,

எங்கு இருந்தன இவ் அன்றிற் பேய்கள் ?
நஞ்சோ நாவிடை ? நெஞ்சம் துளைக்கும் !

என்று புலம்புகிறாள்.

மனோன்மணி தந்தையிடம் அன்பு உள்ளவள்; தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் இயல்பினள். நட்பிற்கு இசைந்த குணநலங்களும் இவளிடம் காணப்படுகின்றன; பக்தியும் வேதாந்த மனப்பான்மையும் இவள் உள்ளத்தில் பகுத்தறிவுக்கு அப்பால் உள்ள சிந்தனைகளையும் தோற்றுவிக்கின்றன. உரையாடல் இல்லாமலேயே, உள்ளமும் உள்ளமும் நிலையை உணர்ந்து கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை இவளுக்கு உண்டு. போதம் கரைந்து பொங்கும் அன்பு உடலின் தடையை மீறி, ஒத்த நிலையில் உண்மையுள்ள உள்ளத்தைத் தொட்டுவிடும் என்கிறாள். சுந்தரமுனிவரின் வேதாந்த மனப்பான்மை காதல் நிலையிலும் இவளைக் கைவிடவில்லை.

காதலுணர்ச்சி அடைவதற்கு முன் இவள் 'சுந்தர முனிவரை நினைக்க என் உள்ளம் தவத்திலே குதித்துவிட விரும்புகிறது' என்கிறாள். காதலுணர்ச்சி பெற்ற பின்பும் தவத்தைக் குறித்துப் பேசுகிறாள். 'தவமே சுபகரம்' என்கிறாள்; ஆனால் உண்ணாவிரதம் பூண்டு தவம்புரிவதோ' காடு புகுந்து தவம் கிடப்பதோ அவசியமில்லை என்கிறாள்.

Koviloor Digital Library

தந்தைதாய் ஆதியா வந்த தன்குடும்ப
பந்த பாரத்தினைப் பேணித் தனது
சொந்தமாம் இச்சைகள் துறந்து, மற்றவர்க்கு
எந்த நாளும் சுகம் இயைந்திடக் கடமையில்
முந்துகின்றவரே முதல் தவ முனிவர்

என்று தவத்தைப் பற்றிய தன் கருத்தை வெளியிடுகிறாள். இக்கருத்தும் சுந்தரமுனிவரின் தவக் கொள்கைகளுடன் பொருந்துவதுதான்.

இத்தகைய அறிவுக் கூர்மை மனோன்மணியிடம் காணப்பட்டாலும், தவம் இவளை வசீகரிப்பதற்குக் காரணம் 'பேதைமைப் பெண்மை' என்று சொல்லுகிறீர்களே, அத்தகைய பெண்மை மனப்பான்மைதான்! சுந்தர முனிவருடன் வாதம் செய்து தெளிந்த பின் இவள் உள்ளம் தவத்தை நோக்கியது என்பதில்லை; அவரது தோற்றமே தன் உள்ளத்தைத் தவத்தில் செலுத்திப் பார்ப்பதாக அல்லவா சொல்லுகிறாள்?

எனவே, இவளது அறிவுக்கூர்மை ஆழ்ந்து ஆராயும் சக்தி பெற்றிருக்கவில்லை என்று கருதலாம். சுந்தரரிடம் குருபக்திகொண்டிருப்பது போலத்தான் தந்தையிடத்திலும் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது போன்ற பக்திகொண்டிருக்கிறாள். தோழியான வாணியின் சுதந்திர மனப்பான்மை இவளிடம் காணப்படவில்லை.

வாணி மீது இவள் கொண்டிருக்கும் நட்புக் காதலும் சாதாரணமாகத் தோழியரிடையே காணப்படும் பழக்க உணர்ச்சிதான். புருஷோத்தமன் மீது இவளுக்கு ஏற்படும் காதலுணர்ச்சிக்குக் கூட வழக்கத்தையோ பழக்கங்களையோ மீறிச் செல்லும் ஆற்றல் இல்லை.

ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் மனோன்மணி தந்தைக்குக் கீழ்ப்படியவில்லை என்று சொல்லவேண்டும். பலதேவனை மாலையிட மறுத்துப் புருஷோத்தமனுக்கு மணமாலை சூட்டும் வாய்ப்பே இது. இந்தச் சந்தர்ப்பத்திலும் தன் கனாக் காதலனைக் கண்ணாரக் கண்டு உணர்ச்சி வெள்ளமிடத் தன்னையும் தன் தவ உணர்ச்சி, கடமையுணர்ச்சிகளையும் மறந்த நிலைதான் இவளது இச்செயலுக்குக் காரணமாயிற்று. இதற்கு இவளுடைய சுந்தரக் காதலுணர்ச்சி காரணமல்ல என்றே சொல்லிவிடலாம்.

மனோன்மணி ஒரு சாதாரணப் பெண்மணிதான். காதலின் வேகத்திலோ, தர்மாவேசத்திலோ, துணிந்து தனக்கென்று ஒரு சுதந்திர வழி

Koviloor Digital Library

வகுத்துக்கொள்ளும் ஆற்றல் பெறாத பெண்மணி எனினும் இவள் 'குணம் என்னும் குன்றேறி நிற்கின்றாள்' என்ற கருத்தை நம் உள்ளத்தில் தோற்றுவிக்கிறாள். பகுத்தறிவுக் கண்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் ஆற்றல் பெற்றிராவிட்டாலும், பக்தி என்ற அங்குசத்தால் தன் உணர்ச்சிகளையும் செயல்களையும் இவள் அடக்கியாளும் ஆற்றலையும் பெற்றிருக்கிறாள் என்ற அபிப்பிராயமும் நமக்கு ஏற்படுகிறது.

தோழியான வாணிக்கு முற்றும் முரண்பட்ட நிலையில் மனோன்மணி நம் கண்முன் தோன்றுகிறாள். இவள்மீது நமக்கு ஏற்படும் அன்பையும் வென்றுவிடுகிறது நம் மரியாதையுணர்வு, தவச்செல்வரான சுந்தரரின் பாராட்டுக்கு உரியதாகும். குணச்சித்திரம் நமது மதிப்பையும் மரியாதையையும் தூண்டுவதாகத்தானே இருக்க வேண்டும்.

தந்தையின் விருப்பத்திற்காகத் தன் காதலையும் துறந்து தந்தைக்குரிய கடமையைச் செலுத்தவேண்டும் என்ற மன நிலையை ஓர் அரசிளங்குமரியின் மனநிலை என்று சொல்வதைக் காட்டிலும், முனிவரால் வளர்க்கப் பெறும் ஒரு தவப் பெண்ணின் மனநிலை என்றுதான் சொல்லவேண்டும்.

புருஷோத்தமனைக் கண்டவுடன் அவள் நிற்குமிடத்திற்கு விரைந்து நடந்து மாலை சூட்டுகிறாளே, அப்போதுதான் 'இவளும் இந்நிலவுலகப் பெண்மணி; மற்றைப் பெண்களைப் போல் காதலை மீற முடியாதவள்' என்ற உண்மை நமக்கு நன்கு புலனாகிறது, இந்தப் பெண்மை நிலைதான் வாணியின் காதலுள்ளத்தைப் புரிந்துகொண்டு, தன்னை எத்தனையோ இன்னல்களும் அபாயங்களும் சூழ்ந்திருந்த நிலையிலும், வாணி தன் இஷ்டப்படியே காதலனை மணந்துகொள்ள வேண்டும் என்று அரசனிடம் மன்றாடி அதற்குரிய கட்டளையும் பெறுகின்றது. வாணியின் காதலைக் காப்பாற்றுவதுபோல், நாராயணனின் உயிரையும் காப்பாற்றுவது சாதாரண பெண்மதிதான்.

இத்தகைய நிகழ்ச்சிகளே இக் கதாநாயகியை ஒரு வகைப் பளிங்குச் சிலைபோன்ற நிலையிலிருந்து உயிரோவியமாகப் பார்க்கின்றன. 'இத்தகைய சந்தர்ப்பங்களை அதிக அளவில் ஆசிரியர் படைத்திருக்கலாம். எனினும் அப்படிச் செய்யாதது ஒரு குறைதான்' என்று திரு.கே.என். சிவராஜபிள்ளை போன்ற இலக்கியத் திறனாய்வாளர் கருதுவர்.

Koviloor Digital Library

2. கதாநாயகியின் கனாக் காதலன்

(புருஷோத்தமன்)

கதாநாயகியை விசேஷ உயிரோட்டமும் உணர்ச்சி வேகமும் இல்லாத ஒரு தூய பளிங்குச் சிலையின் நிலை பெறுமாறு அமைத்திருக்கும் ஆசிரியர் புருஷோத்தமனையும் இந்தக் கனாக் காதலிக்கு இசைந்ததொரு கனாக் காதலனாகவே அமைக்கப்பட்டிருக்கிறார்.

இந்த வஞ்சி வேந்தன் ஒரு சிறந்த போர் வீரன், தன் வீரத்தை நன்குணர்ந்து அதற்கு இசைந்த கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற மன உறுதியும் பிடிவாதமும், நேர்மைக்கு முரண்பாடு கண்டால் கோப முரண்டும் உள்ளவன்.

எனவே, குடிலனது குறுக்கு வழியை அறவே வெறுத்து,

சேரன் விஜயமும்
திருடான்!

என்று உரக்கக் கூறி, வஞ்சகன் நடுங்கி வாய் மூடுமாறு செய்துவிடுகிறான்.

புருஷோத்தமனை முன்கோபக்காரன் என்றே குடிலன் கேள்விப்பட்டிருக்கிறான் (மூன்றாம் அங்கம் : முதற்களம்)

தூண்டிடு சினத்தன்,
தொழுதிடில் மீன்வன்

(ஐந்தாம் அங்கம்: முதற்களம்)

என்பது தன் மனத் தராசில் புருஷோத்தமனை எடைபோட்டுப் பார்க்கும் குடிலன் கருத்து.

ஜீவக வழுதியின் தூதனான பலதேவனிடம் புருஷோத்தமன் நடந்து கொள்ளும் விதமும், தன் உதவியை நாடிவந்த குடிலனை நடத்திய விதமும், ஜீவக வழுதியின் புதல்வியால் மாலைசூட்டப் பெற்று மகிழ்ந்த நிலையில்கூட அந்தப் பாண்டிய வேந்தனிடம் கடுமையாகப் பேசிய விதமும், புருஷோத்தமனைப் பற்றிய குடிலன் கருத்தில் பாதி உண்மைதான் என்பதைப் புலப்படுத்துகின்றன.

இராஜதந்திரம் அறியாத ஒரு போர்வீரன் இவன், 'போர்க்களமே! நீதான் என் வீடு; வீர கௌரவமே என் மூச்சுக் காற்று!' என்பது இவன் ஜீவநாடி,

Koviloor Digital Library

இத்தகைய முரட்டு மனப்பான்மையைக் குறித்து மனித சுபாவங்களை நன்கு அறிந்திராத ஜீவகவழுதியும் ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறான்.

ஒருவன் தனது அடியினை அடைந்து உறவே
பெரிதுவிரும்பினும் பெருமை பாராட்டுவன்!

[மூன்றாம் அங்கம் : முதற்களம்]

என்று புருஷோத்தமனின் பிரபுத்வ சுபாவத்தைக் குறிப்பிடுகிறான் ஜீவகன்.

'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்பது போன்ற ஒரு வகைத் தன்னரசு–மனப்பான்மையைப் புருஷோத்தமனின் பிரபுத்வத்தின் ஒரு முக்கிய அம்சமாக நாம் காண்கிறோம், இந்த அம்சத்திலே இவன் மனோன்மணியின் அடங்கி நடக்கும் சுபாவத்திற்கு முற்றும் மாறுபட்டவன் எனலாம்.

இந்தக் குணாதிசய முரண்பாட்டின் விளைவாகக் காதலர் இருவரும் கருத்தொருமித்து வாழ்க்கை நடத்துவர் என்றே நாம் ஊகிக்கலாம்.

இந்த முரண்பாட்டுடன் காதலர்களின் குணச்சித்திரங்களிலுள்ள விசேஷ ஒற்றுமைகளும் சேர்ந்து, 'இவர்கள் சரியான தம்பதி; நல்ல வண்ணம் வாழக்கூடியவர்கள்' என்றே நம்மை எண்ணச் செய்கின்றன. உருவ அழகிலும் ஒருவருக்கொருவர் பொருத்தம்தானே!

'இருளெல்லாம் ஒளிவிட இலங்கிய' மன்மத உருவம் என்று புருஷோத்தமனைக் குடிலன் நேரில் கண்டதும் கூறித் திகைத்து நிற்கிறான் (ஐந்தாம் அங்கம் : முதற்களம்) அழகே உடம்பாகப் பெற்றுப் பாண்டிய குலமாகிய பாற்கடலில் எழுந்த முழுமதிபோலத் தோன்றுகிறாள் மனோன்மணி மக்களின் கண்களுக்கு (முதல் அங்கம் : முதற்களம்).

இந்த அழகுப் பொருத்தத்துடன் குணப்பொருத்தங்களும் இக்காதலர் வாழ்க்கையை மலர்ச்சி பெறச் செய்யக் கூடியவனே. புருஷோத்தமனின் வீரப்புகழுடன் குணச்சிறப்புக்களும் சுந்தர முனிவரின் உள்ளத்தையும் கவர்ந்திருக்கின்றன. பெயருக்கு இசைந்தபடியே புருஷோத்தமன் 'பொருவிலாப் புருடன்' என்று சொல்லி,

பூங்கொடி படரப் பாங்காம் தருவே

(முதல் அங்கம்: நான்காம் களம்)

என்று தம் அபிப்பிராயத்தை ஜீவகனிடம் தெரிவிக்கிறார் முனிவர்.

Koviloor Digital Library

வேறொரு பொருத்தமும் இக்காதலர்களுக்கு உண்டு. இருவரும் கனாக்கண்டு காதல் கொண்டதைத்தான் ஊன்றி நோக்குங்கள், ஞானத்தில் மேம்பட்ட சிந்தையன் புருஷோத்தமன் என்று குடிலனும் கேள்விப்பட்டிருக்கிறான். 'புலனாரக் காண்பதுவே பொருள்' என்ற லோகாயதக் கொள்கையைப் புருஷோத்தமனும் கண்டிக்கிறான் (ஐந்தாம் அங்கம் : முதற்களம்).

பூதப் பொருட்கே புலன்துணை அன்றி,
போதப் பொருட்குப் போதும் போதம்

என்பதுதானே மனோன்மணியின் மதக் கொள்கை போன்ற மனக் கருத்தும் (மூன்றாம் அங்கம் : மூன்றாம் களம்). இத்தகைய மனப் பொருத்தமும் இந்தக் காதலர்களின் மணத்திற்கு ஒரு பொருத்தம்தான் என்றே கருதலாம்.

மனோன்மணியின் இம் மன நிலைக்குச் சுந்தரமுனிவர் காரணமாவார் என்பது வெளிப்படை. புருஷோத்தமனது இத்தகைய மனநிலைக்கும் சுந்தரமுனிவரின் ஞானோபதேசம் காரணமாயிருக்க முடியுமா என்பது ஒரு சூட்சுமமான கேள்வி.

புருஷோத்தமனது வேதாந்த மனநிலையைச் சுந்தரமுனிவர் நேரடியாக உருவாக்கியிராவிட்டாலும், இந்த முனிவரது ஞான பொக்கிஷத்திற்கும் அந்தச் சேர மன்னனது குண பொக்கிஷசாலைக்கும் ஏதோ ஒருவகைத் தொடர்பு இருக்க வேண்டியதுதான் என்றே தோன்றுகிறது. இதைக் குறிப்பாக உறுதிப்படுத்துகிறது. சுந்தரமுனிவரின் சீடருள் ஒருவரான கருணாகரரின் வாக்கு (மூன்றாம் அங்கம் : நான்காம் களம்).

புருஷோத்தமனுக்கு மனோன்மணி கனாக்காதலி; மனோன்மணிக்குப் புருஷோத்தமன் கனாக்காதலன், கனவில் உருவாகி வந்த காதலுருவங்களை இருவரும் நம்புகிறார்கள் சாதாரண ஸ்தூல உண்மைக்கும் மேலான உண்மை என்று மதிக்கிறார்கள். அந்தக் கனாக் காட்சிகளின் மோகன சக்திக்கு இருவரும் ஐயம் கொள்ளாது உட்படுகிறார்கள்.

இப்படி மனம் ஒன்றி மணமும் நடைபெறுகின்றது. இது காதலர்களின் நம்பிக்கைக்கு வெற்றிதான். ஆனால், இந்த வெற்றிக்காக இவர்கள் பாடுபடவில்லையே; தங்கள் பகுத்தறிவைக்கொண்டு முயற்சி ஒன்றும் செய்யவில்லையே.

'இப்படியெல்லாம் இறையருளால் அற்புதம் நிகழும்; அன்று நிகழ்ந்தது போல் இன்றும் நிகழக் கூடும்' என்பது சுந்தர முனிவரின் மதம். சுந்தரம்

Koviloor Digital Library

பிள்ளையின் விஞ்ஞான வேதாந்த மனப்பான்மையிலும் இக்கொள்கைக்கு இடம் உண்டு. எனவே, மனோன்மணிய நாடகத்தின் அடிப்படைத் தத்துவமாக அமைந்துவிட்டது இந்தக் கொள்கை.

3. கதாநாயகியின் தோழி

(வாணி)

மனோன்மணி – புருஷோத்தம தம்பதியைக் காட்டிலும் வாணி – நடராஜ தம்பதியிடம் மனித உணர்ச்சிகளை அதிக அளவில் பார்க்கிறோம். மனோன்மணிக்கும் புருஷோத்தமனுக்கும் இடையே காதல் தடையற்ற ஏதோ ஒரு தெய்வீகப் பிரவாகம் போல் காண்கிறது. வாணிக்கும் நடராஜனுக்கும் இடையே உள்ள காதலோ ஒரு தெளிந்த நீரோடை; முதலில் தடையுற்று முடிவில் சரியாகப் போகிறது. இக்காதல் ஒரு தனிப் பொலிவு வாய்ந்தது.

கன்னிப்பருவத்தில் கன்னிமாடத்திலே மாலைப்பொழுதில் கழல் விளையாடும் வாணியையும் மனோன்மணியையும் சந்திக்கிறோம். கழலாடும்போது ஒவ்வொருவரும் மாறி மாறிப் பாடுவதுண்டு. மனோன்மணி கழலாடிக்கொண்டே சிவபெருமான் காம தகனம் செய்த கதையைப் பாடுகிறாள்; 'உதவியற்ற பெண்கள் மீது அம்பு போடும் சூரன் யோக நிஷ்டையில் இருந்த சிவபெருமானை நெருங்கியதும் சாம்பலாய்ப் போய்விட்டானே!' என்று சொல்லும் மனோன்மணியின் உள்ளம் காதல் இல்லாத கன்னி உள்ளம்.

வாணி பதில் சொல்லும்போது மன்மதனுக்கு வக்காலத்து வாங்கிவிட்டது போலப் பாடுகிறாள். இப்பாட்டில் பிரதிபலிக்கிறது வாணியின் காதலுள்ளம். 'மன்மதன் எரிந்து போனாலும் அவன் எய்த மலரம்பு நெருப்பு மயமான சிவபெருமானுக்கும் ஆறாத வடுவாகிவிட்டதே, அப்படியானால் வெற்றி யாருக்கு?' என்பது வாணியின் கட்சி.

மனோன்மணியோ மறுபடியும் தன் கட்சியையும் சிவபெருமான் கட்சியையும் சேர்த்துப் பேசுகிறாள்; காமதகனத்தை வற்புறுத்துகிறாள்.

பளிச்சென்று வாணி, 'காமன் எரிந்தால்தான் என்ன? பரமேசுவரன் உடம்பிலும் பாதி கரிந்துவிட்டதல்லவா? என்று பதில் அளித்துப் பாடுகிறாள். பரமேசுவரன் உடம்பில் ஒரு பாதி பெண்ணாகிவிட்டதல்லவா? சிவபெருமான் சிவப்பு; பார்வதி கறுப்பு; இதைத்தான் 'கரிந்தது பாதி என்று சமத்காரமாய்க் குறிப்பிடுகிறாள் வாணி.

Koviloor Digital Library

மனோன்மணியோ மன்மதனுடைய 'தோல்வியையும், அவன் உருவம் இழந்து திரிவதையும் மறுபடியும் வற்புறுத்துகிறாள். வாணியோ தன் கொள்கையைக் காதல் பொங்கும் உள்ளத்துடன் கடைசியாக வற்புறுத்திவிட விரும்பி,

உருவம் கரந்தால் என் ?
ஓர் மலர் அம்பினால்
அரைஉரு ஆனார் என்(று)
ஆடாய் கழல்!
அந் நட ராஜரென்று
ஆடாய் கழல்!

என்று பாடுகிறாள்; பாடிப் பெருமூச்செறிகிறாள்.

'அரை உரு ஆனார்.... அந்நடராஜர்' என்ற சிலேடையில் 'அப்படி இளைத்துப் போனார் அவர்!' என்னும் பொருளை அழுத்தமாக வெளியிட்டவள் அதற்காக ஏன் இப்படிப் பெருமூச்சு விடவேண்டும்? மனோன்மணிக்குத் தெரியாதா தன் தோழியின் இரகசியம்?

வாணியின் காதலன் பெயரும் நடராஜன்தானே மனோன்மணி சிரித்துக்கொண்டே,

ஏதடி வாணி! ஓதிய பாட்டில்
ஒருபெயர் ஒளித்தனை பெருமூச் செறிந்து ?
நன்று நன்று நின்நாணம்!

என்று பரிகசிக்கிறாள்.

பிறகு வாணியின் காதல் நிலையை உள்ளபடி அறிந்துகொள்ள விரும்பிய மனோன்மணியை நோக்கி,

தந்தையும் கொடியன்; தாயும் கொடியள்!

என்று தன் குறைகளைச் சொல்லத் தொடங்குகிறாள். இவள் காதலித்த நடராஜனை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்பதும், மந்திரி மகனாகிய பலதேவனுக்கே அவளை மணஞ் செய்விக்க விரும்பினர் என்பதும் மனோன்மணிக்குத் தெரிந்த விஷயம்தான்.

'உனக்கேன் இந்த முரண்டு? அவர்கள் இஷ்டப்படியே நடந்து கொள்ளலாமே என்பதுதான் மனோன்மணி தோழிக்குச் சொல்லும்

Koviloor Digital Library

ஆலோசனை. இந்த ஆலோசனையும், இவள் சுந்தர முனிவரைக் குறித்தும் ஞானவாசிஷ்டம் போன்ற வைராக்கிய நூல்களைக் குறித்தும் சொன்னவையும் வாணியின் காதலுள்ளத்தைச் சிறிதும் பாதிக்கவில்லை. தன் தோழி காதற்சுவை அறியாதவள்; அறிந்ததும் தவப்பேச்செல்லாம் பறந்து போகும் என்பதுதான் வாணியின் திடநம்பிக்கை.

வாணி உள்ளத்தில் முன்னமே மலர்ந்த காதல் மனோன்மணி உள்ளத்தில் பின்னே மலரத்தான் போகிறது. எனினும் வாணியின் காதல் மனோன்மணியின் காதலிலிருந்தும் பிரித்து உணர்ந்துகொள்ள வேண்டிய ஒரு தனி ரகத்தைச் சேர்ந்ததாகும்.

தந்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காக மனோன்மணி மணமாலை கொண்டு பலதேவன் எதிர் வரவும் துணிகின்றாள் (ஐந்தாம் அங்கம் : மூன்றாம் களம்). வாணியோ பலதேவனுக்கு மாலை சூட்ட வேண்டும் என்ற சொல்லை நஞ்சினும் கொடியதாகக் கொண்டு நடுங்குகிறாள் (முதல் அங்கம் : இரண்டாம் களம்).

'வதுவையும் வேண்டிலர், வாழ்க்கையும் வேண்டிலர் ஒழி மொழி வேண்டினர், உரைத்திலேன் பாவி!'' என்று வாணி மனோன்மணியிடம் பச்சாத்தாப உணர்ச்சியுடன் கூறும்போது, எவ்வளவு வசீகரமாகக் காண்கிறது இந்தக் காதலியின் குணச் சித்திரம்! நாணம் இயற்கையாகவுள்ள எந்தக் காதலியும் இப்படித்தானே நடந்துகொண்டிருக்கக் கூடும் (முதல் அங்கம்: இரண்டாம் களம்). அருமையான இயற்கைச் சித்திரம் இது.

வாணியின் காதலுணர்ச்சியைக் காதல் வெறியென்று சொல்வதற்கில்லை. இவளது மன உறுதியையும் ஒழுக்க உயர்வையும் பண்பாட்டையும் ஒருங்கே புலப்படுத்தும் காதல் இது.

வாணியின் காதல் குருட்டுக்காதலும் அன்று, அறிவுக் கண்ணை மலர விழித்து இக்காதலரை – இவள் உள்ளம் – இவளது சித்த சக்தி – தேர்ந்தெடுத்திருக்கிறது.

மறப்பனோ என்உளம் மன்னிய ஒருவரை ?
ஆடவராக மற்று எவரையும்
நாடுமோ நான் உள அளவும் என் உளமே ?

(முதல் அங்கம் : இரண்டாம் களம்)

என்ற வாணி வாக்கிலே குருட்டுக் காதலையோ, காதல் வெறியையோ காண்பதற்கில்லை.

Koviloor Digital Library

தன் காதல் நிறைவேறாவிட்டாலும் மனோன்மணி ஞான வைராக்கியத்துடனும் தியாக புத்தியுடனும் சொந்த இச்சை துறந்து, தந்தைக்காகவோ முனிவருக்காகவோ தவ வாழ்க்கை வாழக்கூடியவள்தான். வாணியோ, காதல் இல்லாவிட்டால் சாதல் என்கிறாள் (முதல் அங்கம்) (இரண்டாம் களம்).

இது உணர்ச்சிவசமான பேச்சு மட்டுமன்று; இவளது திட சங்கற்பம். மன உறுதியும் சித்த சக்தியும் இவளுக்கு உண்டு என்பதற்கு, மனோன்மணியின் காதல் பூர்த்தியான பின்பே, தான் மணந்துகொள்ளப் போவதாக இவள் சங்கற்பம் செய்வதும் ஓர் அரும்பெருஞ் சான்றாகும்.

மன வலிமையில்லாத ஜீவகன் திடசங்கற்பம்கொண்ட வாணியை நோக்கி,

நலமே சிறந்த குலமே பிறந்த
பலதேவனாம் ஒரு பாக்கிய சிலாக்கியன்

என்று குடிலன் மகனைக் குறிப்பிட்டும், வாணியின் காதலனைப் 'பித்தன்' என்று இகழ்ந்தும் பேசுகிறான். அதற்கு வாணி தைரியமாக 'நா எழாது அடக்கும்' நாணத்தையும் அடக்கிக்கொண்டு.

நேசமில் வதுவை நாச காரணமே

என்கிறாள்.

இந்த உரையாடலில் உண்மையான வெற்றி வாணிக்குத்தான். ஜீவகனது நிலை பரிதாப நிலையாகவே காண்கிறது. (முதல் அங்கம் : நான்காம் களம்).

பலதேவனுக்கே உடன்படல் கடமை

என்று அரசன் சொல்ல, 'இலையெனில்?' என்று எவ்வளவு துணிச்சலாக எதிர்த்துக் கேட்கிறாள் வாணி! இப்படித் தைரியலட்சுமியாகக் காட்சியளிக்கும் வாணியின் குணச்சித்திரம் எப்படி வளர்ந்துவருகிறது பாருங்கள்!

இந்தத் தைரிய லட்சுமிக்குமுன் கிழ அரசரின் குருட்டதிகார மாட்சியும் கிழத் தந்தை சகடனின் லௌகிக பேராசையும் வெளிப்பட்ட கள்வர்போல் விழிக்கின்றன.

இத்தகைய காதலியின் பேச்சிலும் காதல் தனக்குரிய ஆவேச நிலையில் வெளியிட்டுக்கொள்ளாமல் மனோ தத்துவக் கலைஞன் ஒருவன் பற்றற்ற

Koviloor Digital Library

பாவனையில் காதலின் தத்துவத்தை உணர்த்துவதுபோல், தன்னை வெளியிட்டுக்கொள்வது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கையாகிய பாலையில் காதல் தருவாகத் தழைக்கிறது என்றும், வாழ்க்கை நெறியில் தாகமும் தாபமும் நீக்கும் ஊற்றாய் ஊறுகிறது என்றும் இவ்விதக் காதல் – வேதாந்தம் பேசுகிறாள் வாணி. இது ஒரு குறையென்றே ரஸிகர் கருதுவர்.

காதல் என்பது உணர்ச்சிகளின் சக்கரவர்த்தி. இந்த உணர்ச்சியின் வசமாகிப் பேசும் பேச்சல்ல; வாணி காதலின் நிலைமை குறித்துப் பேசும் பேச்சு, தன் கைப்பிடியில் காதலை அடக்கி வைத்துக்கொண்டு மனோதத்துவ சிந்தனைகளைக் கவிச் சுவையுடன் வெளியிடுவது போல் அல்லவா பேசுகிறாள்.

மனோதத்துவ ரீதியில் பார்த்தாலும் வாணியின் பேச்சில் குறைபாடு இல்லாமல் இல்லை. இவள் கருதுவது போல் பகுத்தறியும் மன வலிமைக்கும் காதலுக்கும் தொடர்பே இல்லையென்றுதான் சொல்லமுடியுமா? பலதேவனை விட்டு நடராஜனைக் காதலனாகத் தேர்ந்தெடுத்ததில் இவள் பகுத்தறிவுக்கு இடமே இல்லையா?

நடராஜனின் அறிவுத் திறமையும் ரஸிகத் தன்மையும் வேறு குண நலன்களும் இவள் பகுத்தறிவையும் வசீகரித்துத்தானே இருக்கவேண்டும்? குடிலபுத்திரன் ஒரு சாதாரணப் படை வீரன்; விசேஷ அறிவுத் திறமை இல்லாதவன்; சன்மார்க்கப் பெருநெறி பிடித்து ஒழுகாதவன். இத்தகைய பேர்வழியைக் காட்டிலும் இயற்கையழகுகளில் ஈடுபட்டுத் தியான சிந்தனைகளில் மூழ்கிக் களிக்கும் நடராஜன்தானே வாணியின் விவேகத்தையும் கவர்ந்திருக்கக் கூடும்? உருவ அழகிலும் பலதேவன் எங்கே நடராஜன் எங்கே?

ஆனால் இந்தக் காரணங்களைத் தன் காதலனுக்கு அனுகூலமாக வாணி எடுத்துக்காட்டவில்லை. தந்தையும் அரசனும் – ஒருவன் பண ஆசையாலும், மற்றவன் அறியாமையாலும் – நடராஜனை விரும்பவில்லை; வெறுத்துப் பேசவும் முன்வருகிறார்கள். 'அப்பேர்ப்பட்டவர்களின் துர் அபிப்பிராயங்களை மறுத்துத்தான் என்ன பயன்?' என்று கருதியே வாணி நடராஜனது பண்புகளையும் பண்பாட்டையும் எடுத்துக்காட்டாமல் இருந்துவிடுகிறாள் என்று கருதலாம்.

இந்த நிலையில் வாணி 'நேயமும் ஆக்கப்படும் பொருள் ஆகுமோ?' என்று பொதுவாகப் பகுத்தறிவை மீறிச்செல்லும் காதலின் சக்தியை

Koviloor Digital Library

வற்புறுத்தியிருக்கவும் கூடும், இது எப்படியிருந்தபோதிலும், வாணி பாடும் காதலின் நிலைமை இவளது உரையாடலின் இயற்கையான பகுதியாக அமையவில்லை. எனினும், இப்பகுதி மனோன்மணிய நாடகத்தின் அருமையான கவிச் சித்திரப் பகுதிகளில் ஒன்றாகும்.

மனோன்மணியைப் போல் வாணியைச் சுந்தரமுனிவரின் வேதாந்தமோ ஞான சொரூபமோ ஆட்கொண்டிருக்கவில்லை. மனோன்மணியின் தவக் கொள்கையோ பகுத்தறிவைக் கடந்த சிந்தனைகளோ இவள் உள்ளத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. பொதுவாக வாழ்க்கையின் பிரத்தியட்ச உண்மைகளையே இவள் அறிந்து ஒழுகிவருகின்றாள்.

இத்தகைய வாணியும் கடைசியாக வேதாந்தம் பேசிக்கொண்டே மனோன்மணியுடன் ஒத்துப்போவதைக் காண்கிறோம்; தவத்தைக் குறித்து ஒரு புதுமைப் பெருங்கொள்கையை மனோன்மணி வெளியிட்டதும், வாழ்க்கையைத் துறக்காமலே முதல் தவ முனிவராகலாம் என்ற புரட்சிகரமான கருத்தை அந்தக் கொள்கையில் கண்டுகொண்டதும் வாணி.

அத்தகைத் தவம் இங்கு அடியேன் தனக்கும்
ஒத்ததே யன்றோ ?

என்று சொல்வதையும் கேட்கிறோம்.

மனோன்மணி மீதுள்ள நட்புக் காதலாலும் சுந்தரமுனிவரின் ஞான வைராக்கிய மகிமையால் இவளை அறியாமலே உள்ளத்தில் வந்து கொண்டிருந்த பக்திக் காதலாலும், இவர்களுடைய வேதாந்த பாஷையை வாணியும் கிளிப்பிள்ளைபோல் சொல்லுகிறாள் என்று கத்தவும் கூடும்.

வாணியின் குணச்சித்திரம் கதாநாயகியின் குணச்சித்திரத்துடன் முரண்படும் நிலையிலேதான் பொதுவாக உருவாக்கப்பெறுகின்றது என்பதில் ஐயமில்லை. மனோன்மணி ஒரு ஞானக் குழந்தையென்றால் வாணியை உணர்ச்சிப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த அறிவுப் புதல்வியென்று சொல்லக்கூடும்.

மனோன்மணியின் ஞானம் மரபுகளையும் தெய்வம் போல் வழிபடுகிறது. வாணியின் உணர்ச்சி வசமான அறிவுத்திறனோ பொருளற்ற மரபுகளையும் அறிவுக் கண்ணை மூடும் வழக்கங்களையும் உதறித் தள்ளக்கூடிய புரட்சி நிலைக்கும் சென்றுவிடுகிறது!

Koviloor Digital Library

மனோன்மணி தன் அன்புத் தந்தைக்கும் ஞானத்தந்தையாகிய குருவுக்கும் கட்டுப்பட்டு நடக்கும் பக்தியுள்ளம் கொண்ட பெண். வாணியின் பக்தியோ பொதுவாகத் தன்னையும் தன் காதலையும் சுற்றிப் பிரதட்சிணம் செய்துகொண்டிருப்பதுதான்.

இந்தக் குணாதிசயத்திற்கு உரிய வித்து முதல் அங்கத்தில் இரண்டாம் களத்தில் கன்னி மாடத்தில் நடைபெறும் கழல் விளையாட்டுக் காட்சியிலேயே காணப்படுகிறது.

தன் காதல் நோயை மனோன்மணியைப் போலவே வாணி அனுபவிக்கிறாள். கதாநாயகியின் காதல் ஏதோ ஒரு நோய் போலவே முதன் முதல் காணப்படுகிறது. வாணியின் காதலிலோ இத்தகைய பலவீனம் காணப்படவில்லை. வாதாடி வழக்குரைத்தும். தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கிறது வாணி காதல்.

மரபுகளை எதிர்த்துப் பேசும் புரட்சிகரமான மன நிலையையும் அந்தக் கழல் விளையாட்டிலேயே காண்கிறோம். காம தகனக் கதையில் 'வெற்றி சிவனுக்கல்ல காமனுக்குத்தான்!' என்றல்லவா இவள் சொல்லுகிறாள்?

4. வாணியின் காதலன்

(நடராஜன்)

வாணியின் காதலன் என்றால் தகுந்த யோக்கியதை இருக்கத்தானே வேண்டும்?

சுத்தமே பித்தன்,
சொல்லுக்(கு) அடங்கான்,
தனியே உரைப்பான்
தனியே சிரிப்பான்!

என்று வாணியின் தந்தையாகிய சகடன் சொல்லுகிறபடி அவ்வளவு மோசமாக இருப்பானா நடராஜன்? இயற்கைப் பொருளழகுகளையும் அமைப்புகளையும் உற்று நோக்கி வியந்து பரவசமாகும் நிலையைத்தான் சகடனது லோகாயதக் கண் இப்படிக் கண்டு காட்டுகிறது.

சகடனுக்கு மனிதனை மதிக்கத் தெரியாது; மனிதனுடைய செல்வத்தையும் செல்வாக்கையும்தான் மதிக்கத் தெரியும். மூளையைப் பற்றிக் கவலை கிடையாது; பணப்பையைப் பற்றிய கவலை ஒன்றுதான்.

Koviloor Digital Library

இப்பேர்ப்பட்ட ஆசாமிக்கு இயற்கை அழகுகளில் உள்ளத்தைப் பறிகொடுத்த நடராஜன் சுத்தப் பயித்தியம்தானே!

எங்கெனும் ஒரு பூ
இலைகனி அகப்படில்
அங்கங்(கு) அதனையே
நோக்கி நோக்கித்
தங்கா மகிழ்ச்சியில்
தலை தடுமாறுவன்
பரற்கலும் அவனுக்(கு)
அகப்படாத் திரவியம்;
ஆயிரம் தடவை
ஆயினும் நோக்குவான்
பேயனுக்(கு) அளிக்கவோ
பெற்றனம் பெண்ணை ?

என்று சகடன் சொல்லுவது சகஜம்தானே. இயற்கைப் பித்தனை அறிவானோ பேராசைப் பித்தன்? கவிதையுள்ளம் புரியுமோ காரியவாதிக்கு?

உலகத்தை நன்கு தெரிந்துகொள்ளாத ஜீவகனுள்ளத்திற்கும் நடராஜனும் ஒரு புதிர்தான். விளங்காத புதிர்; எனினும் விளங்கிவிட்டது என்று மயங்கவைக்கும் புதிர்!

அழகிருந்(து) என்பயன் ?
தொழிலெலாம் அழிவே!

என்று கூறும் ஜீவகன் வாணியின் உள்ளத்தைக் கவர்ந்த உருவ அழகை ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறான்; இந்த உள்ளத்தின் அழகுதான் புலனாகவில்லை!

மந்திரி குடிலனுக்கு உலகம் தெரியும். மனித உள்ளம் ஒரு சிறந்த புத்தகம், நடராஜனது நிலைமையும் அவனுக்குத் தெரிந்ததே. தெரிந்தும் அவனை இகழ்கிறான்; அரசன் அவனை வெறுக்கும்படியே செய்கிறான். சகடன் பணத்தைக்கொண்டு உலகத்தை அளப்பதுபோல் குடிலன் சூழ்ச்சியைக்கொண்டு உலகத்தை ஜெயிக்க விரும்புகிறவன். எனவே, நடராஜனின் உள்ளத்தின் அழகைப் பாராட்ட முடியவில்லை. இந்த அழகை இந்த மாதிரி பார்த்தும் பாராதவன்தான்!

Koviloor Digital Library

சுந்தர முனிவருக்கு வேண்டியவர்களில் நடராஜன் ஒருவன், 'முனிவர் பிரியன்!' என்று குடிலன் குறிப்பிடுகிறான். சேரர் மன்னனாகிய புருஷோத்தமனுக்கு மனோன்மணியை மணஞ்செய்விக்க வேண்டுமென்று தீர்மானித்து யாரைத் தூது அனுப்பலாமென்று ஆலோசித்த சுந்தர முனிவர், 'அதற்கு நடராஜன்தான் நம்பிக்கையான பேர்வழி. கலியாணத்தைச் சிறப்பாக முடித்து வைப்பான்' என்று அரசனிடம் சொல்லுகிறார். இந்த விதமாகச் சுந்தரமுனிவரின் பிரியத்திற்கும் நன்மதிப்பிற்கும் பாத்திரமான நடராஜன் வாணியின் காதலைப் பெறக்கூடிய தகுதி வாய்ந்தவனாக இருந்ததில் அதிசயமில்லை.

நடராஜன் நல்லவன்; உருவ அழகும் உள்ளத்தின் அழகும் ஒருங்கே வாய்ந்த ஆனந்த புருஷன். எனினும் கம்பீரமான குணாதிசயம் வாய்ந்தவன் என்று சொல்லமுடியாது.

சாதாரண மக்களின் சுபாவத்தோடு, ஓரளவு மாறுபட்ட சுபாவமுடையவன்தான். செயல்களில் ஈடுபடுவதைக் காட்டிலும், இயற்கையழகில் ஈடுபட்டுத் தன் போக்கிலே தியானம் செய்துகொண்டு போகும் இயல்புள்ளவன். மனித இயற்கையை நன்றாகத் தெரிந்து செயல் திறமையால் பலரையும் கவரும் இயல்பு வாய்ந்தவன் அல்லன்.

நடராஜனுக்கு ஓரளவு செயல்–திறமை உண்டென்று சுந்தரமுனிவர் கருதுகிறார். சுந்தரமுனிவரின் சொற்படியே அரண்மனையிலிருந்து மனோன்மணி முதலானவர்கள் தப்பிப்போவதற்குச் சிரமத்தைப் பாராட்டாமல் ஒரு சுரங்க வழி அமைக்கிறான் – ஆனால் இவ்வளவு செயல் திறமைக்கும் தூண்டுதல் வாணியின் காதல்தான்; அவளும் அந்த வழியாகத் தப்பி மனோன்மணியுடன் போவாள் என்ற எண்ணம்தான். நடராஜனே இதை ஒப்புக்கொள்கிறான்.

பின்னிய கூந்தல் –
பேதையின் இளமுகம்
என்உளத்(து) இருந்(து) இங்கு
இயற்றுவ(து) இப்பணி!

'நானா இந்தப் பணியை இப்படிச் செய்துகொண்டிருக்கிறேன் – சுந்தர முனிவருக்காக என் உள்ளத்திலே பிரதிஷ்டை செய்து வைத்திருக்கும் அந்தப் பெண் தெய்வமல்லவா இந்தப் பணியை இவ்வளவு அற்புதமாக இயற்றிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கிறது? என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்ளுகிறான். இதனால் 'நடராஜனுக்குள்ள செயல் திறமை அற்புதமானது என்று ஏற்படாது. வாணிக்காகவே தியானமும் செயலாகக்கூடும்' என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மற்றபடி, இயற்கையின் காதல் உலக இயற்கையையும் பயன்படுத்திக்கொண்டு வெற்றி மயமாக வாழ்க்கையைத் திறம்பட நடத்தும்படி நடராஜனைத் தூண்டக்கூடுமென்று எதிர்பார்க்க இடமில்லை.

இவன் அருணோதயம் பார்ப்பதற்கென்றே, அதிகாலையில் துயிலுணர்ந்து எழுந்து வசதியான ஓர் இடத்திற்குப் போகிறான். அந்த இயற்கைச் சித்திரம் இவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது.

சித்திரக்காரனது எழுதுகோல் தொடத்தொடப் பல உறுப்புக்களைப் பெற்றுச் சித்திரம் துலங்குவதுபோல, உதய சூரியனது பன்னிறக் கதிர்கள் தொடத்தொட இருள் கழிந்து சிறிது சிறிதாய்ப் பொருள்களின் உருவம் தெரியத் தோன்றுகிறது. சுரைக்கொடி படர்ந்த வீட்டின் உச்சிமேல் செருக்கோடு நடந்து சுற்றும் முற்றும் நோக்கிச் சேவல் கூவுகிறது. காக்கைகள் நாலு திசைகளிலும் சிதறிப் பறக்கின்றன. இவற்றையெல்லாம் தியானக் கண்ணைத் திறந்து அனுபவிக்கிறான் நடராஜன். 'காகா' என்ற காக்கைகள் தங்கள் பெயரையே அப்படிக் கோஷித்துக்கொண்டு போகின்றனவாம் – (சில பெரிய மனிதர்களைப் போல).

இப்படியே ஒரு சிறு வாய்க்காலின் விசித்திரங்களையும் பார்த்து அனுபவிக்கத் தெரியும் இவனுக்கு. சிறு புல்லையும் சிறிதென்று இகழாது அதன் பெருமையையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்கத் தெரியும். மண்ணை வளப்படுத்தும் மண் உண்ணிப் புழு என்ற நாங்கூழ்ப் புழுவுக்கும் நன்றி தெரிவித்து, அதன் பணிகளைக் குறித்துத் தியானம் செய்துகொண்டு போகவும் தெரியும்.

உதாரணமாக, ஓயாது உழைக்கும் புழுவைப் பார்த்துச் சொல்லுகிறான்:–

ஓகோ! நாங்கூழ்ப்
புழுவே! உன்பா(டு)
ஓவாப் பாடே
உணர்வேன்! உணர்வேன்!

Koviloor Digital Library

உழைப்போர் உழைப்பில்
உழுவோர் தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம்
விழுமிய வேந்துநீ!
எம்மண் ஆயினும்
நன்மண் ஆக்குவை
விடுத்தனை இதற்கா
எடுத்தஉன் யாக்கை!
உழு(து) உழு(து) உண்டுமண்
மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய்
வேதித்(து) உருட்டி
வெளிக் கொணர்ந்தும், புகழ்
வேண்டார் போல,
ஒளிக்குவை உன்குழி
வாயும்ஓர் உருண்டையால்!

(ஓவா–ஓயாத, விழுமிய–சிறந்த, வேந்து–வேந்தன். இதற்கா–இதற்காக, யாக்கை–உடம்பு, வேதித்து–பேதித்து.)

இந்த விதமாகப் புழுவும் உழைப்பு, கடமை, தியாகம் முதலான பாடங்களைக் கற்பிக்கிறது. புல்லும் கல்லும் இப்படியே பல போதனைகள் செய்கின்றன.

இந்தப் போதனைகள் இவனுடைய உழைப்பையும் செயல்களையும் திறமையையும் விசேஷமாகத் தூண்டாவிட்டாலும்,

ஈண்(டு) எப் பொருள்தான்
இலக்கற்(று) இருப்பது ?

என்ற ஒரு பாடத்தை, மனமெய் மொழிகளாலும் இவன் கற்றுக்கொள்ளும் படியாகச் செய்துவிடுகின்றன. மனித வாழ்க்கைக்கும் ஓர் இலக்கு அல்லது லட்சியம் வேண்டுமென்று துணிந்து,

எவ்வினை யோர்க்கும்
இம்மையில் தம்மை

Koviloor Digital Library

இயக்குதற்(கு), இன்பம்
பயக்கும் ஓர் இலக்கு
வேண்டும்; உயிர்க்(கு) அது
தூண்டுகோல் போலாம்

என்கிறான்.

நடராஜனுடைய வாழ்க்கைக்கு இன்பம் பயக்கும் லட்சியம் கிடைத்து விட்டது. அதுதான் வாணியின் காதல்.

இயற்கைப் பண்டிதன்

நடராஜனுக்கு உலகம் தெரியாது என்று குடிலன் நினைக்கிறான். சகடனும் அப்படியே நினைக்கிறான். உலகம் தெரியாத ஜீவக மன்னன் கூட அப்படித்தான் அபிப்பிராயப்படுகிறான். எனினும் இந்த அபிப்பிராயங்கள் முற்றிலும் சரியானவை என்று சொல்லமுடியாது. குடிலனுடைய 'சூழ்ச்சித் திறன் இவனிடம் இல்லை என்பது திண்ணம். பணப்பையின் நீளத்தை வைத்து மனிதனின் உயர்வை அளக்கும் 'சகட சாமர்த்தியமும் இவனிடம் இல்லையென்பது நிச்சயம். ஆனால் ஜீவக மன்னனைக் காட்டிலும் இந்த 'இயற்கைப் பண்டிதன்' உலக இயற்கையையும் அதிகமாய்த் தெரிந்தவர்தான்.

நடராஜன் லௌகிகப் பழக்கவழக்கங்களில் சாதாரண மனிதர்களை ஒத்திராவிட்டாலும், பொதுஜன உள்ளத்தோடும் இயற்கையோடும் ஒருவாறு பழகியிருப்பவன்தான். புருஷோத்தமனுடைய சேனை படையெடுத்து வந்து அணியணியாக ஒருபுறமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது நடராஜன் பார்த்துவிடுகிறான். அந்தப் படை வீரர்களின் முகக்குறியைக் கவனித்து 'சேரன் திருமணத்திற்கு வரவில்லை! அதற்கல்ல இந்த ஆடம்பரமெல்லாம்!' என்று தீர்மானிக்கிறான்.

வேட்டலோ இதுவும்?

(வேட்டல்–கலியாணம் செய்தல்.)

என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்கிறான்.

நெல்லையை வெல்லவே
செல்வது திண்ணம்
அந்தோ, அந்தோ!
மனோன்மணி வதுவை

Koviloor Digital Library

வந்தவாறு இதுவோ ?
வந்தவாறு இதுவோ ?

(நெல்லை–திருநெல்வேலி, ஜீவகனுடைய புதிய தலைநகரம், வதுவை – கலியாணம்.)

இதே சமயத்தில் இரண்டு உழவர்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள். அவர்களோடு நடராஜனும் பேச்சுக்கொடுக்கிறான். குடிலனுடைய சூழ்ச்சியையும் வாணியின் நிலையையும்கூட அந்த உழவர்கள் அறிந்தவர்கள் என்று தெரிந்துகொள்கிறான்.

ஏழைகள்! தங்கள்
ஆழமில் கருத்தில்
தோற்றுவ(து) அனைத்தும்
சாற்றுவர்.....

என்கிறான்.

சாதாரண ஜனங்கள் உள்ளத்தில் பட்ட உண்மையை உளறிக் கொட்டிவிடுவார்கள். அவர்கள் உள்ளம் குழந்தையுள்ளம் போன்றது என்று சொல்லும் நடராஜனுக்குப் பொது ஜன உள்ளம் சுத்தமாகத் தெரியாது என்று எப்படிச் சொல்லமுடியும்?

அரசியல் – ரகசியங்கள் சாதாரண ஜனங்களுக்கும் வெளிப்படக்கூடும் என்பதையும் நடராஜன் அறிந்தவன்தான்.

அரசன் அமைச்சர்
ஆதியர் தங்கள்
சிந்தையில் புதைத்த
அந்தரங் கப்பொருள்
விழி, முகம், நகை, மொழி,
தொழில், நடை, இவைவழி
ஒழுகிடும்; அவைகளை
உழையுளார் தமக்குத்
தோற்றிய பலவொடும்
தொடுத்துக் காற்றில்
தூற்றுவர்!
[உழையுளார் – பக்கத்தில் உள்ளவர்.]

Koviloor Digital Library

என்று ஊகிக்கிறவனுக்கு மனித இயற்கையும் ஒருவாறு தெரிந்துதான் இருக்கவேண்டும். இவ்விதமாகத் தான் ஊகித்ததையும் பார்த்ததையும் சுந்தர முனிவருக்குச் சொல்லவேண்டும் என்று புறப்படுகிறான்.

மனித இயற்கை ஒருவாறு தெரிந்திருக்கும் நடராஜன் ரகசியத்தை வெளியிடாதவன் என்பதையும் மேலே காட்டிய நிகழ்ச்சியிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம். பொது ஜனங்களால் இரகசியத்தைக் காப்பாற்ற முடியாதென்று சொல்லுகிறவன் அவர்களை ஆழமில்லாத கருத்துள்ள ஏழைகள் என்கிறான். இதனாலேயே நடராஜனை ஆழ்ந்த கருத்துள்ளவன் என்று ஊகித்துக் கொள்வது தவறாகாது.

நடராஜன் சூரியோதயத்தின் சௌந்தரியங்களை உற்று நோக்கிக் கொண்டிருக்கும்போது, பலதேவனும் வேறு இருவரும் பேசிக்கொண்டிருந்தது இவன் காதில் விழுந்தது. வாணியின் தந்தை (சகடன்) வாணியைப் பலதேவனுக்கு அல்லவா மணம் செய்து கொடுக்க விரும்பியிருந்தான்? அந்த நிலையில் வாணியைக் குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை 'அதென்ன சூழ்ச்சியோ? கேட்போம்' என்று மறைந்து கேட்கிறான் நடராஜன். அப்போது பலதேவன் தன்னை நம்பிய பெண்களைக் கெடுக்கும் அயோக்கியன் என்றும் தெரியவருகிறது.

உடனே அவனைத் தண்டிக்க வேண்டுமென்று நடராஜனுக்குக் கை ஊறுகிறது. எனினும்,

தீண்டவும் வேண்டுமோ தீயனை!

என்று தன்னைத்தானே அடக்கிக்கொள்கிறான்.

வேறொரு சமயத்திலும் 'நினைக்கலை தீயனை.... நமக்கு ஏன் இச்சினம்?' என்று தன்னடக்கம் காட்டுகிறான். இத்தகைய அடக்க உணர்வுதான் இவனை மற்றவர்களோடு நெருங்கிப் பழகவிடவில்லை. தன்னுடைய சிந்தனைகளிலும் தியாகங்களிலும் முழுகிக்கிடப்பான்; அல்லது இயற்கையழகுகளில் தன்னை இழந்துவிடுவான்.

இத்தகைய மனப்போக்கு வாய்ந்தவர்கள் வாழ்க்கையினுடைய எதார்த்தங்களைக் கண்டு கூசிப்போவது சகஜம்தான். லட்சியத்திலேயே கண்ணாய் காரியத்தைக் கை நெகிழ விடுவதும் உண்டு. பலதேவன் பாதகன் என்பதை அறிந்துகொண்ட நடராஜன் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு, பலதேவன் தூதுபோவதைத் தடுத்திருக்கலாம்; அதனால் ஏற்பட்ட அநர்த்த

Koviloor Digital Library

பரம்பரையையும் விலக்கியிருக்கலாம். அப்படிச் செய்யாததற்குக் காரணம் லட்சியவாதி காரியவாதியாக இல்லாத குறைதான்.

ஆம்? நடராஜன் இயற்கையைக் கற்ற அளவிற்கு மனித இயற்கையைக் கற்றதில்லை; காரிய உலகத்தைக் கற்றதுமில்லை. பெண்மக்களைப் பெரிதும் வியந்து பாராட்டுவதற்கு இதுவும் காரணமாகும்.

வாணியின் காதலன் காதலியின் பெண்குலத்தை வானளவும் உயர்த்திப் பேசுவதில் அதிக ஆச்சரியமில்லை. மாதருள்ளம் அலையெறியும் கடலைக் காட்டிலும் சலித்துக்கொண்டிருக்கும் என்று நாராயணன் சொன்னதும் நடராஜன் ஆத்திரமாய்ப் பதில் சொல்லுகிறான்.

கரையிலும் வெளியிலும் அலையெறியக் கூடும் பெண்ணுள்ளம்! ஆனால் உள்ளத்தின் ஆழத்திலே கலக்கமும் மயக்கமும் இல்லை அவர்களுக்கு. அன்பும், கொள்கையில் ஊறிய சக்தியும், உண்மைத் தெளிவும் அந்த ஆழத்திலே காணப்படும் நன்முத்துக்கள். அவர்களுடைய உறுதி நாராயணா, உனக்குத் தெரியாது! என்றான்.

சுற்றிச் சுழலினும்
கறங்(கு) ஒரு நிலையைப்
பற்றியே சுழலும், அப்
படி அலர் புருஷர்!
(கறங்கு–காற்றாடி, அலர்–அல்லர்.)

என்று பெண்களைப் புகழ்வதோடு, புருஷரையும் பழிக்கிறான். பெரும்பாலும் புருஷர்களெல்லாம் பலதேவனைப் போல் இருப்பார்கள் என்று நடராஜன் கருதுவது போலவே தோன்றுகிறது.

பெண்களெல்லாம் வாணியுமல்லர் புருஷர்களெல்லாம் பலதேவனுமல்லர் – என்பதை இந்த இயற்கைப் பண்டிதன் அறிந்துகொள்வதற்கு அவகாசம்தான் ஏது? சந்தர்ப்பம்தான் எங்கே?

புருஷரே புலையர்,
நிலையிலாப் பதடிகள்,
இருள் அடை நெஞ்சினர்,
ஈரம்இல் உளத்தர்;.....
தன்னயம் அன்றிப்
பின்னொன்(று) அறியார்;

Koviloor Digital Library

காதகர், கடையர்,
கல்வியில் கசடர்

(பதடி–பதர் போன்றவன், கடையர்–அதமர், கல்வியில்–கல்வியில்லாத.)

என்றெல்லாம் ஆத்திரமாக அடுக்கிக்கொண்டே போகிறான் நடராஜன்.

பெண்கள் கெடுவதெல்லாம் ஆண்களாலேதான் என்றான்.

அவாவிற்(கு) அளவிலை;
அன்போ அறியார்!
மணமும் அவர்க்(கு) ஒரு
வாணிகம், அந்தோ!

என்று கூறுகிறவன், ஆண்குலத்தையெல்லாம் பலதேவனாகவும் சகடனாகவும் பார்க்கிறான் என்பது வெளிப்படை. என்ன அனுபவக் குறைவு! என்ன பட்சபாதம்!

ஒருவாறு உலக இயற்கை தெரிந்திருந்தபோதிலும், கருத்தாழமும் தன்னடக்கமும் உடையவனாக இருந்தபோதிலும், நடராஜன் காரிய உலகம் அவ்வளவாகத் தெரியாத லட்சியவாதிதான். செயற்கைத் திறன் குறைந்த இயற்கைப் பண்டிதன்தான்!

5. மனோன்மணியின் தந்தை

இந்த நாடகத்தின் கதாபாத்திரங்களில் நடுநாயகம் போலத் தோன்றும் ஜீவக மன்னன் சர்வசாதாரணமான மன்னர்களில் ஒருவன்தான். இவனுடைய பெருமையெல்லாம் பரம்பரைப் பெருமைதான்.

ஆதி இன்னதென்று
ஓதுவதற்(கு) அரிய
வழுதியின் தொழுகுலம்

(வழுதி–பாண்டியன், தொழுகுலம்–தொழத் தகுந்த வம்சம்.)

என்று தன் குலத்தைக் குறித்துப் பெருமை பாராட்டிக்கொள்கிறான் ஜீவகன்.

தமிழ்நாட்டு வேந்தர்களின் பழம் பெருமையைக் குறித்துத் தமிழர்கள் பிரமாதமாய்ப் பேசுவதுண்டு. அவர்கள் குலத்தை 'பண்டைக்குலம்' என்றும், 'பண்டு தொட்டு வரும் குலம்' என்றும் சொல்லுவார்கள். இதே பெருமையைத் தான் பாண்டியனும் சொல்லிக்கொள்ளுகிறான். இந்தப் பரம்பரைப்

Koviloor Digital Library

பெருமையைத் தவிர வேறு விசேஷமான பெருமை எதுவும் இந்த அரசனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

போர் வந்துவிட்டது என்று தெரிந்ததும் ஜீவகன் வீரவெறியும் தேசபக்த வெறியும் கொண்டு ஒரு சொற்பொழிவு செய்கிறான் படை வீரர்களுக்கு.

ஒருதுளி யேனும்நீர்
உண்டுளீர் ஆயின்
கருதுவீர் தாம்பிர
பன்னியின் கட்டுரை'

(தாம்பிரபன்னி – தாம்பிரபர்ணி.)

என்ற பீடிகையோடு, அந்த நதிமாதா அலையெறிந்து வீரப்பிரசங்கமும் சுந்தரப் பிரசங்கமும் செய்து, அன்னியன் கைப்படாத கற்புடன் வாழ விரும்புகிறான், என்கிறான் ஜீவகன்.

பிறகு தமிழ்மொழியின் பெயராலும் சுதந்திர வெறியை உண்டுபண்ண விரும்பி,

விந்தம் அடக்கினோன்
தந்தநல் தமிழ்மொழி
தற்சுதந்திரம் அறும்
அற்பர் வாய்ப்படுமோ ?

(விந்தம் அடக்கினோன் – விந்திய பர்வதத்தைக் கர்வ பங்கம் செய்த அகஸ்திய முனிவன்.)

என்று கேட்கிறான்.

உரிமைமேல் ஆண்மை
பாராட்டார் சாந்தம்,
பெருமையில் பிணத்தில்
பிறந்ததோர் சீதம்
அந்தணர் வளர்க்கும்
செந்தழல் தன்னிலும்
நாட்டபிமானம் உள்
மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க்கு
என்றுமே உவப்பு ?

Koviloor Digital Library

(பெருமையில் – பெருமையில்லாத. சீதம் – குளிர்ச்சி, செந்தழல் – (இங்கே) யாகக்கனி.)

என்றெல்லாம் தேசபக்தியை ஒரு மதமாக்கிப் பேசுகிறான். உரிமைக்காகப் போராடாத சாந்தம் பிணத்தின் சாந்தம் அல்லது சீதந்தான் என்று சொல்லிவிட்டு, தேசபக்தர்களின் தர்மாவேசத்திலே பொங்கும் கோபத்தீயே யாகத்தீயைக் காட்டிலும் தேவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது என்றான். இப்படியெல்லாம் பேசும் மனநிலை சாமானியமாக இருக்க முடியுமா?

ஆனால் இவ்வளவு வீரமும் தேசபக்தி வெறியுங்கூட இவனுக்குப் பரம்பரையாகக் கிடைத்த பாக்கியம் என்றே தோன்றுகிறது. தன் சொந்த முயற்சியாலும், பகுத்தறிவாலும் சம்பாதித்துக்கொண்ட மன நிலையாகக் காணப்படவில்லை. ஏனென்றால் இந்த மன்னனுக்குச் சொந்த புத்தி என்ற சக்தி இருப்பதாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

புத்தியே சகல
சக்தியும்

என்றும் தன் புத்தியைக் குறித்துப் பெருமை பாராட்டிக்கொள்ளும் குடிலனுடைய புத்தியைச் சார்ந்துதான் இந்த அரசன் பிரகாசிக்க விரும்புகிறான். தனக்காக, நினைத்துத் தானே ஒரு முடிவிற்கு வரும் சிரமத்தைக் கூட இவனால் மேற்கொள்ள முடியவில்லை. குடிலனே தனக்காக நினைக்கிறான் என்பதில் இவனுக்குத் திருப்தி; சந்தோஷம்; சௌகரியம்.

குடிலனுடைய ஆலோசனை இல்லாமல் இவன் பேசும் இடங்களிலெல்லாம் சர்வ சாமானியமாகத்தான் பேசுகிறான்; எதையும் எளிதில் நம்பிவிடுகிறான். குடிலனின் கைக் கிளியாகத்தான் இருக்கிறான். இதனால்தான் அந்த மந்திரி,

நாமே அரசும்!
நாமே யாவும்!
மன்னவன் நமது
நிழலில் மறைந்தான்

என்று தனக்குள் தானே இறுமாந்து பேசுகிறான்.

குடிலன் சொன்னபடியெல்லாம் ஆடும் ஜீவகன் தனக்குத் திறமையில்லை என்று கூட உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை.

Koviloor Digital Library

குடிலன் இஷ்டப்படியே தான் கூத்தாடுவதைக் கூடத் தெரிந்துகொள்ளாமல் தன் இஷ்டப்படி நடப்பதுபோல் எண்ணித் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளவும் செய்கிறான்.

இந்தப் பரிதாப நிலை ஜீவகனைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் வெளிச்சமாகவே இருக்கிறது. அரசன் 'எடுப்பார் கைப்பிள்ளை' என்கிறான் நாராயணன்.

வெளுத்த எல்லாம்
பாலெனும் மெய்ம்மை
உளத்தான்; களங்கம்
ஓரான் ? குடிலனோ
சூதே உருவாய்த்
தோன்றினன்

என்று எவ்வளவு தெளிவாக நாராயணன் தெரிந்துகொண்டிருக்கிறான்!

மாப்பிள்ளையாக வரப்போகும் புருஷோத்தமனும் மாமனாரின் இந்தப் பரிதாப நிலையை எப்படியோ அறிந்துகொண்டிருக்கிறான். குடிலனுடைய கபடத்தை ஜீவகன் உணர்ந்துகொள்ளவில்லையே என்று அதிசயப்படுகிறான் புருஷோத்தமன். குடிலன், ஜீவகன்,

உண்மைக்கு உறைவிடம்
திண்மைக்(கு) அணிகலம்;
சத்திய வித்து;
பக்தி உன்மத்தன்;
ஆள்வினை தனக்(கு) ஆள்
கேள்விதன் கேள்வன்

(திண்மை–வலிமை, அணிகலம்–ஆபரணம், ஆள்வினை– முயற்சி, கேள்வன்–நாயகன்.)

என்றெல்லாம் புகழ்ந்து பேசி, அந்த இரவிலும் அந்த மந்திரி தனக்காக உழைத்துக்கொண்டிருக்கிறான் என்கிறான். அதே சமயத்தில் ராஜத்துரோக முயற்சியிலே ஈடுபட்டிருந்த அந்நியப் பேர்வழியை அப்படியே பிடித்துக் கொண்டு அங்கு வந்துசேர்ந்த புருஷோத்தமன் ஜீவகன் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டதும்,

Koviloor Digital Library

எத்தனை களங்கமில்
சுத்தன் கஷ்டம்!

என்று தனக்குத்தானே வருந்துகிறான்.

புருஷோத்தமனிடமிருந்து தூது வந்து ஜீவகனைப் பேருக்கு கப்பம் கட்டிப் பிழைத்துப் போகுமாறு சொன்ன வேலைக்காரன் கூட ஜீவகனுடைய பலவீனத்தைத் தெரிந்துகொண்டு,

என்மதி குறித்தாய்!
எடுத்தகைப் பிள்ளாய்!

(என்–என்ன, மதி–புத்தி)

என்று இடித்து அறிவுறுத்தப் பார்க்கிறான்.

குடிலனுக்கோ ஜீவகனுடைய நிலைமை முழுவதும் ஒரு திறந்த புத்தகம்தான். அரசனுடைய அறிவுக் குறைவையும் தன்னுடைய புத்தி, சாமர்த்தியங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து உற்சாகப்படுத்துகிறான் குடிலன்.

எத்தனை பித்தன் இவ்
அரசன்!

என்று எண்ணிப் பார்த்ததும்,

உரைக்கும் முன் கருதுவது
நமக்குறும் நலமே

என்று தன்னுடைய அறிவுத் திறமையையும் எண்ணிப் பார்த்துப் பெருமிதம் கொள்கிறான்.

இத்தகைய பலவீனங்களோடு கூடிய ஜீவகன் 'மரபு' என்றும், 'அநுஷ்டானம்' என்றும், 'பரம்பரைப் பெருமை' என்றும் மயங்கிப் போவதில் அதிசயமில்லை. இவனுடைய தேசபக்தியும் வீரமும்கூட இத்தகைய மனநிலையின் பகுதியாகவேயிருக்கின்றன.

எனினும் காவிய நாயகியாகிய மனோன்மணியின் தந்தையல்லவா? பரம்பரைப் பெருமையோடு, தியாக புத்தியோடு விளங்கும் மனோன்மணியின் தந்தை என்ற பெருமையும் ஜீவகனுக்கு அளிக்கவேண்டியதுதான்.

Koviloor Digital Library

நம்மைக் கவரும் குண விசேஷம்

பரம்பரைப் பெருமையில் ஊறிப்போயிருக்கும் ஜீவகமன்னன் தன் புத்திரியாகிய மனோன்மணியைக் குறித்து எவ்வளவோ பெருமை கொண்டிருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. இந்த அருமைத் திருமகள் மீது எவ்வளவோ அன்பு வைத்திருக்கிறான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மகளுக்குத் தந்தையாக இருந்ததோடு ஓரளவு நண்பனாகவும் இருந்து, தாயில்லாத அந்தப் பெண்ணின் உள்ளத்தை ஒருவாறு அறிந்துகொண்டவன்தான்.

எனினும் மனோன்மணியின் காதல் நோயை அறிந்துகொள்ளும் அறிவுத் திறமைகூட இந்த அரசனிடம் காணப்படவில்லை. பரம்பரை என்றும் அநுஷ்டானம் என்றும் பிரமாதப்படுத்திக்கொண்டு தன் சொந்த மூளைக்கு வேலை கொடுக்க அஞ்சுகிறவன் இவன். அதனால்தான் விலகியிருந்த குடிலன் தெரிந்துகொண்ட அளவிற்கும் காதலால் வருந்தும் தன் மகளைத் தந்தை தெரிந்துகொண்டானில்லை.

தன் மகளையே தெரிந்துகொள்ளாதவன் பிறரை எப்படித் தெரிந்து கொள்ளமுடியும்? நடராஜனையும் தெரிந்துகொள்ளவில்லை. நாராயணனையும் தெரிந்துகொள்ளவில்லை. விசேஷ குரு பக்தியுள்ளவனாக இருந்தும் குருவாகிய சுந்தர முனிவரையும் தெரிந்துகொண்டானில்லை.

குடிலனுடைய சூழ்ச்சிக்கு இரையாகி ஒரு சமயம் குருவையும் சந்தேகப்படுகிறான். குடிலனுடைய மகனான பலதேவனின் அயோக்கியதை எத்தனையோ பேருக்கு எவ்வளவோ வெளிப்படையாகத் தெரிந்துவிட்ட போதிலும் ஜீவகனுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. இப்பேர்ப்பட்ட 'பிரகஸ்பதி' கபட நாடகங்களில் கைதேர்ந்த குடிலனை அறிந்துகொள்ள முடியுமோ?

திருநெல்வேலிக் கோட்டை கொத்தளங்களைப் பௌராணிகர்களின் தோரணையில் குடிலன் வருணிக்கத் தொடங்கியபோது சுந்தர முனிவருக்கு அருவருப்பாகவே இருந்தது. நகரவாசிகளுக்கு அது வீணான புராணமாகவே தோன்றியது. அச்சமயம் அரசன்கூட விரஸம் அடைந்ததாகவே ஒரு நகரவாசி அபிப்பிராயப்படுகிறான்.

விரஸமாய் அரசனும்
வியர்த்தனன் கண்டேன்

Koviloor Digital Library

என்கிறான் அவன். எனினும் இந்த அரசன் பெரும்பாலும் குடிலனுடைய சூழ்ச்சிகளையும் பேச்சையும் ரஸிப்பவன்தான்.

அந்தக் கணம் விரஸப்பட்டபோதிலும் அடுத்த கணத்திலேயே குடிலனுக்குப் பின்பாட்டுப் பாடுகிறவன்தான். குடிலன் பொதுவாக முனிவர்களையும், சிறப்பாக சுந்தர முனிவரையும் தாக்கிப் பேசி, 'இந்த ஆசாமிகள் கோயில் ஒன்றையே அறிவார்கள்; கோட்டை கொத்தளங்களை அறிவரோ? நம்முடைய கோட்டை கொத்தளங்களைப் பழித்ததற்குக் காரணம் அழுக்காறு என்று நாம் சந்தேகமில்லாமல் சொல்லலாமா? குலகுரு அல்லவா?' என்று தந்திரமாய்ப் பேசினான். உடனே ஜீவகனும்,

ஐயரும் அழுக்காறு)
அடைந்தார் மெய்ம்மை,
கோவில் தானா
காவலர் கடமை ?
கேவலம், கேவலம்,
முனிவரும் ஆ! ஆ!

என்கிறான்.

குடிலன் எவ்வளவுக்கெவ்வளவு ஜாக்கிரதையாகவும் விழிப்பாகவும் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு ஜீவகன் அவனது 'ஹிப்னாடிஸ்'த்தில் கட்டுப்பட்டு வசிய நித்திரையில் இருப்பவன்போல், நடந்துகொள்கிறான். ராஜபக்தனான நாராயணன் எச்சரிக்கை செய்து பார்த்தும் ஒரு

நாரணா! நீயும்
நடேசன் தோழனே
[நடேசன் – இங்கே) நடராஜன்.]

பயனுமில்லை! என்று இருவரையும் ஒரே பைத்தியமாக்கிப் பேசுகிறான். குடிலன் மீதுள்ள மோகத்தினால், பைத்தியத்தினால்

நாரணா உனக்(கு)
ஏன்இப் பித்து ?
தீரா இடும்பையே
தெளிதல் ஐயுறல்!
[இடும்பை – துன்பம், ஐயுறல் – சந்தேகித்தல்]

Koviloor Digital Library

என்று இவ்வளவு தெளிவாகத் தன் சித்தாந்தத்தை வெளியிடுகிறான் ஜீவகன்.

'தெளிந்த விஷயத்தில் சந்தேகம்கொள்வது தீராத் துன்பம் என்பதை மீற முடியாத ஓர் இயற்கைச் சட்டமாக்கிப் பேசுகிறான். குடிலன் தன்னிடம் அன்பும் ஆர்வமும் உள்ளவன் என்பதும், அவன் பரமராஜ விசுவாசி என்பதும் தெளிவாக இருக்கும்போது, அதைச் சந்தேகிப்பது தீராத் துயரம் தருவது என்பதுதான் பொருள். இந்த ஜீவக சித்தாந்தம் ஒன்றே போதும், இந்த அரசன் உலகத்தை அறிந்தவன் இல்லை என்பதற்கு. உலகம் அப்படி ஒரு யந்திரம் போலவும், இதில் உள்ளவர்களெல்லாம் யந்திர உறுப்புக்கள் போலவும் இயங்குகிறார்களென்று ஜீவகன் கருதுவது போலத் தோன்றுகிறது. உண்மையில் மக்கள் இப்படியா இருக்கிறார்கள்?

பல திசைகளிலிருந்து மோதும் சக்திகளுக்கு இசைந்தபடி கூத்தாடுகிறார்களல்லவா? சூழ்நிலைகளும் மாறி மாறிப் பாதிக்கின்றன; திட்டங்களும் நோக்கங்களும் ஆசைகளும் குறுக்கும் நெடுக்குமாக ஜீவ ஓட்டங்களை நிர்ணயிக்கின்றன. மக்கள் வளர்கிறார்கள்; மாறுகிறார்கள்; 'ராபட்' (Robot) மனிதன்போல் ஒரேமாதிரியாக நடந்துகொள்வதில்லை. இந்த உலக ஞானமில்லாத ஜீவகன் மக்களை எப்படிச் சரியாக அறிந்துகொள்ள முடியும்?

பல சந்தர்ப்பங்களையும் பார்த்துத்தானே மக்களை மதிக்க வேண்டும்? சந்தர்ப்பங்களின் மாறுதல்களுக்குத் தக்கபடி புதிய சந்தர்ப்பங்களை முன்னிட்டு ஒருவன் தான் தெரிந்துகொண்டிருந்த விஷயங்களைக் குறித்தும் புனராலோசனை செய்யவேண்டியதுதான். இப்படி உலக இயற்கையை அறிந்துகொள்ளாமல்தான் ஜீவகன் தடுமாறிப் போய்க் குடிலன் தோண்டிய குழிக்குள்ளே விழப் பார்க்கிறான்.

குடிலனோ காலபேத இயல்புகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தகுந்தபடி திட்டத்தை உருவாக்கிக்கொண்டே போகிறான். அவன் பாவ புண்ணியங்களை லட்சியம் செய்யவில்லை என்பது உண்மைதான். எனினும் அவனுடைய புத்திக்கூர்மை அதிசயமானதுதான். அத்தகைய மந்திரிக்கு இந்த அரசன் அடிமையாகிவிட்டதில் என்ன அதிசயமிருக்க முடியும்?

உலகம் தெரியாத ஜீவகனுக்குப் பெண்ணுலகம் ஒரு சிறிதும் தெரியவில்லை. 'இதனால்தான் வாணியின் காதல் மணத்தை வாணிப மணமாக்க உடன்படுகிறான். தன் அருமை மகளையும் குடிலன் மகனுக்கு

Koviloor Digital Library

மணஞ்செய்து கொடுக்கப் பார்க்கிறான். மனோன்மணி 'பிதுர் வாக்கிய பரிபாலனம்' என்ற பழைய லட்சியத்தை ஒரு தவமாக மதிப்பதால் அவள் விஷயத்தில் ஜீவகனுடைய அதிகாரம் அவ்வளவு கொடுமையாகத் தோன்றவில்லை. வாணியோ ஒரு புதுமைப் பெண்; சுதந்திரப் பிரியை. அவள் விஷயத்தில் அரசன் அதிகாரம் செலுத்தப் பார்ப்பது எவ்வளவு அநியாயம்!

தன் மகளையும் அறிந்து கொள்ளாதவன், வாணி, நடராஜன், சகடன், சுந்தரமுனிவர், புருஷோத்தமன் முதலானவர்களையும் அறிந்துகொள்ளாததில் அதிசயம் ஒன்றுமில்லை. ஸ்தூலமாக ஏதேதோ கொஞ்சம் தெரிந்து கொண்டிருக்கலாம், இதனால் அவர்களைச் சரியாக மதித்துக் காரியங்களை நடத்திக்கொண்டு போக முடியுமா?

இவன் நண்பர்களைப் பகைவர்களாக நினைக்கிறான்! பகைவர்களை நண்பர்களாக மயங்குகிறான்.

நம்பினோம் நாரா
யணனை அதற்கா
வம்பே செய்தான்
மாபா தகன் அவன்
நட்பே நமக்(கு) இங்(கு)
உட்பகை ஆனது!

என்று எவ்வளவு லேசாகத் தீர்மானித்துவிடுகிறான், குடிலன் பேச்சைக் கேட்டுக்கொண்டு,

'நான் மதுரையை விட்டுத் திருநெல்வேலிக் கோட்டையும் அரண்மனையும் கட்டிக்கொண்டதற்காக முனிவர் மனத்திலே 'கல்மிஷம்' கொண்டிருக்கிறார்' என்று கூடத் தீர்மானித்துவிடுகிறான். குடிலனே ஒப்பற்ற நண்பன் என்றும் முடிவு கட்டுகிறான்.

இத்தகைய புத்திசாலி ஆத்திரப்பட்டும் காரியம் செய்வதென்றால், அது எவ்வளவு விபரீதமாகக் கூடும்? குடிலன் பேச்சைக்கேட்டு ராஜ பக்தனான நாராயணனுக்கு மரணதண்டனை விதிக்கவும் துணிந்தான் என்றால், இந்த அரசன் பகுத்தறிவுக்கு எவ்வளவு தூரம் ஓய்வு கொடுத்திருக்கவேண்டும்? எவ்வளவு தூரம் மன எழுச்சியே புத்திசாலித்தனம் என்றும், நியாயத் தீர்ப்பு என்றும் மயங்கிப் போயிருக்கவேண்டும்?

Koviloor Digital Library

தன் படை வீரர்களில் ஒருவனாகிய முருகனை நோக்கி, இவனை நொடிப்பொழுதில் கொண்டுபோய்க் கழுவேற்றுங்கள் என்கிறான். அரசன் நாராயணனைக் குறித்து இப்படிச் சொன்னபோதிலும், முருகன், 'குடிலரே! வாரும்' என்று குடிலனைக் கூவியழைக்கிறான் கழுகுமரத்திற்கு. 'குடிலனைத் தவிர வேறு யாருக்கு அந்தத் தண்டனை பொருந்தும்? என்பது முருகன் மன நிலை, உடனே ஜீவகன்,

மாட்டுதிர் இவனையும்
வன்கழு அதனில்

(மாட்டுதிர் – மாட்டுங்கள்.)

என்று முருகனுக்கும் மரண தண்டனை விதிக்கப் பார்க்கிறான். ஆஹா, என்ன புத்திசாலித்தனம்!

இப்படிப்பட்ட அரசனும் வீர மன்னனாக, தேச பக்தனாகப் போர்க்களத்திலே உயிரைக் கொடுக்க வருகிறான். நெருக்கடியிலே தியாக புத்தி ஏற்பட்டு அது இந்த அரசனுடைய மந்த புத்தியையும் ஒருவாறு தீட்டிவிடுவது போலத் தோன்றுகிறது. இதனால் ஓர் அரசன் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைக் குறித்தும் பிரமாதமாகப் பேசுகிறான் சுந்தர முனிவரிடம்.

ஆதலால் அடிகாள்!
பூதலத்(து) உயர்ந்த
மேதையில் மிகுந்த
மானிடர்க்(கு) அரசராய்
வந்தவர் தத்தமக்(கு)
உற்ற மதித்திறம்
எட்டிய மட்டும்
குற்றம் விடுத்துக்
காலகதிக்(கு) அனு
கூலமாய் நவீனச்
சீர்பல திருத்தி
ஓர் இயல் புதிதாய்
நாட்டித் தமது
நாட்டுளோர் சுகம்

பாராட்ட வேண்டும் என்கிறான்.

Koviloor Digital Library

மனோன்மணி தன் தந்தைக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் துணிந்தாள். இவளுடைய தந்தை எவ்வளவோ மட்டமான அரசனாயிருந்த போதிலும் தியாக புத்தியுடன் விளங்குவது பொருத்தம்தான். இது ஒன்றே இந்தக் குணாதிசயத்தில் நம்மைக் கவரும் அம்சம்.

6. மன்னனும் மதிமந்திரியும்

ஜீவகன் சர்வ சாதாரணமான – பரம்பரைப் பெருமை தவிர வேறு விசேஷப் பெருமையில்லாத – மன்னன் என்றால் அந்த அரசனுடைய மந்திரியை ஓர் அசாதாரண மனிதன் என்றே சொல்லவேண்டும்.

புத்தியே சகல
சக்தியும்

என்று நம்பி அந்தச் சக்திகொண்டு தன் இஷ்டப்படியெல்லாம் மன்னனை ஆண்டுவந்த மந்திரியை 'மதிமந்திரி' என்று சிறப்பாகக் கூற வேண்டும்.

ஜீவகனுடைய பலவீனம் இவனுக்குக் கிடையாது. ஆம். அபாயகரமாகத் தன்புத்தியைக் கூர்மை செய்துகொண்டு எந்தச் சந்தர்ப்பத்தையும் பிளந்து பார்த்து, நிலைமையைக் கண்டுகொள்ளும் இந்தக் கூர்மையான சக்தியை மனச்சாட்சியால் கூடப் பயமுறுத்த முடியவில்லை.

தீது நன்றென
ஓதுவ எல்லாம்
அறியார்க்கு அறையும்
வெறுமொழி அல்லவோ ?

[அறியார் – அறியாத மூடர், அறையும் – முழக்கிக் கூறும்.]

என்று எண்ணுகிறவனைத் தருமம்தான் பயமுறுத்த முடியுமா?

ஆனால் ஜீவகனுடைய பலமாகிய தேசபக்தியும், குடிலனுக்குக் கிடையாது; பரம்பரைச் செல்வமாகஅரசனுக்குக் கிடைத்திருந்த அந்த வீரமும் இவனிடம் காணப்படவில்லை. இவன் சுயநலப் புலி. சுய காரிய சூரன்.

அரசன் மூளையை உழைத்து உண்மை காண்பதற்கு அஞ்சுகிறான் என்பதை நன்கறிந்து அவனுக்காகத் தன் மூளையை உழைப்பதுபோல் பாசாங்கு செய்து சுயகாரிய சித்திக்கு வழி தேடுகிறான். எதையும் எளிதில் நம்பிவிடும் அரசனை எளிதில் தன் புத்திக்கு அடிமையாக்கிக் கொள்கிறான் குடிலன். 'புலிக்குப் பயந்தவர்களே! என்மேல் படுத்துக்கொள்ளுங்கள்' என்று

Koviloor Digital Library

பிறரைத் தூண்டித்தான் தப்பிப் பிழைத்த புத்திசாலியைப் போல் குடிலனும் அரசனைத் தான் சுமப்பதுபோல் பாவனை செய்கிறான். அவனைப் பொம்மைபோல ஆட்டிவைத்து,

மன்னவன் நமது
நிழலில் மறைந்தான்!

என்று மகிழ்ந்து போகிறான்.

ஜீவகன் எவ்வளவுக்கெவ்வளவு பரம்பரையையும் அனுஷ்டானங்களையும் பிரமாதப்படுத்துகிறானோ அவ்வளவுக்கவ்வளவு குடிலன் அவற்றை மதிப்பதில்லை, இகழ்கிறான், தன் உள்ளத்திற்குள்ளே. அரச பரம்பரையெல்லாம் தன்னைப் போன்ற சூழ்ச்சிக்காரர்களால், வேறு சூழ்ச்சிக்காரர்களான குருமார்களின் உதவி பெற்று ஏற்பட்டதுதான் என்பது குடிலனுடைய திடமான நம்பிக்கை.

சுந்தரமுனிவர் போன்ற குரு சிரேஷ்டர்களையும் முனிவர்களையும் கூடக் கேவலமான சூழ்ச்சிக்காரர்களாகவே மதிக்கிறது குடிலபுத்தி. ஆமாம், தருமன் கண்ட தரும உலகத்தை துஷ்ட உலகமாகத்தானே கண்டான் துரியோதனன்?

தர்ம புத்தியிலும் தியாக புத்தியிலும் குடிலனுக்கு நம்பிக்கையில்லா விட்டாலும், ஜீவகனைப் போல் உலகமும் ஒரே நிலையில் இருப்பதாகவும், உலக மக்கள் உலகமாகிய நாடக மேடையில், பாவைக் கூத்தில் ஒரேமாதிரி நடித்துக்கொண்டிருப்பதாகவும் இவன் நம்புவதேயில்லை. மாறும் சூழ்நிலை களுக்குத் தக்கபடியும் அவர்களுடைய ஆசைகள் நோக்கங்களுக்குத் தக்கபடியும் வயது முதலிய காரணங்களுக்குத் தக்கபடியும் மனிதர்கள் மாறுகிறார்கள் என்பது குடிலனுக்கு நன்றாகத் தெரியும். இந்த அறிவையும் பயன்படுத்திக்கொள்ளுகிறான் குடிலன், தன்னுடைய சூழ்ச்சித் திட்டங்களிலே.

குடிலனுடைய மனக்கண் எப்போதும் சர்வ ஜாக்கிரதையாக விழித் திருக்கிறது என்று சொல்லலாம். திட்டத்திற்கு மேல் திட்டம் போடுகிறான், சந்தர்ப்ப மாறுதல்களுக்குத் தக்கபடியெல்லாம். அரசனுடைய மந்த புத்தியைக் கண்ட வாசகருள்ளம் மந்திரியின் புத்திக் கூர்மையைக் கண்டு வியப்படைகிறது.

குடிலனுடைய புத்திக் கூர்மை இவனுடைய கபட நாடகத்திற்கும் பெரிதும் துணை செய்கிறது. கடைசிவரையில் அரசன் குடிலனை நம்பத்தானே செய்கிறான்! நம்பத் தக்கவர்களையும் நம்பாமல்

Koviloor Digital Library

நம்பிய பாய்மரம் பழுது!

என்று சொல்லும் ஜீவகன் தன்னுடைய வாழ்வாகிய கப்பலுக்குக் குடிலன் என்ற பாய்மரம் ஒன்றே பழுதற்றது என்று துணிகிறான். ஏன்? ராஜ்ய காரியமாகிய பாய்க்கப்பலையே இந்தப் பாய்மரந்தான் சரியாகச் செலுத்தும் என்று நம்பிவிடுகிறான்.

அரசன் எவ்வளவுக்கெவ்வளவு மற்றவர்களை அறிந்துகொள்ளத் தவறுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு குடிலன் அவர்களை அறிந்து கொண்டிருக்கிறான். நாராயணனை ராஜபக்தன் என்று ராஜா அறிந்து கொள்ளவில்லை. குடிலனோ அதை நன்கு தெரிந்துகொண்டே அந்தப் பரமராஜ பக்தனை ராஜத்துரோகி என்று அரசனை நம்பச் செய்கிறான்!

நடராஜனைச் 'சுத்தப் பைத்தியம்' என்றுதான் அரசன் மதிக்கிறான். அவனுடைய மனநிலையையும் அறிந்தவன்தான் குடிலன். லௌகிக சாமர்த்தியம் இல்லாத அவனை அவ்வளவு கெட்டிக்காரன் என்று குடிலன் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவனைப் பித்தன் என்று நம்பியிருக்க முடியாதல்லவா? நாராயணன் ராஜத்துரோகி என்றால், நடராஜன் உலகம் தெரியாததாலும் 'முனிவர் பிரியன்' என்ற தைரியத்தினாலும் ராஜ்யகாரியங்களில் மேலுத்தரவுகளுக்குக் கீழ்ப்படிவதில்லை என்று அரசனை நம்பச் செய்துவிடுகிறான் குடிலன்.

இப்படியே சகடன் முதலானவர்களையும் திறந்த புத்தகம்போல் படித்து அறிந்திருக்கிறான் தன்னுடைய புத்தியின் சக்தியால், சுந்தர முனிவரையும் தெரிந்துதான் தூஷிக்கிறான் அரசனிடம்.

எனினும் சுந்தர முனிவருடைய ஞானமும் தியாகபுத்தியும் குடிலனைப் போன்ற சுயகாரியப் புலிகளுக்கு அப்படியே விளங்கியிருக்கும் என்று எதிர்பார்க்க இடமில்லை. இதனால்தான் நாடக ஆரம்பத்திலேயே வஞ்சகமாய்ப் புகழ்ந்து முனிவரையும் வசீகரித்து விடலாமென்று நம்பினான். அந்த வீணான புராணத்திற்கு முனிவரா வசப்படுகிறவர்?

எனவே முயற்சியைப் பிறகு அறவே விட்டு அவரைப் பற்றி அரசன் கொண்டிருந்த அபிப்பிராயத்தையே மாற்றி விட முயல்கிறான்; இந்த முயற்சியிலும் ஓரளவு வெற்றிதான் கிடைக்கிறது; பூரண வெற்றி கிடைக்கவில்லை. பூரண வெற்றி கிடைக்குமென்று குடிலனும் நம்பியிருக்க முடியாது!

தர்ம புத்தியிலும் தியாக புத்தியிலும் குடிலனுக்கு நம்பிக்கையே இல்லாததால், குடிலன் சுந்தர முனிவரைப் பூரணமாக அறிந்துகொள்ள

Koviloor Digital Library

முடியவில்லை. இதே காரணத்தால் புருஷோத்தமனையும் பூரணமாக அறிந்து கொள்ளவில்லை.

'புருஷோத்தமன் ஜீவகனோடு போர் புரிய வந்திருப்பதால் அந்த வெற்றி போரால் கிடைத்தாலும் சரி, சூதால் கிடைத்தாலும் சரிதானே! நாம் வஞ்சகமாக ஜீவகனை காட்டிக் கொடுத்தாலும் புருஷோத்தமன் ஒப்புக் கொள்வான்; நமக்கே ராஜ்யத்தையும் தந்து தனக்கு வேண்டிய கப்பத்தையும் பெற்றுக்கொள்வான்' என்று நம்பிவிடுகிறான் குடிலன். இந்தச் சூழ்ச்சிக்குள் புருஷோத்தமனுடைய வீர தர்மம் அகப்படாது என்பதைக் குடிலனுடைய கூர்மையான புத்தியாலும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த அளவிற்கு இந்த மதி மந்திரியின் கையிலும் ஒரு குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. அதாவது மனித வாழ்வின் உன்னத லட்சியங்களில் நம்பிக்கையில்லாத குறைபாடுதான். எவ்வளவு புத்திசாலித்தனம் இருந்தபோதிலும் இந்த நம்பிக்கை அல்லது விசுவாசம் இல்லாவிட்டால், முடிவான வெற்றியை அடைய முடியாது.

இந்தப் பாடத்தை நம் குடில மந்திரியின் குணாதிசயத்திலிருந்து தெளிவாகக் கற்றுக்கொள்கிறோம். இந்தக் குறைபாடு இன்றைய அரசியல் உலகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறவர்களிடத்திலும் காணப்படுகிறது. புத்திக்கூர்மையைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டாவது தர்ம விசுவாசத்தைத் தூண்டிக் கொண்டிருந்தால் குடிலன் உய்ந்து போயிருப்பான். தற்கால உலகம் உய்யும் வழியும் இதுதானே!

7. குடில புத்தி

மண்ணைப் பிசைந்து தன் இஷ்டப்படியெல்லாம் பாண்டங்களாக வனையும் குயவனைப்போல் ஜீவகனைத் தன் இஷ்டப்படியெல்லாம் ஆக்கிவைத்த குடிலபுத்தி இந்த நாடகம் முழுவதும் ஊடுருவிக் கிடக்கிறது. இதனால்தான் குடிலனைக் கதாநாயகன் என்றும் சிலர் வாதாடத் துணிந்தார்கள். ஆனால் கதைப் போக்கும் கதையின் உட்பொருளும் இந்தக் கொள்கைக்கு விரோதமாயிருக்கின்றன.

குடில புத்தி சுயநலத்திலே ஊறிப் போயிருக்கிறது. சுய நலம் என்றால் சாதாரணமாய்ப் பார்க்கும் சுயநலமா? தீவிர சுயநலம் என்றாலும் போதாது; அதி தீவிரச் சுயநலம் என்றே சொல்லவேண்டும்.

Koviloor Digital Library

இத்தகைய சுயநலத்தின் மறுபக்கம் பேராசை, அதி தீவிரமான பேராசை, குடிலனுடைய பேராசையைப் 'பேயாசை' என்றே சொல்லலாம். இது குடிலனுடைய சுயநலத்தை இரவு பகலைத் தொடர்வது போலத் தொடர்கிறது. இவன் அரசனை ஆட்டுவிக்க இந்த ஆசை இவனைப் பேயாட்டம் ஆட்டி வைக்கிறது.

முதலாவது அங்கம் முதலாவது களத்திலேயே குடில புத்தி வெளிப்படுகிறது. குடிலன் ஏதோ ஒரு பக்தன் போலவும் பௌராணிகன் போலவுமே முதல் முதலில் பேசுகிறான். குரு பக்தியில் நிகரற்றவன் போலவும் பாசாங்கு பண்ணுகிறான். சுந்தர முனிவரோ அந்த ஆஷாடபூதித் தனத்தைப் புறக்கணித்துவிட்டு மனோன்மணியைப் பார்க்க விரும்பி அரசனும் சிஷ்யர்களும் தொடரப் போகிறார்.

அச்சமயம் குடிலன், 'முனிவர் பல்லக்கு, சின்னம் முதலியவற்றை அதோ அந்த வாசலுக்குக் கொண்டுபோ' என்று சேவகனுக்குக் கட்டளையிடும்போதே தனக்குள்,

நம் காரியம் ஜயம்
எங்காகினும் செல!

'முனிவர் எங்கே வேணுமானாலும் போகட்டும்; நம்முடைய காரியம் ஜயம்தான்' என்று சொல்லிக்கொள்கிறான். இது குடில குணாதிசயத்தின் ஜீவநாடி; குடிலபுத்தியின் இரகசியம்.

குடிலன் தன்னுடைய வஞ்சப் புத்தியை எவ்வளவோ இரகசியமாக மறைத்து வைத்துப் பார்த்தும் சுந்தரமுனிவரின் ஞானப்பிரகாசத்திற்குமுன்,

வேஷரக சியங்களெல்லாம்
வெட்ட வெளியான!

என்றபடி வெளியாகிவிடுகிறது. ஆம்; அவர் கண்ணுக்குத்தான். அவரும் இரகசியமாக மனோன்மணியின் பாதுகாப்பிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறார். எனினும் முனிவர் அரசனை வெளிப்படையாக எச்சரிக்கவில்லை. எச்சரித்தாலும் பயன்படாது என்பதைத் தெரிந்து கொள்ளாதவரா?

ராஜபக்தனாகிய நாராயணனும் இந்த ராஜத் துரோகியின் கபட நாடகத்தை அறிந்தவன்தான். அரசனை எச்சரித்துப் பார்க்கிறான்.

Koviloor Digital Library

குறிப்பாகவும் வெளிப்படையாகவும், பயன்படவில்லை. 'தெளிவிலே சந்தேகம் தீராத் துன்பம்' என்கிறான் அரசன். 'கரும்பு கைப்பது உன் வாய்க்குற்றம்' என்று சொல்லிப் போகிறான். சேவர்களுடன் போனதும் நாராயணன் தனக்குள்ளே பின்வருமாறு பேசிக்கொள்கிறான்;

ஐயோ ? இதற்(கு) என்
செய்வன் ? அரசன்
உறுதியா நம்பினன்;
சிறிதும் பிறழான்.
வெளுத்த எல்லாம்
பாலெனும் மெய்ம்மை
உள்ளத்தான் களங்கம்
ஓரான், குடிலனோ
சூதே உருவாய்த்
தோற்றினன்! அவன்தான்
ஓதுவ, இன்னுவ,
செய்குவ யாவும்
தன்னயம் கருதி
அன்றி மன்னனைச்
சற்றும் எண்ணான்.
நல்லவன் போலவே
நடிப்பான், பொல்லா
வஞ்சகன்,

(என்–என்ன. செய்வன்–செய்வேன். பிறழான் – மாற மாட்டான். ஓரான் – அறியமாட்டான். ஓதுவ – சொல்லுவன, உன்னுவ – நினைப்பன.)

நாராயணனுடைய நுண்ணறிவு எவ்வளவு கூர்மையாகக் குடிலனுடைய குணாதிசயத்தைப் பிளந்து பார்த்துவிட்டது, பாருங்கள்! நாராயணனுக்குத் தெரிந்தது ராஜ சபையிலுள்ள மற்றவர்களுக்கு இவ்வளவு நன்றாகத் தெரிந்திராவிட்டாலும் ஓரளவு தெரிந்ததுதான். எனினும் அவர்களில் பலரும் நாராயணனைப் போல் இவ்வளவு ராஜ பக்தியுடன் நெஞ்சிலே நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள் குடில புத்தியின் போக்கை.

'மன்னன் அருகுளோர் அதனை நெஞ்சிலும் நினையார், நினையினும் உரையார்' என்று நாராயணனே தனி மொழியாகச் சொல்லிக்கொள்கிறான்.

Koviloor Digital Library

அவர்களுக்குக் குடிலனைப் போல் அவ்வளவு சுயநலம் இராவிட்டாலும் ஓரளவு இருக்கத்தானே செய்யும்.

இறைவன் குறிப்பிற்(கு)
இசைய அறைவா,
வடித்து வடித்து
மாற்றொலி போன்றே!
தடுத்து மெய்ம்மை
சாற்றுவர் யாரே?

(இறைவன்–அரசன், மாற்றொலி–எதிரொலி.)

என்று வருந்துகிறான் நாராயணன். இத்தகைய முகஸ்துதிக்காரர்கள் நிறைந்த ராஜசபையிலே நாராயணன் பேச்சு எடுபடவில்லை.

சாமானிய ஜனங்களும் குடிலனுடைய கபட நாடகத்தை அறிந்தவர்களே. 'குடிலன் கைதொடில் மஞ்சளும் கரியாகும்மே!' என்கிறான் உழவன் ஒருவன். வேறோர் உழவன்,

குடிலன் படிறன்;
கொற்றவன் நாடும்
முடியும் கவர்ந்து
மொய்குழல் மனோன்மணி
தன்னையும் தன மகற்(கு)
ஆக்கச் சமைந்தான்
மன்னனைக் கொல்ல
மலையனைத் தனக்குச்
சூதாய்த் துணைவரக்
கூவினான்!

(படிறன்–வஞ்சகன், கொற்றவன்–அரசன், மொய்குழல்–நெருங்கிய கூந்தல், மகற்கு–மகனுக்கு, மலையன்–சேரன்.)

என்று சொல்லுகிறான். குடிலனுடைய பேராசையையும் வஞ்சக புத்தியையும் எவ்வளவு தெளிவாக அறிந்திருக்கிறான் இந்தக் குடியானவன்!

குடியானவர்களும் உணர்ந்திருந்ததை நகரவாசிகளும் அறிந்திருந்ததில் என்ன ஆச்சரியம்?

Koviloor Digital Library

குடிலன் செய்யும்
படிறுகள் முனிவர்
அறியாதவரோ ?

[படிறு–வஞ்சனை.]

என்று ஒரு நகரவாசி கூறுகிறான், முதலாவது அங்கம் முதலாவது களத்திலேயே.

குடிலனுடைய வஞ்ச புத்தியை ஒருவாறு நகரவாசிகளும் குடியானவர்களும் கூட அறிந்திருந்த போதிலும் அரசன் அறிந்துகொள்ளாததற்கு அவனுடைய புத்திக் குறைவுதான் முக்கிய காரணமாயிருக்க வேண்டும். புத்திக் குறைவுள்ள அரசனுடைய மகா புத்திசாலியான இந்த மந்திரியின் அவ்வளவு புத்திசாலித்தனமும் நேர்மையான நெறியில் செல்லாமல், கோணலான வஞ்சக வழிகளிலேயே சென்றுகொண்டிருக்கிறது. இதனாலேயே குடிலனுடைய புத்தியின் நுட்பமான போக்கு ஓரளவு சிந்தனா சக்தியுள்ள பலருக்கும் புலனாகிவிடுகிறது.

தன்னுடைய பேராசை எவ்வளவு 'கோணல் மாணலாய்ச்' செல்லுகிறது என்பதைக் கூர்மையான அறிவுள்ள குடிலன் தான் உணராமல் இருக்க முடியுமா? யுத்தம் வந்துவிட்டது. படைகள் அணிவகுக்கப்படுகின்றன. அரசனை எதிர்பார்த்து ஒரு புறமாக நிற்கும் குடிலன் தனக்குள் தானே பேசிக்கொள்கிறான்.

பரிதியும் எழுந்தது!
பொருதலும் – வந்தது
கருதற்(கு) என்உள ?
காணுதும் ஆ!ஆ!
ஒருவன(து) ஆசைப்
பெருக்கால் உலகில்
வருந்துயர் கடலின்
பெரிதே.

[பரிதி–சூரியன், பொருதல்–போர் புரிதல், கடலின்–கடலைக் காட்டிலும்]

என்று எண்ணும்போதே குடிலனும் பெருமூச்சு விடுகிறான்.

எனினும் இந்த நல்ல புத்தியைக் கோணல் புத்தி கடிந்துகொள்கிறது.

Koviloor Digital Library

என்னை ? என்மதி
இங்ஙனம் அடிக்கடி
என்னையும் எடுத்தெறிந்(து)
ஏகுதல் ? சீச்சீ!

(என்னை – என்ன)

என்று தன்னைத்தானே கண்டித்துக்கொண்ட போதிலும், ஏன், நல்ல புத்தியைக் கோணல் புத்தி எளிதில் வென்றுவிடுகிறது; நல்ல புத்தியைக் கோழைத்தனம் என்று குற்றமும் சாட்டுகிறது;

பலபெயர் துக்கப்
பட்டால் அன்றி,
உலகில் எவரே
ஒரு சுகம் அணைவார் ?

[அணைவார்–அடைவர்]

என்பது இந்தக் கோணல் – புத்தியின் கோணல் – தத்துவம்.

'உலகமே இப்படித்தான்; எங்கும் கோணல்! எல்லாம் சுயநலம்தான்!' என்று குடிலன் தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டு நல்ல புத்தியை மௌனமாக்கிவிடுகிறான்.

அலகிலா மானிடர்
யாவரும் அவரவர்
நலமே யாண்டும் நாடுவர்!

[அலகிலா–அளவில்லாத, யாண்டும்–எங்கும், எப்போதும்.]

என்று தன் கோணல் – புத்தியை அளவு – கோலாகக்கொண்டு உலகத்தையெல்லாம் அளந்து பார்க்கிறான்.

உலகத்தின் புத்திக் குறைவுதான். இவனைப்போல் மற்றவர்களும் பெரிய பெரிய வஞ்சகச் செயல்களில் துணிந்து இறங்காததற்குக் காரணம் என்பது குடில சித்தாந்தம்.

தன்னயம் கருதி
அன்றித் தமைப்போல்
பின்னொருவனை எணிப்
பேணுவர் உளரே ?

[எணி–எண்ணி.]

Koviloor Digital Library

என்ற கொள்கையுடன் தன்னைப்போல் உலகமெல்லாம் தன் நலமுள்ளதுதான் என்று கருதியபோதிலும், உலகமெல்லாம் தன்னைப்போல் நுண்ணறிவுள்ளது என்றாவது பெருமதி படைத்தது என்றாவது நம்பவில்லை. குடிலன் உலகின் கட்டைச் 'சிறுமதி' என்று மற்றவர்களுடைய 'புத்திக் குறைவை'ப் பழித்துப் பேசுகிறது குடில புத்தி என்ற நெட்டைப் பெருமதி. 'மனிதர் மடமை!' என்று மானுடத்தைப் பரிகசித்துத் தனக்குள் தானே மகிழ்ந்துபோகிறது.

'குடிலம்' என்பதற்கே 'வளைவு' 'வஞ்சகம்' என்ற பொருள்கள் உண்டு. ஜீவகனுடைய மந்திரியான குடிலனுடைய புத்தியில் இந்த இரண்டு அம்சங்களையும் விசேஷமாய்ப் பார்க்கிறோம்.

நூறு பேர் சேர்ந்து யாத்திரை போனார்கள். எல்லோரும் கூட்டுப் பொங்கலிட்டுச் சாப்பிட்டுப் போனால் செலவு குறையும் என்று நினைத்தார்கள். ஒரு பெரிய பாத்திரத்தில் – நூறு பேருக்குச் சமையல் பண்ணக்கூடிய அண்டாவில் பங்கு பங்காக அரிசி போட வேண்டுமென்று தீர்மானம். இந்த நூற்றுவரில் ஒருவன் தன் பங்கு அரிசிக்குப் பதில் மணலைக் கொண்டுவந்து கொதிக்கும் நீரில் போட்டுவிட்டான். வேறொருவருக்கும் தெரியாமல் '99 பேர் அரிசியாகப் போட்டிருக்கும்போது நானொருவன் மட்டும் மணல் போட்டால் என்ன குடிகெட்டுப் போச்சு?' என்று எண்ணிவிட்டான்; ஆனால் அந்த நூற்றுவரில் எப்படியோ பாக்கிப்பேரும் புத்திசாலிகளாகவே ஒருவரையொருவர் ஒளித்துப் பங்கு பங்காக மணலைப் போட்டுவிட்டார்களாம்.

கதை எப்படி? இதுதான் உலகமா? 'இல்லை' என்கிறான் குடிலன்:

ஜீவ யாத்திரையில் எல்லோரும் குடிலர்களாக இருந்து அண்டாவிலே அரிசிக்குப் பதில் மணலையே போட்டுக்கொண்டிருந்தால் குடில புத்திக்குச் சிறப்பு ஏது? – மதிப்பு ஏது?' 'அப்படியிருக்குமோ?' என்று ஒருதரம் தன்னைத் தானே கேட்டுவிட்டு, 'அப்படி இருக்க முடியாது, அயோக்கியத்தனம் அதிகமாக இருக்கலாம்; ஆனால் அதனோடு புத்திசாலித்தனமும் அதிகமாய்ச் சேர்ந்திருக்க முடியாது!' என்று முடிவு கட்டுகிறான் குடிலன்.

யாத்திரை போன
நூற்றுவர், சோறு) அடு
பாத்திரம் தன்னில்
பங்கு பங்காக

Koviloor Digital Library

ஒருவரை ஒருவர்
ஒளித்துப் பருமணல்
இட்ட கதையாய்
இருக்குமோ ? அவ்வள(வு)
எட்டுமோ உலகின்
கட்டைச் சிறுமதி ?

[சோறு அடு–சோறு சமைக்கும், மதி–புத்தி.]

உலகத்தை நன்றாக அறிந்தவன்தான். தானமென்றும் தருமமென்றும் உலகமறிய விளம்பரப்படுத்திக்கொண்டு செய்கிறார்களே, அந்த 'வண்மை'யின் உண்மையைத்தான் குடிலன் எவ்வளவு தெளிவாகப் பார்த்து விடுகிறான்:

தருமம் தானம்
என்(று) உல(கு) அறியும்
கருமம் அனைத்தும்
செய்பவன் கருத்தைக்
காணில் நாணமாம்;
அவரவர் தமக்கா
எண்ணிய எண்ணம்
எய்துவான் பலவும்
பண்ணுவர் புண்ணியம்
போல! எல்லாம்
தந்நயம் கருதி
அன்றித் தமைப்போல்
பின்னொரு வனையெணிப்
பேணுவர் உளரோ ?
புண்ணியம் ஜீவகா
ருண்ணியம் எனப்பல
பிதற்றுதல் முற்றும்
பித்தே!

[எய்துவான்–அடையும் பொருட்டு, தன்னயம்–சுயநலம், எணி–எண்ணி.]

'முற்றும் பித்தே!' என்று முடிப்பதுதான் தவறு. உண்மையாகவே ஜீவகாருண்ய உணர்வுகொண்டு சுயநலத்தை ஒழித்துத் தானதர்மங்களையும்

Koviloor Digital Library

புண்ணிய கர்மங்களையும் பரோபகாரமாகச் செய்யும் வண்மையாளர்களும் உலகத்தில் உண்டு; ஆனால் குடில இருதயத்திற்குத்தான் புலப்படவில்லை. குடில புத்தியைக் குடில இருதயம் மறைத்துவிடுகிறது. இதனால்தான், 'உதாரமெல்லாம் சுயநலத்தின் மேற்பூச்சும் அல்ல; ஊதாரித்தனமும் அல்ல!' என்பதைக் குடிலன் உணர்ந்து கொள்ளவில்லை.

உலகத்திலே குடிலன் நினைப்பது போன்ற ஆசாமிகள் நிறைந்திருப்பதுபோலத் தோன்றினாலும் இந்தத் தற்கால நாகரிக உலகத்திலும் சுயநலமற்ற மகானுபாவர்கள்; காந்தியடிகளைப் போன்றவர்கள் – வாழ்ந்திருக்கிறார்கள்; வாழ்கிறார்கள்! சுந்தரமுனிவர் போன்ற மகாத்மாக்களும், நாராயணன், புருஷோத்தமன் போன்ற உண்மையான வீரர்களும், குடில புத்தி முடிவான வெற்றியை அடைவதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். இவர்களெல்லாம் குடில இருதயத்தைக் கண்டுபிடித்து, 'அவ்வளவு தீமையும் நிலையில்லாதது, அருளுக்குமுன், கதிரொளியில் இருள்போல் மறைந்தொழியும் என்று சித்தாந்தம் செய்கிறார்கள். இதைச் சுந்தர முனிவரின் பெயரால் நாம் 'சுந்தர சித்தாந்தம்' என்று குறிப்பிடலாம். சுந்தர சித்தாந்தம் முடிவில் குடில சித்தாந்தத்தை அழித்துவிடுகிறது என்பது மனோன்மணிய ஸாரம்.

நாடகம் முழுமையும் குடிலனுடைய சிந்தையும் செயலும் சித்தாந்தமும் என்ன ஆர்ப்பாட்டம் செய்கின்றன. எனினும், 'வெற்றியடைவோம்' அது நெருங்கிவிட்டது' என்று எண்ணும் போதே தோல்வி வந்துவிடுகிறது.

பாண்டியன் கிரீடம் தன்னடிகளில் வந்து விழுந்துவிட்டதென்றும், அதை எடுத்து அணிந்துகொள்வதுதான் தாமதமென்றும், குடிலன் கனவு காணும்போதே படுவீழ்ச்சி வந்துவிடுகிறது. காரணம் என்ன? சுந்தர சித்தாந்தத்திற்கும் சுந்தர இருதயத்திற்கும்தான் முடிவான வெற்றி ஏற்பட முடியும்.

குடில இருதயத்திலே அருளுக்கும் உண்மைக்கும் அஹிம்சைக்கும் சத்தியத்திற்கும் இடமில்லை.

எங்(கு) இலை அவன் அருள் ?
எல்லையில் அண்டம்
தங்குவ(து) அனைத்தும்
அவன் அருள் சார்பில்,

Koviloor Digital Library

அண்ட கோடிகள் இங்(கு)
ஒன்றோ(டு) ஒன்று
விண்டிடா வண்ணம்
வீக்கிய பாசம்,
அறியில் அருளலால்
பிறிதெ(து) ஆகர்ஷணம் ?

என்றெல்லாம் கருணாகரர் என்ற சிஷ்யர் சுந்தர இருதயத்தை வெளியிடுகிறாரே, இத்தகைய கொள்கைகளில் குடிலனுக்கு நம்பிக்கையே கிடையாது.

சுந்தரரோ,

அகிலமும் தாங்கும்
அருளில் ஓர் அங்கமாய்ச்
சகலமும் செய்வர்

துக்கத்தைக் கண்டதும் அருளை நம்பி அந்தத் துக்கத்தைத் துடைக்க முயல்வார். குடிலன் கொள்கை இதற்கு முற்றும் மாறானது.

ஒருவன(து) ஆசைப்
பெருக்கால் உலகில்
வருதுயர், கடலில்
பெரிதே!

என்பதைக் குடில புத்தி நன்றாக அறிந்திருக்கிறது. ஆனால் குடில இருதயம் சொல்லுகிறது;

பல பெயர் துக்கப்
பட்டால் அன்றி
உலகில் எவரே
ஒருசுகம் அணைவார் ?

[அணைவார்–அடைவார்]

இத்தகைய இரக்கமற்ற இருதயம் வாழ்க்கையையும் ஒரு பொல்லாத கொடிய யந்திரமாக மதித்து வேலை செய்துகொண்டு போகிறது; அருளையும் உண்மையையும் மறப்பதாலும் மறுப்பதாலும் இக்கொள்கை நாசகாரணமாகிறது.

குடில இருதயம் சொல்லுகிறது:

Koviloor Digital Library

வயல் உழும் உழவோர்
வருத்தமும் குனிந்திருந்து
ஆடை நெய்வோர்
பீடையும்; வாகனம்
தாங்குவோர் தமக்குள்
தீங்கும் நோக்கி,
உலகிடை வாழா(து)
ஒடுவ ரோ பிறர் ?

பலர் துக்கப்படச் சிலர் வாழவேண்டும்; சிலர் வாழப் பலர் தாழவேண்டும்; குனிந்திருந்து பாடுபடுகிறவனுக்காக இரக்கப்படுவது பலவீனம்; அந்தக் கனிந்த முதுகின் மீது ஏறிச் சவாரி செய்வதே பிழைக்கும் வழி என்பதும் குடில சித்தாந்தம்.

ஆனால் இது மாய வாழ்வு; உண்மை வாழ்வல்ல! எனவே இது மண்ணாவது திண்ணம். குடிலன் கதி இதுதானே? குடில புத்தி சொல்லுகிறது:

அலகிலா மானிடர்
யாவரும் அவரவர்
நலமே யாண்டும்
நாடுவர், மதிவலோர்
களத்தொடு காலமும்
[illegible], மீன் அண்ணக்
குளக்கரை இருக்கும்
கொக்கென அடங்கிச்
சம்பவம், சங்கதி
என்பவை நோக்கி
இருப்பர்; நலம்வரில்
பொருக்கெனக் கொள்வர்!
எண்ணார் துணிந்தபின்;
பண்ணார் தாமதம்,
ஏழையர் அலரோ
இரங்குவர் இங்ஙனம் ?
கோழையர் எங்ஙனம்
கூடுவர் இன்பம்

Koviloor Digital Library

[அலகிலா–அளவில்லாத. யாண்டு–எங்கும். எப்போதும். மதிவலோர்–புத்திசாமர்த்தியம் உள்ளவர்கள். களம்–இடம். சம்பவம்–நிகழ்ச்சி. ஏழையர்–அறிவில்லாத ஏழைகள்.]

உலகத்திலும் சுந்தரமுனிவர், புருஷோத்தமன் போன்றவர்கள் உண்டென்பதையே குடில புத்தி அறியாதவாறு செய்துவிடுகிறது குடில இருதயம். உண்மையும் அருளும், புத்திக் குறைவையும் கோழைத்தனத்தையும் காட்டுகின்றன என்று எண்ணும் குடில இருதயங்களுக்கு எந்தக் காலத்திலும் – இந்த நாளிலும் கூட – முடிவிலே தோல்விதான்; நாசம்தான்!

குடிலன் குணாதிசயம்!

ஜீவக மன்னனைத் தன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டி வைக்கும் குடிலன்,

நாமே அரசும்
நாமே யாவும்,

என்று தானே எண்ணி மகிழக்கூடிய நிலையை அடைந்துவிடுகிறான். எனினும் ஆசைக்கு அளவு உண்டா?

இது தனக்(கு) இறைவன்
இறக்கில் யாரே
அரச ஆகுவர்?

[இறைவன்–அரசன்.]

என்று தன்னைத்தானே ஒரு கேள்வி கேட்டுக்கொண்டு, மௌனத்தில் ஆழ்கிறான். அரசனுக்கு ஆண் சந்ததி இல்லை என்பது தெரியாதா? 'தாயாதிக்காரர்கள் இந்தக் கோட்டை கொத்தளங்களைக் கேள்விப்பட்டாலும் வெருண்டு போவார்களே!' என்று திருப்தியடைகிறான்.

முழுதும் நம்மையே
தொழும்வகை இலையோ?

[இலை–இல்லை,]

என்று மறுபடியும் தன்னைத்தானே கேட்கிறான். ஆசை இப்படிக் கேட்க, புத்தியும் ஒரு பதில் கேள்வி போடுகிறது.

கருவியும் காலமும்
அறியில் அரியதென்?

[அரியதுஎன்–அருமையானது என்னதான் இருக்க முடியும்.]

Koviloor Digital Library

இப்படிக் கேள்விமேல் கேள்வியாக ஆசை உயர உயரப் பறந்து கொண்டிருக்கையில் பளிச்சென்று நினைவிற்கு வருகிறது மனோன்மணியின் காதல்நோய். 'இந்தப் பூங்கொடி படர்வதற்கு ஏற்ற தரு, புருஷோத்தமன் என்ற சேர வீரன்தான்' என்றார் சுந்தரமுனிவர். குடிலனோ, 'மனோன்மணி ஒருவனைக் கண்டு காதல் கொள்ளவில்லை. பருவத்தால் ஏற்பட்ட கோளாறு' என்று ஒரு மானஸ தத்துவ ஆராய்ச்சிக்காரன் போல் ஆராய்ந்து பார்த்து,

அருகுளது எட்டியே
ஆயினும் முல்லைப்
படர்கொடி படரும்

என்று முடிவு கட்டுகிறான்.

எனவே தூரத்திலுள்ள தருவைக் காட்டிலும் பக்கத்திலுள்ள எட்டிமரமாகத் தன் மகன் பலதேவனையே வைத்துக்கொண்டு காரியத்தை முடித்துவிடலாமென்று நினைக்கிறான். இவ்வளவு பேராசைக்கும் ஒரு காரணம் தன் இஷ்டப்படியெல்லாம் அரசனை ஆட்டிவைக்கலாம் என்ற நம்பிக்கை.

இப்படித் தன் மனத்தில் தானே கோட்டை கொத்தளம் கட்டிக் கொண்டிருக்கும்போது, சுந்தரமுனிவர் ஆலோசனைப்படி புருஷோத்தமனுக்கு மனோன்மணியை மணஞ் செய்து வைக்கவேண்டும் என்ற ஜீவகன் கடிதம் கிடைக்கிறது. அதையும் தன் ஆசைக்கு ஒரு சந்தர்ப்பமாக உபயோகித்துக் கொள்ளலாமா என்று ஆலோசிக்கிறான். அந்த மணம் அப்படியே நடந்தாலும் நடக்காவிட்டாலும் தன் பேராசை நிறைவேறினால் போதும் என்று எண்ணுகிறான்.

அந்தப் புருஷோத்தமனைக்கொண்டே தன் ஆசையையும் நிறைவேற்றிக்கொள்ள வழியில்லையா? திருமணத்தூதன் சரியான ஆசாமியாக–தான் சொன்னபடி செய்யக்கூடிய பேர்வழியாக–இருந்தால் போதுமே! அப்படிப்பட்ட தூதன் சேரன் செருக்கை மெள்ளக் கிள்ளிவிட்டு வந்துவிடுவான்! அப்படியானால் அந்த அரசன் திருமணத்திற்கு வரமாட்டான்; சண்டைக்கே வந்துவிடுவான். அந்தச் சண்டையில் இந்த அரசன் இறந்து போகுமாறு சூழ்ச்சி செய்துவிட்டால் மணம் மரணமாகிவிட, அந்தப் புருஷோத்தமனுக்குக் கப்பம் கொடுத்தாவது தானே அரசனாகிவிடலாமல்லவா?

இவ்வளவு பேராசையும் எவ்வளவோ பெருந்துன்பத்தை உண்டாக்கிவிடும் என்பது குடிலனுக்குத் தெரிந்ததுதான். மற்றவர்கள் துன்பப்பட்டால் என்ன,

Koviloor Digital Library

தனக்கு ராஜயோகம் அடிப்பதற்காக? இத்தகைய வரம்பு கடந்த பேராசையில் மகனான பலதேவனுடைய நன்மைகூட ஒரு பொருளாகத் தோன்றவில்லை. பலதேவன் மனோன்மணியைக் கலியாணம் செய்துகொண்டாலென்ன? இல்லாவிட்டால்தான் என்ன? 'பேயன் நம் மகன்' என்கிறான்.

எடுத்தெறிந் திடுவன் இப்
போதே நம்மொழி!

என்று அந்தப் பேய் மகனுடைய சுபாவத்தை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான்.

தன் மகனையே நம்ப முடியாத குடிலனுக்கு வேண்டிய கட்சி என்று ஒன்று இருக்க முடியுமா? அவன் நம்பக்கூடியவர்களும் அவனை நம்பக்கூடியவர்களும் இருந்தால்தானே 'குடிலன் கட்சி' என்று ஒன்று ரகசியமாகவோ, பகிரங்கமாகவோ வேலை செய்யமுடியும்?

அடுத்தநம் படைஞரோ
பகைவர்; அவர் நமைக்
கெடுத்தநா ரணற்கே
கேளொடு கிளைஞர்!

[படைஞர்–போர் வீரர், கேள்–சுற்றம், கிளைஞர்–பந்துக்கள்.]

என்று குடிலன் தனக்குள்தானே சொல்லிக் கொள்கிறான் ஊரெல்லாம் பகை; நாடெல்லாம் பகை; சேனையெல்லாம் பகை; இப்படியெல்லாம் இருந்தபோதிலும்,

ஊக்கமே பாக்கியம்

என்று உற்சாகமடைகிறான்.

ஊகமே யோகம்

என்று புதிய ஊகங்கள் செய்யத் தொடங்கி, ஊக்கத்துடன் புதிய புதிய சூழ்ச்சிகளும் செய்யத் தொடங்குகிறான்.

ஏதோ ஒரு தனியான சிகரத்தில் தன்னந்தனியே நிற்பது போலிருக்கிறான் சதிகாரனான குடிலன். தன் மகனுடைய தோழமையும் இல்லை; அவனுடைய நம்பிக்கைகூட இல்லையே! உடுத்த துணியும் பாம்பாய்க் கடிக்குமோ என்ற பயம்! இதுவே 'பேயாசை'க்குத் தண்டனையல்லவா?

எனினும் 'அவ்வளவு உயரத்திலிருப்பது தண்டனையாகுமா? பாக்கியமல்லவா;' என்பது குடில சித்தாந்தம். அந்த உயரத்திலிருந்து ஒரு தாவு தாவினால் லட்சியத்தையே சாடிவிடலாமென்று எண்ணம்.

Koviloor Digital Library

இதனால்தான் குடிலன் கோட்டைக்கும் புருஷோத்தமனுடைய பாசறைக்கும் நடுவிலுள்ள வெளியிலிருந்து ஆலோசனை செய்து கொண்டிருக்கும்போது தனியாக, உலவி வரும் புருஷோத்தமனைக் கண்டதும், அவனிடம் தான் தன் அரசனுக்கு விரோதமாகச் செய்துவந்த சதியை வெளியிடுகிறான். தன்னுடைய எஜமானத் துரோகத்திற்குப் பரிசாக இராஜ்யமே கிடைத்துவிடுமென்று நம்புகிறான். புருஷோத்தமனுடைய சுத்த வீர சுபாவத்தைக் குடில புத்தியும் அறிந்து கொள்ள முடியவில்லை!

குடிலன் பேசிக்கொண்டிருக்கும்போதே, புருஷோத்தமன் தனக்குள் 'பாதகா' விசுவாச காதகா!' என்று சொல்லிக்கொண்டே வெளிப்படையாகச் சிரித்து ஆஹா! என்று கேட்டுக்கொண்டிருக்கிறான். குடிலனோ வேண்டும் கப்பங்களையெல்லாம் நான் என் தலைமேல் சுமந்துவந்து உன் திருவடிகளில் கொண்டு சமர்ப்பிப்பேன்' என்கிறான்.

சைத்தான் சத்திய வேதத்தை மேற்கோள் காட்டுவதுபோல் குடிலனும் இராமாயணத்திலிருந்து தன்னுடைய ராஜத் துரோகத்திற்கு மேற்கோள் காட்டி, 'அடியேன் விபீஷ்ணாழ்வானைத்தான் பின்பற்றப் பார்க்கிறேன்!' என்று கூசாமல் பேசுகிறான்.

பண்டுரா கவன்தன்
பழம்பகை செற்று
வென்றதோர் இலங்கை
விபீஷணன் காத்தவாறு)
இன்றுநீ வென்ற நா(டு)
இனிதுகாத் திடுவேன்!

சத்தியத்திற்காகவும் தர்மத்திற்காகவும் அண்ணனையும் அரசையும் துறந்த விபீஷணனுடைய 'ஒத்துழையாமைத் தத்துவம்' குடிலனுக்கா புரியப் போகிறது? தன்னைப் போன்ற ராஜத் துரோகிகளுக்கும் தேசத் துரோகி களுக்கும் ஒரு வழிகாட்டியாகவே விபீஷணனை மதிக்கிறது குடிலபுத்தி! மனித உள்ளத்தின் உயர்ந்த தத்துவங்களில் இந்தப் புத்திக்கு நம்பிக்கையே கிடையாது. இந்த நம்பிக்கைக் குறைவு – விசுவாசமின்மைதான் – குடிலனது வீழ்ச்சிக்குக் காரணம்.

குடிலன் பேசிக் கொண்டிருக்கும்போதே புருஷோத்தமன், அருள்வரதன் என்ற சேனாதிபதியை நோக்கி, 'கை விலங்கு, கால் விலங்கு கொண்டு வா நொடியில்' என்று கட்டளையிடுகிறான்! தன்னுடைய எஜமானனுக்குத்தான்

Koviloor Digital Library

அந்த விலங்குகள் என்று நம்பிக் குடில புத்தி தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறது. அருள்வரதனும் சேவகரும் விலங்கைத் தன் கையிலும், காலிலும் பூட்டும்போது குடிலனுக்கு அதிசயமாகத்தான் இருக்கிறது! 'தான் ஓடி மறுபடியும் தன் அரசனிடம் போய்விடக்கூடாது என்றுதான் அவ்வளவு பந்தோபஸ்து நடக்கிறதோ?' – என்று கூட ஆலோசித்தான்

தேடியே வந்து
செப்பிய ஆடியேன்
ஓடியோ போவேன் ?
ஓஹோ உறுதி
முந்தியே தந்திடில் –

என்று குடிலன் சொல்லி முடிப்பதற்குள்,

மூடுநின் பாழ்வாய்!
[பாழ்–பாழான]

என்று முழங்குகிறது புருஷோத்தமனின் குரல்.

சேரன் விஜயமும்
திருடான்

என்று எவ்வளவு செருக்கோடு புருஷோத்தமன் சதிகாரக் குடிலனிடம் சொல்கிறான்!

இந்தச் செருக்கைக் கிள்ளிவிட்டு ஓரளவு காரியசித்தியும் பெறலாம். ஆனால் இது சதியாலோசனைகளுக்கு வசப்படுமா? வீரச்செருக்கல்லவா? – தர்மச் செருக்கல்லவா?

மனித சுபாவத்தின் உயர்ந்த அம்சங்களிலும் தத்துவங்களிலும் நம்பிக்கையில்லாத குடிலன் புருஷோத்தமனைத் தெரிந்துகொள்ளாதது போல், சுந்தர முனிவரையும் நாராயணன் முதலானவர்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டானில்லை. குடில புத்தியையும் இந்த விசுவாசக் குறைவு மங்கச் செய்துவிடுகிறது; சிற்சில சமயங்களில் மயங்கவும் செய்துவிடுகிறது.

விபீஷணனையும் ஆசைக்காரனென்றும் மோசக்காரனென்றும் சந்தேகப்படுகிறவன், சுந்தர முனிவரையும் சந்தேகப்படுகிறான். 'முனிவரும் வேஷக்காரர்தாமோ!' என்று சத்தியம் அஹிம்ஸை என்பனவெல்லாம் இவனுக்குப் பொருளற்ற வார்த்தைகள்தாமே! எந்தப் பரோபகாரச் செயலும் எந்தத் தியாகமும் இவன் கண்ணிலும் கருத்திலும், மாறுவேஷம் பூண்ட சுயநலம்தான்!

Koviloor Digital Library

துன்பியல் நாடகங்களிலெல்லாம் இத்தகைய ஆத்மாவின் சோக நாடகம் மிகவும் பயங்கரமானது என்ற பாடத்தை ஷேக்ஸ்பியர் தமது மகாநாடகங்களின் மூலமாக நமக்குக் கற்பிக்கிறார். இதே பாடத்தைத்தான் குடிலன் குணாதிசயமும் நமக்குக் கற்பிக்கிறது.

குடிலன் தனிக்குறை

மனிதனுடைய ஒழுக்க வலிமையில்தான் குடிலனுக்கு நம்பிக்கையில்லை. மனிதனுடைய பகுத்தறிவின் சக்தியில் அபார நம்பிக்கை. கபட நாடகம் ஆடும் திறமையையும் இவன் புத்தியின் சக்தியாகவே மதிக்கிறான். இத்தகைய சக்தியைக்கொண்டு எந்தச் சந்தர்ப்பங்களிலும் போராட முடியும். அந்த அந்தச் சந்தர்ப்பத்தை வளைத்துச் சொந்த லாபத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பது அவனுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

தன்னுடைய சூழ்ச்சிகளும் திட்டங்களும் சரியாகத்தான் நடைபெறுகின்றன என்று எண்ணிய காலத்திலும் சரி, போட்ட திட்டம் தவறிப் போகிறதென்று தெரிந்த காலத்திலும் சரி, 'புத்தியே சகல சக்தியும்' என்ற கொள்கைதான் இவனுக்கு. ஊகம், ஊக்கம், சூழ்ச்சி – இவை குடிலனுடைய மும்மூர்த்திகள்.

இதனால் குடிலனுக்கு அபாரமான தன்னம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் இந்தத் தன்னம்பிக்கை – மதத்தில் பிறரை நம்பி வேலை செய்ய இடம் எங்கே? இவன் கிரகங்களை நம்புவதில்லை! கடவுளையும் நம்புவதில்லை! உயர்ந்த லட்சியங்களையும் நம்புவதில்லை. மனிதர்களை எப்படி நம்ப முடியும்.

எவ்வளவோ முன் எச்சரிக்கையோடுதான் காரியம் பார்க்கிறான். தோல்வி வந்துவிடுமோ என்ற பயம் எப்போதும் உண்டு. வரக்கூடிய அபாயங்களிலிருந்து தப்புவதற்கு எப்போதும் தயாராக இருக்கவேண்டும் என்று சங்கற்பம் செய்துகொள்கிறான்.

இருசரம் இன்றி
எப்போரிடையும்
ஏகார் மதியோர்

[சரம்–அம்பு, ஏகார்–போகமாட்டார்கள், பதியோர்–புத்திசாலிகள்]

என்பது குடிலனது அபிப்பிராயம் – அனுஷ்டானம். இருவகை உபாயமுமில்லாமல் எந்த வாழ்க்கைப் போரையும் நடத்த முடியாது. ஒன்று தவறினால் வேறோர் உபாயத்தைக்கொண்டு வெற்றிபெறக் கூடுமல்லவா?

Koviloor Digital Library

இவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தும் குடிலனுடைய சூழ்ச்சித் திட்டங்கள் தவறிப் போகின்றன. காரணம் இவனுடைய ஜாக்கிரதைக் குறைவல்ல; புத்திக் குறைவுமல்ல; 'புத்தியே சகல சக்தியும்' என்ற கொள்கை உண்மையானால் குடிலனுக்கே வெற்றி கிடைத்திருக்க வேண்டும்.

ஒழுக்க வலிமையில்லாத இவன் குணாதிசயத்திலே அடிப்படையான குறை ஏற்பட்டுவிடுகிறது. இதனால் தன்னை எதிர்க்கும் சக்திகளை இவன் சரியானபடி உணர்ந்துகொள்ள முடியவில்லை.

சுந்தர முனிவரையும் புருஷோத்தமனையும் இவன் சரியானபடி தெரிந்துகொள்ளவில்லை. அவர்களுடைய குணாதிசயத்தின் சக்தி பொருந்திய அம்சங்களைச் சரியாக மதிப்பிட முடியவில்லை. அவர்கள் இவனுடைய சூழ்ச்சிகளால் பாதிக்கப்படாமல் தங்கள் போக்கிலே போகிறார்கள். கடைசியாக குடிலனுடைய சூழ்ச்சிகள் வீணாகிப் பாழாகிப் போகின்றன.

குடிலனுடைய சுயநலங்களையும் மறைப்பதற்குக் கபட நாடகம் அவசியமாகிறது. இருதய உணர்ச்சிகளைப் பற்றிய சன்மார்க்க வழியில் இவன் செல்லாததால் இவனுடைய அறிவு அபாரமாகக் கூர்மை செய்யப்படுகிறது. பரம ராஜபக்தன் போலவும், ராஜசேவகன் போலவும் நடித்துக்கொண்டே அரசனை அடிமையாக்கி ஆட்டி வைக்கும் கபட சாமர்த்தியம் கொஞ்சமா? சாமானியமா?

அரசனை ஆட்டிவைக்கும் முறையே குடிலனுடைய புத்திக் கூர்மையை நன்கு வெளியிடுகிறது; கபடத் திறமையையும் நன்றாக வெளியிடுகிறது. அரசன் என்ன செய்யவேண்டுமென்று இவன் விரும்புகிறானோ, அதைப் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுவதில்லை. அரசன் எதைச் செய்யக்கூடாது என்று விரும்புகிறானோ அதிலும் பட்ட வர்த்தனமாயிருக்கமாட்டான் இவன். சில விஷயங்களை அரசர் முன் வெளியிடுவான். அந்த நிலையில் அரசன் தானாகவே ஊகம் செய்து முடிவுகட்டுவது போலிருக்கும். ஆனால் அந்த முடிவு குடிலன் கட்டும் முடிவாகவே இருக்கும்? அந்த ரீதியில் விஷயங்களைத் தேர்ந்தெடுத்து வற்புறுத்துவான். தான் கருதும் அந்த ஒரு முடிவு தவிர வேறு முடிவிற்கு வராதபடி செய்துவிடுவான் அரசனை.

அரசனோ அந்த முடிவு தன் மூளையிலிருந்து உதயமானதாகவே கருதுவான்; குடில புத்தியிலிருந்து உதயமானதாக உணர்ந்து

Koviloor Digital Library

கொள்ளமாட்டான். அரசன் ஒப்புக்கொள்வான் என்பதை ஓரளவு தெரிந்த பின்பே பகிரங்கமாக ஆலோசனைகளைச் சொல்லுவான். மற்றபடி, சில குறிப்புகளைச் சொல்லியும், சொல்லாமலும் மறைமுகமாகவும் வெளியிடுவான். நீண்ட நேரப் பிரசங்கத்தைக் காட்டிலும் இக்குறிப்புகள் அற்புதமாக வேலை செய்துவிடும்.

உதாரணமாகச் சுந்தர முனிவரைக் குறித்து ஜீவக மன்னனுக்கு அதிருப்தி உண்டாகுமாறு செய்ய விரும்பும் குடிலன் கையாளும் உபாயத்தைப் பார்க்கலாம். 'முனிவர்கள் ஆலயம் ஒன்றையே அறிவார்கள். நாமோ கோயில் கட்டாமல் கோட்டையைக் கட்டி வைத்தோம். அதனால்தான் முனிவர் முறைப்படுவதுபோல் தோன்றுகிறது!' என்று சொல்லிவரும் குடிலன், 'ஆகவே முனிவர் பொறாமைப்படுகிறார்' என்று அரசன் வாயிலிருந்து வரவேண்டுமென்று விரும்புகிறான். ஆனால் இவன் சொல்வதென்ன?

ஆதலால் இங்ஙனம்
ஓதினர் அதனை
அழுக்காறு) என்று நாம்
ஐயமற்று அறைதல்
ஒழுக்கம் அன்றே!
குருஅன் றோஅவர்!

[ஓதினார்–சொன்னார், அழுக்காறு–பொறாமை] என்கிறான்.

'சந்தேகமில்லாமல் நாம் எப்படிப் பொறாமைக் குற்றம் சாட்ட முடியும்? குரு அல்லவா? என்ற சாமர்த்தியப் பேச்சிலிருந்து, என்ன முடிவுகட்ட வேண்டுமென்ற குறிப்பு அரசனுக்குக் கிடைத்துவிடுகிறது.

ஐயரும் அழுக்காறு)
அடைந்தார் மெய்ம்மை

என்று சொல்லிவிடுகிறான் ஜீவகன், குடிலன் விரும்பியபடியே. பிறந்தான் பகிரங்கமாக முனிவர்களையெல்லாம் தூஷிக்கத் தொடங்குகிறான் குடிலன்.

புருஷோத்தமனுக்குத் தூது அனுப்பும்போது தூதன் எப்படியிருக்க வேண்டுமென்று பொதுவாகச் சில குறிப்புக்களை வெளியிடுகிறான் குடிலன். அந்தக் குறிப்புக்களிலிருந்து அரசன் குடிலன் மகனையே அனுப்பவேண்டுமென்று தீர்மானிக்கிறான்.

Koviloor Digital Library

அத்திறம் முற்றும்
ஒத்தவனாய் நமக்(கு)
உரிமை பூண்டநின்
அருமை மகன்பல
தேவனே உள்ளான்

என்கிறான் அரசன்.

உண்மையான ராஜபக்தனும் அரசன் தோழனுமாகிய நாராயணன் மீது குற்றங்களிலெல்லாம் பெரிய குற்றமாகிய ராஜத் துரோகக் குற்றம் சாட்ட விரும்புகிறான் குடிலன். அதைத்தான் எவ்வளவு சாமர்த்தியமாகச் செய்கிறான்! நாராயணன் போரிலே கலந்துகொண்டு அரசனுக்கு உதவி செய்யலாகாதென்று அவனுக்கு வேறொரு வேலை கொடுத்திருந்தான் குடிலன். நாராயணனோ அரசனைக் காப்பாற்ற வேண்டுமென்று போர்க்களத்திற்கு வந்துவிட்டான் அதைக் குறித்து குடிலன் மெள்ள,

போரிடைக் கண்டனை
நாரணர் தம்மை
[கண்டனை–கண்டாய்]

என்ற செய்தி சொல்லுகிறான். அப்போது அரசன் 'அவன் ஏன் தன் காவலை விட்டு வந்தான்?' என்று கேட்கிறான். அதற்குக் குடிலன்,

ஐய! யான் அறிகிலன்,
அவரிலும் நமக்கு
மெய்ம்மையர் யாவர்?
வேலியே தின்னில்,
தெய்வமே காவல்
செய்பயிர்க்(கு) என்பர்

என்று தந்திரமாகச் சொல்லுகிறான். உடனே அரசன்,

துரோகம்! துரோகம்!

என்று கர்ச்சிக்கிறான்.

குடிலனோடு 'துரோகமன்று' என்றுதான் பேசத் தொடங்குகிறான். உண்மையில், அரசனை அந்த அபிப்பிராயத்தில் ஊன்றச் செய்யவேண்டும் என்பதுதான் எண்ணம்.

Koviloor Digital Library

விரோதம், அடியேன்
மேலுள்ள விரோதம்

என்றெல்லாம் குடிலன் சொன்னதும், ஜீவகன் 'கெடுபயில் துரோகம்!' என்ற அபிப்பிராயத்தில் ஆழ்ந்து போகிறான். 'எத்தனை துஷ்டன்!' என்று நாராயணனைக் குறித்து முடிவு கட்டி அப்படியே குடிலனது வலையில் விழுந்துவிடுகிறான் அரசன்.

இவ்வளவு கபடத்தோடு கோழைத்தனமும் காணப்படுகிறது குடிலனிடம். ஒழுக்க வலிமையில்லாதவனுக்குத் தைரிய சம்பத்து ஏது?

எதிரிகள் தன்னைச் சூழ்ந்திருக்கின்றனர் என்று எண்ணும் குடிலன் தன் மகனை ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரிக்கிறான். தன்னுடைய பெயரைச் சில படை வீரர்கள் சொல்லுவதைக் கேட்டு, 'கொல்வரே' ஐயோ!' என்று ஒளிந்துகொள்ளுகிறான்.

இந்த மனிதனை இவ்வளவு தூரம் கோழையாக்குவது இவனுடைய மனச்சாட்சி! இதனாலேயே இவன் சுந்தர புத்தியில்லாமல் புருஷோத்தமனிடம் தன்னை எவ்வளவோ தாழ்த்திக்கொள்கிறான்; கெஞ்சிக் கூத்தாடுகிறான்; முகஸ்துதி செய்கிறான். இவன் அதிகமாய்ப் பேசுவதற்கும் இந்த மனப்பான்மையே காரணமாகும்.

குடிலனுடைய முக்கியமான குறை ஒழுக்கத்திலும் மனித நேர்மையிலும் நம்பிக்கையில்லாத மனநிலைதான். இக்குறை மனச்சாட்சியைப் பேசாமடந்தையாக்க முயன்று மேலும் மேலும் சூழ்ச்சிச் சுழலிலே இவனை ஆழ்த்திவிடுகிறது.

7. சுந்தர முனிவர்

குடில புத்தியோடு முற்றும் முரண்படுகிறது. சுந்தர முனிவரின் ஞானம். குடிலன் தீமை செய்கிறவன் என்றால், முனிவர் தமது நன்மையால் அந்தத் தீமைகளையெல்லாம் வெல்லப் பார்க்கிறார். குடிலன் இருளின் சக்தியென்றால் சுந்தரர் ஒளியின் சக்தியாக வந்து இருட்டைப் போக்குகிறார்.

இருளுக்கும் ஒளிக்கும், நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடைபெறும் இந்தப் போராட்டத்தை மனோன்மணியம் பாராட்டத்தக்க நாடகத் திறமையோடு பிரதிபலித்துக் காட்டுகிறது.

குடிலனைப் போன்ற அசுர சக்திகள் வேகமாக வேலை செய்கின்றன. நாடகமேடையில் பிரமாதப்படுகின்றன. குடிலனுடைய தனி மொழிகளும்

Koviloor Digital Library

பேச்சுகளும். 'என்ன ஆரவாரம், என்ன ஆவேசம்! ஒரே பாய்ச்சலில் வெற்றி கிடைத்துவிடுமா? ஆ! என்ன பயங்கரமான சக்தி!' என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது குடிலனை நோக்கும் போது.

சுந்தரமுனிவர் என்ற தெய்வ சக்தியோ தடபுடல் செய்யாமல் இயற்கையின் மகத்தான சக்திகளைப்போல் மௌனமாக வேலை செய்கிறது. திரை மறைவில் மெதுவாக வேலை செய்து எவ்வளவோ கஷ்டத்திற்குப் பிறகு வெற்றியடைகிறது.

அழிவு வேலைக்குரிய சக்திகள் மூர்க்கமாகவும் படுவேகமாகவும் வேலை செய்துதானே ஆகவேண்டும். ஆக்க வேலையோ தோன்றாத் துணையாக வேலை செய்யும் கடவுளின் சக்திபோல் தன்னைப் பிரமாதப்படுத்திக் கொள்ளாமல் வேலை செய்துகொண்டே போகவேண்டியதுதான்!

சூரியன் உதயமாவது, அஸ்தமனமாவது, நட்சத்திரங்கள் வான வீதியில் ஏற்றிவைத்த விளக்குகளைப்போல் பிரகாசிப்பது, பூமியின் கர்ப்பத்திலிருந்து பயிர் பச்சைகள் தோன்றுவது முதலான காரியங்களெல்லாம் எவ்வளவு மௌனமாக நடைபெறுகின்றன! ஆனால் பூகம்பம் புயற்காற்று முதலான நாச சக்திகள் எவ்வளவு வேகமாகத் தங்கள் வேலைகளைச் செய்து முடிக்கின்றன!

இயற்கை என்ற புத்தகத்திலிருந்து இந்தப் பாடத்தைப் படித்துக்கொண்ட மனோன்மணிய ஆசிரியர் சுந்தரமுனிவருடைய நன்மை பயக்கும் ஞான சக்திகளை மறைவாக வைத்துக் குடிலனுடைய சூழ்ச்சிகளாலும் கபட நாடகங்களாலும், தந்திர சாமர்த்தியங்களாலும் ஆலோசனைகளாலும் தனிமொழிகளாலும் நாடக மேடையைத் திணறச் செய்துவிடுகிறார்.

இந்த நாடகத்தின் முதலாவது அங்கம் முதலாவது காட்சியிலேயே சுந்தரரையும் சந்திக்கிறோம்; குடிலனையும் சந்திக்கிறோம். சுந்தர முனிவரை ஜீவக மன்னன் வரவேற்பதற்காகக் கொலு மண்டபம் அலங்கரிக்கப்படுகிறது. காலைவேளையில் குலகுருவுக்கு அரசன் பாதபூஜை செய்ய ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. நகரவாசிகள் முதலானோர் முனிவரை வரவேற்க எதிர்கொண்டு போகிறார்கள். அந்தக் கூட்டத்திலே குடிலனும் ஒருவன். பக்தியினால் எதிர்கொள்ளப் போனவனில்லை; அரசனையும் பிறரையும் திருப்தி செய்வதற்காகவும் ஏமாற்றுவதற்காகவும் போனவன்தான். கூடுமானால் முனிவரையும் ஏமாற்றக் கூடியவன்தான்!

Koviloor Digital Library

முனிவர் சுருக்கமாக அரசனை வாழ்த்தி மனோன்மணியின் யோகக்ஷேமத்தையும் விசாரிக்கிறார். இவர் அதிகம் பேசுவதில்லை. கருணாகரர் நிஷ்டாபரர் என்ற இரண்டு சிஷ்யர்களும் கருணையைக் குறித்தும் நிஷ்டையக் குறித்தும் நீளமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சுந்தரரோ பரம வேதாந்தியாயினும் அந்த வேதாந்த விவரங்களில் தடபுடலாக ஈடுபடுவதிலும் விரும்பவில்லை.

உங்கள் பேச்(சு)
அறிவோம்; ஓயாப்பேச்சே

என்று அந்த அதிகப் பேச்சைக் கண்டிக்கிறார்.

அப்பேச்சைக் காட்டிலும் சிந்தனைகளில் நம்பிக்கையுள்ளவர் இவர். இவர் செயலிலும் நம்பிக்கையுள்ளவர்தாம். குடிலனோ படாடோபமான நீண்ட பேச்சில் நம்பிக்கையுள்ளவன். ஆனால் கருணாகரரையும் நிஷ்டாபரரையும் போல காரசாரமான வேதாந்த விவகாரங்களில் நம்பிக்கையுள்ளவனில்லை. பேச்சுத் திறமையிலே, தன் இருதயத்தையும் சூழ்ச்சிகளையும் மறைத்து பிறரை வசீகரிப்பது குடிலனுடைய நோக்கம்.

இந்த நோக்கத்தோடு குடிலன் முகஸ்துதி செய்து ஒரு புராணம் படிப்பதுபோல் திருநெல்வேலிச் சீமையின் பெருமையை பிரமாதமாக எடுத்துக் காட்டுகிறான். இமயமலையைக் காட்டிலும் பொதியமலை பெரிதென்றும், காவிரி கங்கை ஆறுகளைக் காட்டிலும் தாமிரபரணி சிறந்ததென்றும் பேசிக்கொண்டே போகிறான். இந்த ஓயாப் பேச்சினிடையே முனிவர் குறுக்கிட்டு,

சம்போ! சங்கரா!
அம்பிகா பதேஎ!

என்று சிவநாமங்களைச் சொல்லிக்கொண்டே எழுந்து நிற்கிறார். குடிலனின் சூழ்ச்சி முனிவரிடம் பலிக்கவில்லை.

ஜீவகனுக்கு ஆபத்து வரும் என்பதையும் அது குடிலனால் வரக்கூடும் என்பதையும் முனிவர் முன்கூட்டி உணர்ந்துகொள்கிறார். ஆனால் முனிவருடைய இத்தகைய அறிவுத்திறமை அறிவுக் கூர்மையுள்ள குடிலனுக்கும் புலனாகவில்லை. முனிவர் எப்படிப் போனால் என்ன? எங்கே போனால் என்ன? 'நம் காரியம் ஜயம்' என்கிறான் தன் காரியக் குட்டியான குடிலன்.

Koviloor Digital Library

பொது மக்கள் சுந்தரரிடம் பக்தியுள்ளவர்கள் தாம். ஆனால் அவர்களும் சுந்தரரின் புத்தி சூட்சுமங்களை உணர்ந்தவர்களில்லை. ஜீவக மன்னன் சுந்தரரை ஞானியாகவும் குருவாகவும் நினைக்கின்றவன்தான்; எனினும் இவருடைய அறிவு நுட்பத்தை அறிந்துகொண்டவனில்லை! மனோன்மணியைப் போன்றவர்களுக்குச் சுந்தர முனிவருடைய புத்தி சாமர்த்தியங்கள் விளங்காத புதிர் போலவேயிருந்தன.

கருணாகரர் நிஷ்டாபரர் முதலான சிஷ்யர்களும் குருவின் லௌகிக ஞானத்தை விசேஷமாய்த் தெரிந்துகொண்டார்கள் என்று சொல்லமுடியாது. சுந்தரரின் நம்பிக்கைக்கு உரியவர்களான நாராயணன், நடராஜன் ஆகியவர்களும் சுந்தரரின் மதிநுட்பத்தை எல்லை கண்டு உணர்ந்தவர்கள் இல்லை.

இத்தகைய நுட்ப புத்தியையும் காட்சித் தெளிவையும் கொண்டு சுந்தரர் பல்வேறு சக்திகளுக்கிடையே தமது அருளின் சக்தியை ஏவிப் பணிபுரிகிறார்.

தனக்கு வரப்போகும் விபத்தை ஜீவகன் கொஞ்சமும் அறிந்து கொள்ளவில்லை; ஊகித்து உணர முயன்றதும் இல்லை. 'கட்டைச் சிறுமதி' என்று தன்னுடைய 'நெட்டைப் பெருமதி'க்குப் புறம்பாக வைக்கிறானோ குடிலன். அந்த ரகத்தை நிச்சயமாகச் சேர்ந்தவன் ஜீவக மன்னன், இவனுக்கு நேரடியாக எச்சரிக்கை செய்தால் பயன்படாது என்று கருதியே சுந்தரர் மறைமுகமாகப் பேசிவிட்டுத் தாமே ஒரு ரகசிய வழி அமைக்க ஏற்பாடு செய்கிறார் – ஜீவகனையும் மனோன்மணியையும் காப்பாற்றுவதற்காக இந்த காரியத்திற்குத் தமது சிஷ்யர்களான கருணாகரரையும் உபயோகித்துக் கொள்வதோடு, வாணியின் காதலனாகிய நடராஜனையும் பயன்படுத்திக் கொள்கிறார்.

சுந்தரர் ஊரிலிருந்து விலகி ஆசிரமத்தில் வசிப்பவர் தாம். வேதாந்தக் கொள்கைப்படி, தாமரையிலைத் தண்ணீர்போல் ஜகத்துடன் கூடி வாழ்பவர். இந்த நாடகத்தின் பிரதான கதாபாத்திரங்களுடன் நெருங்கிப் பழகுகிறவர் அல்லர். எனினும், பல நிகழ்ச்சிகளின் போக்கையும் கணித்துப் பார்த்து, எதிர்காலத்தில் இன்னது நடக்கும் என்று ஊகிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார். இதற்கு ஏற்ற புத்தி நுட்பத்தோடு வசதிகளும் இவருக்கு உண்டு என்றே ஊகிக்கலாம்.

சுந்தரருடைய புத்தி நுட்பமும் அருளின் சக்தியும்தான் ஜீவகனைக் கடைசியாகக் காப்பாற்றிவிடுகின்றன. அறிவுத் தெளிவுடன் இவருடைய

Koviloor Digital Library

ஒழுக்க உயர்வும். இவரது வசீகர சக்திக்கும் வெற்றிக்கும் காரணமாகும். இத்தகைய வசீகர சக்திக்குச் சேரமன்னனாகிய புருஷோத்தமனும் எப்படியோ உட்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

குடிலனுடைய சூழ்ச்சிகள் என்ற பாலைவனத்திற்கிடையே சிற்சில பசும்புல்–தரைகள் போல் – ஜீவநிலங்கள் போல்–தோன்றுகின்றன சுந்தரருடைய அன்புப் பணியும் அருட்செயல்களும். சுந்தரர் என்ற ஜீவபூமி இல்லாவிட்டால் இந்த நாடக வாசகர்களின் உணர்ச்சிகள் ஏதோ ஒரு இருண்ட பயங்கரமான வனாந்திரத்தில் திசை தெரியாமல் தவிப்பது போல் கஷ்டப்படும் என்பதில் சந்தேகமில்லை.

சுந்தரரின் அருளொளிக்கு முன் குடிலன் எழுப்பிய இருட்சுவர்களும் சூழ்ச்சிக் கோட்டைகளும் கடைசியாகத் தகர்ந்து தவிடுபொடியாகின்றன. இப்படி நேரவில்லையென்றால் இந்த நாடகாசிரியரின் நோக்கம் நிறைவேறியிராது.

8. நாராயணனின் குணாதிசயம்

(ஜீவகன் துணைவன்)

குடிலன் அயோக்கிய சிகாமணி என்பது நாராயணனுக்கு வெகு தெளிவு. ஜீவக மன்னனுடைய மந்த புத்திக்கோ குடிலன் பரமயோக்கியனாகவும் ராஜ பக்தனாகவும் தோன்றுகிறான்.

குடிலன் முனிவர் மீது பொறாமைகொண்ட நிலையைப் பரிகசிக்க விரும்பிய நாராயணன் அதைக் குறிப்பாகவும் ஹாஸ்யமாகவும் உணர்த்த விரும்பி,

வெறும் எலும்பை நாய்கௌவும்
வேளைநீ செல்ல
உறுமுவதென் ? நீயே உரை

என்கிறான்.

தன் மூக்கில் கரியைத் தேய்த்துக்கொண்டு நாராயணன் அரசன்முன் தோன்றுவதும் இவன் ஹாஸ்யப் பிரியன் என்பதையே காட்டுகிறது.

ஏ, ஏ ! நாரணா !
கரியாய் உன்மூக்(கு)
இருந்தவாறு) என்ன ?
ஏ, ஏ ! இது ஏன் ?

என்று அரசன் கேட்டதும், நாராயணன் பதில் சொல்லுகிறான்;

Koviloor Digital Library

மூக்கில் கரியர்
உளர்என நாயனார்
தூக்கிய குறளின்
சொற்படி, எல்லாம்
உள்ள நின் அரு(கு) அவர்
இல்லார் ஆவரோ ?

[நாயனார் – திருவள்ளுவர்]

நாராயணன் பின்வரும் திருக்குறளைச் சுட்டித்தான் பேசுகிறான்:

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து,

(குன்றி–குன்றிமணி, அகம்–உள்ளம், உடைத்து–உடையது.)

குன்றிமணியின் வெளிப்புறம்போல வேஷத்தால் செம்மையுடையவர்கள் இருக்கிறார்கள் இந்த உலகத்திலே; எனினும் குன்றிமணியின் மூக்குப் போல உள்ளம் கறுத்திருக்கவும் கூடும் என்பது குறளின் கருத்து. இந்தக் குறளைக் குறிப்பிட்டுக் குடிலனுடைய வஞ்சகத் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறான் நாராயணன். ஆனால் ஜீவகன்,

ஓஹோ! ஓஹோ!
உனக்கென் ? பைத்தியம்!

என்று ஏளனச் சிரிப்புடன் தன் மந்தபுத்தியையே வெளியிடுகிறான்.

உடனே அரசனுக்கு ஒத்து ஊதும் சபையினர் யாவரும்,

ஓஹோ! ஓஹோ!
ஓஹோ! ஓஹோ!

என்று ஒரே சிரிப்பாய்ச் சிரித்துவிடுகிறார்கள். அந்தச் சிரிப்பிலே நாராயணனுடைய எச்சரிக்கை கரைந்துபோகிறது.

நாராயணா! உனக்(கு)
ஏன் இப் பித்து!
தீரா இடும்பையே
தெளிவில் ஐயுறல்!

[இடும்பை–துன்பம், ஐயுறல்–சந்தேகித்தல்.]

Koviloor Digital Library

என்கிறான் அரசன். குடிலனுடைய ராஜபக்தி அவ்வளவு தெளிவாக இருக்கிறது ஜீவகனுக்கு!

இதிலிருந்து நாராயணன் எவ்வளவு தூரம் மனித சுபாவத்தை அறிந்திருக்கிறான் என்பது தெளிவாகிறது. ஜீவகன் எவ்வளவுக்கு எவ்வளவு உலகம் தெரியாமல் இருக்கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு நாராயணன் தெரிந்தவன் என்று சொல்லலாம்; எவ்வளவுக்கு எவ்வளவு ஜீவகனது மூளை அயர்ந்து சோம்பிக் கிடக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு விழிப்புடன் தொழிற்படுகிறது நாராயணன் மூளை.

இத்தகைய குணாதிசயத்திலே ஹாஸ்யமும் சேர்ந்து பரிமளிக்கிறது என்றால், நாராயணனை இந்த நாடக மேடையில் பார்ப்பதுபோல் உலக நாடகத்திலும் எங்கெங்கேயோ பார்த்திருப்பது போலத் தோன்றுகிறதல்லவா?

* * *

நாராயணனுடைய புத்திசாதுரியத்தைக் குடிலனே ஒப்புக்கொள்கிறான். 'வினை அறி நாரணன்' – அதாவது செய்ய வேண்டிய காரியங்களை அறிந்து செய்யும் நாராயணன் என்றான் குடிலன் தனக்குள்ளே. இந்த இருவரும் அறிவுக் கூர்மையுள்ளவர்தாம். ஒருவன் யோக்கியன்; மற்றவன் அயோக்கியன்.

அயோக்கியன் யோக்கியனைக் கண்டு பயப்படுகிறான்.

எதுவும் [illegible]ரணன்
இருக்கில்
அபாயம் ஆ ஆ!

என்று மறுகுகிறது குடில உள்ளம். தன்னுடைய இருண்ட உள்ளத்திற்குள்ளே நாராயணன் எட்டிப் பார்த்துத் தன்னைச் சந்தியில் இழுத்துவிடுவானோ? – என்பது குடிலபயம். குடிலனுக்கு அபாயம் இவனால்தான். நாராயணனை ஒழித்துவிடலாம் என்று குடிலன் சூழ்ச்சி செய்கிறான்.

* * *

நாராயணன் சிறந்த போர்வீரன்; மரணத்தையும் அமைதியாக மகிழ்ச்சியுடன் வரவேற்கும் நெஞ்சுத் துணிவுள்ளவன். அரசன் அநியாயமாய்த் தன் பசிக்குப் பரிசாக மரண தண்டனை விதித்தபோதிலும் நாராயணன் தன் மன அமைதியையாவது, நிதான புத்தியையாவது சிறிதும்

Koviloor Digital Library

இழந்துவிடவில்லை. தன்னைச் சேர்ந்த போர் வீரர்களை நோக்கி, 'நீங்கள் கடமையிலும் ராஜ பக்தியிலும் வழுவாதிருக்க வேண்டும்' என்று புத்தி சொல்லுகிறான்.

உயிரை அபகரிக்கத் துணிந்துவிட்ட அரசனிடத்திலும் குன்றாத ராஜபக்தி நாராயணனிடம் காணப்படுகிறதென்றால், 'இவனே உத்தமராஜ பக்தன். ஜீவகனது உண்மையான துணைவன்' என்று துணிந்து சொல்லக் கூடுமல்லவா? இவனுள்ளத்தில் அரசனைக் குறித்து ஒரு சிறு கொடுமையான உணர்ச்சியும் ஏற்படாதது உண்மையில் அதிசயம்தான்!

தீமையும் நாச சக்திகளும் ஆதார சக்தியில்லாதலை விரைவாகவோ, சிறிது மெதுவாகவோ நன்மையின் சக்திகளுக்கு முன் அவை வீழ்ச்சி அடைய வேண்டியதுதான் – என்பது நாராயணன் மதம். இந்த மதத்திற்குத் துணை செய்வன நாராயணனுடைய பக்தியும் தேச பக்தியும்.

௯. பலதேவன்

பாண்டியன் படுதோல்வி அடையப் போகிறான் என்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டதும், குடிலன் போர்க்களத்திற்கு வருகிறான்.

ஒருவன (து) ஆசைப்
பெருக்கால், உலகில்
வருதுயர் கடலிற்
பெரிதே.....

[கடலின்–கடலைக் காட்டிலும்]

என்று தனக்குள் தானே சொல்லிப் பெருமூச்சுவிடுகிறான். ஆனால் இந்த மனச்சாட்சியை உடனே எப்படி அடக்கிவிடுகிறான் பாருங்கள்:

என்னை என்மதி
இங்ஙனம் எடுத்தெறிந்(து)
ஏகுதல்? சிச்சீ!

[என்னை–என்ன]

ஒரு நாயை வெருட்டியடிப்பது போல் மனச்சாட்சியையும் துரத்தியடிக்கிறான். இப்பேர்ப்பட்ட பரமதுஷ்டன் தக்க தண்டனை இல்லாமல் தப்புவதா? இவனுக்குத் தண்டனையாகவே படைக்கப்பட்டிருக்கிறான் மகனான பலதேவன்.

Koviloor Digital Library

குடிலன் தன் மனச்சாட்சியையும் அடக்கி ஆதிக்கம் செலுத்தக்கூடியவன் தான். தன்னைச் சேர்ந்தவர்களையும் அடக்கியாளக்கூடியவன்தான். அரசனை முகஸ்துதியால் மெள்ள அடக்கி ஆளுகிறான். தனக்குக் கீழானவர்களுக்கு வெகுமதி அளிக்கிறான்; லஞ்சம் கொடுக்கிறான்; அல்லது அவர்களைப் பயமுறுத்தி ஆதிக்கம் செலுத்துகிறான். சமானர்களையும் அடக்கியாளுகிறான். ஆனால் தன் மகனான பலதேவனை எப்படி அடக்கி ஆளுவது? முகஸ்துதி. வெகுமதி, பயமுறுத்தல் இவற்றில் ஒன்றினாலும் ஒரு சிறிதும் வெற்றி பெற முடியவில்லை.

நண்பர்களோ, வேலைக்காரர்களோ தவறாக நடந்துகொண்டால் குடிலனுக்கு என்ன நஷ்டம்? மகனுடைய தவறுதலோ தனக்கும் தன் குலத்துக்கும் அவமானம்!

ஜீவக மன்னன் வாணியை நோக்கி, 'நீ பைத்தியக்கார நடராஜனைக் காதலிக்க வேண்டாம்; மந்திரி மகனான பலதேவனையே மணந்து கொள்ளவேண்டும்' என்று சொல்லும்போது,

நலமே சிறந்த
குலமே பிறந்த
பலதேவ னாம்ஒரு
பாக்கிய சிலாக்கியன்

என்று குறிப்பிடுகிறான். இந்தக் குலநலமெல்லாம், இந்தப் பாக்கியமெல்லாம் பாழாகக் கூடுமல்லவா இப் பலதேவனுடைய காரியங்களால்?

பலதேவன் சிற்றின்பப் பிரியன். ஜீவக மன்னனுக்கே இவனை மாப்பிள்ளையாக்கிவிடத் தந்தை முயன்றும் அதற்குத் தகுதியாக வேஷமாவது போட்டுக்கொள்ள வேண்டுமே! – இந்த எண்ணமும் இவனுக்கில்லை. புருஷோத்தமன் என்ற குரு தூரத்திலிருப்பதால், பக்கத்திலுள்ள பலதேவன் என்ற எட்டி மரத்தையாவது பற்றிப் படராதா மனோன்மணி என்ற பூங்கொடி?' என்று ஆலோசிக்கிறான் குடிலன். எனவே, 'பலதேவன் ஒரு தரு அல்லன்; விஷமரந்தான்!' என்பதைச் சூழ்ச்சித் திறமை வாய்ந்த குடிலன் நன்றாக அறிவான்.

எனினும், தன் மகனும் தன்னைப்போல் சூழ்ச்சித் திறமையோடு நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறான் குடிலன். அதற்கு மாறாக, ராஜதூதனாகப் புறப்படவேண்டிய சமயத்திலேயே பலதேவன் தன் சிற்றின்ப

Koviloor Digital Library

லீலைகளில் காலத்தையும் பொருளையும் விரயம் செய்துகொண்டிருக்கிறான். கஷ்டப்பட்டுத் தந்தை தேடி வைக்கும் பணத்தையெல்லாம் பாழாக்குவதோடு,

பணம் பணம் என்(று) ஏன்
பதைக்கிறாய் பிணமே ?

என்று தன் தந்தையையே நேருக்கு நேர் கேட்டுவிடுகிறான். நம்முடைய உள்ளம் நடுங்குகிறது இந்த வார்த்தையைக் கேட்டதும்; எனினும் நம்முடைய புத்தி ஒப்புக்கொள்கிறது, 'இது குடிலனுக்குத் தக்க தண்டனைதான்!' என்று.

பாண்டிய மன்னனின் முதல் மந்திரி குடிலன் எத்தனையோ அதிகார ஆடம்பர வைபவங்களால் சூழப்பட்டிருக்கிறான். பாண்டியன் 'நரேந்திரன்' என்றால் இந்த மந்திரி "குடிலேந்திரன்" என்று புகழ் பெற்றிருக்கிறான். இவனுடைய வாழ்வானது சொர்க்க வாழ்வு போலத் தோன்றுகிறது ஸ்தூலமாகப் பார்ப்பவர்களுக்கு; மனச் சாட்சியாலும் துன்புறுத்த முடியாத இந்த வாழ்வை நாசமாக்கிவிடுகிறான் மகன்!

பலதேவனுடைய யோக்கியத்தை அந்தப்புரத்துப் பெண்களான மனோன்மணிக்கும் வாணிக்கும் சரியாகத் தெரியாவிட்டாலும் நாடெல்லாம் தெரியப் பிரசித்தமானதுதான். எனினும் தான் ராஜாவாக விரும்பிய குடிலன் அந்தப் பதவியை இந்த மகனுக்கு அளிக்கத்தான் விரும்புகிறான். தானே ஒரு புதிய அரச வம்சத்திற்கு மூல புருஷனாகப் பார்க்க விரும்பும் அவன் 'சூரிய புத்திரனாகிய மனுச்சக்கரவர்த்தி' என்பது போல் 'குடிலேந்திர புத்திரன் பல தேவராஜா' என்று இந்த மகனையும் அந்தப் பதவிக்கு உயர்த்தி விடப்பார்க்கிறான்.

இத்தகைய தனிப்பெரு முயற்சியில் ஒத்துழைக்கத் தெரியாவிட்டாலும், இதற்குக் கேடான காரியமாவது செய்யாமல் இருக்கத் தெரியவேண்டாமா பலதேவனுக்கு? இவன்தான் குடிலன் பதவியையும் வாழ்க்கையையும் கூட நாசமாக்கிவிடுகிறானே!

இவ்வளவு மோசமான ஆசாமியைத்தான் ஜீவக மன்னன் குடிலன் பேச்சைக் கேட்டுப் புருஷோத்தமனுடைய ராஜசபைக்குத் தூதுவனாக அனுப்புகிறான். இந்தப் பலதேவன் தன்னை,

மந்திரச் சிகாமணி
தந்திரத் தலைவன்
குடிலேந்திரன் மகன்!

Koviloor Digital Library

என்று அறிமுகப் படுத்தியதுதான் தாமதம், 'மடையன்' என்று புருஷோத்தமன் தனக்குள் தானே சொல்லிக்கொண்டு, வந்த காரியத்தை விசாரிக்கிறான்.

தூரத்திலிருக்கும் புருஷோத்தமன் கூட இவனைக் கண்டதும், பேச்சைக் கொஞ்சம் கேட்டதும், இவனை 'மடையன்' என்றே தீர்மானித்துவிடுகிறான்; 'அயோக்கியனுங்கூட' என்று தெரிந்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அயோக்கிய சிகாமணியான குடிலனையோ 'மடையன்' என்று சொல்ல முடியுமா? அவன் மகன் அயோக்கியத்தனத்தில் அந்தச் சிகரத்தை எட்ட முடியவில்லையென்றால், இவனுடைய புத்திக் குறைவுதான் அதற்குக் காரணம். எனினும் திருமணத் தூதனாகப் போன இவன் அந்தச் சமயத்திற்காவது மனோன்மணி–புருஷோத்தமன் திருமணத்தைத் தடுத்துவிடுகிறான்.

இப்படித் தந்தையோடு ஓரளவு ஒத்துழைக்க முயன்றும், அந்த அறிவுக் கூர்மையையும் சூழ்ச்சியின் ஆழங்களையும் பலதேவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. பலதேவனைப் போல் சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடப்பவனுக்கு அறிவைக்கூர்மை செய்யத்தான் அவகாசம் ஏது?

தந்தையைப் பூரணமாக நம்பி அவன் பின்னே நிழல் போல் சென்று காரியசித்தி பெறுவதற்கும் போதுமான ஒருமையுள்ளம் வேண்டுமல்லவா? அதற்கும் இடங்கொடுக்கவில்லை பலதேவனுடைய சிற்றின்ப ஒழுக்கம்.

பலதேவனுடைய ஒழுக்கக் குறைவினால் ஒரு போர் வீரன் அடம் சாதித்து வேலால் இவனைக் காயப்படுத்துகிறான். 'உன் நடத்தையினால் தான் இப்படி நேர்ந்தது' என்று தந்தை இடித்துச் சொன்னதும், பலதேவனும் எதிர்த்துப் பேசுகிறான்:

மன்னனைக் குத்திட
உன்னினை; ஊழ்வினை
என்னையே குத்திட
இசைந்த(து) யார்பிழை ?

பலதேவன்தான் எண்மையில் குடிலனைத் தண்டிக்கும் ஊழ்வினையாக வந்து முளைத்தவன். இப்படிக் கதாபாத்திரங்களைப் படைக்கும் ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் நாடகப் பண்பிலே ஊறிய தமது அறிவுத் திறமையை நன்கு வெளியிடுகிறார்.

Koviloor Digital Library

3

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

முகவுரை

மறைமுதற் கிளர்ந்த வாயான் மதிமுகிழ் முடித்தவேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற்பாடை அனைத்தும் வென் றாரியத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை உன்னினைந் தேத்தல் செய்வாம்!
இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசை பரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇனார் என்றாலிவ்
விருமொழியும் நிகரென்னும் இயற்கையும் உளதேயோ!
கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ ?

என்றெடுத்த ஆன்றோர் வசனங்கள் உபசாரமல்ல. உண்மையேயென்பது பரதகண்டம் என்னும் இந்தியா தேசத்திலுள்ள பற்பல பாஷைகளைச் சற்றேனும் ஆராய்ந்து ஒப்பிட்டு நோக்கும் யாவர்க்கும் திண்ணிதிற்றுணியத்தக்கதே. பழமையிலும், இலக்கண நுண்மையிலும், இலக்கிய விரிவிலும், ஏனைய சிறப்புக்களிலும் மற்றக் கண்டங்களிலுள்ள எப்பாஷைக்கும் தமிழ்மொழி சிறிதும் தலை கவிழ்க்கும் தன்மையதன்று. இவ்வண்ணம் எவ்விதத்திலும் பெருமை சான்ற இத்தமிழ்மொழி பற்பல காரணச் செறிவால், சிலகாலமாக நன்கு பாராட்டிப் பயில்வோர் தொகை சுருங்க, மாசடைந்து நிலை தளர்ந்து, நேற்றுதித்த தெலுங்கு முதலிய பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என்று அறியாதார் பலரும் ஐயமுறும்படி அபிவிருத்தியற்று நிற்கின்றது. இக்குறைவு நீங்கத் தங்கள் தங்களுக்கியன்ற வழி முயல்வது, தங்களை மேம்படுத்தும் தமிழ்மொழியைத் தம்மொழியாக வழங்கும் தமிழர் யாவரும் தலைக்கொள்ள வேண்டிய தவறாகக் கடன்பாடன்றோ?

Koviloor Digital Library

2. மேற்கூறிய முயற்சிக்கேற்ற வழிகள் பலவுளவேனும் அவற்றுள் இரண்டு தலைமையானவை. முதலாவது முன்னோராற் பொருட்சுவையும் சொற் சுவையும் பொலிய இயற்றப்பட்டிருக்கிற அருமையான நூல்களுள் இறந்தவையொழிய இனியும் இறவாது மறைந்து கிடப்பனவற்றை வெளிக்கொணர்ந்து நிலைபெறச் செய்தலேயாம். இவ்வழியில் தற்காலம் உழைத்து வரும் பெரும் புகழ்படைத்த மா-ா-ா-ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள், பரமஸ்ரீ உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் முதலிய வித்வசிரோ மணிகளுடைய நன்முயற்சிக்கு ஈடு கூறத்தக்கது யாது? தம் மக்கட்கு எய்ப்பில் வைப்பாக இலக்கற்ற திரவியங்களைப் பூர்வீகர்கள் வருந்திச் சம்பாதித்து வைத்திருக்க, அம்மக்கள் அவை இருக்குமிடந்தேடி எடுத்தனுபவியாது இரந்துண்ணும் ஏழைமை போலன்றோ ஆகும். ஈடுமெடுப்பு மற்ற நுண்ணிய மதியும் புண்ணிய சரிதமுமுடைய நம் முன்னோர் ஆயிரக்கணக்கான ஆண்டு உழைத்து ஏற்படுத்தியிருக்கும் அரிய பெரிய நூல்களை நாம் ஆராய்ந்து அறிந்து அனுபவியாது வாளா நொந்து காலம் போக்கல்! ஆதலால் முற்கூறிய உத்தம வித்துவான்களைப் பின் தொடர்ந்து நம் முன்னோர் ஈட்டிய பொக்கிஷங்களைச் சோதனை செய்து தமிழராகப் பிறந்த யார்க்கும் உரிய பூர்வார்ஜித கல்விப் பொருளை க்ஷேமப்படுத்தி அனுபவிக்க முயல்வது முக்கியமான முதற்கடமையாம்.

3. பூர்வார்ஜித தனம் எவ்வளவு பெரிதாக இருப்பினும் அதனைப் பாதுகாப்பதோடு ஒவ்வொருவரும் தத்தமக்கியன்ற அளவு உழைத்துச் சொற்பமாயினும் புதுவரும்படியைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பது பொதுவான உலக நோக்கமாக இருப்பதால், முற்கூறிய முயற்சியோடு இரண்டாவதொரு கடன்பாடும் தமிழர் யாவருக்கும் விட்டு விலகத் தகாததாகவே ஏற்படும். பூர்வாஜிதச் சிறப்பெல்லாம் பூர்வீகர்கள் சிறப்பு; அந்த அந்தத் தலைமுறையார்களுக்கு அவரவர்கள் தாமே ஈட்டிய பொருளளவும் சிறப்பேயொழிய வேறில்லை. அத்தலைமுறையாரைப் பின் சந்ததியார் பேணுவதற்கும் அதுவே யொழிய வேறு குறியுமில்லை. ஆனதினால் எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் பூர்வீகர்களால் தங்களுக்குச் சித்தித்திருப்பவற்றை ஒவ்வொரு தலைமுறையாரும் பாதுகாப்பதுமின்றித் தங்களாற் கூடிய அளவும் அபிவிருத்தி பண்ணவும் கடமை பூண்டவர்களாகின்றார்கள். 'பூர்வார்ஜிதம் மிகவும் பெரியதாயிருக்கின்றதே! நம் முயற்சியால் எத்தனை தான் சம்பாதிப்பினும் நமது பூர்வார்ஜிதத்தின் முன் அது ஒரு பொருளாகத் தோற்றுமா?' என மனந்தளர்ந்து கைசோர்வார்க்கு

Koviloor Digital Library

அவர் பூர்வார்ஜிதப் பெருமையே கேடு விளைவிப்பதாகவன்றோ முடியும்? அந்தோ! இக் கேட்டிற்கோ நம் முன்னோர் நமக்காக வருந்தியுழைத்துப் பொருளீட்டி வைக்கின்றார்கள்! பிதிர்களாய் நிற்கும் அம்முன்னோர் இவ்விபரீத விளைவைக் கண்டால் நம்மை எங்ஙனம் வாழ்த்துவர்? இக்கூறிய உண்மை செல்வப் பொருளுக்கன்றிக் கல்விப் பொருளுக்கும் ஒரு குடும்பத்துள் வந்த ஒருவனுக்கன்றி ஒரு தேசத்திற்பிறந்த ஒவ்வொரு தலைமுறையாருக்கும் ஒன்று போலவே பொருத்தமுடையதாதலால்,

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந் துறும்

என்னும் திருக்குறளை நம்பி நம் முன்னோர் யாதேனும் ஒரு வழியில் அபரிமிதமான சிறப்படைந்தாராயின் நாமும் அவர் போலவே இயன்ற அளவும் முயன்று பெருமை பெறக் கருதுவதன்றோ அம்முன்னோர்க்குரிய மக்கள் நாமென முன்னிற்றற்கேற்ற முறைமை!

தீங்கரும் பீன்ற திரன்கால் உளை அலரி
தேங்கமழ் நாற்றம் இழந்த அங்கு – ஓங்கும்
உயர்குடி யுட்பிறப்பின் என்னாம் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை!

ஆதலால் அருமையாகிய பூருவ நூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற்கடமையோடு அவ்வழியே முயன்று அந்த அந்தக்கால நிலைக்கேற்றவாறே புது நூல்களை இயற்ற முயலுதல் தமிழ்நாடென்னும் உயர்குடியிற் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறையாருக்கும் உரித்தான இரண்டாம் கடமையாய் ஏற்படுகின்றது.

4. மேற்கூறிய இரண்டாம் கடமையைச் சிரமேற்கொண்டு தமிழோர் என்னும் பெரிய குடும்பத்துள்ளே தற்காலத்துள்ள தலைமுறையாருட் கல்வி கேள்வி அறிவு முதலிய யாவற்றுள்ளும் கனிஷ்டனாகிய சிறியேன்,

இசையா தெனினும் இயற்றி ஓ ராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை

என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து நவீனமான பல வழிகளுள்ளும் என் சிறுமதிக்கேற்றதோர் சிறு வழியிற் சில காலம் முயன்று வடமொழி முதலிய பாஷைகளிலுள்ள நாடக ரீதியைப் பின்தொடர்ந்து இயற்றிய 'மனோன்மணியம்' என்னும் இந்நாடகம், பூர்வீக இலக்கியங்களுடன் சற்றேனும் உவமிக்க

Koviloor Digital Library

இயையாதெனினும், ஆஞ்சனேயாரதி வானர வீரர்கள் சேதுபந்தனஞ் செய்யுங் காலத்தில் கடல் நீரிலே தோய்ந்து மணலிற் புரண்டு அம்மணலைக் கடலில் உகுத்த சிறு அணிற்பிள்ளையின் நன் முயற்சி அங்கீகரிக்கப்பட்டவாறே, கல்வி கேள்வியால் நிறைந்த இத் தலைமுறைச் சிரேஷ்டர் அங்கீகரித்து எனது இச்சிறு முயற்சியும் தமிழ் மாதாவுக்கு அற்புதமாம்படி அருள்புரியாதொழியார் என நம்பிப் பிரகடனம் செய்யப்படுகின்றது.

5. இந்நாடகம் வடமொழி ஆங்கிலேயம் முதலிய பாஷைகளில் உள்ள நாடக வழக்கிற்கிசையச் செய்திருப்பதால் இதனுள்ளடங்கிய கதை அங்கங்கே நடந்தேறும் சம்பாஷணைகளாலும் அவாய் நிலைகளாலும் கோவைப்படுத்தி அறிந்துகொள்ள வேண்டியதாயிருக்கின்றது. இக்கதை புதிதாக இருப்பதினால் அவ்விதம் கோவைப்படுத்தி அறிந்து கொள்ளுவோர்க்கு அனுகூலமாகச் சுருக்கி ஈண்டுக் கூறப்படுகிறது.

கதாசங்கிரகம்

6. முற்காலத்தில் மதுரைமாநகரில் ஜீவகன் என ஒரு பாண்டியன் அரசு புரிந்துவந்தான். அவன் பளிங்கு போலக் களங்கமில்லாத நெஞ்சினன். அவன் மந்திரி குடிலன் என்பவன், ஒப்பற்ற சூழ்ச்சித் திறமையுடையவனாயினும், முற்றும் தன்னலமொன்றே கருதும் தன்மையனாயிருந்தான். அதனால் அரசனுக்கு மிகவும் உண்மையுடையவன்போல் நடித்து அவனை எளிதிலே தன் வசப்படுத்திக்கொண்டான். அங்ஙனம் சுவாதீனப்படுத்திய பின்பு, தன்மனம் போனபடியெல்லாம் அரசனையாட்டித் தன் செல்வாக்கும் வளர்த்துக்கொள்ளத் தொன்னகராகிய மதுரை இடங்கொடாதென உட்கொண்டு அந்நகரின் மேற் பாண்டியனுக்கு வெறுப்பு பிறப்பித்து. திருநெல்வேலி என்னும் பதியிற்கோட்டை கொத்தளம் முதலியன இயற்றுவித்து, அவ்விடமே தலைநகராக அரசன் இருந்து அரசாளும்படி செய்தான். முதுநகராகிய மதுரை துறந்து கெடுமதியாளனாகிய குடிலன் கைப்பட்டு நிற்கும் நிலைமையால் ஜீவகனுக்கு யாது விளையுமோ என இரக்கமுற்ற அவனுடைய குலகுருவாகிய சுந்தர முனிவர் அவனுக்குத் தோன்றாத் துணையாயிருந்து ஆதரிக்க எண்ணித் திருநெல்வேலிக் கருகிலுள்ள ஓர் ஆசிரமம் வந்தமர்ந்தருளினர். முனிவர் வந்து சேர்ந்தபின் நிகழ்ந்த கதையே இந்நாடகத்துட் கூறப்படுவது.

7. முனிவர் எழுந்தருளியிருப்பதை உணர்ந்து ஜீவகன் அவரைத் தன் சபைக்கு அழைப்பித்து, தனது அரண்மனை, கோட்டை முதலியவற்றைக்

Koviloor Digital Library

காட்டி அவை சாசுவதம் எனமதித்து வியந்துகொள்ள, அவ்விறுமாப்பைக் கண்ணுற்ற முனிவர், அவற்றின் நிலையாமையைக் குறிப்பாகக் கூறியும் அறியாதொழிய, அவன் குடும்பத்திற்கும் கோட்டை முதலியவற்றிற்கும் க்ஷேமகரமாகச் சில சிரியாவிசேஷம் செய்யும் பொருட்டு அவன் அரண்மனையில் ஓரறை தம் சுவாதீனத்து விடும்படி கேட்டு, அதன் திறவுகோலை வாங்கிக்கொண்டு தம் ஆசிரமம் போயினர். ஜீவக வழுதிக்குச் சந்ததியாக மனோன்மணி என்னும் ஒரே புத்திரிதான் இருந்தனள். அவள் அழகிலும் நற்செய்கைகளிலும் ஒப்புயர்வற்றவள் அவளுக்கு அப்பொழுது வயது பதினாறாக இருந்தும், அவள் உள்ளம் குழந்தையர் கருத்தும் துறந்தோர் நெஞ்சம்போல் யாதொரு பற்றும் களங்கமுமற்று நின்மலமாகவேயிருந்தது. அவளுக்கு உற்ற தோழியாக இருந்தவள் வாணி. இவள் ஒழுக்கம் தவறா உளத்தள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெளிந்தவையே நம்புந்திறத்தள். அல்லனவற்றை அகற்றும் துணிபுமுடையவள். இவ் வாணி நடராஜனென்ற ஓர் அழகமைந்த ஆனந்த புருஷனை அறிய, அவர்களிருவர் உள்ளமும் ஒருவழிப் படர்ந்து காதல் நேர்ந்தது. அதற்கு மாறாக இவ் வாணியினது பிதா மிகப் பொருளாசையுடை யோனாதலால், குடிலனுடைய மகன் பலதேவன் என்னும் ஒரு துன்மார்க்கனுக்குத் தன் மகளை மணம்புரியில் தனக்குச் செல்வமும் கௌரவமும் உண்டாமென்ற பேராசை கொண்டு அவ்வாறே அரசன் அனுமதி பெற்று விவாகம் நடத்தத் துணிந்தனன். அதனால் வாணிக்கு விளைந்த சோகம் அளவற்றதாயிற்று. இச்சோகம் நீங்க மனோன்மணி பலவாறு ஆறுதல் கூறும் வழக்கமுடைய வளாயிருந்தாள். இவ்வாறிருக்கும்போது முனிவர் கோட்டை காண வந்த நாளிரவில் ஈடுமெடுப்பு மற்ற சேரதேசத்தரசனாகிய புருடோத்தவர்மனைப் பூருவகரும் பரிபாகத்தால் மனோன்மணி கனாக் கண்டு மோகம்கொண்டு அவட்குக் காமசுரம் நிகழ்ந்தது. அச்சுரம் இன்ன தன்மையதென்றுணராது வருந்தும் ஜீவகனுக்குத் தெய்வகதியாய்த் தம் அறைக்கு மறுநாட் காலமே வந்த முனிவர் மனோன்மணி நிலைமை காமசுரமே எனக் குறிப்பாலுணர்ந்து அவள் நோய் நீங்க மருந்து மணவினையே எனவும் அதற்கு எவ்விதத்திலும் பொருத்தமுடையோன் சேர தேசத்துப் புருடோத்தமனேயெனவும், அவ்வரசனது கருத்தினை நன்குணர்ந்து அம்மணவினை எளிதில் முடிக்க வல்லோன் நடராஜனே எனவும் உபதேசித்தகன்றார். வாணியினது காதலனாகிய நடராஜன்மேல் அவள் பிதா ஆரோபித்திருந்த அபராதங்களால் வெறுப்புக் கொண்டிருந்த பாண்டியன் அக்குருமொழியை உட்கொள்ளாதவனாய்க் குடிலனுடைய துன்மந்திரத்தை விரும்பினன். குடிலனோ, தன்னயமே

Koviloor Digital Library

கருதுவோனாதலால், சேர தேசத்தரசன் மரு மகனாக வருங்காலத்தில் தன் சுவாதந்தரியத்திற்கு எங்ஙனம் கெடுதி வருமோ என்ற அச்சத்தாலும் ஒருகால் தன் மகனாகிய பல தேவனுக்கே மனோன்மணியும் அவட்குரிய அரசாட்சியும் சித்திக்கலாகாதா என்ற பேராசையாலும் முனிவர் கூறிய மணத்தைத் தடுப்பதற்குத் துணிந்து தொடக்கத்திற் பெண் வீட்டார் மணம் பேசிப் போதல் இழிவென்னும் வழக்கத்தைப் பாராட்டிப் புருடோத்தமன் மனக்கோள் அறிந்தே அதற்கு அத்தனிக்க வேண்டுமென்றும், அப்படி அறிதற்குப் பழைய சில விவாதங்களை மேற்கொண்டு ஒரு தூது அனுப்ப வேண்டுமென்றும், அப்போது கலியாணத்திற்குரிய சங்கதிகளையும் விசாரித்து விடலாமென்றும் ஒரு சூது கூற அதனை அரசன் நம்பி, குடிலன் மகன் பலதேவனையே இவ்விஷயத்திற்கு தூதனாக அனுப்பினான்.

8. சேர தேசத்திலோ புருடோத்தமன் தனக்குச் சில நாளாக நிகழ்ந்துவரும் களாக்களில் மனோன்மணியைக் கண்டு காமுற்று அவன் இன்னாளென வெளிப்படாமையால் மனம் புழுங்கி யாருடனேனும் போர் நேர்ந்தால் அவ்வாரவாரத்திலாயினும் தன் மனத்தைக் கொள்ளை கொள்ளும் கனா வொழியாதா வென்ற நோக்கமுடனிருக்கும் சந்தியாக இருந்தது. அதனாற் பலதேவன் சென்று தன் பிதா தனக்கு இரகசியமாகக் கற்பித்தனுப்பியபடி சேரன் சபையில் அகௌரவமான துர்வாதம் சொல்லவே புருடோத்தமன் கோபம்கொண்டு போர்க்கோலம் பூண்டு பாண்டி நாட்டின் மேற்படையெடுத்துப் புறப்பட்டான். அச்செய்தியறிந்து ஜீவகனும் போருக்கு ஆயத்தமாகவே இருபடையும் திருநெல்வேலிக்கெதிரிலே கைகலந்தன. அப்படிப் போர் நடக்கும்போது பாண்டியன் சேனையின் ஒரு வியூகத்திற்குத் தலைவனாக இருந்த பலதேவனை அவன் கீழிருந்த ஒரு சேவகன் தன் வேலாலே தாக்க அதனால் அவன் மூர்ச்சிக்கவும் படை முழுதும் குழம்பவும் சங்கதி ஆயிற்று. அப்படித் தாக்க நேரிட்ட காரணமேதென்றால், பலதேவன் களவுவழிக் காமம் துய்க்கும் துன்மார்க்கனாதலால் அப்படைஞனது சகோதரியைக் கற்பழித்துக் கெடுத்துவிட்டது பற்றியுண்டான வைரமே என்பது படைஞன் வேலால் பலதேவனைத் தாக்கியபொழுது கூறிய வன்மொழியாலும் அவன் தங்கைக்கு அரண்மனையினின்றும் பலதேவன் திருடிப் பரிசாக அளித்த ஒரு பொற்றொடி அவன் கையில் அக்காலம் இருந்தமையாலும் வெளிப்படுகின்றது. படை நியதி கடந்த அச்சேவகனை அருகு நின்ற வீரர் அக்கணமே கொன்றுவிட்டார்கள். பலதேவனும் மூர்ச்சை தெளிந்துகொண்டான் ஆயினும் படையிற் பிறந்த குழப்பம் தணியாது பெருகிவிட்டதனால் பாண்டியன் சேனை சின்னா பின்னப்பட்டுச் சிதறுண்டு

Koviloor Digital Library

ஜீவகன் உயிர் தப்புவதும் அரிதாகும்படி தோல்வி நேர்ந்தது. சத்தியவாதியாகிய நாராயணன் என்னும் ஒரு சுத்த வீரன் அக்காலம் வந்து உதவி செய்யாவிடில் அப்போர்க் களத்தில் ஜீவகன் மாண்டே போயிருப்பான்.

9. இந்நாராயணன் யாரென்றால், நடராஜனுடைய நண்பன். இவன் குடிலனுடைய சூதுகள் தெரிந்தவன். அரசன் நித்தித்துத் தள்ளினும் அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனை விட்டு நீங்காது மதுரையினின்றும் அவனோடு தொடர்ந்து வந்த பரோபகாரி. குடிலன் இவன் திறமும் மெய்ம்மையும் அறிந்துளானாதலால், இந்நாராயணன் போர் முகத்திருக்கில், தான் எண்ணியபடி ஜீவகனுயிருக்குக் கேடு வரவொட்டான் எனக் கருதி, சண்டை ஆரம்பிக்கும் முன்னமே அவனைக் கோட்டைக் காவலுக்காக நியமித்தனுப்பினான். ஆயினும் போர்க்களமே கண்ணாக இருந்த நாராயணன் சேனையிற் குழப்பம் பிறந்தது கண்டு சில குதிரைப் படைகளைத் திரட்டிக்கொண்டு திடீரென்று பாய்ந்துசென்று அரசனையும் எஞ்சின சேவகனையும் காப்பாற்றிக் கோட்டைக்குட் கொண்டுவந்து விடுத்தான். சுத்த வீரனாகிய அரசன் இங்ஙனம் தான் பகைவருக்கு முதுகிட்ட இழிவை நினைந்து நினைந்து துக்கமும் வெட்கமும் தூண்டவே தற்கொலை புரிய எத்தனிக்கும் எல்லை நாராயணன் மனோன்மணியது ஆதரவின்மையை அரசனுக்கு நினைப்பூட்டி அக்கொடுந் தொழிலிலிருந்து விலக்கிக் காத்தான். அவனது நயவுரையால் அரசன் ஒருவாறு தெளிவடைந்திருக்கும்போது சேரன் விடுத்த ஒரு தூதுவன் வந்து, ஒரு குடத் தாமிரவர்ணி நீரும் வேப்பந்தாரும் போரிலே தோற்றதற்கு அறிகுறியாகக் கொடுத்தால் சமர் நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாட் காலையிற் கோட்டை முதலிய யாவும் வெற்றிட மாம்படி தும்பை சூடிப்போர் முடிப்பதாகவும் கூறினான். போரிலே ஒருமுறை தான் புறங்கொடுத்த புகழ்க் கெடுதியை உயிர் விடுத்தேனும் நீக்கத் துணிபுகொண்ட ஜீவகன் அதற்குடன்படாமல் மறுத்துவிட்டு, பின்னும் சமருக்கே எத்தனித்துத் தனது அரண்களைச் சோதித்து நோக்குங்கால் அவை ஒருநாள் முற்றுகைக்கேனும் தகுதியற்றபடி அழிந்திருப்பதைக் கண்ணுற்று, அவ்வளவாக தன் படைமுற்றும் தோற்க நேரிட்ட காரணம் குடிலனோடு வினவலாயினான். தன் கருத்திற்கெதிராக அரசனைக் காப்பாற்றி வரும் நாராயணன் மேற் தனக்குள்ள பழம்பகை முடிக்க இதுவே தருணம் எனக் கண்டு அரண் காவலுக்கு நியமிக்கப்பட்ட நாராயணன் காவல் விடுத்துக் கடமை மீறி யுத்தகளம் வந்ததே காரணமாகக் காட்டி கோபமூட்டிப் படையிற் பிறந்த குழப்பத்திற்கு ஏதுவாகப் பலதேவனை

Koviloor Digital Library

ஒரு சேவகன் வேலாற்றாக்கினதும் தெரிவித்து, அதுவும் வியூகத் தலைவனாக ஆக்கப் பெறாத பொறாமையால் நாராயணன் ஏவிவிட்ட காரியமே எனவும் அத்தொழிலுக்குப் பரிசாக அவன் கையிலிருந்த அரண்மனை முத்திரை பொறித்த பொற்பொடி எனவும் குடிலன் ஒரு பொய்க்கதை கட்டி அதனை அரசன் நம்பும்படி செய்தான். அவ்வாறே களவு கொலை ஆஞ்ஞாலங்கனம் முதலிய குற்றங்களை நாராயணன் மேற்சுமத்தி அவற்றிற்காக அவனைக் கழுவேற்றும்படி விதியும் பிறந்தது.

10. இத்தருணத்தில் சுந்தர முனிவர் அத்தியந்த ஆவசிகமான ஓரிரகசியாலோசனைக்கு அரசனை அழைப்பதாகச் செய்தி வந்தமையால் நாராயணனை அவ்விதிப்படி கழுவேற்றவில்லை. முனிவர் இப்போது வந்த காரணம் என்னவென்றால், ஜீவகன் குடிலன் வசத்தனாய் நெல்வேலிக் கோட்டையை சாசுவதமென இறுமாந்திருந்தமை கண்டு பரிதாபம்கொண்டு, தமக்கென இரந்து வேண்டிக்கொண்ட அறை முதல் தமதாச்சிரம வெளிவரையும், ஆபத் காலோபயோகமாக அதிரகசியமான ஒரு சுருங்கை உழைத்துச் சமைத்துக்கொண்டு, பற்றுக்கோடற்று நின்ற ஜீவகனையும் அவன் மகளையும் கேடுற்ற கோட்டையினின்றும் தமது ஆசிரமத்திற்கு அச்சுருங்கைவழி அழைத்துச் செல்ல உன்னியே சுந்தரர் இத்தருணம் எழுந்தருளினர். கோட்டையின் நிலையாமை உணர்ந்தும் அதன்மேல் வைத்த அபிமானம் ஒழியாமையால் அஃதுடன் தான் முடியினும், இன்னும் ஒரு முறைப் போருக்கஞ்சிப் புறங்கொடுத்தல் தகாதென ஜீவகன் துணிந்து மறுக்க, மனோன்மணி பாண்டியர் குலத்திற்கு ஏக சந்ததியாக இருப்பதனால் மற்றையர் எக்கேடுறினும் அவளையேனும் காப்பாற்றுதல் தம் கடமையென ஒருதலையா உறுத்து முனிவர் கூற, மன்னவன் அங்ஙனம் இயைந்து நடுநிசியில் முனிவரோடு தம் மகளை ஆசிரமம் அனுப்புவதாக ஒப்புக் கொண்டான். முனிவரும் சம்மதித்து அகன்றார். உடனே நிசாமுகம் தோன்றிற்று. தன் அருமை மகளைப் பிரியும் வருத்தம் ஒரு புறமும் பிரியா திருக்கில் அவட்குண்டாம் கெடுதியைக் குறித்த அச்சம் மற்றொரு புறமாக ஜீவகன் சித்தத்தைப் பிடித்தலைக்கக் கலக்கமுற்று, குரு மொழியிலும் ஐயம் பிறந்து, குடிலனை வரவழைத்து, முனிவர் அதிரகசியமாகக் கூறிய சுருங்கை முதல் சகல சங்கதிகளையும் தெரிவித்து அவனது அபிப்பிராயம் உசாவுவானாயினன். அதற்கு அப்பாதகன் இதுவே தன் மனக்கோள் நிறைவேற்றற்குரிய காலமெனத் துணிந்துகொண்டு மனோன்மணியை இடம் பெயர்ப்பது தற்கால நிலைமைக்கு எவ்விஷயத்திலுமே உத்தமமெனவும்,

Koviloor Digital Library

ஆயினும் மணவினை முடியா முன்னம் அனுப்புதலால், கன்னியாகிய அவளுக்குப் பழிப்புரைக்கிடமாவதேயல்லால் அரசனுக்குச் சற்றும் சித்த சமாதானத்திற்கிடமில்லையெனவும் அவன் நெஞ்சில் சஞ்சலம் விளைவித்து ஜீவகன் தானாகவே பல தேவனுக்கு மனோன்மணியை அன்றிரவே கலியாணம் செய்து கொடுத்து முனிவர் ஆசிரமத்திற்கு மகளையும் மருமகனையும் சேர்த்து அனுப்புவதாகத் துணியும்படி தூண்டிவிட்டு, தான் நெடுங்காலமாகக் கொண்டிருந்த அபிலாஷத்தைப் பூர்த்திப்படுத்திக்கொண்டான்.

11 ஆயினும், அவ்வளவோடு நில்லாமல், தன்னையறியாமல் முனிவர் வகுத்த கள்ள வழியைக் கண்டறியவேண்டுமென்று விருப்புற்று, அது அவர் வந்த அன்றே தமக்காகப் பெற்றுக்கொண்ட அறைக்குச் சம்பந்தப்பட்டிருப்பதே இயல்பென ஊகித்து, அவ்வறையிற் சென்று நோக்கி அச்சுருங்கையைக் கண்டுபிடித்து அவ்வழியே போய் வெளியேறிப் பார்க்குங்கால், சத்துரு பாசறை அருகே தோன்றிற்று அன்று பகலில் தன் மகனுக்குச் சண்டையில் நேரிட்ட மோசடி போலத் தனக்கும் இனி வரக்கிடக்கும் கொடும்போரில் உட்பகையாலோ வெளிப்பகையாலோ யாதேனும் அபாயம் நேரிட்டுவிடலாமென்ற பயத்தாலும், மனோன்மணி விவகாரம் எப்படியும் அன்றிரவே நடந்தேறுமென்ற துணிவாலும், நடந்தேறில் ஜீவகனது பிரிதியால் சிந்திக்கத்தக்கது வேறொன்றுமில்லையென்ற உறுதியாலும், கோட்டைக்குத் திரும்பவேண்டுமென்ற எண்ணம் விடுபட, தான் வருந்திக் கண்டுபிடித்த கற்படையைச் சேரனுக்குக் காட்டி அவ்வழியே அவனை அழைத்துச் சென்று யாதொரு உயிர்ச் சேதத்திற்குமிடமில்லாமல் பாண்டியனையும் அவன் கோட்டையினையும் சுலபமாகப் பகைவன் கையில் ஒப்புவித்துவிட்டால், ஒரு குடம் ஜலத்திற்கும் ஒரு பூமாலைக்குமாகச் சமரை நிறுத்தித் தன்னூருக்குத் திரும்ப எண்ணின சேரன், தன்னையே முடிசூட்டிச் சிங்காதனம் சேர்க்காதொழிவானோ என்ற பேராசை பிடர்பிடித்துந்தவும் ஊழ்வலித்து நிற்கவும் செய்ததினால் அத்துரோகியாகிய குடிலன் மெள்ள மெள்ளப் பாசறை நோக்கிப் போகவே, கனாவில் மனோன்மணியினது உருவங்கண்டு காமுற்ற நாள் முதலாக யாதொன்றிலும் மனஞ்செல்லாதவனாய் இரவெல்லாம் நித்திரையற்றுத் தனியே திரிந்து வரும் புருஷோத்தமனை நடுவழியிற் சந்தித்துக்கொண்டான். அதுவும் தனது பாக்கியக் குறியாகவே மதித்து மகிழ்ந்த குடிலன், எதிர்ப்பட்ட சேரனிடம் தனது துரோக சிந்தனையை வெளிப்படுத்த, தன்னயங் கருதாச் சதுரனாகிய புருஷோத்தமன், தன் சேவகரைக் கூவிக் குடிலன் காலிலும் கையிலும் விலங்கிடுவித்து, 'வீரமே உயிராகவுடைய வஞ்சி வேந்தருக்கு

Koviloor Digital Library

வெற்றியன்று விருப்பு; இவ்வித இராஜ துரோகிகளைக் காட்டிக் கொடுத்து மாற்றலராகிய மன்னரையும் இரக்ஷித்துப் பின்பு வேண்டுமேற் பொருது தமது வீரம் நாட்டலேயாம்' என அவனுக்கு விடைகூறி, அவன் கூறிய சுருங்கை வழியே ஜீவகன் சபைக்கு வழிகாட்டி வரும்படி கட்டளையிட்டான். இம்மொழி கேட்ட பாவி இடியொலி கேட்ட பாம்புபோலத் திடுக்கிட்டுத் திகைத்து நின்றான். ஆயினும், தானிட்ட கட்டளை மீறில் சித்திரவதையே சிக்ஷையாமென்று சேரன் சினந்து கூற, அதற்கு அஞ்சி அவ்வாறே கற்படைக்கு வழிகாட்டி நடப்பானாயினான்.

12. இப்பால் ஜீவகன் தன் மகளைப் பலதேவனுக்கு மணஞ்செய்வித்து இருவரையும் முனிவர் ஆசிரமம் அனுப்புவதே தகுதியெனத் தெளிந்தவாறே அச்செய்தியை மனோன்மணிக்கறிவிக்க அது அவள் செவிக்குக் காய்ச்சின நாராசம் போலிருந்ததாயினும் தன் பிதாவுக்கு நேர்ந்த ஆபத்துக் காலத்தை நன்குணர்ந்து அவனுக்கேற்றபடி நடந்து அவனைத் தேற்றுவதே தற்கால நிலைக்கேற்ற தனது கடமைப்பாடெனத் தெளிந்து அங்ஙனம் ஒப்புக் கொண்டதுமன்றி, தன்பாடு எங்ஙனம் ஆயினும் தன்னைச் சார்ந்தவர் சுகத்தைப் பாராட்டும் பெருங்குணத்தால், காதல் கொண்டிருக்கும் வாணி, தன் கருத்திற்கிசைய நடராஜனை மணஞ்செய்து கொள்ளவும், நெடுங்காலமாகத் தன் குடும்ப ஊழியம் தலைக்கொண்டு நின்ற நாராயணன் செய்த தவறு யாதேயாயினும் அதனைப் பொறுத்து அவனைச் சிறை விடவும் தன் பிதாவினிடம் விரும்பிக் கேட்டுக்கொண்டனள். அப்படியே ஜீவகன் அனுமதி கொடுத்து அகமகிழ்ந்து மணவினைக்காயத்தம் செய்யவே நடுநிசி சமீபிக்க முனிவரும் நடராஜனும் வந்துசேர்ந்தார்கள். தாம் போய் மீளுவதற்குள்ளாகக் குடிலன் செய்த துராலோசனையும், அதற்குடன்பட்ட மன்னவனுடைய ஏழைமையும், கருணாவிலாசம் இருந்தமையும் கண்டு வியந்து, அரசன் நிச்சயித்த வண்ணமே நடத்தச் சுந்தரர் இசைந்தார்.

13. கற்படைக்கருகில் உள்ள மணவறையை விவாக முகூர்த்தத்திற் கிசைந்தவாறு அலங்கரித்து, அதில் குடிலன் ஒழிய மற்ற மந்திரி பிரதானிகளுடன் முனிவர் ஜீவகன் நடராஜன் பலதேவன் நாராயணன் முதலிய அனைவரும் கூடிக் குடிலன் வரவிற்குச் சற்று எதிர்பார்த்திருந்தும் வரக் காணாமையால் மணவினைச் சடங்குகள் தொடங்கி, பலதேவனுக்கு மாலை சூட்ட மனோன்மணியை வரவழைக்கும் எல்லை குடிலன் வழிகாட்டக் கற்படை வழிவந்த புருஷோத்தமனும் முனிவரறையில் வந்து சேர்ந்து அடுத்த அறையாகிய மணவறையில் நடக்கும் ஆகோஷம் என்னவென்று நோக்கவே,

Koviloor Digital Library

தன் திரைவிட்டு, வெளிவந்து பலதேவனெதிரே மணமாலையும் கையுமாய்ச் சித்திரப் பிரதிமைபோல உணர்வற்றுச் செயலற்று நின்ற தன் காதலியாகிய மனோன்மணியைக் கண்ணிரண்டும் களிக்கக் காணலும், பள்ளத்துட்பாயும் பெருவெள்ளம் போல் அவாப்பெருகி ஈர்த்தெழ, திடீரென்று கடிதிற் குதித்து யாரும் அறியாது சபையுட் புகுந்து கையற்ற சோகத்தால் மனமிறந்து நின்ற மனோன்மணி தன் கண்முன்னே சென்று நின்றனன். தன்னுள்ளத்திலிருந்த தலைவன் இங்ஙனம் பிரத்தியக்ஷப்படினும் அக்கணமே ஆனந்தப் பரவசப்பட்டு மனோன்மணி, தான் கைக்கொண்ட மணமாலையை அவன் கழுத்தோடு சேர்த்துத் தற்போதமிழந்து அவன் தோள்மேல் வீழ்ந்து மூர்ச்சையாயினள். இங்ஙனம் அயலான் ஒருவன் சபையுட் புகுந்ததும் மனோன்மணி அவனுக்கு மாலை சூட்டி மூர்ச்சித்ததும் கண்டு ஜீவகனாதியர் திடுக்கிட்டுச் சூதென தன்னிடத்தில் வந்து கூறிய துரோகச் சிந்தனையும் தான் அதற்கிசையாது அவனையே கால் யாப்பிட்டு ஜீவகனிடம் ஒப்புவிக்கக் கொணர்ந்தமையும் கூறிக் குடிலனை விலங்கும் காலுமாகச் சபைமுன் நிறுத்திவிட்டு, தனக்குயிர் நிலையா நின்ற மனோன்மணியுடன் தன் பாசறைக்குள் நீள யத்தனிக்குமளவில், சுந்தர முனிவர் ஆஞ்ஞையால் ஜீவகன் மனந்தெளிந்து மகளையும் மருமகனையும் வாழ்த்த அதுகண்ட யாவரும் கண்படைத்த பெரும் பயனடைந்து அருட்டிறம் புகழ்ந்து ஆனந்தம் அடைந்தனர்.

14. இதுவே இந்நாடகத்துள் வரும் கதையின் சுருக்கம். இத்தகைய வேண்டுழி வேண்டுழி விரித்து ஆங்கிலேய நாடக ரீதியாகிய ஜீவனாதியராகிய கதா புருஷர்களுடைய குணாதிசயங்கள் அவர் அவர் வாய்மொழிகளால் வெளிப்படும்படி செய்திருப்பதுமன்றி, வாழ்த்து வணக்கத்துடன் தொடங்கி, நாற்பொருள் பயக்கும் நடையினைக் கூடிய அளவும் தழுவி, தன்னிகரில்லாத் தலைவனையும் தலைவியையும் உடைத்தாய் மலைகடல் நாடு வளநகர் பருவம் இரு சுடர்த் தோற்றம் என்றின்னவும் பிறவும் ஏற்புழிப்புனைந்து, நறுமணம் புணர்தலே முடிவாகக்கொண்டு மந்திரம், தூது செலவிகல் வென்றி என்று சந்தியிற்றொடர்ந்து அங்கம் களம் என்னும் பாகுபாடுடைத்தாய் நிற்கும் இந் நாடகத்தில் தமிழ்க் காவிய உறுப்புக்கள் பற்பல ஆங்காங்கு வருவித்திருப்பதும் அன்போடு பார்ப்போர் கண்ணுக்குப் புலப்படலாம்.

15. இல்லறம் துறவறம் பத்தி ஞான முதலிய மோக்ஷ சாதனங்கள் பொருத்தமுடைய சந்திகளில் வெளிப்படையாக அமைந்திருப்பதுமல்லாமல் இக்கதையினையே ரூப காமாலாலங்காரமாகக் கருதில், தத்துவ சோதனை செய்யும் முமுக்ஷுகளுக்கு அனுகூலமாகப் பலிக்கவும் கூடும். அப்படி உருவக மாலையாகக் கொள்ளுங்கால், ஜீவகனைச் சார்போதமான ஜீவாத்மா ஆகவும்,

Koviloor Digital Library

அவனைத் தன் வசப்படுத்தியாட்டுவித்த குடிலனை மாயா சக்தியாகவும் மனோன்மணியை ஜீவாத்மாவின் பரிபக்குவ காலந் துதிக்கும் முத்திக்குரிய உத்தம பாகமான சுத்த தத்துவமாகவும், அவள் தோழி வாணியைப் புத்தி தத்துவமாகவும், அவள் காதலனாகிய நடராஜனை ஞானதாதாவான உபாசனா மூர்த்தியாகவும், புருஷோத்தமனை அனுக்கிரஹ சக்தியாகவும், சுந்தரமுனிவரைக் கருணாநிதியாகிய ஞானாசாரியராகவும், ஜீவகனுக்குத் தலைநகராகக் கூறிய முத்திபுரம் என்னும் மதுரையை ஜீவாத்மா உதித்தொடுங்கும் மூலஸ்தானமாகவும், அவனும் குடிலனும் சேர்ந்து கட்டிய நெல்வேலிக் கோட்டையை மாயாகாரியமான அன்ன மாயாதி பஞ்ச கோசத்தாலமைந்த சரீரமாகவும், அதிலிருந்து மனோன்மணி கண்ட கனாவைச் சுந்தாந்தக்கரணஜநிதமான பரோக்ஷ ஞானமாகவும், சேர தேசத்தில் புருடோத்தமன் கண்ட கனாவை மாயா சகிதமான ஈசுவரனது அருளின் ஸ்புரணமாகவும், மனோன்மணியும் புருஷோத்தமனும் சந்திக்கக் காரணமாக முடிந்த முனிவர் கட்டிய சுருங்கையைப் பிரத்யக்ஷானுபூதிக் கேதுவான பாச விமோசன பந்தாவாகவும், பிறவும் இம்முறையே பாவித்து உய்த்துணர்ந்து கொள்ளவேண்டியது.

16. ஏறக்குறைய வாசக நடைக்குச் சமமான அகவற்பாவால் இந்நாடகம் பெரும்பாலும் ஆக்கப்பட்டிருக்கிறதினால் ஒருவர் மொழியாக வரும் ஒரு வரியில் அகவல் அடி முடியாவிடங்களில் அடுத்த வரியில் வரும் சீரோடு சேர்த்து ஆசிரிய அளவடியாக்கி முடித்துக்கொள்க.

17. பல்வேறு தொழில்களிடையிலும் பிணி கவலையாதிகள் நடுவிலும் ஆங்காங்கு அகப்பட்ட அவகாசங்களிற் செய்யப்பட்டமையால் இந்நாடகத்துட் பல பாகங்கள் என் சிற்றறிவிற்கே திருப்தி தருவன அல்ல, பல காரணங்களால் ஆங்காங்குப் பல வழுக்களும் வந்திருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவற்றைத் திருத்தி அனுபந்தத்துள் சேர்த்திருக்கிறேன். இவை போன்றன பிறவும் உளவேல் கண்டுணர்த்தும் அன்புடையார்க்கு எப்போதும் நன்றியறிதல் உடையனவாய் இருப்பேன். கல்வி கேள்விகளிற் சிறந்த கனவான்கள் இக்கூறிய குறைவுகளைப் பாராட்டாது என்னை இம்முயற்சிக்குத் தூண்டிவிட்ட நன்னோக்கத்தையே கருதி இந்நவீன நாடகத்தை அநாதரவு செய்யாது கடைக்கணித்து அருள் புரியப் பலமுறை பிரார்த்திக்கின்றேன்.

பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறிவறிந்
தாள்வினை யின்மை பழி,

குரு சுந்தர சரணாலயம்

Koviloor Digital Library

4

மனோன்மணியம்

பாயிரம்

கடவுள் வணக்கம்

நேரிசை வெண்பா

வேத சிகையும் விரிகலையும் மெய்யன்பர்
போதமும் போய்த்தீண்டாப் பூரணமே! – பேதமற
வந்தெனைநீ கூடுங்கால் வாழ்த்துவர் யார்? வாராக்கால்,
சிந்தனையான் செய்ம் முறைஎன் செப்பு?

தமிழ்த் தெய்வ வணக்கம்

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலஉலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கலின்மலையாளமும்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

[இவை இரண்டும் ஆறடித்தரவு]

Koviloor Digital Library

கடல்குடித்த குடமுனிஉன் கரைகாணக் குருநாடில்,
தொடுகலை உனக்குவமை சொல்லுவதும் புகழாமே!

ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதும்அற் புதமாமே!

சதுமறையா ரியம்வருமுன் சகம்முழுதும் நின தாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே!

வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே!

கடையூழி வரும் தனிமை கழிக்கஅன்றோ அம்பலத்துள்
உடையார்உன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே!

தக்கவழி விரிந்திலகும் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலம் சிறந்தஉன்தன் மெய்ச்சரித வியஞ்சனமே!

வடமொழிதென் மொழியெனவே வந்தஇரு விழி அவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடு மேற்குணராரே.

வீறுடைய கலைமகட்கு விழியிரண்டும் மொழியானால்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசையறியார்!

கலைமகள் தன் பூர்வதிசை காணுங்கால் அவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரே மதியுடையார்?

பத்துப்பாட் டாதிமனப் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே?

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி?

மனம்கரைந்து மலம்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனம்சடைஎன் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ?

[இவை பன்னிரண்டும் தாழிசை]

Koviloor Digital Library

எனவாங்கு

[இது தனிச்சொல்]

நிற்புகழ்ந் தேத்தும்நின் நெடுந்தகை மைந்தர்
பற்பலர் நின்பெரும் பழம்பணி புதுக்கியும்

பொற்புடை நாற்கவிப் புதுப்பணி குயிற்றியும்
நிற்பவர் நிற்க, நீபெறும் புதல்வரில்

அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்

ஆயினும், நீயே தாய்எனுந் தன்மையின்
மெய்பே ராசைஎன் மீக்கொள ஓர்வழி

உழைத்தலே தகுதியென்று இழைத்தஇந் நாடகம்
வெள்ளிய தெனினும், விளங்குநின் கணைக்காற்கு

ஒள்ளிய சிறுவிரல் அணியாக்
கொள்மதி, அன்பே குறியெனக் குறித்தே.

[இது ஆசிரியச் சுரிதகம்]

அவை அஞ்சின நெஞ்சொடு கிளத்தல்

நேரிசை வெண்பா

அமைய அருள் அனைத்தும் ஆட்டுமேல் நெஞ்சே!
சுமைநீ பொறுப்பதெவன் சொல்லாய்? – நமையும் இந்த
நாடகமே செய்ய நயந்தால், அதற்கிசைய
ஆடுவம்வா! நாணம் அவம்.

பாயிரம் முற்றிற்று.

Koviloor Digital Library

மனோன்மணியம்

நாடகம்

Koviloor Digital Library

நாடகப் பாத்திரங்கள்

ஜீவகவழுதி	பாண்டி நாட்டரசன்
குடிலன்	ஜீவகனது முதல் மந்திரி
சுந்தரமுனிவர்	ஜீவகவழுதியின் குலகுரு
நிஷ்டாபரர்	சுந்தரமுனிவரின் சீடர்கள்
கருணாகரர்	
நடராஜன்	வாணியின் காதலன்
நாராயணன்	ஜீவகனது துணைவன்
பலதேவன்	குடிலன் மகன்
சகடன்	வாணியின் தந்தை
முருகன்	ஜீவகனது படைவீரருள் ஒருவன்
புருஷோத்தமவர்மன்	சேரதேசத்தரசன்
அருள்வரதன்	சேரதேசத்துச் சேனாதிபதி
மனோன்மணி	ஜீவகனது புதல்வி
வாணி	மனோன்மணியின் தோழி

[சேவகர், படைவீரர், ஒற்றர், உழவர், செவிலித்தாய், தோழியர், நகரவாசிகள் முதலியோர்.]

நாடக நிகழ்ச்சி	திருநெல்வேலியிலும் திருவனந்தபுரத்திலும்

Koviloor Digital Library

இடம் : பாண்டியன் : கொலுமண்டபம் **காலம்** : காலை

[சேவகர்கள் கொலுமண்டபம், அலங்கரித்து நிற்க]

நேரிசை ஆசிரியப்பா

முதற்சேவகன் : புகழ்மிக்க அமைதரு பொற் சிங்காதனம் திகழ்தர
இவ்விடம் சேர்மின், சீரிதே!

2-ம் சே : அடியிணை அருச்சனைக் காகுங் கடிமலர்
எவ்விடம் வைத்தனை?

3-ம் சே : ஈதோ! நோக்குதி.

4-ம் சே : அவ்விடத் திருப்பதென்?

3-ம் சே : ஆரம். பொறு! பொறு

விழவறா வீதியில் மழையொலி என்னக்
கழைகறி களிறுகள் பிளிறுபே ரொலியும்,
கொய்யுளைப் புரவியின் குரத்தெழும் ஓதையும்,
மொய்திரண் முரசின் முழக்கும் அவித்துச்,
'சுந்தர முனிவா! வந்தனம் வந்தனம்' 10
எனுமொலி யேசிறந்தெழுந்தது. கேண்மின்!

2-ம் சே : முனிவரர் என்றிடில் கனிவுறும் கல்லும்!

4-ம் சே : எத்தனை பத்தி! எத்தனை கூட்டம்! எள்விழற்கு
இடமில்லை. யான்போய்க் கண்டேன்.

3-ம் சே : உனக்கென் கவலை? நினைக்குமுன் ஓடலாம்.

மு.சே : அரசனும் ஈதோ அணைந்தனன். காணீர்!
ஒருசார் ஒதுங்குமின். ஒருபுறம்! ஒருபுறம்!

[ஜீவகன் வர]

Koviloor Digital Library

யாவரும் : (தொழுது) ஜய! ஜய! விஜயீபவ ராஜேந்திரா!

[சுந்தர முனிவர், கருணாகரர், குடிலன் நகரவாசிகள் முதலியோர் வர]

ஜய! ஜய! விஜயீ தவரா ஜேந்திரா!

ஜீவகன் : வருக! வருக! குருகிரு பாநிதே! 20
திருவடி தீண்டப் பெற்றஇச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ, ஆலநன் னீழலோ
குருகுல விஜயன கொடித்தேர்ப் பீடமோ,
யாதென ஓதுவன்? தீதற ஆதனத்து
இருந்தருள் இறைவ! என்பவ பாசம்
இரிந்திட நின்பதம் இறைஞ்சுவல் அடியேன்!

[ஜீவகன் பாதைபூசை செய்ய]

சுந்தரமுனிவர் : வாழ்க! வாழ்க! மன்னவா! வருதுயர்
சூழ்பிணி யாவுந் தொலைந்து வாழ்க!
சுகமே போலும், மனோன்மணி?

ஜீவ : சுகம். சுகம்.

சுந்த : இந்நகர் உளாரும் யாவரும் க்ஷேமம்? 30

ஜீவ : உன்னருள் உடையோர்க் கென்குறை? க்ஷேமம்
கூடல் மாநகர் குடிவிட்டு இப்பால்
பீடுயர் நெல்லையில் வந்தபின் பேணி
அமைத்தனன் இவ்வரண். இமைப்பறு தேவரும்
கடக்கரும் இதன் திறம் கடைக்கண் சாத்தி
ஆசிநீ யருள நேசித்தேன் நனி
எத்தனை புரிதான் இருக்கினும் எமக்கெலாம்
அத்த! நின் அருள்போல் அரண் எது? குடில!
இவ்வழி யெழுந்தநம் இறைவர் கடிபுரி
செவ்விதின் நோக்கக் காட்டுக தெரிந்தே! 40

குடிலன் : ஊன்வரு பெருநோய் தான்விட அடைந்த
அன்பர் இன்புற இவ் அருளுருத் தாங்கி
வந்தருள் கிருபா சுந்தரமூர்த்தி!

Koviloor Digital Library

நீ அறியாதது ஒன்றில்லை; ஆயினும்,
உன்னடி பரவி யுரைப்பது கேண்மோ!
தென்பாண்டி நாடே சிவலோகம் ஆமென
முன் வாதவூரர் மொழிந்தனர், அன்றியும்
தரணியே பசுவெனச் சாற்றலும் மற்றதில்
பரதமே மடியெனப் பகர்வதும் சரதமேல்,
பால்சொரி சுரைதென் பாண்டி என்பது 50

மேல் விளம்பாதே விளங்கும், ஒருகால்
எல்லா மாகிய கண்ணுதல் இறைவனும்
பல்லா யிரத்த தேவரும் பிறரும்
நிலைபெற நின்ற பனிவரை துலையின்
ஒருதலை யாக உருவம் சிறிய
குறுமுனி தனியா யுறுமலை மற்றோர்
தலையாச் சமமாய் நின்றதேல், மலைகளில்
மலையமோ அலதுபொன் வரையோ பெரிது?
சந்து செவிவழித் தந்த கங்கையும்,
பின்னொரு வாயசம் கவிழ்ந்த பொன்னியும், 60

வருந்திய தேவரோடு அருந்தவர் வேண்ட
அமிழ்திலும் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலையம்நின் றிழிந்து, விலையுயர் முத்தும்
வேழவெண் மருப்பும் வீசிக் காழகிற்
சந்தனா டவியும் சாடி வந்துயர்
குங்குமம் முறித்துச் சங்கினம் அலறும்
தடம்பணை தவழ்ந்து, மடமயில் நடம்பயில்
வளம்பொழில் கடந்து குளம்பல நிரப்பி,
இருகரை வாரமுந் திருமகள் உறையுளாப்
பண்ணும் இப்புண்ணிய தாமிர வர்ணியும், 70

எண்ணிடில் ஏயுமென் றுஇசைக்கவும் படுமோ?
இந்நதி வலம்வர இருந்தநம் தொன்னகர்
பொன்னகர் தன்னிலும் பொலிவுறல் கண்டனை;

Koviloor Digital Library

தொடுகடலோ எனத் துணுக்குறும் அடியவர்
கலக்கத்து எல்லையுங் கட்செவிச் சுடிகையும்
புலப்பட அகன்றாழ் புதுவகழ் உடுத்த
மஞ்சுகண் துஞ்சுநம் இஞ்சி யுரிஞ்சி
உதயனும் உடல் சிவந்தனனே! அதன்புறம்
நாட்டிய பதாகையில் தீட்டிய மீனம்,
உவாமதிக் குறுமாசு அவாவொடு நக்கும். 80

வெயில் விரி எயிலினம் காக்க இயற்றிய
எந்திரப் படைகளும் தந்திரக் கருவியும்
பொறிகளும் வெறிகொளுங் கிறிகொளும்
எண்ணில....

சுந்தரர் : (எழுந்து) சம்போ! சங்கர! அம்பிகா தேவ!
நன்று மன்னவ! உன்றன் தொல்குலம்
காக்கநீ யாக்கிய இவையெலாங் கண்டுளேம்.
அல்லாது உறுதியுளதோ? சொல்லுதி!

ஜீவ : என்னை! என்னை! எமக்கருள் குரவ!
இன்னும் வேண்டிய தியாதோ? துன்னலர்
வெருவுவர் கேட்கினும்; பொருதிவை
வென்று கைக் 90

கொள்ளுவ ரென்பதும் உள்ளற் பாற்றோ?
ஆயினும் அரணில் உளபுரை நோக்கி
நீயினி இயம்பிடில் நீக்குவன் நொடியே

சுந் : காலம் என்பது கறங்குபோல் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா
மாற்றிடுந் தோற்றம் என்பது மறந்தனை.
வினை தெரிந்து ஆற்றும் வேந்தன் முனமுனம்
ஆயற் பாற்றது அழிவும் அஃதொழி
வாயிலும் ஆமென வையகம் புகலும்.
உன்னையும் உன்குலத் துதித்த நம் மனோன்மணி 100

Koviloor Digital Library

தன்னையும் சங்கரன் காக்க! தயாநிதே!
அன்பும் அறமுமே யாக்கையாக் கொண்ட
நின்புதல் வியையான் காண நேசித்தேன்,
அத்திரு வுறையும் அப்புறம் போதற்கு
ஒத்த தாமோஇக் காலம்? உணர்த்தாய்

ஜீவ : ஆம்! ஆம்! சேவக! அறைதி சென்று
தேமொழிக் கன்னிதன் சேடியர் தமக்கு
நங்குல முனிவர் இங்குளர் எனவே.

[அரசனும், முனிவரும், சீடரும் அப்புறம் போக]

குடி : (தனதுள்) நம்காரியம் ஜயம். எங்காகினுஞ் செல!

[சேவகனை நோக்கி]

சேவக! முனிவர் சிவிகையும் சின்னமும் 110
யாவும் அவ் வாயிலிற் கொணர்தி.

சேவ : சுவாமி!

[குடிலன் முதலியோர் போக]

முதல் நகர்வாசி : கடல்மடை விண்டெனக் குடிலன் கழறிய
நயப்புரை! ஆ! ஆ! வியப்பே மிகவும்!
நாட்டைச் சிறப்பித்து உரைத்தது கேட்டியோ?

2-ம் ந : கேட்டோம், கேட்டோம்.
நாட்டிற் கென்குறை?
விடு! விடு! புராணம் விளம்பினன் வீணாய்.

3-ம் ந : குடிலன் செய்யும் படிறுகள் முனிவர்
அறியா தவரோ? சிறிதா யினும்அவன்
உரைத்தது கருத்திடைக் கொண்டிலர் உவர்த்தே.

1-ம் ந : ஆம்! ஆம்! அவன்முகம் ஏமாறினதே! 120
விரசமா யரசனும் வியர்த்தனன்; கண்டேன்.

2-ம் ந : முனிவர் அங் கோதிய தென்னை? முற்றும்
துனிபடு நெருக்கில் கேட்டிலன்.

Koviloor Digital Library

3-ம் ந : யாதோ –

மனோன்மணி எனப் பெயர் வழங்கினர்,
அறிவைகொல்?

4-ம் ந : வாழ்த்தினர் போலும், மற்றென்?

2-ம் ந : பாழ்த்த இத்
தந்தையிற் பரிவுளர் மனோன்மணி தன்மேல்!

3-ம் ந : ஐயம்மற் றதற்கென்? யார் பரிவுறார்கள்?
வையகத் தவள்போல் மங்கைய ருளரோ?
அன்பே உயிரா அழகே யாக்கையா
மன்பேர் உலகுசெய் மாதவம் அதனால் 130
மலைமகள் கருணையும் தலைமகள் உணர்வும்
கமலையின் எழிலும் அமையவோர் உருவாய்
பாண்டியன் தொல்குலம் ஆகிய பாற்கடல்
கீண்டெழு மதியென ஈண்டவ தரித்த
மனோன்மணி யன்னையை வாழ்த்தார் யாரோ?

2-ம் ந : அன்றியு முனிகட்கு அவள்மேல் வாஞ்சை
இன்று மற்றன்றே. இமையவர்க் காக
முன்னொரு வேள்வி முயன்றுழி வன்னி
தவசிகள் தனித்தனி யவிசு சொரிந்தும்
தழையா தவிதல் கண்டுளம் தளர்ந்து 140
மன்னனும் குடிலனும் துன்னிய யாவரும்
வெய்துயிர்த் திருக்க, விளையாட்டாக
மைதிகழ் கண்ணி பேதை மனோன்மணி
நெய்பெய் போழ்தில் நெடுஞ்சுழி சுழித்து
மங்கிய அங்கி வலமாய்ப் பொங்கிப்
புங்கவர் மகிழ்ச்சியைப் பொறித்தது முதலா
முனிவர் யாவரும் மணியென மொழியில்
தங்கள் தலைமிசைக் கொள்வர், தரணியில்
எங்குளது அவட் கொப்பி யம்புதற் கென்றே 150

Koviloor Digital Library

4-ம் ந : ஒக்கும்! ஒக்கும்! இக்குங் கைக்கும்
என்னும் இன்மொழிக் கன்னிக் கெங்கே
ஒப்புள துரைக்க! ஓ! ஓ! முனிவர்
அவ்வழி யேகுநர் போலும்.
இவ்வழி வம்மின் காண்குதும் இனிதே.

[நகர்வாசிகள் போக]

முதல் அங்கம் : முதற்களம் முற்றிற்று.

Koviloor Digital Library

இடம் : கன்னிமாடம் **காலம் :** எற்பாடு

[அதாவது, முன்மாலைப் பொழுது]

[மனோன்மணியும் வாணியும் கழல் விளையாடி இருக்க]

ஆசிரியத் தாழிசை

மனோ : துணையறு மகளிர்மேற் சுடுகணை தூர்ப்பவன்
அணைகிலன் அரன்முன்னென் றாடாய் கழல்,
அணைந்துநீ றானானென் றாடாய் கழல், 1

[கழல் விளையாடிப் பாட]

வாணி : நீறாயி னாலென்னை நேர்மலர் பட்டபுண்
ஆறா வடுவேயென் றாடாய் கழல்,
அழலாடும் தேவர்க்கென் றாடாய் கழல். 2

மனோ : இருளில் தனித்துறை ஏழையர் தங்கள்மேல்
பொருதலோ வீரமென் றாடாய் கழல்,
போயெரிந் தான்பண்டென் றாடாய் கழல். 3

வாணி : எரிந்தனன் ஆயிலென் என்றென்றுந் தம்முடல்
கரிந்தது பாதியென் றாடாய் கழல்,
கடுவுண்ட கண்டர்க்கென் றாடாய் கழல். 4

மனோ : தெருவில் பலிகொண்டு திரிதரும் அம்பலத்
தொருவர்க் குடைந்தானென் றாடாய் கழல்,
உருவங் கரந்தானென் றாடாய் கழல். 5

வாணி : உருவங் கரந்தாலென்? ஓர்மல ரம்பினால்
அரையுரு வானாரென் றாடாய் கழல்,
அந்நடராஜனென் றாடாய் கழல்.

[பெருமூச்செறிய]

Koviloor Digital Library

நேரிசை ஆசிரியப்பா

மனோ : (சிரித்து) ஏதடி வாணி! ஓதிய பாட்டில்
ஒருபெயர் ஒளித்தனை பெருமூச் செறிந்து?
நன்று! நன்று! நின் நாணம்
மன்றலும் ஆனது போலும்வார் குழலே! 1

வாணி : ஏதம் மாநீ சூது நினைத்தனை?
ஒருபொருளும் யான் கருதினேன் அல்லேன்.
இச்சகத்து எவரே பாடினும்,
உச்சத் தொனியில் உயிர்ப்பெழல் இயல்பே. 2

மனோ : மறையேல்! மறையேல்! பிறைபழி நுதலாய்!
திங்கள் கண்டு பொங்கிய கடலெனச் 10
செம்புனல் பரக்கச் செந்தா மரைபோற்
சிவந்தவுன் கபோலம் நுவன்று, நின்மனக்
களவெலாம் வெளியாக் கக்கிய பின்னர்
ஏதுநீ ஒளிக்குதல்? இயம்பாய்
காதலன் நேற்றுனக்கு ஓதிய தெனக்கே! 3

வாணி : ஐயோ கொடுமை! அம்ம! அதிசயம்!
எருதீன்று எனுமுனம் என்ன கன்றென்று
திரிபவ ரொப்பநீ செப்பினை!
நான்கண் டேநாள் நாலைந் தாமே. 4

மனோ : ஏதடி! நுமது காதல் கழிந்ததோ? 20
காணா தொருபோது இரேம்எனுங் கட்டுரை
வீணாயினதோ? பிழைத்தவர் யாவர்!
காதள வோடிய கண்ணாய்!
ஓதுவாய்; என்பா லுரைக்கற் பாற்றே. 5

வாணி : எதனையான் இயம்புகோ. என் தலை விதியே!
[கண்ணீர் சிந்தி]
வா, விளை யாடுவோம் வாராய் – 6
யார்முறை யாடுதல்? வார்குழல் திருவே;

Koviloor Digital Library

மனோ : ஏனிது! ஏனிது! வாணி! எட்பூ
ஏசிய நாசியாய்! இயம்புக.
மனத்திடை யடக்கலை! வழங்குதி வகுத்தே. 7 30

வாணி : எப்படி யுனக்குயான் செப்புவேன் அம்மா?
தலைவிதி தடுக்கற் பாற்றோ? தொலைய
அனுபவித் தன்றோ அகலும? மனையில்
தந்தையும் கொடியன்; தாயும் கொடியள்!
சிந்தியார் சிறிதும் யான்படும் இடும்பை.
என்னுயிர்க்கு உயிராம் என்கா தலர்க்கும்
இன்னல் இழைத்தனர். எண்ணிய எண்ணம்
முதலையின் பிடிபோல் முடிக்கத் துணிந்தனர்.
யாரொடு நோவேன்? யார்க்கு எடுத்துரைப்பேன்? 40
வார்கடல் உலகில் வாழ்கிலன்;
மாளுவன் திண்ணம்; மாளுவன் வறிதே! 8

மனோ : முல்லையின் முகையும் முருக்கின் இதழும்
காட்டுங் கைரவ வாயாய்! உனக்கும்
முரண்டேன்? பல தேவனுக்கே மாலை
சூடிடில் கேடென்? காதால்
வள்ளையின் அழகெலாம் கொள்ளைகொள் அணங்கே! 9

வாணி : அம்மொழி வெம்மொழி. அம்ம! ஒழிதி!
நஞ்சும் அஞ்சிலேன்; நின்சொல் அஞ்சினேன்.
இறக்கினும் இசையேன், தாமே துறக்கினும்
மறப்பனோ என்னுளம் மன்னிய ஒருவரை? 50
ஆடவ ராகமற் றெவரையும் 10
நாடுமோ நான்உள வளவும்என் னுளமே!

மனோ : வலம்புரிப் புறத்தெழு நலந்திகழ் மதியென
வதியும் வதன மங்காய்! வாணி!
பேய் கொண்டனையோ? பித்தே றினையோ?
நீஎன் நினைத்தனை? நிகரில் குடிலன்
தன்மக னாகிச் சாலவும் வலியனாய்

Koviloor Digital Library

மன்னனுக் கினியனாய் மன்பல தேவனும்
உன்னுளம் கவர்ந்த வொருவனும் ஒப்போ?
பேய்கொண் டனையோ? பேதாய்
வேய்கொள் தோளி! விளம்பாய் எனக்கே. 11 60

வாணி : அறியா யொன்றும், அம்மா! அரிவையர்
நிறையழி காதல் நேரும் தன்மை.
ஒன்றும் கருதியன்று, அவருள்ளம்
சென்று பாய்ந்து சேருதல், திரியும்
காற்றும் பெட்புங் காரணம் இன்மையில்
ஆற்றவும் ஒக்கும் என்றறைவர்.
மாற்றம்என்? நீயே மதிமனோன் மணியே! 12

மனோ : புதுமைநீ புகன்றது, பூவைமார் காதல்
இதுவே ஆம்எனில் இகழ்தற் பாற்றே! 70
காதல் கொள்ளுதற்கு ஏதுவு மிலையாம்!
தான் அறியாப் பேயாட்டந் தானாம்!
ஆயினும் அமைந்துநீ ஆய்ந் துணர்ந்து ஓதி
உண்டோ இவர் தமில் ஒப்பு?
கண்டோ எனுமொழிக் காரிகை யணங்கே! 13

வாணி : ஒப்பு யான் எப்படிச் செப்புவன்? அம்ம!
என்னுளம் போய் இறந்ததுவே
மன்னிய ஒருவன் வடிவுடன் பண்டே. 14

மனோ : பித்தே பிதற்றினை, எத்திற மாயினும்
தாம்தம் உள்ளத்தைத் தடைசெயில் எங்ஙனம், 80
காந்தள் காட்டுங் கையாய்!
தவிர்ந்தது சாடி யோடிடும் வகையே? 15

வாணி : ஈதெலாம் உனக்குயார் ஓதுதற்கு அறிவர்?
மாதர்க் குரியதிக் காதல்
என்பதொன்று அறியும் மன்பதை யுலகே. 16

Koviloor Digital Library

மனோ : மின்புரை இடையாய்! என்கருத்து உண்மையில்
வனத்தி லெய்தி வற்கலை புனைந்து
மனத்தை யடக்கி மாதவம் செயற்கே
சுந்தர முனிவன் சிந்துர அடியும்,
வாரிசம் போல மலர்ந்த வதனமும், 90
கருணை அலையெறிந் தொழுகுங் கண்ணும்
பரிவுடன் முகிழ்க்கு முறுவலும், பால்போல்
நரைதரு தலையும், புரையறு உரையும்,
சாந்தமும் தயையுந் தங்கிய வுடலும்,
மாந்தளிர் வாட்டு மேனி வாணி!
எண்ணுந் தோறுங் குதித்து
நண்ணும் என்னுளம் மன்னிய தவத்தே. 17

வாணி : சின்னாள் செலுமுனம் தேர்குவன் நீசொல்
கட்டுரைத் திண்ணம், மட்டள வின்றிக்
காதல் கதுவுங் காலை 100
ஒதுவை நீயே யுறும் அதன் சுவையே. 18

மனோ : வேண்டுமேற் காண்டி, அவையெலாம் வீண், வீண்.
காதல் என்பது என்? பூதமோ? பேயோ?
வெருட்டினால் நாய்போல் ஓடிடும்; வெருவில்
துரத்தும் குரைக்கும் தொடரும் வெகுதொலை,
அடிக்கடி முனிவர்இங் கணுகுவர். அஃதோ
அடுத்தஅவ் அறையில் யாதோ சக்கரம்
இருத்திடத் திறவுகோல் வாங்கினர்; கண்டனை.
படர்சுழியோடு பாய்திரை காட்டும்
வடதள வுதர வாணீ! மங்காய்! 110
வரும்பொழுது அரும்பொருள் கேட்போம்
வாசிட்டாதி வைராக்கிய நூற்கே. 19

வாணி : நூறாக் கேட்கினும் நூலறிவு என்செயும்?
நீறாகின்றதென் நெஞ்சம், நாளை
என்னுயிர் தாங்குவ தெவ்விதம்?
மன்னவன் கட்டளை மறுப்பதெவ் விதமே? 20

Koviloor Digital Library

மனோ : உன்றன் சிந்தையும் உந்தைதன் கருத்தும்,
மன்றல் வழுதிக்கு உரைக்க வருவதும்,
ஆமையின் புறச்சார்பு அலவன் ஒதுங்குவது
ஏயும் எழிற் கால் வாணீ! 120
நீயுரைத் தனையோ நின்நே சனுக்கே? 21

வாணி : அதுவே அம்ம! என்னுளம் நின்று அறுப்பது
வதுவையும் வேண்டிலர்; வாழ்க்கையும் வேண்டிலர்;
ஒருமொழி வேண்டினர்; உரைத்திலேன் பாவி!
நச்சினேன் எனுமொழிக் கேஅவர்க் கிச்சை.
பிச்சி யான், ஒகோ! பேசினேன் இலையே!
இனியென் செய்வேன்? என் நினைப் பாரோ?
மனைவரா வண்ணம்என் அனையும் உரைத்தாள்.
ஊர்வரா வண்ணம் குடிலனும் ஒட்டினன்,
யார்பால் உரைப்பன்? யார்போய் உரைப்பர்? 130
உயிரே எனக்கிங்கு ஒருதுணை.
அயிரா வதத்தனும் அறியா அமுதே! [அழ] 22

மனோ : அழுங்கலை! அழுங்கலை! அனிச்சமும் நெருஞ்சிலா
அஞ்சிய அடியாய்! அழுங்கலை! அழுதுகண்
அஞ்சனங் கரைந்துநின் கஞ்சனக் கதுப்பும்
கருத்ததே ஏனிது! கருணைக் கடவுள்நின்
கருத்தே முடிப்பக் காண்டி! அஃதோ
மணங் கமழ் கோதையர் வந்தனர்.
அணங்குறல், பொன்னிகர் சுணங்கார் அணங்கே! 23
[செவிலியும் தோழிப் பெண்களும் வர]

செவிலி: தாயே! வந்துபார்; நீயே வளர்த்த 140
முல்லையும் நறுமுகை முகிழ்த்தது. வல்லை
காதலில் கவிழ்வை போலும்!
போதுநீத்து எம்மனை புகுத்தநல் திருவே! 24

Koviloor Digital Library

மனோ : போடி! நீ யாது புகன்றனை? தவத்தை
நாடிநான் இருக்க நணுகுமோ என்மனம்
துச்சமாம் இச்சையால் சோர்வு?
நெருப்பையுங் கறையான் அரிக்குமோ நேர்ந்தே! 25

முதல் தோழி : பொய் அன்று அம்ம! மையுண் கண்ணால்
வந்துநீ நோக்கு, சந்தமார் முல்லை
நிரம்ப அரும்பி நிற்குந் தன்மை. 150
இன்றிரா அலரும் எல்லாம்,
துன்றிரா நிகர்குழல் தோகாய்! வருகவே. 26

[எல்லாரும் போக]

முதல் அங்கம் – இரண்டாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library

இடம் : கொலுமண்டபம் **காலம் :** காலை

[ஜீவகன், குடிலன், நாராயணன் சம்பாஷித்திருக்க]

நிலைமண்டில ஆசிரியப்பா

ஜீவகன் : நமக்கு அதனால் என்? நன்றேயாம் எனத்
தனக்குச் சரியாய் இடத்தில் தங்குக.
எங்கே யாகினுந் தங்குக. நமக்கென்?
ஆவலோடு அமைத்தநம் புரிசையை அவர்மிகக்
கேவலம் ஆக்கினர். அதற்குள கேடென்?
குறைவென்? குடில! கூறாய் குறித்தே.

குடி : குறையான் ஒன்றும் கண்டிலன், கொற்றவ!
நறையார் வேப்பந் தாராய்! நமது இடம்
கூடல் அன்றெனுங் குறையொன்று உளது.
நாடில் அஃதலால் நானொன்று அறியேன். 10
மேலும் தவசிகள் வேடம் தாங்கினோர்
ஆலயம் ஒன்றையே அறிவர். முன்னொரு
கோவில் அமைத்து அதிற் குறைவிலா உற்சவம்
ஓவல் இலாதே உஞற்றுமின் என்றவர்
ஏவினர் அஃதொழித்து இயற்றினம் இப்புரி.
ஆதலால் இங்ஙனம் ஓதினர். அதனை
அழுக்காறு என்றுநாம் ஐயமற்று அறைதல்
ஒழுக்கம் அன்றே, குரு அன்றோ அவர்?

ஜீவ : ஐயரும் அழுக்காறு அடைந்தார். மெய்ம்மை,
கோவில் தானா காவலர் கடமை? 20
கேவலம்! கேவலம்! முனிவரும் ஆ! ஆ!

Koviloor Digital Library

குடி : அதிசயம் அன்றுபூ பதியே! இதுவும்,
துறந்தார் முற்றும் துறந்தவ ரல்லர்.
மறந்தவர் சிற்சில. வறிதே தமக்கு
மனோகரம் ஆகிய சினகரம் ஒன்றில்
உலகுள பொருளெலாம் உய்ப்பினும், பின்னும்
நிலைபெற நிரம்பாது அவர்க்குள ஆசை.
வசிட்டர் முன்னர் வாளாப் புகைத்தனர்
முசிப்பிலா மன்னர் திரவிய முற்றும்!
கௌசிகன் இரக்கவோர் மௌலி வேந்தன் 30
பட்டபாடு உலகில் யாவரே பட்டுளர்?
சிட்ட முனிவர்கள் செயலால் பலகால்
புரந்தரன் தனதுருக் கரந்து திரிந்தனன்.
முனிவரே யாயினும் மனிதரே மீண்டும்!
இச்சை யற்றவர் இச்சகத்து யாவர்?

ஜீவ : ஒவ்வும், ஒவ்வும் நீ யுரைத்தது முற்றும்.

நாராயணன்: (தனதுள்)

ஐயோ, பாவி! அருந்தவ முனிவரைப்
பொய்யன் ஆக்குவன்! புரவலனோ எனில்
எடுப்பார் கைப்பிள்ளை! தடுப்பார் யாரே!

[அரசனை நோக்கி]

நேரிசை வெண்பா

கொல்லா யெனப்பகைஞர் கோற்றொடியார் கும்பிட்டுப்
பல்லிளிக்கக் கண்சிவக்கும் பார்த்திபனே!– பொல்லா
வெறும் எலும்பை நாய்கௌவும் வேளைநீ செல்ல
உறுமுவதேன்? நீயே உரை.

[சேவகன் வர]

நிலைமண்டில ஆசிரியப்பா-தொடர்ச்சி

சேவகன் : மன்னிய கலைதேர் சகடர் வந்தனர். 40

ஜீவ : வரச்சொல் சேவக! (நாராயணனை நோக்கி)
உரைத்த நின் உவமையிற்
சற்றே குற்றம் உள்ளது நாரணா!

Koviloor Digital Library

குடி : (தனதுள்) அரசன் மாறாய்ப் பொருள் கிரகித்தனன்.

[அரசனை நோக்கி]

வெற்றுரை வீணாய் விளம்பினன். அதனிற்
குற்றங் காணக் குறுகுதல் முற்றும்
மணற் சோற்றில்கல் தேடுதல் மானும்!

[சகடர் வர]

ஜீவ : (சகடரை நோக்கி)
சுகமோ யாவரும்? முதிய சகடரே!
மகிழ்வுற உம்மை நோக்கி வெகுநாள்
ஆயின தன்றே?

சகடர் : ஆம், ஆம்! அடியேன்.

ஜீவ : மேயின விசேடமென்? விளம்புதிர்! என்குறை? 50

சக : அறத்தாறு அகலாது அகலிடம் காத்துப்
பொறுத்ததோட் புரவல! உன்குடை நீழற்
பொருந்தும் எங்கட்கு அரந்தையும் உளதோ?
சுகம்இது காறும். அகமகிழ் வுற்றுன்
மந்திரத் தலைவன் குடிலன் மகற்கே
எந்தன் புதல்வி வாணியை வதுவையிற்
கொடுக்க ஓர் ஆசை கொற்றவ! மற்றது
முடிக்கநின் கருணையே முற்றும் வேண்டுவனே.

ஜீவ : சீலம் சிந்தை கோலம் அனைத்தும்
சாலவும் பொருந்தும். சகடரே அதனால் 60
களித்தோம் மெத்த. ஏ! ஏ! குடில!
ஒளித்தது என்நீ யுரையா தெமக்கே?

குடி : ஆவ தாயின் அறிவியாது ஒழிவனோ?

ஜீவ : இடையூறு என்கொல்? இடியேறு அன்ன
படையடு பலதேவன்தான் ஏதோ
விரும்பினன் போலும் வேறோர் கரும்பே!

குடி : இல்லையெம் இறைவ! எங்ஙனம் உரைக்கேன்?
சொல்லிற் பழிப்பாம். சகடரே சொல்லுக.

ஜீவ : என்னை? சகடரே! இடையூறு என்னை?

Koviloor Digital Library

சக : பரம்பரை யாயுன் தொழும்புபூண் டொழுகும் 70
அடியேன் சொல்பழு தாயின தில்லை.
முடிவிலாப் பரிவுடன் வளர்த்தஎன் மொய்குழல்
ஒருத்தியே யென்சொல் வியர்த்தம் ஆக்குவள்.
ஒருதலை யாய்இம் மணத்திற்கு உடன்படாள்.
விரிதலைப் பேய்போல், வேண்டிய விளம்பியும்
ஓராள் ஒன்றும், உணராள் தன்நயம்;
நேராள் ஒருவழி; பாராள் நெறிமுறை;
என்ன யான் செய்கேன்? இதன்மேல் எனக்கும்
இன்னல் தருவதொன் றில்லை. தாதையர்
மாற்றங் கேளா மக்கள் கூற்றுவர் 80
எனுமொழி யெனக்கே அனுபவம் இறைவ!
உரைத்தஎன் கட்டுரை பிழைத்திடப் பின்உயிர்
தரித்திரிந்து என்பயன்? சாவோ சமீபம்.
நரைத்த தென்சிரம்; திரைத்த தென்னுடல்;
தள்ளருங் காலம்; பிள்ளையும் வேறிலை.
என்னுரை காத்துநீ யிம்மண முடிக்க
மன்னவ! கிருபையேல் வாழ்த்தும் இவ்வயின்.
இல்லையேல் முதியஎன் இல்லாளுடன் இனி
[கண்ணீர் துளிக்க]
செல்ல விடையளி. செல்லுதுங் காசி.

ஜீவ : ஏனிது சகடரே! என்கா ரியம் இது 90
தேன்மொழி வாணி செவ்விய குணத்தாள்,
காணில் உரைப்பாம். வீண் இவ்அழுகை.

நாராயணன் : (தனதுள்) பாதகன் கிழவன் பணத்திற்காக
ஏதும் செய்வன்; இறைவனோ அறியான்;
ஒதுவம் குறிப்பாய்; உணரில் உணர்க.
[அரசனை நோக்கி]

Koviloor Digital Library

நேரிசை வெண்பா

மாற்றலர்தம் மங்கையர்க்கு மங்கலநாண் அங்கவிழ
ஏற்றியநாண் விற்பூட்டும் ஏந்தலே–சோற்ற தற்காய்த்
தன்மகவை விற்ற அரிச்சந்திரனும் உன்அவையில்
என் மகிமை யுள்ளான் இனி.

நிலைமண்டில ஆசிரியப்பா - தொடர்ச்சி

ஜீவ : தனிமொழி யென்னை?

நாரா : சற்றும் பிசகிலை.
நீட்டல் விகாரமாய் நினையினும் அமையும்.

ஜீவ : காட்டுவ தெல்லாம் விகாரமே காணாய்
கிழவனின் அழுகை.

நாரா : சில வருடந்தான்.
நெடுநாள் நிற்கும் இளையவர் அழுகை. 100

ஜீவ : விடு, விடு. நின்மொழி யெல்லாம் விகடம்.
[நாராயணன் போக]
(சடகரை நோக்கி) அறிவிர்கொல் அவளுளம்?

சக :
சிறிதுயான் அறிவன்;
திருநட ராஜன் என்றொருவன் இங்கு உள்ளான்;
பொருவரும் புருடன்மற் றவனே யென்று அவள்
சொல்வது கேட்டுளர் சிறிசில தோழியர்.

குடி : (அரசனை நோக்கி)
நல்லது அப்படியே நடக்கிலென்? இவர்க்கும்
பொல்லா முரண்டேன்?

சக : (குடிலனை நோக்கி) போம்! போம்! உமது
குழந்தையேல் இங்ஙனம் கூறீர்! முற்றும்,
இழந்திடவோ, எனக்கு இத்தனை பாடு?
பூவையை வளர்த்துப் பூனைக்கு ஈயவோ? 110

Koviloor Digital Library

(அரசனை நோக்கி) காவலா! அவனைப்போல
யான் கண்டிலன்
சுத்தமே பித்தன்; சொல்லுக்கு அடங்கான்;
தனியே உரைப்பன்; தனியே சிரிப்பன்;
எங்கேனும் ஒருபூ இலைகனி யகப்படில்
அங்கங்கு அதனையே நோக்கி நோக்கித்
தங்கா மகிழ்ச்சியில் தலைதடு மாறுவன்;
பாற்கலும் அவனுக்கு அகப்படாத் திரவியம்;
ஆயிரந் தடவை யாயினும் நோக்குவன்.
பேயனுக்கு அளிக்கவோ பெற்றனம் பெண்ணை?

ஜீவ : ஆமாம்! யாமும் கண்டுளேம் சிலகால் 120
நின்றால் நின்ற படியே; அன்றி
இருக்கினும் இருப்பன் எண்ணிலாக் காலம்;
சிரிக்கினும் விழிக்கினும் நலமிலை தீயதே.
அவன் அன்றோமுன் அஞ்சைக் களத்தில்.....

குடி : அவன்தான்! அவன் தான்! அழகன்! ஆனந்தன்!

ஜீவ : அழகிருந்து என்ன பயன்? தொழிலெலாம் அழிவே;
எங்கு அவன் இப்போது?

குடி : இங்குளன் என்றனர்
சிதம்பரத் தனுப்பினேன்; சென்றிலன் நின்றான்.
இதம்தரு நின்கட் டளை எப்படியோ!

ஜீவ : மெத்தவும் நன்மை; அப்படியே செய். 130

குடி : சித்தம்; ஆயினுஞ் செல்கிலன்; முனிவர்
பிரியன் ஆதலினால் பெயர்ந்திலன் போலும்!

ஜீவ : சரியல; இராச்சிய தந்திரத்து அவர்க்கென்?
(சகடரை நோக்கி) நல்லது சகடரே! சொல்லியபடியே
மொழிகுவம் வாணிபால்; மொய்குழல் சிறுமி
அழகினில் மயங்கினள்; அதற்கென்? நும்மனப்
படியிது நடத்துவம்; விடும் இனித் துயரம்.

சக : இவ்வுரை யொன்றுமே என்னுயிர்க்கு உறுதி.

Koviloor Digital Library

திவ்விய திருவடி வாழுக சிறந்தே!

[சகடர் போக, செவிலி வர]

ஜீவ : (செவிலியின் முகம் நோக்கி)

என்னை இவள் முகம் இப்படி இருப்பது? 140

தோற்றம் நன் றன்றே!

செவிலி : நேற்றிரா முதலா –

ஜீவ : பிணியோ என் கண்மணிக்கு?

செவி : பிணியா

யாதும் ஒன்று இல்லை; ஏதோ சிறுசுரம்

ஜீவ : சுரம்! சுரம் ஓ ஓ! சொல்லுதி யாவும்?

அரந்தை யொன்று அறியாள்! ஐயோ! விளைந்தவை

உரையாய் விரைவில்; ஒளிக்கலை யொன்றும்.

வந்தவா றென்னை? நடந்தவா றென்னை?

செவி : அறியேம் யாங்கள், ஐய! அம் மாயம்

நறவுமிழ் நளினம் பொலிவு இழந்திருப்ப

நம்மனை புகுந்த செல்வி. எம்முடன் 150

மாலையி லீலைச் சோலை உலாவி

அமுதம் உற்றிருக்கும் குமுதவாய் விண்டு

நயவுரை பலவும் குயிலின் மிழற்றி,

மலைய மாருதம் வந்துவந்து உந்த

நிலவொளி நீந்திநம் நெடுமுற் றத்துப்

பந்துவந்தாடி, மேல் மந்திரம் அடைந்தே

துணைபுணர் அன்னத் தூவி யணைமிசைக்

கண்படும் எல்லை–கனவோ நினைவோ –

'நண்ப! என்னுயிர் நாத' என்று ஏங்கிப் 160

புண்படு மவள்போல் புலம்புறல் கேட்டு

துண்ணென யாம்துயில் அகற்றப் புக்குழி,

குழலுஞ் சரியும்; கழலும் வளையும்;

மாலையும் கரியும்; நாலியும் பொரியும்;

Koviloor Digital Library

விழியும் பிறழும்; மொழியும் குழறும்;
கண்தழல் எரியும்; நெட்டுயிர்ப்பு எறியும்;
நயன நீர் மல்கும்; சயனமேல் ஒல்கும்;
இவ்வழி அவ்வயிற் கண்டு கைநெரியா,
தெய்வம் நொந்தேம்; செய்கடன் நேர்த்தேம்;
அயினிநீர் சுழற்றி அணிந்தேம் பூதி;

மயிலினை மற்றோர் அமளியிற் சேர்த்துப் 170
பனிநீர் சொரிந்து நனிநேர் சாந்தம்
பூசினேம் : சாமரை வீசினேம்; அவையெலாம்,
எரிமேல் இட்ட இழுதாய் அவட்கு
வரவர மம்மர் வளர்க்கக் கண்டு
நொந்து யாம்இருக்க, வந்தன வாயசம்
'கா கா இவளைக் கா' எனக் கரைந்த;
சேவலுந் திகைத்துத் திசைதிசை கூவின?
கங்குல் விடிந்தும் அங்குஅவள் துயரம்
சற்றும் சாந்தம் உற்றிலது: அதனால்
அரச! நீ அறியில எம்சிரசுஇரா என்றே 180
வெருவி யாங்கள் விளைவது உரைக்கும்
நிமித்திகர்க் கூஉய்க் கேட்டோம் நிமித்தம்;
பெண்ணை அந்தார் சூடிட நுந்தம்
பெண்ணை அந்தார் சூட்டெனப் பேசினர்;
எண்ணம் மற்றுஅவர்க்கு யாதோ அறியேம்;
பனம்பூச் சூடியும் முனம்போல வேசுரம்;
ஏதும் அறியாப் பேதை! நேற்றுத்
தவம்செய ஆசை யென்றவள் தனக்குக்
காதல்நோய் காண ஒரேதுவும் இல்லை.
எம்தாய் இருக்கும் நிலைமை யினிநீ 190
வந்தே காண்குதி மன்னவர் ஏறே!

: ஆ! ஆ! நோஇதுகாறும் ஒன்றறிகிலள்!
இதுவென் புதுமை? என்செய்கோ யான்?

: தவஞ்செய ஆசை யென்றுதாய் நவின்ற
வாக்கு நோக்கின், முனிவர் மந்திரச்

Koviloor Digital Library

செய்கையோ என்றோர் ஐயம் ஜனிக்கும்;
நேற்றங்கு அவட்குஅவர் சாற்றிய மாற்றம்
அறியலாந் தகைத்தோ?

ஜீவ : வறிது அவ் ஐயம்
மொழியொரு சிறிதும் மொழிந்திலர்; கண்டுழி
அழுதனர்; அழுதாள் உடன்நம் அழுதும்; 200
ஆசி பேசியங்கு அகலுங் காலை
ஏதோ யந்திரம் எழுதிவைத் திடவோர்
அறையுடன் அங்கணம் திறவுகோ லோடு
தமக்கென வேண்டினர்; அளித்தனம் உடனே.
நமக்கு அதினாலென்? நாம் அறியாததோ!
என்னோ அறியேன் இந்நோய் விளைவு?

[ஜீவகனும் செவிலியும் போக]

குடி : (தனதுள்) யந்திரத் தாபனமோ அவர் எண்ணினர்?
அவ்வளவு அறிவிலாரோ முனிவர்?
அவ்வள வேதான்; அன்றியென்? ஆயினும்,
எத்தனை பித்தன் இவ்அரசன்! பேதையின் 210
இத்திறம் காமம் என்பதிங்கு அறியான்;
உரைக்குமுன் கருதுவம் நமக்குறு நலமே.

[குடிலன் போக]

முதல் அங்கம் - மூன்றாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library

இடம் : கன்னிமாடம் **காலம் :** மாலை

[மனோன்மணி சயனித்திருக்க; ஜீவகன், வாணி, செவிலி சுற்றி நிற்க]

நேரிசை ஆசிரியப்பா

ஜீவ : உன்அன்பு இதுவோ? என்னுயிர் அமிழ்தே!
உனக்குறு துயரம் எனக்கு உரையாததென்?
விரும்பிய தென்என் றுரைக்கில் விசும்பில்
அரும்பிய அம்புலி யாயினுங் கொணர்வன்!
வருத்துவ தென்என வழங்கின் மாய்ப்பன்
உறுத்துங் கூற்றுவ னாயினும் ஒறுத்தே
தாய்க்கும் ஒளித்த சூலோ? தையால்!
வாய்க்கும் ஒளித்த உணவோ? மங்காய்!
ஏதாயினும் எனக்குஓதா துளதோ?
பளிங்கும் பழித்த நெஞ்சாய்! உனக்கும் 10
களங்கம் வந்த காரணம் எதுவோ?
பஞ்ச வணக்கிளி செஞ்சொல் மிழற்றி
இசையது விரித்தோர் பிசித மரமேல்
இருந்து பாடும்எல்லை, ஓர் வானவன்
திருந்திய இன்னிசை அமுதிற் செப்பிப்
போயது கண்டு, சேயதோர் போந்தையில்
தனியே பறந்துபோய்த் தங்கி, அங்குஅவன்
பாடிய இசையே கூவிட உன்னி
நாடி நாடிப் பாடியும் வராது,
வாடி வாயது மூடி, மௌனமாய் 20
வருந்தி இருந்ததாய்க் கண்ட கனாவும்
நேற்றன்றோ எனக்கு இயம்பினை! நெஞ்சில்

Koviloor Digital Library

தோன்றிய தெல்லாம் இங்ஙனம் சொல்லும்
பேதாய்! இன்றெனக்கு என்னோ
ஓதாய் உன்றன் உளமுறு துயரே? 1

செவிலி : உன்பிதா உலகாள் வேந்தன் அன்பாய்ச்
சொல்லா யென்னில் துப்பிதழ் துடித்துச்
சொல்ல உன்னியுஞ் சொல்லாது அடக்கில்
யாம் படுதுயரம் அறிந்தும்,
காம்படு தோளீ! கருதாய் போன்மே. 2 30

ஜீவ : ஐயோ இதற்கு என் செய்வேன்! ஆ! ஆ!
பொய்யோ பண்ணிய புண்ணியம் அனைத்தும்?
பிள்ளை யில்லாச் செல்வம் கள்ளியிற்
சோறே போலப் பேரே யன்றி
வேறே யென்பயன் விளைக்கும் என்றுனி
நெடுநாள் நைந்து நொந்து, கெடுவேன்!
பட்ட பாடெல்லாங் கெட்டுப் பரிதி
வந்தவழி யகலும் பனியெனச் சுந்தர
முனிவன் முயன்ற வேள்வியாற் பிள்ளைக்
கனியென உனையான் கண்டநாள் தொட்டு, 40
நின்முகம் நோக்கியும் நின்சொற் கேட்டும்
என்மிகை நீக்கி யின்பம் எய்தி,
உன்மன மகிழ்ச்சிக்கு உதவுவ உஞற்ற
உயிர்தரித் திருந்தேன், செயிர்தீர் அறமும்
வாய்மையும் மாறா நேசமுந் துய்மையுந்
தங்கிய வுன்னுளம் என்னுளந் தன்னுடன்
எங்கும் கலந்த இயல்பால் அன்றோ
மறந்தேன் உன்தாய் இறந்த பிரிவும்!
உன்னை யன்றியென் னுயிர்க்கு உலகில்,
எதுவோ உறுதி யியம்பாய்? 50
மதிகுலம் விளங்க வரும்மனோன் மணியே! 3

மனோ : (கண்ணீர் துளும்பி)
எந்தையே! எனது அன்பினுக்கோர் இழுக்கு
வந்த தன்று. மேல் வருவது மிலை, இலை;

Koviloor Digital Library

உரைக்கற் பாற்றதொன் றில்லை.
உரைப்பது எப்படி யான் உணராது ஒழியிலே? 4

ஜீவ : குழந்தாய்! என்குலக் கொழுந்தே! அழாய் நீ;
அழுவையேல் ஆற்றேன்; நீயழல் இதுவரைக்
கண்டது மிலை; யான் கேட்டது மிலையே
பெண்களின் பேதைமை யென்னே! தங்களைப்
பெற்றோர் உற்றார் களுக்கும் தமக்கும் 60
விழுமம் விளைத்துத் தாமே யழுவர்.

[வாணியை நோக்கி]

என்னே அவர்தம் ஏழைமை! மின்னேய்
மருங்குல் வாணீ! வாராய் இப்புறம்.
அருங்கலை யாய்ந்தநின் தந்தைசொல் மதியும்
உன்புத் தியும்உகுத்து உழல்வதென் வம்பில்?
நலமே சிறந்த குலமே பிறந்த
பலதே வனாம்ஒரு பாக்கிய சிலாக்கியன்
தன்னைநீ விடுத்துப் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னை? சீச்சீ!
நகையே யாகும் நீசெயும் வகையே! 5 70

வாணி : அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே!
நிகழும்என் சிறிய நினைவெலாம் விரித்து
விநயமாய் நின்பால் விளம்ப எனது
நாணம் நாவெழாது அடக்கு மாயினும்
பேணி யொருமொழி பேசுவன்;
நேசமில் வதுவை நாசகா ரணமே. 6

ஜீவ : புதுமைநீ புகன்றாய்! வதுவைமங் கையர்க்குப்
பெற்றார் ஆற்றுவர்; ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு
வாழ்வது கடமை; அதனில் 80
தாழ்வது தகுதியோ? தருமமோ? சாற்றே. 7

வாணி : கற்பனைக்கு எதிராய் அற்பமும் மொழியேன்;
ஆயினும் ஐயமொன் றுண்டு; நேயமும்
ஆக்கப் படும்பொரு ளாமோ? நோக்கில்

Koviloor Digital Library

துன்பமே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்குஅவர் அங்கம் குளிரத்
தாருவாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலில்
நேரும் தாகம் நீக்குவான் நிமல 90
ஊற்றா யிருந்த அவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாய்அவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாய்அவர் ஊக்கம் உயர்த்தியும்,
இவ்விதம் யாரையும் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவு கோலாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்,
இல்லறம் என்பதன் நல்லுயிரே யாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில் 100
இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றாம் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப் படும்பொருள் ஆமோ?
வீக்கிய கழற்கால் வேந்தர் வேந்தே! 8

ஜீவ : ஆமோ அன்றோ யாம்அஃது அறியேம்.
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி; மிஞ்சலை!
மங்கையர் என்றும் சுதந்தர பங்கர்;
பேதையர்; எளிதிற் பிறழ்ந்திடும் உளத்தர்.
முதியவுன் தந்தை மதியில்உன் மதியோ 110
பெரிது?மற் றவர்தமில் உன்நயம் பேண
உரியவர் யாவர்? ஓதிய படியே
பலதே வனுக்கே யுடன்படல் கடமை.

வாணி : இலையெனில்? –

ஜீவ : கன்னியாய் இருப்பாய் என்றும்.

Koviloor Digital Library

வாணி : சம்மதம்.

ஜீவ : கிணற்றில் ஓர் மதிகொடு சாடில்
எம்மதி கொண்டுநீ எழுவாய்? பேதாய்!
கன்னியா யிருக்கில் உன்அழகு என்னாம்?
அரைக்கில் அன்றோ சந்தனம் கமழும்?

வாணி : விரைதரு மோசிறு கறையான் அரிக்கில்?

ஜீவ : நானே பிடித்த முயற்கு மூன்றுகால்
ஆனால் எங்ஙனம்? 120

வாணி : அரிவையர் பிழைப்பர்?

[சேடி வர]

சேடி : சுந்தர முனிவர் வந்தனர் வாயிலில்;
காலம் நோக்கினர்.

ஜீவ : சாலவும் இனிதே;
ஆசனம் கொணர்தி.
(வாணியை நோக்கி) யோசனை வேண்டாம்;
எப்படி யாயினும் சகடர் சொற்படி
நடத்துவம் மன்றல்; நன்குநீ யுணர்தி;
ஆயினும் தந்தனம் ஐந்துநாள்;
ஆய்ந்து அறிவிப்பாய் வாய்ந்தஉன் கருத்தே. 9

வாணி : இறக்கினும் இறைவ! அதற்குயான் இசையேன்.
பொறுத்தருள் யான் இவண் புகன்ற
மறுத்துரை யனைத்தும், மாற்றலர் ஏறே! 10 130

[சுந்தர முனிவர் வர]

ஜீவ : (முனிவரைத் தொழுது)
வணங்குவதும் உன்றன் மலர்ங்கமழ் சேவடி
இருந்து அருளுதி எம் இறைவ!
பரிந்துநீ வந்தது எம் பாக்கியப் பயனே. 11

சுந்த : தீதிலை யாதும்? க்ஷேமமே போலும்.

[மனோன்மணியை நோக்கி]

Koviloor Digital Library

ஏதோ மனோன்மணி! ஓதாய்
வேறுபா டாய்நீ விளங்கு மாறே 12

மனோ : கருணையே யுருவாய் வரு முனீசுரரே!
(வணங்கி) எல்லாம் அறியும் உம்பால்
சொல்ல வல்லதொன் றில்லை. சுகமே 13 140

செவிலி : (மனோன்மணியை நோக்கி)
கரும்பே, யாங்கள் விரும்புங் கனியே!
முனிவர் பாலும்நீ யொளிப்பையேல் இனியிங்கு
யார்வயின் உரைப்பாய்! ஐயோ! இதுவென்?
[முனிவரை நோக்கி]
ஆர்வமும் ஞானமும் அணிகல னாக்கொள்
தேசிக வடிவே! செப்புமாறு அறிகிலம்
மாசறு மனோன்மணி தன்னுரு மாறி
நேற்றிரா முதலாத் தோற்றுந் தோற்றம்.
மண்ணாள் மேனியும்; உண்ணாள் அமுதும்;
நண்ணாள் ஊசலும்; எண்ணாள் பந்தும்;
முடியாள் குழலும்; படியாள் இசையும்; 150
தடவாள் யாழும்; நடவாள் பொழிலும்;
அணியாள் பணியும்; பணியாள் ஏவலும்;
மறந்தாள் கிளியும்; துறந்தாள் அனமும்;
தூங்குவள் போன்றே ஏங்குவள்; எளியை!
நோக்குவள் போன்றே நோக்குவள் வெளியை;
கேட்டும் கேட்கிலள்; பார்த்தும் பார்க்கிலள்;
மீட்டுங் கேட்பள்; மீட்டும் பார்ப்பள்;
தனியே இருப்பள்; தனியே சிரிப்பள்;
விழிநீர் பொழிவள்; மெய்விதிர்த்து அழுவள்;
இங்ஙனம் இருக்கில் எங்ஙனம் ஆமோ? 160
வாணியும் யானும் வருந்திக் கேட்டும்
பேணி யிதுவரை யொருமொழி பேசிலள்.
அரசன் கேட்டும் உரைத்திலள், அன்பாய்

Koviloor Digital Library

முனிவ! நீ வினவியும் மொழியா ளாயின்
எவருடன் இனிமேல் இசைப்பள்?
தவவுரு வாய்வரு தனிமுதற் சுடரே! 14

சுந்த : (ஜீவகனை நோக்கி) குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னியர் உளமும் வாக்கும்
புளியம் பழமும் தோடும் போலாம்.
காதல் வெள்ளம் கதித்துப் பரந்து 170
மாதர் உள்ளம் வாக்கெனும் நீண்ட
இருகரை புரண்டு பெருமூச்சு எறியில்,
எண்ணம் எங்ஙனம் நண்ணும் நாவினை?
தாதை அன்பு போதா தாகும்
காலம் கன்னியர்க்கு உளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும், தழைத்துப்
படர்கொடி பருவம் அணையில், நட்ட
இடமது துறந்து நல்லின்பம் எய்த
அருகுள தருவை அவாவும், அடையின்
முருகவிழ் முகையும் சுவைதரு கனியும் 180
அகமகிழ்ந்து அளித்து மிகவளர்ந்து ஓங்கும்;
இலையெனில் நலமிழந்து ஒல்கும். அதனால்
நிசிதவேல் அரசா டவியில்
உசிதமாம் ஒருதரு விரைந்துநீ யுணரே. 15

ஜீவ : எங்குல குருவே! இயம்பியது ஒவ்வும்.
எங்களது இக்கொடிக்கு இசைந்த
பொங்கு எழில் பொலியும் புரையறு தருவே? 16

சுந்த : உலகுள மற்றை யரசெலாம் நலமில்
கள்ளியும் கருவேற் காடுமாய் ஒழிய
சகமெலாம் தங்க நிழலது பரப்பித் 190
தொலைவிலாத் துன்னலர் வரினும் அவர்தலை
இலையெனும் வீரமே இலையாய்த் தழைத்து,
புகழ்மணம் கமழும் குணம்பல பூத்து,
துனிவரும் உயிர்க்குள துன்பம் துடைப்பான்

Koviloor Digital Library

கனியுங் கருணையே கனியாக் காய்த்து,
தருமநாடு என்னும் ஒருநா மங்கொள்
திருவாழ் கோடாஞ் சேரதே சத்துப்
புருடோத் தமன்எனும் பொருவிலாப் புருடன்,
நீங்கில் இல்லை நினது
பூங்கொடி படரப் பாங்காந் தருவே! 200

ஜீவ : நல்லது! தேவரீர் சொல்லிய படியே,
இடுக்கண் களைந்த இறைவ!
நடத்துவன் யோசனை பண்ணி நன்றே.

சுந்த : யோசனை வேண்டிய தன்று. நடேசன்
என்றுளன் ஒருவன்; ஏவில்,
சென்றுஅவன் முடிப்பன் மன்றல் சிறக்கவே.

ஜீவ : கெடலறு சூழ்ச்சிக் குடிலனோடு உசாவி...

சுந்த : (எழுந்து) அரகர! குருபர! கிருபா நிதியே!
காவாய் காவலன் ஈன்ற
பாவையை நீயே காவாய் பசுபதே! 210

[சுந்தர முனிவர் போக]

ஜீவ : தொழுதோம், தொழுதோம் செவிலி! அவ்வறைக்கு
எழுதுங் கருவிகள் கொணராய்;
பழுதிலாக் குடிலற்கு உணர்த்துவம் பரிந்தே.

[அறைக்கு ஜீவகன் முதலியோர் போக]

முதல் அங்கம் - நான்காம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : குடிலன் மனை **காலம் :** மாலை

[குடிலன் உலாவ]

இணைக்குறள் ஆசிரியப்பா

குடிலன் : (தனிமொழி)

புத்தியே சகல சக்தியும்! இதுவரை
நினைத்தவை யனைத்தும் நிறைவே றினவே.
உட்பகை மூட்டிப் பெட்புற் றிருந்த
மதுரையாம் முதுநகர் விடுத்த மன்னனைப்
புதியதோர் பதிக்குக் கொணர்ந்து புரிசையும்
கட்டுவித் தோம்நம் இட்டமாம் வகையே.
நாமே அரசும் நாமே யாவும்;
மன்னவன் நமது நிழலில் மறைந்தான்;
பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம்.
மதுரையை நெல்லை இனிமேல் வணங்குமோ? 10

இதுதனக்கு இறைவன் இறக்கில் யாரே
அரசர் ஆகுவர்' – [மௌனம்]
புரவலன் கிளைஞர் புரிசையைக் கேட்கினும்
வெருளுவர்; வெல்லார். ஆயினும் –
முழுதும் நம்மையே தொழும்வகை இலையோ;
கருவியுங் காலமும் அறியில் அரியதென்?
ஆ! ஆ! அயர்த்தோம்; அயர்த்தோம்!
மயக்கம் மனோன்மணி கொண்டதை முற்றும்;
அயர்த்தோம்; ஆ! ஆ! ஆயிழை ஒருவனைக்
கண்டு காமம் கொண்டவள் அல்லள். 20

Koviloor Digital Library

பருவம் வருதலால் பற்றல் விழைந்தனள்.
அருகுளது எட்டியே யாயினும் முல்லைப்
படர்கொடி படரும், பலதேவனை யவள்
இடமே பலமுறை ஏவில் உடன்படல்
கூடும் கூடில் என் கூடா?
யாவன் அஃதோ வருமொரு சேவகன்?

[சேவகன் வர]

சேவகன் : ஜய! ஜய! விஜயீ பவகுடி லேந்திரா!

[திருமுகம் கொடுக்க]

குடி : (வாசித்து நோக்கி)
நல்லது அப்புறம் நில்லாய்; ஓ! ஓ!
சொல்லியது ஆர்கொல்? சுந்தரனே யாம்.

[சேவகன் ஒருசாரிருந்து தூங்க]

அடுத்தது போலும் இம்மணம், அவசியம் 30
நடக்கும். நடக்கின்என்? நமக்கது நன்றே;
அரசர்கட்கு ஆயுள் அற்பம் என்றறைவர்,
பிரியமாந் தன்மகட் பிரிந்து வெகுநாள்
வாழான் வழுதி, வஞ்சி நாட்டார்க்குத்
தாழார் இந்நாட் டுள்ள ஜனங்களும்,
அதுவும் நன்றே. – ஆயினும்
கால தாமதஞ் சாலவும் ஆகும்;
வேறொரு தந்திரம் வேண்டும், ஆ! ஆ!
மாறன் மாண்டான்; மன்றலும் போனது
சேரன் இறுமாப் புடையதோர் வீரன் 40
ஆமெனப் பலரும் அறைவர். அதனால்
நாம்அவன் பால்விடுந் தூதுவர் நலம்போல்
மெள்ள அவன்றன் செருக்கினைக் கிள்ளிற்
படைகொடு வருவன்; திண்ணம் பாண்டியன்
அடைவது அப்போது யாம் அறிவம்,
போர்வந் திடில்இவண் நேர்வந்திடும் எலாம்
யார் இறவார்கள்? யார் அறிவார்கள்?
முடிதன் அடிவிழில் யாரெடுத்து அணியார்?
அரச வமிசக் கிரமம் ஓரில்

Koviloor Digital Library

இப்படி யேமுத லுற்பவம் இருக்கும். 50
சிலதலை முறையாப் பலவரு டம்செலில்
இந்துவில் இரவியில் வந்தோர் எனவே,
மூட உலகம் மொழியும், யாரே
நாடுவர் ஆதியை? நன்று நன்றிது!
தோடம்! – சுடு! சுடு!
தீது நன்றென ஓதுவ எல்லாம்
அறியார்க்கு அறையும் வெறுமொழி யலவோ?
பாச்சி பாச்சி யென்றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி யென்பது போலாம்;
மன்னரை உலகம் வணங்கவும் பார்ப்பார்க்கு 60
அன்னம் கிடைக்கவும் அங்ஙனம் அறைந்து
மதியிலாரை மயக்குவர் வஞ்சமாய்.
அதனால் நமக்கென்? அப்படி நினைக்கில்
இதுவரை இத்தனை நன்மையெப் படிவரும்?
பார்க்குதும் ஒருகை. சுந்தரன் யந்திரம்
காக்கும் வகையும் காண்போம்; சுவான
சக்கரங் குக்கலைத் தடுத்திடும் வகையே
யந்திரத் தந்திரம் இருப்பதென்று அறியான்.
பித்தன் மெத்தவும்! நமக்குஇனி யிதுவே
உத்தம உபாயம் ஒகோ! சேவக!

70

சித்தம் மெத்தக் களித்தோம் இந்த
மணவுரை கேட்டென மன்னன் துணியப்
பாவனை பண்ணுவோம் ஏ! ஏ! சேவக!

[சேவகன் எழுந்துவர]

இன்றுநாம் உற்றஇவ் இன்பம் போல
என்றும் பெற்றிலம். இணையறு மாலை
இந்தா! தந்தோம். இயம்பாய்,
வந்தோம் விடியுமுன் மன்னவைக் கென்றே.

நேரிசை ஆசிரியப்பா

சேவ : வாழ்க! வள்ளால்! நின்உதா ரம்போல்
ஏழுல கெவற்றிலும் உண்டோ?

Koviloor Digital Library

வாழ்க!எப் போதும் மங்கலம் வரவே. 80

குடி : நல்லது! விரைந்து செல்வாய்! நொடியில்.

[சேவகன் போக]

(தனிமொழி)

மதியிலி! என்னே மனிதர் மடமை!
இதுவும் உதாரமாய் எண்ணினன்; இங்ஙனம்
தருமம் தானம் என்று உலகறியும்
கருமம் அனைத்துஞ் செய்பவன் கருத்தைக்
காணின் நாணமாம்; அவரவர் தமக்கா
எண்ணிய எண்ணம் எய்துவான் பலவும்
பண்ணுவர் புண்ணியம் போல. எல்லாந்
தந்நயம் கருதி யன்றித் தமைபோற்
பின்னொரு வனையெணிப் பேணுவர் உளரோ? 90

புண்ணியஞ் சீவகா ருண்ணியம் எனப்பல
பிதற்றுதல் முற்றும் பித்தே. அலதேல்
யாத்திரை போன நூற்றுவர். சோறடு
பாத்திரந் தன்னிற் பங்கு பங்காக
ஒருவரை யொருவர் ஒளித்துப் பருமணல்
இட்ட கதையாய் இருக்குமோ! அவ்வளவு
எட்டுமோ உலகின் 'கட்டைச் சிறுமதி'? –
ஆயினும், அரசனைப் போல் இலை
பேயர் பெரிய மேதினி எங்குமே!

முதல் அங்கம்: ஐந்தாம் களம் முற்றிற்று.

கலித்துறை

சீரும் வதுவையுஞ் சேர்முறை செப்பியுஞ் சீவகன்தான்
போரும் நிதனமும் புந்திசெய் மந்திரம் போற்றினனே
சாருந் தனுகர ணங்களைத் தானெனுந்தன்மை வந்தால்
யாரும் அருள்வழி நிற்கிலர் மாயை யடைவிதுவே.

முதல் அங்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

இடம்: அரண்மனை **காலம்:** வைகறை

[ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை]

நேரிசை ஆசிரியப்பா

ஜீவ : சொல்லிய தெல்லாஞ் சுந்தர முனிவரே
புருடோத் தமன்எனும் பொறையனே நமக்கு
மருமா னாக மதித்ததும் அவரே
என்றுங் குழந்தை யன்றே! மன்றல்
விரைவில் ஆற்ற வேண்டும்; நாம்இது
வரையும் மறதியா யிருந்தது தவறே
யாம்இனித் தாமத மின்றிஇம் மணமே
கருமமாய்க் கருதி முடிப்பாம்;
வருமுன் கருதும் மந்திர அமைச்சே!

குடிலன் : இறைவ! இதுகேட்டு எனக்குள் இன்பம் 10
அறைவதுஎப் படியான்? அனேக நாளாய்ப்
பலமுறை நினைத்த துண்டுஇப் பரிசே;
நலமுறப் புரிசை நன்கு முடியும்
அற்றம் நோக்கி யிருந்தேன் அன்றிச்
சற்றும் மறந்தேன் அன்று; தனியே
கட்டளை பிறந்துங் கடிமணந் தன்னை
விட்டுள தோஇனி வேறொரு காரியம்?
புருடோத்தமன் எனும் பொருநைத் துறைவன்
காண்டகும் ஆண்டகை யென்றும், ஞானம்

Koviloor Digital Library

மாண்ட சிந்தையன் என்றும், யாண்டும் 20
திரியுந் தவசிகள் உரைசெய யானுங்
கேட்ட துண்டு; மற்றவன் நாட்டிற்கு
இன்றே தூதுவர் ஏவின், மங்கையை
மன்றல் செய்வான் மனதோ அன்றோ
என்றுயாம் அறியலாம் எளிதில். அறியார்
பலவும் பழிப்பர். நமக்கதில் ஒன்றும்
இலை இன்றே தூது ஏவுவம்
பனந்தார் வேய்ந்தோன் அனந்தைப் பதிக்கே.

ஜீவ : பழிப்பர் என்ற மொழிப்பயன் என்னை?
பகருதி வெளிப்படப் பண்பாய் 30
நிகரிலாச் சூழ்ச்சி நெடுந்தகை யோனே? 3

குடி : எண்ணுதற்கில்லை இறைவ! அவையெலாம்;
கண்ணகல் ஞாலங் கழறும் பலவிதம்.
மணஞ்செய முதல்முதற் பேசி வருதல்,
இணங்கிய ஆடவர் இல்லுள் ளாரே;
அன்றி ஆடவர்த் தேடி மன்றல்
சாற்றுதல் தகாதெனப் போற்றும்இவ் வுலகம்
முன்னை வழங்கும் அன்னதே; ஆயினும்,
ஆத்திரந் தனக்குச் சாத்திர மென்னை;

ஜீவ : கூடாது அஃதொரு காலும்; குடில! 40
கேடாம் நமது கீர்த்திக்கு என்றும்
மாசறு மனோன்மணி தனக்கும் மாசாம்;
என்னே ஆத்திரம்! நமது
கன்னியை விழையும் மன்னருங் குறைவோ? 4

குடி : குறைவோ அதற்கும் இறைவ! ஓஹோ!
மூவருந் தேவரும் யாவரும் விரும்புநம்
கொழுந்தை விழைந்து வந்த வேந்தரைக்
கணக்கிட லாமோ; கலிங்கன், சோழன்,
கன்னடன் வடிவில் ஒவ்வார்! காந்தர்
மன்னவன் வயதிற்கு இசையான்; மச்சன் 50

Koviloor Digital Library

குலத்திற் பொருந்தான் கோசலன் பலத்திற்கு
இணங்கான்; விதர்ப்பன் வீரம் இல்லான்
வணங்கலில் நிடதன், மராடன், கல்வியில்
நேரான்; மகதன் தீராத் தரித்திரன்
இன்னும் பலரும் இங்ஙனம் நமது
கன்னியை விழைந்துங் கல்வி வடிவு
குணம்பலம் குலம்பொருள் என்றிவை பலவும்
இணங்கார் ஏமாந்திருந்தார். அரசருள்
கொங்கன் தனக்கே யிங்கிவை யாவும்
பொருத்தம் ஆயினும் இதுவரைப் பாலியன்; 60
ஆகையில் இவ்வயின் அணைந்திலன். எங்ஙனம்
திருத்தமாய் அவன் கருத்து அறிந்திடு முனம்
ஏவுதுந் தூதரை? எதிலன் அன்றே.

ஜீவ : படுமோ அஃதொரு காலும்? குடில!
மற்றவன் கருத்தினை யுணர
உற்றதோர் உபாயம்என் னுளது உரையே. 5

குடி : உண்டு பலவும் உபாயம்; பண்டே
இதனைக் கருதியே யிருந்தேன்; புதிய
கடிபுரி முடியும் முன்னர்க் கழறல்
தகுதி அன்றெனக் கருதிச் 70
சாற்றா தொழிந்தேன் மாற்றலர் ஏறே! 6

ஜீவ : நல்லது! குடில! இல்லை யுனைப்போல்
எங்குஞ் சூழ்ச்சித் துணைவர்.
பங்கமில் உபாயம் என்கொல்? பகரே 7

குடி : வஞ்சி நாடதனில் **நன்செய்** நாடெனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன்று உளததன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே?
மருதமும் நெய்தலும் மயங்கி அங்கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும்.
மழலைவண் டானம் புலர்மீன் கவர. 80

Koviloor Digital Library

ஒம்புபு நுளைச்சியர் எறிகுழை, தேன்பொழி
புன்னைநுண் தாதாற் பொன்நிறம் பெற்ற
எருமையின் புறத்திருந்து இருஞ்சிறை புலர்த்தும்
அலைகடற் காக்கைக்கு அலக்கண் விளைக்கும்
கேதகை மலர்நிழல் இனமெனக் கருதித்,
தாராத் தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடும் கோங்கு அலர்த் தாதே?
வால்வளை சூல்உளைந்து ஈன்றவெண் முத்தம்
ஒதிமக் குடம்பையென்று உன்னுபு காலாற்
பருந்தினங் கவர்ந்து சென்று அடம்பிடைப் புதைக்கும்; 90
கரும்புஅடு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தற் பூந்தளிர் குளிர
மேய்ந்து அகல் காரா தீம்பால் துளிக்கும்;
அலமுகம் தாக்குழி அலமரும் ஆமை
நுளைச்சியர் கணவரோடு இழைத்திடும் ஊடலில்
வழித்துஎறி குங்குமச் சேற்றிடை யொளிக்கும்;
பூஞ்சினை மருதிடை வாழ்ந்திடும் அன்றில்
நளிமீன் கோட்பறை விளிகேட்டு உறங்கா;
வேயென வளர்ந்த சாய்குலைச் சாலியில்
உப்பார் பஃறி யொருநிரை பிணிப்பர் 100

இப்பெருந் தேயத்து எங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறா.
கொண்மூ என்னுங் கொள்கலங் கொண்ட
அமிழ்தினை அவ்வயிற் கவிழ்த்தபின் செல்வுழி
வடியும்நீ ரேநம் மிடதீர் சாரல்
நன்னீர்ப் பெருக்கும் முந்நீர் நீத்தமும்
எய்யாது என்றும் எதிர்த்திடும் பிணக்கில்;
நடுக்கடல் நன்னீர் சுவைத்திடும் ஒருகால்;
மரக்கலம் வந்திடும் வயற்கரை யொருகால்;
வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம் 110

Koviloor Digital Library

ஓமென ஓவிறந்து ஒலிக்கப் பிரணவ
நாதமே தொனிக்கும்அந் நாட்டிடை யொருசார்!
நறுமலர்க் குவளையும் நானிறத் திரணமும்
படர்தரும் பழனக் கம்பளம் பரப்பித்
தாமரைத் தூமுகை தூமமில் விளக்கா,
நிலவொளி முத்தும் கவடியும் பணமா,
அலவன் பலவிர லால்ஆய்ந்து எண்ண,
துகிர்க்கால் அன்னமும் புகர்க்கால் கொக்கும்
செங்கட் போத்தும் கம்புட் கோழியும்
கனைகுரல் நாரையும் சினமிகு காடையும் 120

பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
என்றுஇவை பலவும் எண்ணில குழீஇச்
சிரஞ்சிறிது அசைத்துஞ் சிறகை யடித்தும்,
அந்திஅங் காடியின் சந்தங்காட்டித்
தந்தங் குழூஉக்குரல் தமைவிரித்து எழுப்பும்
பேரொலி யொன்றுமே ஆர்தரும் ஒருசார்;
வீறுடை யெருத்தினம் வரிவரி நிறுத்தி
ஈறிலாச் சகரர் எண்ணிலர் ஆமெனப்
பொன்னேர் பூட்டி நின்றவர் தம்மைப்
போற்றிய குரவையே பொலிதரும் ஒருசார்; 130

சேற்றிடை யடர்ந் தநாற்று அடைத்து எடுக்குநர்
நாறுகூ றாக்குநர் வேறுபுலம் படுக்குநர்
நடுபவர் களைப்பகை அடுபவர் ஆதியாக்
கள்ளுண் கடைசியர் பள்ளும் பாட்டும்
தரும்ஒலி பரந்தே தங்குவது ஒருசார்;
குன்றென அரிந்து குவித்திடுஞ் செந்நெற்
போர்மிசைக் காரா காரெனப் பொலியக்
கறங்கும் கிணைப்பறை முழவுடன் பிறங்கு
மங்கல ஒலியே மல்குவது ஒருசார்;
தூவியால் தம்முடல் நீவிடிற் சிரிக்குஞ் 140

Koviloor Digital Library

சிறுமியர் என்ன அச்செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல்குழைந்து எங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்
எனில்இனி யான்இங்கு இயம்புவது என்னை?
அனையஅந் நாடெலாம் அரசமற்று உனக்கே
உரித்துஎன அங்குள பாடையே உரைக்கும்.
சின்னா ளாகச் சேரன்ஆண் டிடினும்
இந்நாள் வரையும் அந்நாட்டு உரிமை
கொடுத்ததும் இல்லைநாம் விடுத்ததும் இல்லை 150

பண்டைநம் உரிமைபா ராட்டிட என்றே
கண்டனன் இப்புரி. ஆயினும் அதுஇம்
மணத்திற்கு உதவியாய் வந்தது நன்றே.
ஆதலில் அவன்பால் தூதரை விடுத்துக்
கிழமையும் பழமையும் எடுத்துக் கிளத்தில்,
நாட்டிய நமது நகர்வலி கருதி
மீட்டும் விடுப்பினும் விடுப்பன். அன்றி
வாதமே பலவும் ஓதினம் ஒருவிதம்
ஒப்புர வாகாது ஒழியான். பின்னர்,
அந்நியோந் நியசமாதானச் சின்னம் 160

ஆகஓர் விவாகம் ஆயின் நன்றெனக்
குறிப்பாற் பொதுவாய்க் கூறிடின்,
மறுத்திடான் உடன் மண முடிக்குதும் நன்றே 8

ஜீவ : மெத்தவும் களித்தோம்! உத்தமோ பாயம்
இதுவே குடில! இதனால்
வதுவையும் நடந்ததா மதித்தேம் மனத்தே 9

குடி : அப்படி யன்றே! செப்பிய உபாயம்
போது மாயினும் ஏகுந் தூதுவர்
திறத்தாற் சித்தி யாகவேண் டியதே.
வினைதெரிந்து உரைத்தல் பெரிதல. அஃது 170

Koviloor Digital Library

தனைநன்கு ஆற்றலே ஆற்றல். அதனால்,
அன்பும் குடிமைப் பிறப்பும் அரசவாம்
பண்பும் அறிவும் பரவுநூ லுணர்வும்
தூய்மையும் மன்னவை அஞ்சாத் திண்மையும்
வாய்மையும் சொல்லில் வழுவா வன்மையும்
துணிவும் காலமும் களமுந் துணியுங்
குணமும், மந்திரத் தலைவர் துணைமையும்
உடையனே வினையாள் தூதன்என்று ஓதினர்
அன்ன தூதரை யனுப்பின் மன்னவ!
உன்னது எண்ணம் உறுமே யுறுதி: 180

அன்றெனில் அன்றே; அதனால்
வென்றிவை வேலாய் விடுவாய் தெரிந்தே. 10

ஜீவ : அத்திறம் முற்றும் ஒத்தவ னாய்நமக்கு
உரிமை பூண்டநின் அருமை மகன்பல –
தேவனே யுள்ளான். மேவலர் பலர்பால்
முன்னம் பன்முறை தூதிலும் முயன்றுளான்
அன்னவன் தன்னை யமைச்ச!
ஏவிடத் தயையா இசைவாய் நீயே.

குடி : ஐயம் அதற்கென்? ஐய! என்னுடல்
ஆவியும் பொருளும் மேவிய சுற்றமும் 190
நினதே யன்றோ! உனது ஏவலுக்குயான்
இசையாது ஒழிவனோ! வசையறு புதல்வன்
பாலியன் மிகவும்; காரியம் பெரிது.

ஜீவ : பெரிதென்? அங்கவன் பேசவேண் டியவெலாம்
விரிவா யெடுத்துநீ விளம்பி விடுக்கில்,
நலமாய் உரைப்பன் நம்பல தேவன்.
வருத்த மிவையெலாம் கருத்தில் உணராது
உரைத்தனர் முனிவர், உதியன் அவைக்கே
யோசனை யின்றி நடேசனை ஏவில்
நன்றாய் முடிப்பன் இம்மன்றல் 200
என்றார். அவர்கருத்து இருந்த வாறே! 10

Koviloor Digital Library

குடி : குற்றமோ அதுவுங் கொற்றவ! முனிவர்
அறிந்தது அவ்வளவே யாகும். ஏழை!
துறந்தார் அறிவரோ தூதின் தன்மை?
இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இன்பமுந் துன்பமும்
எல்லா மில்லை; ஆதலால் எவரும்
கட்டுக கோயில், வெட்டுக ஏரி,
என்று திரிதரும் இவர்களோ நமது
நன்றுந் தீதும் நாடி யுரைப்பர்?
இராச்சிய பாண சூத்திரம் யார்க்கும் 210
நீச்சே யன்றி நிலையோ? நடேசன்!
யோசனை நன்று! நடேசன்! ஆ! ஆ!
ஏதோ இவ்வயிற் சூதாப் பேதையர்
உள்ளம் மெள்ள உண்டு மற்றுஅவர்
அம்மை யப்பரை யணுகாது அகன்று
தம்மையும் மறந்தே தலைதடு மாறச்
செய்யும்ஓர் சேவகம் உண்டு மற்றவன்பால்.
ஐயமொன் றில்லை, அதனால் மொய்குழல்
மாதர்பால் தூதுசெல் வல்லமை கூடும்.
பித்தன் எப்படிச் சுந்தரர்க்கு 220
ஒத்த தோழனா யுற்றனன்? வியப்பே!
முனிவரும் வரவர மதி யிழந்தனரே. 13

ஜீவ : இருக்கும், இருக்கும் இணையறு குடில!
பொருக்கெனப் போய்உன் புதல்வற்கு உணர்த்தி
விடுத்திடு தூது விரைந்து;
கால விளம்பனம் சாலவுந் தீதே. 14

குடி : ஈதோ அனுப்பினேன்; இன்று இம்மாலையில்
தூது செல்வான் தொழுதுஉன் அநுமதி
பெறவரு வான்நீ காண்டி;
இறைவ; மங்கலம் என்றும் உன்னடிக்கே! 15 230

[குடிலன் போக]

Koviloor Digital Library

ஜீவ: (தனதுள்) நல்லது! ஆ! ஆ! நமது பாக்கியம்
அல்லவோ இவனைநாம் அமைச்சனாப் பெற்றதும்?
என்னே! இவன்மதி முன்நிற்பவை எவை?
(சில பிரபுக்களும் நாராயணனும் வந்து வணங்க)
(பிரபுக்களை நோக்கி) வம்மின், வம்மின்,
வந்து சிறிது
காலம் ஆனது போலும், நமது
மந்திரி யுடன்சில சிந்தனை செய்துஇங்கு
இருந்தோம் இதுவரை, குடிலன் மிகவும்
அருந் திறற் சூழ்ச்சியன்

முதற் பிரபு: அதற்கென் ஐயம்?
சுரகுரு பிரசுரன் முதல்வர் சூழ்ச்சி
இரவலா யிவன்சிறிது ஈந்தாற் பெறுவர். 240
எல்லை யுளதோ இவன்மதிக்கு இறைவ!
வல்லவன் யாதிலும்.

நாராயணன்: (தனதுள்) நல்லது கருதான்
வல்லமை யென்பயன்!

2-ம் பிரபு: மன்னவ! அதிலும்
உன்தொல் குலத்தில் உன்திரு மேனியில்
வைத்த பரிவும் பத்தியும் எத்தனை!
குடிலன்உன் குடிக்கே அடிமை பூண்ட
ஆஞ்ச னேயனோ அறியேம்!

நாரா : (தனதுள்) முழுப் பொய்
வாஞ்சையாய் மன்னன்இவ் வாயுரை முகமன்
விடுப்பனோ விடமென? குடிப்பனே!

சேவகன்: கொற்றவ! 250
நேற்று மாலையில் நின்திரு வாணையிற்
சென்றுழித் திருமுகம் நோக்கி ஏதோ
சிந்தனை செய்துதன் சித்த மகிழ்ச்சியால்

Koviloor Digital Library

தந்தனன் எனக்குஇத் தரள மாலை.

நாரா : (தனதுள்) எதுவோ பொல்லாங்கு
எண்ணினன்; திண்ணம்

ஜீவ : பார்மின், பார்மின், நம்மிசை வைத்த
ஆர்வமும் அன்பும். ஆ! ஆ!

நாரா : (தனதுள்) யாதும்
பேசாது இருக்கில் ஏசுமே நம்மனம்;
குறியாற் கூறுவம்; அறிகில் அறிக.

[நாராயணன் செல்ல]

3-ம் பிரபு : சாட்சியு மோகண் காட்சியாம் இதற்கும்!
அங்கைப் புண்ணுக்கு ஆடியும் வேண்டுமோ? 260
எங்கும் இல்லையே இவன்போற், சுவாமி
பத்தி பண்ணுநர், சுமித்திரை பயந்த
புத்திரன், வீரவாகு இவர்முதற் போற்றிய
எத்திறத் தவரும் இறைவ! இவனுக்கு
இணையோ தன்னயம் எண்ணாப் பெருமையில்?

[நாராயணன் மூக்கிற் கரி தோய்த்து வர]

ஜீவ : (நாராயணனை நோக்கி)
ஏ! ஏ! நாரணா கரியாய் உன்மூக்கு
இருந்தவாறு என்னே? ஏ! ஏ! இதுவென்!

நாரா : மூக்கிற் கரியர் உளர்என நாயனார்
தூக்கிய குறளின் சொற்படி, எல்லாம்
உள்ளநின் அருகு அவர் இல்லார் ஆவரோ? 270

ஜீவ : ஒகோ! ஒகோ! உனக்கென் பைத்தியம்?

யாவரும் : ஒகோ! ஒகோ! ஒகோ! ஒகோ!

[யாவரும் நகைக்க]

ஜீவ : நாரணா! நீயும் நடேசன் தோழனே.
(பிரபுக்களை நோக்கி) நல்லது; விசேட
மொன்றில்லை போலும்

Koviloor Digital Library

முதற் பிரபு: இல்லையெம் இறைவ! எல்லாப் புவியும்நின
வாகுவே தாங்க! மங்கலம் வரவே!

[பிரபுக்கள் போக]

ஜீவ : நாராயணா! உனக்கு ஏன்இப் பித்து?
தீரா இடும்பையே தெளிவில் ஐயுறல்.

நாரா : எனைவகை தேறியக் கண்ணும், வினைவகை
கோடிய மாந்தர் கோடியின் மேலாம். 280

ஜீவ : எதற்கும் திருக்குறள் இடந்தரும்! விடுவிடு.
விரும்பி எவருந் தின்னும்
கரும்பு கைப்பதுஉன் வாய்க் குற்றம்மே. 16

[அரசனும் சேவகர்களும் போக]

நாரா : (தனிமொழி)
ஐயோ! இதற்குஎன் செய்வேன்! அரசன்,
உறுதியா நம்பினன்; சிறிதும் பிறழான்,
வெளுத்தது எல்லாம் பாலெனும் மெய்ம்மை
உளத்தான்; களங்கம் ஓரான், குடிலனோ
சூதே உருவாத் தோன்றினன். அவன்தான்
ஓதுவ வுன்னுவ செய்குவ யாவும்
தன்னயங் கருதி அன்றி மன்னனைச் 290
சற்றும் எண்ணான். முற்றும் சாலமா
நல்லவன் போலவே நடிப்பான்! பொல்லா
வஞ்சகன் மன்னன் அருகுளோர் அதனை
நெஞ்சிலும் நினையார்; நினையினும் உரையார்.
இறைவன் குறிப்பிற்கு இசைய அறைவர்
வடித்து வடித்து மாற்றொலி போன்றே,
தடுத்து மெய்ம்மை சாற்றுவர் யாரே?
என்னே அரசர் தன்மை! மன்னுயிர்க்கு
ஆக்கமும் அழிவும் அவர்தம் கடைக்கண்
நோக்கில் உண்டாம் வல்லமை நோற்றுப் 300
பெற்றோர்; பெற்றஅப் பெருமையின் பாரம்,

Koviloor Digital Library

உற்றுநோக் குவரேல் உடல்நடுங் காரோ?
கரும்போ தேனோ என்று அவர் களிப்பது
நெருப் பாறும்மயிர்ப் பாலமும் அன்றோ?
விழிப்பா இருக்கிற் பிழைப்பர்; விழியிமை
கொட்டில் கோடி பிறழுமே. கொட்டும்
வாலால் தேளும், வாயால் பாம்புங்
காலும் விடமெனக் கருதி யாவும்
அடிமுதல் முடிவரை ஆய்ந்து ஆராய்ந்து
பாரார் ஆளும் பார்என் படாவே? 310
யாரையான் நோவ! அதிலுங் கொடுமை
அரசர்க்கு அமைச்சர் அவயவம் அலரோ?
உறுப்புகள் தாமே உயிரினை யுண்ண
ஒருப்படில் விலக்குவ ருளரோ? தன்னயம்
மறந்து மன்னுயிர்ச் சுகமே மதித்து அங்கு
இறந்த சிந்தையனோ? இவனோ அமைச்சன்?
குடிலன் செய்யும் படிறுகள் வெளியாய்ப்
பொய்யும் மெய்யும் புலப்பட உரைக்க
என்றால், நோக்க நின்றார் நிலையில்
தோன்றுஞ் சித்திர வொளிபோல் யார்க்குஞ் 320
சான்றொடு காட்டுத் தன்மைய அலவே.
சித்திரப் பார்வை அழுந்தார்க்கு எத்தனை
காட்டினும் கீறிய வரையலாற் காணார்.
என்செய? இனியான் எப்படிச் செப்புவன்?
நிந்தையா நடேசனைப் பேசிய குறிப்பும்
சிந்தனை செய்ததாய்ச் செப்பிய செய்தியும்
ஓரில் யாதோ பெரிய உறுகண்
நேரிடும் என்றுஎன் நெஞ்சம் பதறும்.
என்னே ஒருவன் வல்லமை!
இன்னும் பிழைப்பன் மன்னன்
விழிக்கிலே 17 330

[நாராயணன் போக]

இரண்டாம் அங்கம்: முதல் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம்: ஊர்ப்புறத்து ஒருசார் **காலம்:** வைகறை

[நடராஜன் அருணோதயம் கண்டு நிற்க[

இணைக்குறள் ஆசிரியப்பா

நடராஜன் : (தனிமொழி)

பரிதியின் உதயம் பார்க்கக் கருதில்
இவ்விடஞ் சாலவும் இனிதே. உதயம்
செவ்விதற் கண்டுபின் செல்வோம்.
ஒவியத் தொழில்வலோன் நீவியக் கிழியில்
தீட்டுவான் புகுந்த சித்திரம், நீட்டும்
தூரியந் தொடத் தொடத்துலங்குதல் போல,
சூரியன் பன்னிறக் கதிர்கள் தொடத்தொட
உருவுதோன் றாவணம் ஒன்றாய்ச் செறிந்து
கருகுஇருள் மயங்கிய காட்சி கழிந்து
சிறிது சிறிதா உறுப்புகள் தெளியத் 10
தோன்றும் இத்தோற்றம் நன்றே!
சூட்டுடைச் சேவல் சுரைக்கொடி படர்ந்தஅவ்
வீட்டுஉச் சியின்மேல் வீம்பாய் நடந்துபின்
இருசிறை அடித்து நெடுவாய் அங்காந்து
ஒருமுறை கூவி உழையுளார் புகழ
உற்றுநோக் குவர்போல் சுற்றும்நோக் குதலும்,
இருட்பகை யிரவி இருள்எனத் தம்மையும்
கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக்

Koviloor Digital Library

கையால் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாந் தம்பெயர் விளம்பி வாயசம் 20
பதறிஎத் திசையிலுஞ் சிதறியோ டுதலும்,
பன்னிறச் சிறகர்ப் பறவைத் தொழுதி
தம்மினந் தழுவிச் சூழ்ந்து வட்டமாய்
அங்கங்கு இருந்து தங்கள் முறைமுறை
அஞ்சிறை ஒத்தறுத்து அடியா, எஞ்சலில்
இசையறி மாக்களின் ஈட்டம் போல
வசையறு பாடல் வழங்கலும் இனிதே!
அதுவென! ஆகா! அலகால் அடிக்கடி
ததையுந் தஞ்சிறை தடவி விளக்கிக்
கதுவுங் காதல் ஆணையிட்டு அறைந்து 30
பின்புசென்று ஓயாது அன்பு பாராட்டும்
இவ்விரு குருகும் காதலர்.
கண்டும் அவர்நிலை காணார் போல்துகிர்த்
துண்டங் கொண்டு பரலைச் சொரிந்த
பழமெனப் பாவனை பண்ணிக் கொத்தி
உழையுழை ஒதுங்கி யோடிப் போலிக்
கூச்சம் காட்டும்இக் குருகு காதலியே.
ஆடவர் காதல் அறைதலுந் தையலர்
கூடமாய்க் கொள்ளலும் இயல்பே போலும்!
வாணீ! மங்காய்! வாழி நின்குணம்! 40
ஒருதினம் இவ்வயின் உனையான் கண்டுழி
முருகவிழ் குவளைநின் மொய்குழல் சூட்டத்
தந்ததை அன்பாய் மந்தகா சத்தொடு
வாங்கியும், மதியா தவள்போல ஆங்கே
ஒடும்அவ் வாய்க்கால் நீரிடை விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தனை.
ஏதுயான் எண்ணுவ னோஎன வுடன்நீ
கலங்கிய கலக்கம்என் கண்ணுளது இன்றும்.
அழுங்கலை வாணீ! அறிவேன்! அறிவேன்!

Koviloor Digital Library

உளத்தோடு உளஞ்சென்று ஒன்றிடிற் பின்னர் 50
வியர்த்தமே செய்கையும் மொழியும் –
(உற்றுச் செவிகொடுத்து) "வாணி"
என்றபேர் கேட்டனன்! யார்அது
காணில் நன்றாம். காரிகை யார்கொல்?
(பலதேவனும், ஒரு நற்றாயும், தோழனும் தொலைவில் வர)
சொல்வதென்! சூழ்ச்சியென்! கேட்குதும் மறைந்து.

ஆசிரியத்துறை

நற்றாய் : நாணமும் என்மகள் நன்னலமும் உகுத்து உன்னை நம்பி
வீணில் விழைந்தஇக் கேடுஅவள் தன்னுடன் வீவுறுமே.
பேணிய என்குடிப் பேர்பெரிது ஆதலினால்
வாணியின் வம்புரை யாம்இனி அஞ்சுதும்
வாரலையோ. 1

ஆசிரியப்பாவின் தொடர்ச்சி

நட : (தனதுள்) ஐயோ! இதுஎன்! கட்டம்! கட்டம்!

ஆசிரியத்துறை

நற்றாய் : நாணிக் கவித்தவள் தன்தலைதொட்டு நவின்ற உன்றன்
ஆணைக்கு அவள்சிரம் அற்றுஇனி வீழினும் அஞ்சிலம்யாம்
காணப் பிறர்பொருள் கள்ளலம் ஆதலினால்
வாணிக்கு உரித்தெனக் கேட்டபின் வௌவலம்
வாரலையோ! 2

ஆசிரியப்பாவின் தொடர்ச்சி

நட : (தனதுள்) நாராயணன் அன்று உரைத்தது மெய்யே!

ஆசிரியத்துறை

நற்றாய் : நாணமி லாமகள் சாவுக்கு இனிவெகு நாட்கள் இல்லை
காணிய நீயும் விரும்பலை யோலையிற் கண்டு கொள்வை.

Koviloor Digital Library

பேணிய நின்வாழ்வே பெரிதுஆ தலினால்
வாணி யொளித்துநீ வாசித்து அறிந்துகொள்
வாரலையோ! 3

ஆசிரியப்பாவின் தொடர்ச்சி

நட : (தனதுள்) ஆயினும் இத்தனை பாதகனோ இவன்

பலதேவன் : எவர் உனக்கு உரைத்தார் இத்தனை பழங்கதை?
சவம்அவள் எனக்குஏன்? இவள்சுகம் எங்கே?
பொய்பொய் நம்பலை. ஐயமெல் லாம்விடு.
பணத்திற் காக்கிழப் பிணந்துடிக் கின்றது.
சேரன் பதிக்குஓர் செய்திசொல் லுதற்காச்
சென்றுஇதோ இரண்டு நாளையில் திரும்புவன்.
இச்சிறு பொற்றொடி மைச்சினிக் குக்கொடு.
தருகுவன் ஈதோ! மறக்கன்மின் என்னை!
[நற்றாய் போக பலதேவனும் தோழனும் நடக்க]

தோழன் : செவ்விது! செவ்விது! இவ்விடம் எத்தனை?
ஐந்தோ? ஆறோ?

பலதே : அறியேன், போ! போ!
இச்சுக மேசுகம், மெய்ச்சுகம் விளம்பில்.

தோழன் : வாணியை மணந்தபின் பூணுவை விலங்கு.

பலதே : வாணி யாயின்என்? மனோன்மணி யாயின்என்? 70
அதைவிடப் படித்த அலகையா யினும்என்?
கணிசத் திற்குஅது; காரியத்திற்கு இது.
வாவா போவோம்; வழிபார்த் திருக்குஞ்
சேவகர் ஆதியர் செய்குவர் ஐயம்.
எத்தனை பொழுதிங் கானது வீடுவிட்டு?
ஏகுவம் விரைவில், இனித்தா மதம்இலை,
[பலதேவனும் தோழனும் போக]

நட : கொடுமை! கொடுமை! இக் கொடும் பாதகன்சொல்.
கடுவெனப் பரந்துஎன் கைகால் நடுக்கின.
கைத்தது என் கண்ணும் காதும்.

Koviloor Digital Library

இத்தனை துட்டரும் இருப்பரோ உலகில்? 80
ஐந்தோ! ஆறோ! அறியான் பாதகன்!
நொந்தது புண்ணாய் என்னுளம் கேட்க
மெய்ச்சுகம் இதுவாம்! விளம்புவது என்இனி?
இச்சண் டாளனும் வாணியும்! ஏற்கும்!
ஒருபிடி யாய்அவன் உயிரினை வாங்க
ஓடியது எண்ணம்; உறுத்தினது என்கை!
தீண்டவும் வேண்டுமோ தீயனை?
என்இவன் அனந்தைக்கு ஏகுங் காரியம்?
யாருடன் வினவ? நாரணனோ அது?

[நாராயணன் வர]

வா வா, நாரணா! 90

நாராயணன்: ஏ! ஏ! என்னை!
சினந்தனை தனியாய்?

நட : என்இத் தீயவன்
அனந்தைக்கு ஏகுங் காரணம்?

நாரா : யார்? யார்?

நட : அறிவை! நீ விளை யாடலை; அறைதி.

நாரா : வதுவை மனோன்மணி தனக்கு வழங்கிட....

நட : அதுவும் நன்றே? கெடுவன்இவ் அரசன்!

நாரா : அடுத்தது வாணியின் மணமும், அறைந்துளேன்

நட : விடுத்திடு அவ்எண்ணம்; தடுக்கயான் அறிவன்;
விடுத்தனன் கண்டும்; எரித்திடு வேன்நொடி,
உறுதியொன்று உளதேல்! உரையாய் நடந்தவை.

நாரா : முதியவர் உசிதனுக்கு உரைக்க மற்றவன் 100
வதுவை அவ்வழியே ஆற்றிட வாணியை
அதட்டினன்.

நட : அதற்கவள்?

நாரா : மறுத்தனள்.

நட : எங்ஙனம்?

Koviloor Digital Library

நாரா : 'இறக்கினும் அதற்குயான் இசையேன்' என்றாள்.

நட : அரைக்கண முன்னம் அறிந்திலேன் இம்மொழி.

நாரா : என்னே உன்மதி! ஏந்திழை யார்சொல்
நீர்மேல் எழுத்தாம்; யார் அறிவார் உளம்?
மாறி நாள்தோறும் வேறுபாடு உறுமதி
யெண்ணுட் பட்டு நுண்ணயங் கூடலால்
பெண்கள் நிலையிற் பெரிதும் திடனே.
புண்கொள் நெஞ்சொடு புலம்புகின் றாய்மிக 110
காதலாம் ஊழிக் கனல்முன் வையாய்
மாதரார் கட்டுரை மாயாது என்செயும்?
அக்கணம் உற்ற துக்கம் தூண்டக்
கன்னியாய் இருப்பன் என்றாள் அன்றி
அன்னது அவள் கருத்து ஆமோ?

நட : அறியாய்!
புருடரே புலையர்; நிலையிலாப் பதடிகள்;
இருளடை நெஞ்சினர்; ஈரமில் உளத்தர்;
ஆணையும் அவர்க்குஒரு வீணுரை; அறிந்தேன்.
தந்நயம் அன்றிப் பின்னொன்று அறியாக்
காதகர்; கடையர்; கல்வியில் கசடர். 120

நாரா : ஓதி யுணரினும் மாதர் உள்ளம்
அலையெறி கடலினுஞ் சலனம் என்ப.

நட : திரைபொரல் கரையிலும் வெளியிலும் அன்றி,
கயத்திலும் அகத்திலுங் கலக்கம் அவர்க்கில்லை.
தியக்கமும் மயக்கமுஞ் செறிவது அரிவையர்,
உள்ளப் பரப்பில் ஒருபுறத் தன்றி,
பள்ளத் தாழ்ச்சியிற் பரிவும், கொள்கை
விள்ளா முரணும், மெய்ம்மையில் தெளிவும்,
உள்ளார். அவர்தம் உறுதிநீ யுணராய்.
சுற்றிச் சுழலினுங் கறங்குஒரு நிலையைப் 130
பற்றியே சுழலும்; அப் படியலர் புருடர்.
கேடுஅவர் உறுவதுஇங்கு ஆடவர் உருவுகொண்டு

Koviloor Digital Library

அலைதருங் கொடியஇவ் அலகைகள் வழியே.
புருடரோ இவரும்! கருவுறுங் குழவிமெய்
மென்றிட நன்றெனக் கொன்றுதின் றிடுவர்.
அவாவிற்கு அளவிலை, அன்போ அறியார்;
மணமும் அவர்க்கு ஒரு வாணிகம்! அந்தோ!
சீ! சீ! என் இத்தீயவர் செய்கை?
மாசிலா வையகத்து இவ்வுயிர் வாழ்க்கை
ஆம்பெருங் கடலுட் போம்மரக் கலனாம் 140
ஆடவர் நெஞ்சம் அறத்துறை அகன்று
நீள்திசை சுழற்று நிலையிலாக் காற்றாம்
நிண்ணயம் அற்ற எண்ணம் இயக்கச்
சென்றுழிச் சென்று நன்றறிவு இன்றி
அலையா வண்ணம், அறத்துறைக் குடாவில்
நிலைபெற நிறுத்துநங் கூரமாய், பின்னும்
செய்வினை முயற்சியிற் பொய்வகைப் புன்னெ றிக்கு
எற்றுண்டு அகன்று பற்றொன்று இன்றி
ஆசையாந் திசைதொறும் அலைந்து திரிந்து
கெடாவணங் கடாவிக் கெழுமிய அன்புசேர் 150
அறப்பிடி கடைப்பிடி யாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்த்துசுக் கானாய்,
நின்றது மங்கையர் நிலைமை யென்று
நினையா மனிதர், விலங்கினுங் கீழாய்
அனையார் தருசிற் றின்பமே யவாவி
வாழ்க்கைத் துணையா வந்தவர் தம்மைத்
தாழ்த்துஞ் சேறா மாற்றுவர் தவத்தால்
மந்திரவாள் பெற்றும் மாற்றலர் வெல்லாது
அந்தோ! தம்மெய் அரிவார் போலத்
தனியே தளருந் தமக்குத் துணையாய் 160
வருபவர் தமையும் பகைவராய் நலிந்து

Koviloor Digital Library

பாலையும் நஞ்சாப் பண்ணுவர். அவர்தம்
மதிகேடு என்னே! துதிபெறும் அன்புநற்
குணமு முளார்இல் துணைவ ராயின்
இல்லதென் உலகில்? இவற்றுடன் கல்விசேர்
நல்லறிவு உளதேல் பொன்மலர் நாற்றம்
பெற்றவா றன்றோ? எற்றே மடமை!
கேட்டிட வேட்டவை யாவையும் ஈயுங்
கற்பகத் தருவென அற்பமுங் கருதாது
அடியுடன் முறித்து முடிபுற எரித்துக் 170
கரிபெற முயன்ற கம்மியனே என
தனக்கென வாழுந் தனிமிரு கத்தின்
மனக்கோள் நிமிர்த்து மற்றையர் இன்பமுந்
துன்பமுந் தனதா அன்புபா ராட்ட,
மெள்ளமெள் ளத்தன் உள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சிந்தந் தெளித்துத்
தானெனும் நினைப்புந் தனக்கெனும் இச்சையும்
ஒய்வுறச் செய்து, மற்றொன்றாய் நின்ற
எங்கும் நிறைந்த பேரின்ப வெள்ளம் 180
முங்கி அதனுள் மூழ்கிட யாரையும்
பக்குவஞ் செய்யும்நற் பள்ளிச் சாலை, இவ்
இல்லறம் என்பதோர் நல்லுணர்வு இன்றி
உடல்தினவு அடக்குமா உரைஞ்சிடு தடியென
மடத்தனங் கருதித் தம்மையும் பிறரையுங்
கெடுத்திடும் மாந்தரின் கெடுமதி என்னே!
நாரணா! இவ்வயின் கேட்டதுங் கண்டதுந்
தீராத் துயரமே செய்வது. செல்குவன்.

Koviloor Digital Library

ஏதா யினும்இனி எய்தில்,

ஒதாய் முனிவர் உறையுள் உற்றே, 1 190

[நடராஜன் போக]

நேரிசை ஆசிரியப்பா

நாரா : (தனிமொழி) நல்லது மிகவும்! செல்

இடம்தோறும்

கதையா யிருந்தது. கண்டதென்? கேட்டதென்?

புதுமை இங்கிதுவும்! பொருந்துவது

எதுவா யினுஞ்சரி. ஏகுவம் மனைக்கே. 2

[நாராயணன் போக]

இரண்டாம் அங்கம் : இரண்டாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library

இடம்: திருவனந்தையிற் சேரன் அரண்மனை **காலம்:** காலை

[புருடோத்தமன் சிந்தித்திருக்க]

நேரிசை ஆசிரியப்பா

புருடோத்தமன்: (தனிமொழி)

யார்கொலோ அறியேம்! யார்கொலோ அறியேம்!
வார்குழல் துகிலொடு சோர மாசிலா
மதிமுகங் கவிழ்த்து நுதிவேற் கண்கள்
விரகதா பத்தால் தரளநீர் இறைப்பப்
பரிபுரம் அணிந்த பங்கயம் வருந்துபு
விரல்நிலங் கிழிப்ப, வெட்கந் துறந்து
விண்ணணங்கு அனைய கன்னியர் பலர்என்
கண்முன் நின்றுஅங்கு இரக்கினும் கலங்காச்
சித்தம் மத்துறு தயிரில் திரிந்து
பித்துறச் செய்தஇப் பேதை யார்கொலோ? 10

எவ்வுல கினளோ? அறியேம்! இணையிலா
நவ்வியும் நண்பும் நலனும் உடையவள்
யார்கொலோ? நாள்பல வானவே. ஆ! ஆ!
விழிப்போடு என்கண் காணில்! வீண்! வீண்!
பழிப்பாம் பிறருடன் பகர்தல். பகர்வதென்?
கனவு பொய்யெனக் கழறுவர். பொய்யோ?
நனவினும் ஒழுங்காய் நாள்தொறுந் தோற்றும்.
பொய்யல; பொய்யல; ஐயம் எனக்கிலை.
நாள்தொறும் ஒருகலை கூடி வளரும்
மதியென எழில்தினம் வளர்வது போலும். 20

Koviloor Digital Library

முதல்நாள் முறுவல் கண்டிலம்; கடைக்கணில்
ஆர்வம் அலையெறி பார்வைஅன்று இருந்தது.
நேற்றிராக் கண்ட தோற்றம்என் நெஞ்சம்
பருகினது ஐயோ! கரிய கூந்தலின்
சிறுசுருள் பிறைநிகர் நறுநுதற் புரளப்
பொருசிலைப் புருவம் ஒருதலை நெகிழ்த்துச்
செவ்வரி படர்ந்த மைவிழி நெடுவிழி
உழுவலோடு என்முகம் நோக்க எழுங்கால்
என்நோக்கு எதிர்ப்படத் தன்நோக்கு அகற்றி,
வெய்யோன் வாரியில் விழுங்கால் துய்ய 30

சேணிடைத் தோன்றுஞ் செக்கர்போல் கன்னம்
நாணொடு சிவக்க, ஊர்கோள் நாப்பண்
தோன்றிய உவாமதி போன்றுஅங்கு எழிலொளி
சுற்றிய வதனம் சற்றுக் கவிழ்த்தி,
அமுதம் ஊற்றிருக்குங் குமுதவாய் அலர்ந்து
மந்த காசந் தந்துஅவள் நின்ற
நிலைமையென் நெஞ்சம் நீங்குவ தன்றே!
தேவ கன்னியர் முதலாந் தெரிவையர்
யாவரே யாயினும் என்கண் தனக்கு
மைந்தரா மாற்றும்இச் சுந்தரி யார்கொலோ? 40

அறியுமா றிலையே! அயர்க்குமா றிலையே!
உண்டெனிற் கண்டிடல் வேண்டும். இலையெனில்
இன்றே மறத்தல் நன்றே. ஆம்! இனி
மறத்தலே கருமம்; மறப்பதும் எப்படி?
போர்எவ ருடனே யாயினும் புரியில்அவ்
ஆரவா ரத்தில் அயர்ப்போ மன்றி...

[சேவகன் வர]

சேவகன் : எழுதரு மேனி இறைவ! நின் வாயிலில்
வழுதியின் தூதுவன் வந்து காக்கின்றான்.

Koviloor Digital Library

புரு : யார் அவன்?

சே : பேர் பலதேவன் என்று அறைந்தான்,

புரு : (தனதுள்) சோரன்! (சேவகனை நோக்கி)
வரச் சொல் 50
(தனதுள்) தூது ஏன்? எதற்கு இக்
கயவனைக் கைதவன் அனுப்பினான்?
நயந்தீது உணர்ந்து நட்டிலன் போன்மே.

[பலதேவன் வர]

பலதேவன்: மங்கலம், மங்கலம்! மலய மன்னவ!
பொங்குஅலைப் புணரிசூழ் புவிபுகழ் சுமக்கத்
தன்தோள் தாரணி தாங்க எங்கும்
ஒன்னார் தலையொடு திகிரி யுருட்டிக்
குடங்கை யணையில் குறும்பர் தூங்க
இடம்பார்த்து ஒதுங்குந் தடமுற் றத்து
மேம்படு திருநெல் வேலிவீற் றிருக்கும்
வேம்பார் ஜீவக வேந்தன் விடுத்த 60
தூதுயான் என்பேர் ஓதில்அவ் வழுதியின்
மந்திரச் [illegible]ணி தந்திரத் தலைவன்,
பொருந்தலர் துணுக்குறும் அருந்திறற் சூழ்ச்சியின்,
குடிலேந்திரன் மகன் –

புரு : (தனதுள்) மடையன். வந்ததென்?

பல : அப்பெரு வழுதி ஒப்பறு மாநகர்
நெல்லையிற் கண்டு, புல்லார் ஈட்டமும்
அரவினது அரசும் வெருவி ஞெரேலெனப்
பிறவிப் பௌவத்து எல்லையும் வறிதாம்
ஆணவத் தாழ்ச்சியும் நாண அகழ்வலந்
தொட்டு அஞ்ஞானத் தொடர்பினும் உரமாய்க் 70
கட்டிய மதிற்கணங் காக்க விடயத்து
எட்டி யழுத்தி இழுக்கும் புலன்களின்
யந்திரப் படைகள் எண்ணில இயற்றி –

Koviloor Digital Library

புரு : வந்த அலுவலென்?

பல : மன்னவா! நீயாள்
வஞ்சிநா டதற்குத் தென்கீழ் வாய்ந்த
நன்செய்நாடு என்றொரு நாடுளது அன்றே?
எங்கட்கு அந்நாடு உரித்தாம். அங்கு
பரவு பாடையும் விரவும் ஆசாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா....

புரு : நல்லது! சொல்லாய். 80

பல : தொல்லையாங் கிழமைபா...
ராட்டித் தங்கோல் நாட்டி நடத்த
வல்ல மன்னவர் இன்மையால் வழுதிநாட்டு
எல்லையுட் புகுந்துஅங்கு இறுத்துச் சின்னாள்
சதியாய் நீஅர சாண்டாய்...

புரு : அதனால்!

பல : அன்னதன் உரிமை மீட்க வுன்னியே
முதுநக ராம்எழில் மதுரை துறந்து
நெல்லையைத் தலைநகர் வல்லையில் ஆக்கி
ஈண்டினன் ஆங்கே

புரு : வேண்டியது என்னை?
உரையாய் விரைவில்.

பல : உதியனும் செழியனும்
போர்தனி புரியில் யார்கொல் பிழைப்பர்; 90
பங்கமில் இரவியும் திங்களும் துருவி
எதிர்ப்படுங் காலை, கதிக்கடுங் கடவுள்
மறையஇவ் வுலகில் வயங்கூஇருள் நிறையும்,
அவர்அந் நிலையில் அமர்ந்திடில் அவ்விருள்
தவறாத் தன்மைபோல் நீவிர் இருவரும்
சமர்செயில் உலகந் தாங்காது என்றே
எமையிங் கேவிஇவ் அவைக்கு ஏற்றவை

Koviloor Digital Library

நீதியாய் எடுத்துஎலாம் ஓதிநன் செய்நாடு
உடையார்க்கு உரிமை நோக்கி யளிப்பதே
கடனெனக் கழறிப் பின்நிகழ் உன்கருத்து 100
அறிந்து மீளவே விடுத்தான்.

புரு : ஆ! ஹா!
முடிந்ததோ! இலையெனில் முற்றுஞ் செப்புவாய்.

பல : மேலும் ஒருமொழி விளம்புதும் வேந்தே!
சாலவும் நீவிர் பகைக்கில் சகமெலாம்
ஆழ்துயர் மூழ்கலும் அன்றி, உங்கட்கு
ஏது விளையுமோ அறியேம், ஆதலின்
அஞ்சா அரியேறு அன்னஜீ வகனுடன்
வெஞ்சமர் விளைத்தல் நன்றல.

புரு : (பயந்தாற்போல) ஆ! ஆ!

பல : நன்செய்நாடு இனிமேல் மீட்டு நல்கலும்
எஞ்சலில் பெரும்புகழ்க்கு ஏற்ற தன்றெனில் 110
உரைக்குதும் உபாயமொன்று, உசிதன் மனையில்
திரைக்கடல் அமுதே உருக்கொண்ட துபோல்
ஒருமலர் மலர்ந்துஅங்கு உறைந்தது. தேன்உண
விரைமலர் தேடுஅளி வீற்றிங்கு இருந்தது.
அன்னவள் மன்ன! நின் அரியணை யமரில்
தென்னவன் மனமுந் திருந்தும் நன்செய்நாடு
உன்னதும் ஆகும்

புரு : உண்மை! ஒஹோ!
வண்டு மலரிடை யணையஉன் நாட்டிற்
கொண்டு விடுவரே போலும்! நன்று!
கோதறும் இருபுறக் காதல் அன்றியெம் 120
நாட்டிடை வேட்டல்மற் றில்லை. மேலும்நம்
அரியணை யிருவர்க்கு இடங்கொடாது அறிகுதி.

பல : (தனதுள்) சுரிகுழல் வதுவை போனது.
சுகம்! சுகம்!

Koviloor Digital Library

புரு : ஆதலின் முடிவில்நீ ஓதியது ஒழிக.
நன்செய்நா டதற்கா நாடிநீ நவின்ற
வெஞ்சொல் நினைதொறும் மேலிடும் நகையே.
அடைக்கலம் என்றுநம் அமைச்சரை யடைந்து
நடைப்பிணம் போலக் கடைத்தலை திரிந்து
முடியுடன் செங்கோல் அடியிறை வைத்துப்
புரவலர் பலர்வாய் புதைத்து நிற்க, 130
அனையர்தம் மனைவியர் அவாவிய மங்கல
நாணே இரந்து நாணம் துறந்து
கெஞ்சும்எம் சபையில், அஞ்சாது எமது
நன்செய்நா டதனை நாவு கூசாமற்
பாண்டியற்கு அளிக்க என்றுரை பகர்ந்தும்,
ஈண்டுநீ பின்னும் உயிர்ப்பது தூதுவன்
என்றபே ரொன்றால் என்றே அறிகுதி.
கருதாது உனையிங்கு ஏவிய கைதவன்
ஒருவா ரத்திற் குள்ளா அவன்முடி
பார்பகை இன்மையால் இதுகாறு அணிந்து 140
பார்வகித் தான்எனப் பகராது அறிவன்.
விரித்துநீ யெம்மிடம் உரைத்த புரிசையும்,
அரிக்குநே ரென்ன நீ அறைந்த அரசனும்
இருப்பரேல் காண்குவம் அவர்வலி யினையும்,
(சேவகனை நோக்கி) அருள் வரதனை இங்கு
அழையாய்! சேவக!
[அருள் வரதன் வர]

பல : (தனதுள்) சிந்தனை முடிந்தது.

அருள் வரதன்: வந்தனம்! வந்தனம்!

புரு : நல்லது! செழியன் நெல்லையை நோக்கி
நாளையாம் ஏகுவம், நமதுபோர் வீரர்அவ்
வேளைஆ யத்தமாய் வைப்பாய்.

அருள் : ஆஞ்ஞை.

Koviloor Digital Library

புரு : (பலதேவனை நோக்கி)
செல்வாய் விரைவில், தென்னன் போர்க்கு 150
வல்லான் என்னில் வாரமொன் றிற்குள்
துன்னிய சேனையுந் தானும்நீ சொன்ன
கடிபுரி பலமாக் காக்க. இல்லையேல்,
முடிநம் அடியில் வைத்து நாம்இடும்
ஆணைக்கு அடங்கி அமர்க. எமதிடம்
வீணுக்கு உன்னை விடுத்தகை தவற்கு
வஞ்சியான் மொழிந்த மாற்றம் ஈதுஎனவே
எஞ்சாது இயம்புதி. ஏகாய்! ஏகாய்!

[பலதேவன் போக]

(தனதுள்) முட்டாள் இவனை விட்டவன் குட்டுப்
பட்டபோது அன்றிப் பாரான் உண்மை. 160
பச்சாத் தாபப் படுத்துவம் நிச்சயம். 2
நண்ணிய நமது கனாவின்
எண்ணம் ஏகினும் ஏகும் இனியே

[புருடோத்தமன் போக]

(காவற்படைஞரும், சேவகர்களும் அருள்வரதனைச் சுற்றி நிற்க)

நிலைமண்டில ஆசிரியப்பா

அருள்: தீர்ந்தது சூரரே! நும்தோள் தினவு;
நேர்ந்தது வெம்போர்.

யாவரும் : வாழ்கநம் வேந்தே!

முதற்படைஞன்: நொந்தோம்; நொந்தோம் இதுகாறு உறங்கி.

யாவரும் : உய்ந்தோம்; உய்ந்தோம், வாழுக உன்சொல்!

2-ம் ப : பெரும்போர் இலாநாள் பிறவா நாளே.

3-ம் ப : மெய்யோ? பொய்யோ? ஐய! இதுவும்.

4-ம் ப : யாவரோ, பகைவர்? அருளா பரணா! 170
தேவரோ, அசுரரோ, மூவரோ, யாவர்?

அருள் : பாண்டியன்

Koviloor Digital Library

யாவரும் : (இகழ்ச்சியாய்) பாண்டியன்! சீச்சீ! பகடி.

அருள் : ஈண்டுவந் தவன்அவன் தூதன், யதார்த்தம்.

யாவரும்: வியப்பு! வியப்பு!

3-ம் ப: வேற்றான் ஒருவன் என்
அயற்புறம் போனான். அவன்முகம் நோக்குழி
வியர்த்தனன்; தூதிடை கண்டுவிடுத்தேன்.

மு.ப : அவன்தான்! அவன்தான்! அவன்தான்! தூதன்

4-ம் ப : யாதோ காரணம்? ஓதாய், தலைவா.

2-ம் ப : அப்பந் தின்னவோ? அலால்குழி யெண்ணவோ! 180
செப்பியது உனக்கு? நமக் கேன்? சீச்சீ!

அருள் : நல்லது வீரரே! நாளை வைகறை
நெல்லையை வளைந்து நெடும்போர் குறித்துச்
செல்லற்கு உரியன திட்டஞ் செய்வான்
வல்லையில் ஏகுதும்; மங்கலம் உமக்கே. 3

[அருள் வரதன் முதலியோர் போக]

இரண்டாம் அங்கம் – மூன்றாம் களம் முற்றிற்று.

கலித்துறை

அடைய மனோன்மணி அம்மையுஞ் சேரனும்
ஆசைகொள்ள
இடையில் நிகழ்ந்த கனாத்திற வைபவம் என்னை யென்க!
உடலுள் உலண்டெனவே யுழல்கின்ற உயிர்கள் அன்புந்
தடையில் கருணையுஞ் சந்தித்தல் எங்ஙனஞ் சாற்றுதுமே?

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம்: பாண்டியன் அரண்மனை **காலம்:** காலை

[ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை]

நிலைமண்டில ஆசிரியப்பா

ஜீவகன்: ஐயம்என்? அருஞ்சூழ் அமைச்சநின் தனையன்
பெய் வளைக்கன்னி யென் பேதையின் வதுவைக்கு
உரியன முற்றும் ஒருங்கே முடித்து
வருவதற்கு அமைந்த வலிமையும் கல்வியும்
உபாயமும் யாவும் உடையான்; அதனால்
அபாயங் கருதிநீ ஐயுறல் வீண்! வீண்!

குடிலன்: பலதேவனால் ஒரு பழுதுறு மெனஎனக்கு
இலையிலை ஐயம் சிறிதும். உலகத்து
இயற்கை யறியா இளையோ னாகிலும்
முயற்சியில் மதியில் முதியோன் எனவே 10
மொழிகுவர். அவனாற் பழுதிலை. கொற்றவ!
வஞ்சி நாட் டுள்ளார் வஞ்சனைக்கு அஞ்சார்.
நஞ்சினுங் கொடிய நெஞ்சினர். அவர்தாம்
கெஞ்சிடில் மிஞ்சுவர்; மிஞ்சிடிற் கெஞ்சுவர்:
என்னுந் தொல்மொழி யொன்றுண்டு; அதனால்
மன்னவ! சற்றே மருளும் என்னுள்ளம்
அன்றியும் புருடோத்தமன் எனும் அரசன்
கன்றுஞ் சினத்தோன் என்றார் பலரும்.

ஜீவ : சினத்தோ னாயின்என்? தேவருந் தத்தம்
மனத்தே அவாவி மயங்கு நம்மனோன்மணி 20

Koviloor Digital Library

திருவும் வெருவும் உருவும் பெருகும்
அருளுறை யகமும், மருளறும் உணர்வும்
முன்னமே இருடிகள் மொழியக் கேட்டுளன்.
அன்னவன் தன்னிடைப் பின்னரும் பெயர்த்துக்
குறிப்பால் நமது கொள்கை யுணர்த்திடில்,
செறித்திடுஞ் சிறையினை யுடைத்திடும் புனல்போல்
தாங்கா மகிழ்ச்சியுள் தாழ்ந்துஅவன் இப்பால்
தலையால் ஓடி வருவன். உனக்கு
மலைவு ஏன் மந்திரக் குடிலேந் திரனே!

குடி: முனிவர்கள் ஆங்கே முன்னர் மொழிந்தனர் 30
எனநாம் நினைப்பதற்கில்லை, நம்அமுதின்
எழிலெலாம் எங்ஙனம் முனிவோர் மொழிவர்?
துறந்தார்க்கு அவைதாம் தோற்றுமே மறந்தும்?
சிறந்த நூலுணர்வும் தெளிந்த தோர் உளமும்
செப்பினர் என்றிடில் ஒப்பலாந் தகைத்தே.
ஆயினும், மலையநாட்டு அரசன் நமது
தாயின் தன்மை சகலமும் இப்போது
அறியா தொழியான்; அயிர்ப்பொன் றில்லை.
நெறிமுறை சிறிதும் பிறழா நினது
தூதுவன் யாவும் ஓதுவன் திண்ணம், 40
அம்மா! தனியே அவன்பல பொழுதும்
மம்மர் உழன்றவன் போன்று, மனோன்மணி
அவயவத்து அழகெலா மாறாது அறைந்து அறைந்து
இமையவர் தமக்கும் இசையுமோ இவளது
பணிவிடை? நமது பாக்கியம் அன்றோ
அணிதாய் இருந்து இவட்குஆம் பணியாற்றுதும்!
என்றும் இப்படியே யிவள் பணிவிடையில்
நின்றுநம் உயிர்விடி லன்றோ நன்றாம்?
என்று அவன் பலமுறை யியம்பல் கேட்டுளனே.

ஜீவ: ஐயமோ? குடிலா! மெய்ம்மையும் இராஜ 50
பத்தியும் நிறைந்த பலதேவன் தன்
சித்தம் என்குல திலக மாந்திருவுடன்

Koviloor Digital Library

பரிவுறல் இயல்பே, அரிதாம் நினது
புத்திரன் என்னில், இத்திறம் என்று இங்கு
ஓதவும் வேண்டுவது உளதோ ஏதுஇதும்?

குடி: அது குறித்தன்றே அறைந்தது எம்இறைவ!
மதிகுலக் கொழுந்தாம் மனோன்மணி சீரெலாம்
அறியினுஞ் சேரன்வெறி கொளுஞ் சிந்தையன்
ஆதலின் வதுவைக்கு அவன்தான் இசைவனோ,
யாதோ எனஎன் மனந்தான் அயிர்க்கும். 60
அவன்குணம் ஒருபடித் தன்றே அவனுளம்
உவந்தன எல்லாம் உஞற்றுவன் என்றே
நாட்டுளார் நவில்வது கேட்டுளாய் நீயும்.

ஜீவ: ஆம்! ஆம்! அறிந்துளேம். ஏமாப் படைந்த
தன்னுளம் வியந்தவை இன்ன என்றில்லை.
வேதம் வகுத்த வியாசன் வியந்து
போற்றினும் பொருட்டாய் எண்ணான்; புலையன்
சாற்றுதல் ஒருகால் தான் மகிழ்ந்திடுவன்;
ஒருவன் தனது அடியிணை யடைந்துறவே
பெரிது விரும்பினும் பெருமை பாராட்டுவன்; 70
மற்றோர் மனிதன் சற்றும் எண்ணாதே
செருப்பால் மிதிக்கினும் விருப்பாய் இருப்பன்;
மலர்இடில் காய்வன்; பரல்இடில் மகிழ்வன்;
பெரியோர் சிறியோர் பேதையர் அறிஞர்
உரியோர் அயலோர் என்றுஅவ னொன்றும்
உன்னான். ஆயினும் இன்னவை யாவும்
பிரபுத்துவம் அலால் பிறஅல குடிலா!

குடி: அடியேற்கு அவ்விடத்து ஐயமொன்று உளது.
முடிபுனை மன்னரிற் கடிநகர்ச் செருக்கும்
இணையிலாச் சேனையும் ஈறிலா நிதியும் 80
துணிவறா வுளனும் பணிகிலா வுரனும்
உனைவிட எவர்க்குஉள? ஒதுவாய். உன்வயின்
தினை யளவேனும் சேரா தாகும்
ஒருகுணம் பிரபுத்துவம் என யாரே

Koviloor Digital Library

உரைதர வுன்னுவர்? ஒவ்வுவது எவ்விதம்?
மலையன் தந்தைகீழ்த் தாய்க்கீழ் வளர்ந்தவன்
அலன்எனுந் தன்மைநீ ஆய்ந்திலை போலும்.
நன்றுதீது என்றுஅவன் ஒன்றையும் நாடான்
என்றிடில் நாம்சொலும் நன்மையும் எங்ஙனம்
நாடுவன்என எனக்கு ஓடும்ஓர் நினைவே. 90

ஜீவ: ஒக்கும்! ஒக்கும்நீ யுரைத்தவை முற்றும்.
குலகுரு கூறுதல் கொண்டிலம் என்னில்
நலமன்று என்றே நாடி யனுப்பினோம்.
நயந்திலனாகில் அவன்விதி. நமக் கென்?
இயைந்த கணவர் வேறு ஆயிரம் காண்குதும்.

குடி: அதற்கென் ஐயம்? ஆயிரம்! ஆயிரம்!
இதுமாத்திர மன்று இறைவ! சேரன்
சென்றவர்க்கு எங்ஙனம் தீது இழைப்பானோ
என்றே என்மனம் பதறும். ஏவு முன்
உரைக்க உன்னினேன் எனினும் உன்தன் 100
திருக் குறிப்பிற்கு எதிர் செப்பிட அஞ்சினேன்

ஜீவ: வெருவலை குடிலா! அரிதாம் நமது
தூதுவர்க்கு இழிபு அவன் செய்யத் துணியும்,
போதலோ காணுதி, பொருநைத் துறைவன்
செருக்கும் திண்ணமும் வெறுக்கையும் போம்விதம்!
விடுவனோ சிறிதில்! குடில! உன்மகற்குத்
தினைத்துணை தீங்குஅவன் செய்யின்என் மகட்கும்
பனைத்துணை செய்ததாய்ப் பழி பாராட்டுவன்.

[ஒற்றன் வர]

ஒற்றன்: மங்கலம்! மங்கலம்! மதிகுல மன்னவ!

ஜீவ : எங்குளார் நமது தூதுவர்? 110

ஒற்றன்: இதோ! இம்
மாலையில் வருவர். வாய்ந்தவை முற்றும்இவ்
ஓலையில் விளங்கும். ஒன்னலர் ஏறே!

[ஒற்றன் போக, ஜீவகன் ஓலை வாசிக்க]

Koviloor Digital Library

குடி : (தனதுள்) ஒற்றன் முகக்குறி ஓரில்எம் எண்ணம்
முற்றும் முடிந்ததற்கு அற்றமொன்று இல்லை.
போரும் வந்தது. நேரும் புரவலற்கு
இறுதியும் எமக்குநல் லுறுதியும் நேர்ந்தன.

ஜீவ : (தனதுள்) துட்டன்! கெட்டான்! விட்ட நம் தூதனை
ஏசினான்; இகழ்ந்தான் பேசிய வதுவையும்.
அடியில்நம் முடிவைத்து அவனாணை யிற்கீழ்ப்
படியில் விடுவனாம்: படைகொடு வருவனாம்; 120
முடி பறித்திடுவனாம். முடிபறித்திடுவன்!
(குடிலனை நோக்கி) குடிலா! உனைப்போல் கூரிய மதியோர்
கிடையார். கிடையார். அடையவும் நோக்காய்.
கடையவன் விடுத்த விடை அதிவியப்பே!
[குடிலன் ஓலை நோக்க]

குடி : நண்ணலர் கூற்றே! எண்ணுதற்கு என்னே!
உண்ணவா என்றுயாம் உறவு பாராட்டில்
குத்த வாஎனும் உன்மத்தன் அன்றே யிவன்!
யுத்தந் தனக்கு எள் ளத்தனை யேனும்
வெருவினோம் அல்லோம், திருவினுஞ் சீரிய
உருவினாள் தனக்கு இங்கு உரைத்தோர் குற்றமும் 130
இழிவையும் எண்ணியே அழியும் என்னுளம்!

ஜீவ : பொறு! பொறு! குடில! மறுவிலா நமக்கும்
ஒரு மறுக் கூறினோன் குலம் வேரோடுங்
கரு வறுத்திடல் உன் கண்ணாற் காண்டி.

குடி : செருமுகத்து எதிர்க்கில் பிழைப்பனோ சிறுவன்?
ஒரு மயக்கதனால் பொருவதற்கு எழுந்தான்.
வெற்றி யாம் முற்றிலுங் கொள்வே மெனினும்.
ஆலவாய் உள்ள படைகளை அழைக்கிற்
சாலவும் நன்றாம். காலம் இங்கு இலையே,

ஜீவ : வேண்டிய தில்லை யீண்டுஅவ ருதவி 140
தகாதே அந்த நிகாதர் தம் சகாயம்.

Koviloor Digital Library

ஒருநாள் பொருதிடில் வெருவி யோடுவன்.
பின் அழைத்திடுவோம் அதுவே நன்மை.
புலிவேட்டைக்குப் பொருந்துத் தவிலடி
எலி வேட்டைக்கும் இசையுமோ? இயம்பாய்.

குடி: அன்றியும் உடனே அவன் புறப்படலால்
வென்றிகொள் சேனைமிக இராது அவன்பால்

ஜீவ : இருக்கின் என் குடிலா! பயமோ இவற்கும்?
பொருக்கெனச் சென்றுநீ போருக்கு வேண்டியவெலாம்
ஆயத்தம் ஆக்குதி. யாம்இதோ வந்தனம். 150

[ஜீவகன் போக, வாயில் காத்த
சேவகன் வணங்கி வந்து]

சேவ : விழுமிய மதியின் மிக்கோய்! நினைப்போல்
பழுதிலாச் சூழ்ச்சியவர் யாவர்? நின் மனம்
நினைந்தவை யனைத்தும் நிகழுக ஒழுங்கே.

குடி : (தனதுள்) நல்லது! நல்லது! செல்லாய்! அப்பால்,

[சேவகன் போக]

சொல்லியது என்னை! சோரன் நமது
நினைவு அறிந்துளனோ! நிருபர்க்கு உரைப்பனோ?
இளையவன் எங்ஙனம் உணருவன்? வினையறி
நாரணன் ஓர்ந்து நவின்றனன் போலும்...
காரணம் அதற்குங் கண்டிலம். ஆ! ஆ!
மாலைக்காக வாழ்த்தினன் இவனும்! 160
புலமையிற் சான்றோர் புகல்வது பொய்யல்ல.
"கள்ள மனந்தான் துள்ளும்" என்பதும்
"தன்னுளந் தன்னையே தின்னும்" என்பதும்
"குற்ற முள்ளோர் கோழையர்" என்பதும்
சற்றும் பொய்யல. சான்று நம்மிடத்தே
கண்டனம். அவன்எம் அண்டையில் அம்மொழி
விளம்பிய காலை விதிர்விதிர்ப்பு எய்தி
உளம் படபடத்துஎன் ஊக்கம் போனதே.
சிச்சீ! இச்சைசெய் அச்சம் சிறிதோ!

Koviloor Digital Library

வஞ்சனை யாற் பெறும் வாழ்வு ஈதென்னே! 170
நஞ்சுபோல் தனது நெஞ்சங் கொதிக்கக்
கனவிலும் நனவிலும் நினைவுகள் பலவெழத்
தன்னுளே பன்முறை சாவடைந்து அடைந்து
பிறர் பொருள் வௌவும் பேதையிற் பேதை
எறிகடலுலகில் இலை யிலை. நில்! நில்!–
நீதியை நினைத்தோ நின்றேன்! பள! பள!
ஏது இது? என் மனம் இங்ஙனத் திரிந்தது!
கொன்றபின் அன்றோ முதலை நின்றழும்?
வா வா காலம் வறிதாக்கினையே.
ஓவாது இவையெலாம் உளறுதற்கு உரிய 180
காலம் வரும். வரும். சாலவும் இனிதே!

[குடிலன் போக]

மூன்றாம் அங்கம் – முதற் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம்: ஊர்ப்புறம் ஒருசார் **காலம்:** எற்பாடு

நேரிசை ஆசிரியப்பா

நடராஜன்: (தனிமொழி)

காலையில் கடிநகர் கடந்து நமது
வேலை முடிக்குதும் வேண்டின் விரைவாய்
இன்றிரா முடிக்கினும் முடியும். துன்றுஅராக்
கவ்விய முழுமதிக் காட்சியில் செவ்விதாம்
பின்னிய கூந்தற் பேதையின் இளமுகம்
என்னுளத்து இருந்துஇங் கியற்றுவது இப்பணி.
அதனால் அன்றோ இதுபோல் விரைவில்
இவ்வினை இவ்வயின் இனிதின் முடிந்தது?
எவ் வினையோர்க்கும் இம்மையில் தம்மை
இயக்குதற்கு இன்பம் பயக்கும் ஓரிலக்கு 10
வேண்டும். உயிர்க்கு இது தூண்டுகோல் போலாம்.
ஈண்டு எப்பொருள் தான்இலக்கு அற்றிருப்பது?
இதோஓ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி.
அதன்சிறு பூக்குலை யடி யொன்று உயர்த்தி
இதமுறத் தேன்துளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து
ஆசிலாச் சிறு காயாக்கி, இதோ! என்
தூசிடைச் சிக்குந் தோட்டியுங் கொடுத்தே, 20

Koviloor Digital Library

"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில்
தழைப்பதற்கு இடமிலை: சிறார்நீர் பிழைப்பதற்கு
ஏகுமின். புள்ஆ எருது அயத்து ஒருசார்
சிக்கி நீர் சென்மின்!" எனத்தன் சிறுவரைப்
புக்க விட்டிருக்கும் இப்புல்லின் பரிவும்
பொறுமையும் புலனுங் காண்போர்; ஒன்றையும்
சிறுமையாச் சிந்தனை செய்யாது ஆங்காங்கு
தோற்று பேரழகும் ஆற்றல்சால் அன்பும்
போற்றுதங் குறிப்பிற்கு ஏற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப, 30
ஆர்த்தெழும் அன்பினால் அனைத்தையுங் கலந்துதம்
என்பெலாங் கரைக்கும்நல் லின்பந் திளைப்பர்.
தமக்கு ஊண் நல்கும் வயற்கு உபயோகம்
எனப்பலர் கருதும்இச் சிறுவாய்க்கால்
செய்தொழில் எத்தனை விசித்திரம்! ஐயோ!
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட அன்றோ நடப்பதுஇச் சிறுகால்!
பார்இதோ! பரற்களை நெறு நெறு என்றுரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக்கு அடங்கிய மண்கல் புல்புழு 40
இன்னதென் றில்லை; யாவையும் ஈர்த்துத்
தன்னுட்படுத்தி முந்நீர் மடுவுட்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகும் இவையென வோர்ந்து உருட்டிக்
கொண்டு சென்று இட்டு மற்று "ஐயா
அண்டயோனியின் ஆணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீழ் அருவியாய்த் தூங்கியும், குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்பல நுழைந்தும்,
கதித்தெழ சுனையாய்க் குதித் துஎழுந்து ஓடியும். 50
ஊறிடுஞ் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்,

Koviloor Digital Library

ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்,
மதகிடைச் சாடியும், வாய்க்கால் ஓடியும்
பற்பல பாடு யான் பட்டு அங்கு ஈட்டியது
அற்பமே யாயினும் ஆதரவாய்க் கொள்:
இன்னமும் ஈதோ ஏகுவன்," என விடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்துஇவண் அடைந்து, மற்று இராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்கும் இந்நிலைமையர் யாவர்?
(நீரைக் கையால் தடுத்து) நிரந்தரம்! ஐயோ!
நொந்தனை நில்! நில்! 60
இரைந்த தென்? அழுவையோ! ஆயின் ஏகுதி.
நீரே! நீரே! என்னை யுன் நிலைமை?
யாரே யுனைப்போல் அனுதினம் உழைப்போர்?
நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப்போல் உளவேல் பிணைப் பேறு என்னை?–
[நாங்கூழ்ப்புழுவை நோக்கி]
ஓகோ! நாங்கூழ் புழுவே உன்பாடு
ஓவாப் பாடே உணர்வேன்! உணர்வேன்!
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்.
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ.
எம் மண்ணாயினும் நல் மண்ணாக்குவை. 70
விடுத்தனை யிதற்கா, எடுத்த உன் யாக்கை.
உழுது உழுது உண்டு மண் மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய் வேதித்து உருட்டி
வெளிக் கொணர்ந்தும், புகழ் வேண்டார் போல
ஒளிக்குவை உன் குழிவாயும் ஓர் உருண்டையால்!
இப் புற்பயிர் நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி யுண்டாம்? எண்ணாது உனக்குங்
குறும்புசெய் எறும்புங் கோடி கோடியாய்ப்
புழுக்களும் பூச்சியும் பிழைக்கு மாறென்னை?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்கு உள? 80
[நாங்கூழ்ப் புழு குழிக்குள் மறைதலை நோக்கி]

Koviloor Digital Library

விழுப்புகழ் வேண்டலை. அறிவோம். ஏனிது?
துதிக்கலம். உன் தொழில் நடத்துதி. ஆ! ஆ!
எங்கும் இங்ஙனே இணையிலா இன்பம்!
பங்கமில் அன்பும் தங்குதல் திருந்தக்
காணார் பேணும் வாணாள் என்னே!
அலகிலாத் தோற்றமோடு இலகிய வுலகில்
சிதறிய குணக் கதிர் செறிந்து திரள
வைத்த சிற்றாடியின் மையமே ஒத்த
உள்ளமும் உடலும் பெற்றும், கள்வர்...
நினைக்கலை, தீயனை நினைப்பதும் தீதே! 90
சினக் கனல் எழும்பும், நமக்கு ஏன் இச்சினம்?
கிருபணன் தீனன். விடு விடு. அஃதுஎன்?
என்கொல் அத்தோற்றம்? புகையோ? – மங்குதலுக்கு
இந்நிற மில்லை. செந்நிறப் படாம்என,
பொதியில் நன்முகடாம் பொற்புறு கருவிற்
கதிமிகு தினமெனும் பொன் வினைக் கம்மியன்
உருக்கி விடுதற்கு உயர்த்தி ஆடகப்
பொருக்கென விளங்கிய அருக்கனது ஒளியைப்
பொருக்கெனப் புதைத்தஇப் புழுதி யென்னே?
இதோ! துவண்டு அங்கு இடையிடைத் தோற்றுவ 100
பதாகையின் தொகுதி யன்றோ பார்க்கின்!
இடி யுருண்டதுபோல் எழு மொலி தேரொலி!
அடுபடை கொண்டிங்கு அடைந்தவன் யாவன்?
வரு திசை நோக்கில் வஞ்சியனேயாம்.–
பொருதற்கு அன்று அவன் வருவது, சரிசரி!
வதுவைக்கு அமைந்து வந்தான் போலும்.
இது வென்? ஒகோ! மணப் பாட்டு அன்று இது.

[வஞ்சிநாட்டுச் சேனை அணிவகுத்து வழியில் ஒரு புறம்போகப் படைப்பாணர் பாட.]

வஞ்சித் தாழிசை

படைப்பாணர்: அஞ்சலில் அரிகாள்! நும்
சஞ்சிதப் பெரு வாழ் வெம்

Koviloor Digital Library

வஞ்சியன் சினத்தாற் கண்
துஞ்சிய கனவே காண்.

படைகள்: ஜே! ஜே! ஜே!

பாணர்: எஞ்சலில் பகையாள்! நும்
மஞ்சுள மணி மகுடம்,
வஞ்சியன் சினத்தால் நீர்
கஞ்சியுண் கடிஞையே காண். 2

படை: ஜே! ஜே! ஜே!

மிஞ்சிய பகையாள்! நும்
துஞ்சிய பிதிர்க்கூட்டம்,
வஞ்சியன் சினத்தால் என்
நெஞ்சிலும் நினையார் காண். 3

படை: ஜே! ஜே! புருஷோத்தமர்க்கு ஜே! ஜே!

நேரிசை ஆசிரியப்பா தொடர்ச்சி

நட : பார் புதைத்து எழுந்த வீரர்தம் ஆர்ப்பும்,
வார்கழ லொலியும், வயப்படை யொளியும்,
பாடிய பாட்டின் பண்ணும், தலைமிசைச் 110
சூடிய வஞ்சித் தொடையும், தண்ணுமை
பொருவு தம்புயத்தில் வெண்கலப் பொருப்பில்
உருமு வீழ்ந் தென்னத் தட்டிய ஓதையும்,
இரு கனல் நடமிடும் ஒரு கருமுகிலில்
மின்னுதித்து அடங்கல் போல் துன்னிய சினநகை
காட்டிய முகக்குறி யாவும் நன்றல.
வேட்டலோ இதுவும்! விளையு மாறெவனோ!
நினைவிலும் விரைவாய் நனிசெலுங் குரத்த
கொய்யுளைத் திரைக் கடற் கூட்டமும், பெய்மத
மைம்முகில் ஈட்டமும், வான்தொடு விலோதனப் 120
பெருஞ் சிறை விரித்து நெடுந்திசை புதைத்துச்
செல்லும் அசலத் திரளுஞ் செறிந்து

Koviloor Digital Library

நெல்லையை வெல்லவே செல்வது திண்ணம்.
அந்தோ! அந்தோ! மனோன்மணி வதுவை
வந்த வாறிதுவோ! வந்த வாறிதுவோ!

[இரண்டு உழவர்கள் வர]

முதல் உழவன்: வியப்பு என்? சுவாமி!

நட: வயப்படை வந்தது
அறிவையோ நீயும்?

முதல் உழ: அறிவேன். போருக்கு
அழைத்திடில் யாவர் அணுகார்?

நட: வழுதி
மணமொழி வழங்க அன்றோ விடுத்தான்;

2-வது உழ : மணமொழி பிணமொழி யானது. குடிலன் 130
கை தொடில் மஞ்சளும் கரியாகும்மே!

நட: செய்த தென்?

முதல் உழ: ஐயா! அது நாம் அறியோம்!
குடிலன் படிறன். கொற்றவன் நாடும்
முடியுங் கவர்ந்து மொய்குழல் மனோன்மணி
தன்னையுந் தன்மகற்கு ஆக்கச் சமைந்தான்.
மன்னனைக் கொல்ல மலையனைத் தனக்குச்
சூதாய்த் துணைவரக் கூவினான்!

நட: சீச்சீ!
ஏதிது? வஞ்சியான் வஞ்சனைக்கு இசையான்.
பொய் பொய். புகன்றது ஆர்?

முதல் உழ: பொய்யல. பொய்யல.
ஐய! நான் அறைவது கேட்டி. எனது
மைத்துனன் அவன் தாய் மரித்த மாசம்
உற்றதால் அந்தத் திதியினை யுணரச்
சென்றனன் புரோகித சேஷைய னிடத்தில்.
(2–வது உழவனை நோக்கி) அன்று நாள்
ஆதித்தவாரம். அன்றுதான்

Koviloor Digital Library

சாத்தன் உன்னுடன் சண்டையிட்டது.
(நடராஜனை நோக்கி) சாத்திரி தரையில் இருக்கிறார். அவரது
மாமனார் கிட்டவே ஆமைப் பலகையில்...
(நாற்புறமும் நோக்கி, செவியில்) இருந்து பல
பல இரகசியம் இயம்புவர் –

நட: திருத்தச் செப்பாய் யாருளர் இவ்வயின்?

2-வது உழ: இந்த மாமனார் மந்திரி மனைவிக்கு
உற்ற ஜோசியர். 150

முதல் உழ: பொறு! யான் உரைப்பன்
மற்றுஅவ் எல்லையென் மைத்துனன் ஒதுங்கி
அருகே நின்றனன் அப்போது அறைவர்: –
"மருகா! நேற்று மந்திரி மனைவி
பலபல பேச்சுப் பகருங் காலை,
பலதேவன் தன் ஜாதக பலத்தில்
அரச யோகம் உண்டென்று அறைந்தது
விரைவில் வருமோ என்று வினவினள்.
வரும் வரும் விரைவில் என்றேன் யானும்.
மறுமொழி கூறாது இருந்துபின் மனோன்மணி 160
வதுவைக் காரியம் பேசினள். மற்று அது
நடக்குமோ? என்று அவள் கேட்டு நகைத்தாள்.
நடப்பது அரிதென நான் மொழிந்ததற்கு
வருத்தம் உற்றவள்போல் தோற்றினும், கருத்திற்
சிரித்தனள் என்பது முகத்தில் தெரிந்தேன்."–
எனப் பல இரகசியம் இயம்பி, "வலியோர்
மனக்குறி, முகக்குறி, வறிதாஞ் சொற்கள்
இவைபோல் வருபவை எவைதாம் காட்டும்?"
என உரைத்து இருவரும் எழுந்துபின் நகைத்தார்.
பினையென் மைத்துனன் பேசி மீண்டு உடனே 170
எனக்கு இங்கிவையெலாம் இயம்பினன் உனக்குச்
சாக்கி வேண்டுமேற் காக்கைச் சுப்பனும்
உண்டு. மற்று அவனைக் கண்டுநீ வினவே.

Koviloor Digital Library

2-வது உழ: வேண்டாம் வேண்டாம் ஐயம்மற் றதற்கு,
மீண்டும் ஒரு மொழி கேள். இவ் வழியாய்த்
தூதுவர் போகுங்காலைத் தாக
ஏதுவால், இரும்படி இராமன் என்றன்
தங்கை மனைக்கு வந்தஅத் தருணம்
அங்கு யான் இருந்தேன். "அரண்மனைச் செய்தி
என்ன?" என்றேற்கு அவன் இயம்பும் "மன்னன் 180
தெத்து எடுத்திடும்படி யத்தனமுண்டு" என
"எப்போது யாரை?" என்றேற்கு ஒன்றும்
செப்பாது எழுந்து சிரித்து அவன் அகன்றான்.

முதல் உழ : பலதேவற்கு இவன் நலமிகு சேவகன்,

2-வது உழ : குடிலன் ஆள்வதைவிடக் குடகன்ஆள் வதுநலம்.

முதல் உழ : ஆயினும், நமக்கு அஃது இழிவே. மேலும்
தாயினுஞ் சிறந்த தயாநிதி மனோன்மணிக்கு
உறுதுயர் ஒருவரும் ஆற்றார்.

2-வது உழ: அறிவிலாத்
தந்தையர் தம்வினை மக்களைச் சாரும்.
சுந்தர வாணியின் சிந்தைநோய் வழுதியை 190
விடுமோ? சொல்லாய்.

முதல் உழ : விதியெனப் பலவும்
படியோர் பாவனை பண்ணித் தமது
கடமையின் விலகுதல் மடமை, அதனால்
நாட்டில் போர்வரின் நன்கு பாராட்டி
எஞ்சா வெஞ்சமர் இயற்றலே தகுதி.

2-வது உழ : அரசன், அரசனேற் சரியே. சுவாமி!
உரையிர் நீரே. திருவார் வாணியை
அறியீர் போலும்.

நட : அறிவோம். அறிவோம்!
நல்லது அப்புறம் செல்லுமின் நீவிர்

[உழவர் போக]

Koviloor Digital Library

(தனதுள்) ஏழைகள் தங்கள் ஆழமில் கருத்தில் 200
தோற்றுவது அனைத்துஞ் சாற்றுவர். அவர்தம்
தேற்றமில் மாற்றம், சிறுமியர் மழலைபோல்
சுகந்தரு மொழிபோல், சுகந்தரும். சூழ்ச்சியும்
அனுமானிக்கும் அளவையும் முனும் பினும்
கூட்டிக் காரண காரியக் கொள்கைகள்
காட்டலும், காணக் களிப்பே! ஆயினும்
பழுது அல பகர்ந்தவை முழுதும். முன்னோர்
ஜனமொழி தெய்வமொழி யெனச் செப்புவர்.
அரசியல் இரகசியம் அங்காடி யம்பலம்
வரும் விதம் இதுவே! மட்குடத்து உளநீர் 210
புரைவழி கசிந்து புறம் வருந் தன்மைபோல்.
அரசர் அமைச்ச ராதியர் தங்கள்
சிந்தையிற் புதைத்த அந்தரங்கப் பொருள்
விழிமுகம் நகைமொழி தொழில்நடை யிவைவழி
ஒழுகிடும். அவைகளை யுழையுளார் தமக்குத்
தோற்றிய பலவொடுந் தொடுத்துக் காற்றில்
தூற்றுவர். எனினுஞ் சொன்னவை முற்றும்
குடிலன் குணமுடன் கூட லால்அவையும்,
படை யிவண் வர நாம் பார்த்ததும்,
அடையவும் முனிவர்க்கு அறைகுவம் சென்றே. 220

[நடராஜன் போக]

மூன்றாம் அங்கம் – இரண்டாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library

இடம்: கன்னிமாடம், நிலா முற்றம் **காலம்:** யாமம்

[மனோன்மணி உலாவ, வாணி நிற்க, செவிலி படுத்துறங்க]

நேரிசை ஆசிரியப்பா

செவிலி: ஏதம்மா! நள்ளிரா! எழுந்து உலாவினை–
(படுத்தபடியே) தூக்கம் ஒழிவையேல் சுடுமே யுடலம்

மனோ: உடலால் என்பயன்? சுடவே தகும் அது.
வேர்க்கிறது இவ்விடம். வெளியே யிருப்பல்,
போர்த்து நீ தூங்கு! [செவிலி தூங்க]
வாணி உனக்கும்
உறக்க மில்லையோ?

வாணி: எனக்கு அது பழக்கம்.

மனோ: வருதி யிப்புறம். இரு இரு...
[இருவரும் நிலா முற்றத்தில் இருக்க]
இதுவரை
எங்கு இருந்தன இவ்அன்றிற் பேய்கள்!
நஞ்சோ நாவிடை? நெஞ்சந் துளைக்கும்!
உறக்கங் கொண்டனள் செவிலி! குறட்டை கேள். 10
கையறு நித்திரை! வாணீ! மற்றுஇது
வைகறை யன்றோ?

வாணி: நடுநிசி அம்மா!

மனோ: இத்தனை யரவம்ஏன்? முனிவர் அறையில்
நித்தமும் உண்டிது! நிதியெடுப் பவர்போல்
தோண்டலும் மண்ணினைக் கீண்டலுங் கேட்டுளேன்
ஊரில்ஏன் இன்று இவ்வுற்சவ அரவம்?

Koviloor Digital Library

வாணி: (தனதுள்) போரெனிற் பொறுப்பாளோ?
உரைப்பனோ! ஒளிப்பனோ]

மனோ: கண்டதோ நகரும் காணாக் கனவு?

வாணி: கண்டது கனவோ தாயே? 20

மனோ: கண்டது...
கனவெனிற் கனவும் அன்று; மற்று
நனவெனில் நனவும் அன்று.

வாணி: நன்றே!
கண்ணாற் கண்டிலை போலும்! அம்ம!

மனோ: கண்ணால் எங்ஙனங் காணுவன்? கண்ணுளார்!

வாணி: எண்ணம் மாத்திரமோ? இதுவென் புதுமை!

மனோ: எண்ணவும் படாஅர்! என்னுளும் உளாஅர்!

வாணி: புதுமை! ஆயினும் எதுபோல்? அவ்வுரு

மனோ: இதுவென வெண்ணா வுவமையிலொருவரை
எத்திறம் என்றுயான் இயம்ப! நீயும்
சித்திரரேகை அலையே. விடு விடு!
பண்ணியல் வாணீ! வா வா! உன்றன் 30
பாட்டது கேட்டுப் பலநாள் ஆயின!

வாணி: என்பா டிருக்க! யாவரும் அறியார்!
உன்பா டதுவே ஒருவரும் அறியார்!

மனோ: பாக்கிய சாலிநீ! பழகியும் உளையே!
நீக்குக இத் தீ நினைவு! யாழுடன்
தேக்கிய இசையிற் செப்புஒரு சரிதம்

[வாணி வீணை மீட்ட]

அவ்இசை யேசரி! ஒவ்வும்இத் தருணம்!

[வாணி பாடுகிறாள்]

Koviloor Digital Library

சிவகாமி சரிதம்

குறள்வெண் செந்துறை

"வாழிய நின் மலரடிகள்!
மௌன தவ முனிவ!
மனமிரங்கி அருள்புரிந் தோர்
வார்த்தை யெனக்கீயிற்
பாழடவி இதிற் சுழன்று
பாதைவிடுத் தலையும்
பாவியொரு வனை அளித்த
பலன் உறுவை பெரிதே. 1

சாரும்வரைகு றியாது
தன்நிழலை அளக்குந்
தன்மையென நான் நடக்கத்
தான்வளரும் அடவி.
ஆரிருளில் இனி நடக்க
ஆவதிலை. உடலம்
ஆறும்வகை வீடுளதேல்
அடையும் நெறி அருளாய்." 2

என்ற மொழி கேட்ட முனி
யெதிர்விடை யங் கியம்பும்:–
"ஏகாந்தப் பெரும் ககனம்;
இதில் உலகர் அணையார்;
சென்றுறைய மடமுமிலை;
திகழ்வெளி என்வீடு;
சிந்தையற நொந்தவர்க்குச்
சேரவிலை பந்தம். 3

அறங் கிடந்த சிந்தையராய்
ஆசையெலாந் துறந்த
அதிவீர ரொழிய எவ
ராயினும் இங் கடையார்.

Koviloor Digital Library

உறங்க அவர் பணிப்பாயும்
பூவணையும் உன்னார்
உண்ண வெனில் பாலமிழ்தும்
ஒன்றாக மதியார். 4

ஆதலில் என்பால் உறுவது
யாதெனினும் மைந்த!
அன்புடன் நீ யென் பிறகே
அணையில் அஃதுனதாம்.
வேதனையும் மெய்ச்சலிப்பும்
விட்டகல இருளும்
விடியும். உடன் மன மிருக்கில்
வேண்டு மிடம் ஏகாய்." 5

என்றுரைத்த இனிய மொழி
யிரு செவியுங் குளிர,
ஏதோ தன் பழ நினைவும்
எழ இருகண் பனித்து
நன்றெனவே தவ வடிவாய்
நின்ற மகன் வணங்கா
நம்முனிவன் செல் வழியே
நடந்து நனி தொடர்ந்தான். 6

இந்திரநற் சால வித்தை
யெதுவோ வொன்றிழைக்க
இட்ட திரை யெனத்திசைக
ளெட்டும் இருள் விரிய
அந்தரத்தே கண் சிமிட்டிச்
சுந்தர தாரகைகள்
அரிய ரகசியந் தமக்குள்
அறைந்து நகை புரிய; 7

என்புருகப் பிணைந்த அன்றில்
இணை சிறிது பிரிய
ஏங்கி யுயிர் விடுப்பவர் போல்
இடையிடையே கூவ,

Koviloor Digital Library

அன்பு நிலை யார் அறிவர்
என்பன போல் மரங்கள்
அலர் மலர்க்கண் நீரருவி
அக முடைந்து தூவ; 8

விந்தை நடப்பது தெரிக்க
விளிப்பவரில் வாவல்
விரைந்தலைய மின்மினியும்
விளக்கொடு பின் னாட;
இந்தவகை அந்தியை முன்
ஏவி இர வென்னும்
இறைவியும் வந்திருந்தனள்
மற் றிளைஞருயிர் வாட 9

பொறி யரவின் சுடிகை யுறு
பொலன் மணியின் ஒளியும்,
பொலி மதத் திண் கறையடியின்
புலை மருப்பின் ஒளியும்,
அறி வரிய சின வுழுவை
அழல் விழியின் ஒளியும்,
அலதிலை யவ் அடவியிடை
அயல் காட்டும் ஒளியே, 10

பிரிவரிய ஊசிவழி பின்
தொடரும் நூல்போற்
பேரயர்வின் மனம் இறந்து
பின்தொடரு மைந்தன்,
அரிய புதர் இடைய யகற்றி
அன்பொ டழைத் தேகும்
அம் முனிவன் அடியன்றி
அயலொன்றும் அறியான். 11

ஒருங்கார நிறை முளரி
உழை யொதுக்கி நுழைந்தும்,
உயர் மலையின் குகை
குதித்தும் ஓங்கார ஒலியே
தருங்கான நதி பலவுந்
தாண்டிஅவ ரடைந்தார்

Koviloor Digital Library

சார்பிலர்க்குத் தனித்துணையாந்
தவமுனிவன் இடமே. 12

நேயமுடன் எவ்வழியும்
நேர்ந்தவரைத் தன் நுண்
நிறுவுதலை வளைத் தழைக்கும்
நெருப் பொன்றும் அன்றி
வாயிலெனப் பூட்டென்ன
மதிலென்ன வழங்கும்
மனை யென்னும் பெயர்க்குரிய
மர பொன்றும் இன்றி. 13

நின்ற தனி யிடம் இவர்கள்
நேர்ந்த வுடன் முனிவன்
நெருப் பின்னும் எழுப்புதற்கு
நிமல விற கடுக்கி
ஒன்றியமெய்ப் பந்தரில்தன்
னுளங் கூசி யொருசார்
ஒதுக்குகின்ற மைந்தன்
அகமுவப்ப இவை யுரைக்கும்:– 14

"இனி நடக்க வழியுமிலை.
இனித் துயரும் இல்லை.
இதுவே நம் இடம் மைந்த!
இக்கனலின் அருகே
பனி பொழியும் வழி நடந்த
பனிப் பகல இருந்து
பல மூல மிது புசிக்கிற்
பறக்கும் உன திளைப்பே. 15

தந்நாவில் ஒரு விரலைத்
தாண்ட அறியாமற்
சாகரமும் மலைபலவுந்
தாண்டி அலைகின்றார்.
என்னே இம்மனிதர் மதி!"
என நகைத்து முனிவன்

Koviloor Digital Library

இனிய கந்த முதல் அனந்த
இனம் வகுத்தங் கிருந்தான். 16

இருந்த முனி "வருந்தினவ!
ஏதுனது கூச்சம்?
இருவருமே யொருவ ரெனில்
எவர் பெரியர் சிறியர்?
திருந்த அனல் அருகில் இனிச்
செறிந்துறைதி மைந்த!
சேர்ந்தார்க்குக் களிப்புதவும்
சேரர்க்குப் பனிப்பே" 17

என இரங்கி யிரண்டு முறை
இயம்பியுந்தன் அருகே
ஏகாமல் எதிரொன்றும்
இசையாமல் தனியே
மனம் இறந்து புறம் ஒதுங்கி
மறைந்து வறி திருந்த
மகன் மலைவு தெளிந்து வெளி
வரும்வகைகள் பகர்ந்தான் 18

பகர்ந்த நய மொழி சிறிதும்
புகுந்ததிலை செவியில்;
பாதிமுக மதி யொருகைப்
பதுமமலர் மறைப்பத்
திகழ்ந்த சுவர் ஓவியம்போல்
இருந்தவனை நோக்கி
சிந்தை நனி நொந்து முனி
சிறிது கருதிடுவான். 19

செந்தழலும் அந்தவெல்லை
திகழ்ந்தடங்கி யோங்கி
திகைக்க எலி பிடித்தலைக்குஞ்
சிறு பூனை யெனவே
விந்தையொடு நடம்புரிந்து
வீங்கிருளை வாங்கி
மீண்டுவர விடுத்தெடுத்து
விழுங்கி விளங்கினதே. 20

Koviloor Digital Library

மொழி யாதும் புகலாது
விழிமாரி பொழிய
முகங் கவிழ வதிந்த குறி
முனி நோக்கி வினவும்:–
"எழிலாரும் இளமையினில்
இடையூ றாதிகளால்
இல்லம் அகன் றிவ்வுருவம்
எடுத்திவண் வந்தனையோ? 21

ஏதுனது கவலை? உளத் திருப்ப
தெனக்கோ தாய்
இழந்தனையோ அறம்பொருளை?
இகழ்ந்தனரோ நண்பர்?
காதல் கொளநீ விழைந்த
மாது பெருஞ் சூதாய்க்
கைவிடுத்துக் கழன்றனளோ?
மெய் விடுத்துக் கழறாய். 22

ஐயோ இவ் வையகத்தில்
அமைந்த சுகம் அனைத்தும்
அழலால் இங்கெழுந் தடங்கு
நிழலாக நினையாய்.
கையாரும் பொருள் என்னக்
கருதி மணல் வகையைக்
காப்பதெலாம் இலவு கிளி
காத்தலினும் வறிதே. 23

நண்பர் உறவினர்கள் நமை
நாடி யுறவாடல்
நறுநெயுறு குடத் தெறும்பு
நண்ணல் என எண்ணாய்!
பெண்கள் அகக்காத லெலாம்
பேசு முயற் கொம்பே
பெருங்கபடம் இடுகலனோ
பிறங்கும் அவ ருடலம்!" 24

எரியும் உளம் நொந் தடிகள்
இசைத்த வசை யுட் கொண்டு

Koviloor Digital Library

ஏதிலன் நீள் கனவு விழித்
தெழுந்தவன் போல் விழித்து
விரிவெயிலில் விளக்கொளியும்
மின்னொளியிற் கண்ணும்
வெளிப்பட்ட கள்வனும்போல்
வெட்கி முகம்வெளுத்தான். 25

இசைத்த வசைச் செயலுணர
எண்ணி முகம் நோக்கி
இருந்த யதி இக்குறிகண்டு
இறும்பூதுள் ளெய்தி
விசைத்தியங்கும் எரி யெழுப்பி
மீண்டும் அவன் நோக்க
வேஷ ரகசியங்க ளெலாம்
வெட்டவெளி யான. 26

நின்மல விபூதியுள்ளே
பொன்மய மெய் தோன்றி
நீறுபடி நெருப்பெனவே
நிலவி யொளி விரிக்கும்
உண்மை திகழ் குருவிழிக்குள்
உட்கூசி யொடுங்கும்
உண்மைபெறு கண்ணினையும்
பெண்மை யுருத் தெரிக்கும். 27

கூசுமுகம் நாணமொடு
கோணி யெழில் வீசக்
குழற்பாரஞ் சரிந்து சடைக்
கோலமஃ தொழிக்கும்
வீசுலையின் மூக்கெனவே
விம்மிய வெய்துயிர்ப்பு
வீங்க வெழு கொங்கை
புனைவேட முழுதழிக்கும். 28

இவ்விதந் தன்மெய் விளங்க
இருந்த மகள் எழுந்தே
இருடிபதந் தலைவணங்கி
இம்மொழி யங் கியம்பும்:–

Koviloor Digital Library

"தெய்வமொடு நீ வசிக்குந்
திருக்கோயில் புகுந்த
தீவினையேன் செய்த பிழை
செமித்தருள்வை முனியே! 29

மண்ணுலகிற் காவிரிப்பூ
மாநகரிற் செல்வ
வணிக குல திலகமென
வாழ்வள் ஒருமங்கை.
எண்ணரிய குணமுடையள்.
இவள்வயிற்றில் உதித்தோர்
இருமகளிர் ஒருபுருட
ரென்ன அவர் மூவர். 30

ஒப்பரிய இப்புருடர்க்
கோர்புதல்வர் உதித்தார்.
ஒருத்தி மகள் யான் பாவி.
ஒருத்தி முழு மலடி.
செப்பரிய அம் மலடி
செல்வ மிக வுடையள்.
செகமனைத்தும் அவள் படைத்த
செல்வமென மொழிவர். 31

உடல் பிரியா நிழல் போல
ஒதிய அப்புதல்வர்
உடன்கூடி விளையாடி
யொன்றாக வளர்ந்தேன்.
அடல் பெரியர்; அருள் உருவர்;
அலகில் வடிவுடையர்.
அவருடைய திருநாமம்
அறைவேனோ அடிகாள்!" 32

உரைத்த மொழி கேட்டிருடி
யுடல் புளகம் மூடி
ஊறி விழிநீர் வதனம் ஒழுக
அஃதொளிக்க
எரிக்க விறகெடுப்பவன் போல்
எழுந்து நடந்திருந்தான்–

Koviloor Digital Library

இளம்பிடியுந் தன் கதையை
யெடுத்தனள் முன்தொடுத்தே. 33

''மலடி சிறுதாய் படைத்த
மதிப்பரிய செல்வம்
மடமகளென் றெனக் களித்தாள்.
மயங்கி அதில் மகிழ்ந்து
தலைதடுமாறாச் சிறிய
தமியளது நிலையுந்
தலைவனெனுந் தன்மையையும்
தகைமையையும் மறந்தேன். 34

குறிப்பா யுள்ளுணர்த்தியும் யான்
கொள்ளாது விடுத்தேன்.
குறும்பு மதியால் எனது
குடிமுழுதுங் கெடுத்தேன்.
வெறுப்பாக நினைந் தென்மேல்
வேதனைப்பட் டவரும்
வெறும் படிறென் னுள்ளமென
விட்டு விலகினரே. 35

பொருள் விரும்பிக் குலம் விரும்பிப்
பொலம் விரும்பி வந்தோர்
பொய்க்காதல் பேசினதோ
புகலில் அளவில்லை.
அருள் அரும்பி யெனை விரும்பி
ஆளும் என ததிபர்
அவரொழிய வேறிலை யென்று
அறிந்தும் அயர்ந்திருந்தேன். 36

ஒருவாரம் ஒரு மாதம்
ஒருவருட காலம்
ஓயாமல் உன்னி யழிந்தேன்.
உருவங் காணேன்.
திருவாருஞ் சேடியர்க்குச்
செப்ப அவர் சேருந்
திசை தேயம் எவர் அறிந்து
தெரிப்பரெனச் சிரித்தார் 37

Koviloor Digital Library

ஆயத்தார் கூடி யெனை
ஆயவுந்தன் ஒட்டார்.
அகல்வேலையோ எறியும்
அகோ ராத்திரங் கெடுத்து
தீயைத்தானே யுமிழுஞ்
சிறந்த கலை மதியும்
திரிந்துலவுங் காலும் உயிர்
தின்னும் நம னென்ன 38

கண்டவரைக் கேட்டவரைக்
காசினியில் தேடிக்
கண்டிடச் சென்றே அலைந்த
கட்டம் எனைத்தென்க!
உண்டெனத்தம் யூகநெறி
உரைப்பவரே யல்லால்
உள்ளபடி கண்டறிந்தோர்
ஒருவரையுங் காணேன் 39

உண்டெனிலோ கண்டிடுவன்;
இல்லையெனில் ஒல்லை,
உயிர் விடுதலே நலம்
என்றுன்னி யுளந் தேறி
கண்துயிலும் இல்லிடந்
தீ கதுவ வெளி யோடுங்
கணக்கா இவ்வேட மொடு
கரந்து புறப்பட்டேன். 40

தீர்த்த குலமூர்த்தி தலம்
பார்த்துடலஞ் சலித்தேன்.
திருக்கறுபற் குருக்கள் மடந்
திரிந்து மனம் அலுத்தேன்.
வார்த்தை கததும் வாதியர்
தம் மன்றனைத்தும் வறிய,
மறுத்துறங்கும் யோகியர்போய்
வாழ்குகையும் பாழே. 41

மான்மறாவக் கலையினமே!
வாழ்பிடி விட் டகலா

Koviloor Digital Library

மதம்பெருகு மாகுலமே!
வன்பிகமே! சுகமே!
நான் மறவா நாதனை
எஞ் ஞான்றும் அறிவீரோ?
நவில்வீர் எனப் பின்தொடர்ந்து
நாளனந்தங் கழித்தேன். 42

இவ்விடமும் அவ்விடமும்
எவ்விடமும் ஓடி
இதுவரையுந் தேடியும் என்
அதிபரைக் கண்டிலனே.
எவ்விடம் யான் நண்ண இனி
எவ்விடம் யான் உண்ண?
இக்காயம் இனி எனக்கு
மிக்க அருவருப்பே. 43

ஐயோ என்னுள்ள நிலை
அறியாரோ இனியும்?
ஆசை கொண்டு நான்
அலைந்த தத்தனையும் பொய்யோ?
பொய்யேதான் ஆயிடினும்
புனிதர் அவர் தந்த
போதமலால் வேறெனக்கும்
ஓதும் அறிவுளதோ? 44

நல்லர் அருளுடையர் என
நம்பி இதுவரையும்
நான் உழைப்ப தறிவரெனில்
ஏன் எதிர் வந்திலரோ?
இல்லையெனில் என்னளவும்
இவ்வுலகம் அனைத்தும்
எந்நலமுங் கொல்லவென
எடுத்த சுடுகாடே. 45

என்னுடைய உயிர்த்துணைவர்
எண்ணரிய அருளில்
ஏதோ சிற்சாயை உன
திடத் திருத்தல் கண்டு

Koviloor Digital Library

மன்னுதவ மாமுனிவ
மனத்துயரம் உன்பால்
வகுத்தாறினேன் சிறிது
மனுசாக்ஷி யில்லை. 46

இனி யிருந்து பெறும் பயனென்?
இவ் அழலே கதி'' யென்று
எரியும் அழல் எதிரே
நின் றிசைத்த மொழி முழுதும்
முன்செவியிற் புகுமுனமே
மூதுருவம் விளக்கி
முகமலர்ந்தங் கவளெதிரே
முந்தி மொழி குளறி.... 47

''சிவகாமி யான் உனது
சிதம்பரனே'' என்னச்
செப்புமுனம் இருவரும் மற்
றோருருவம் ஆனார்!
எவர்தாமுன் அணைந்தனர்
என் றிதுகாறும் அறியோம்.
இருவரும் ஒன்றாயினர்
என்றே அறையுஞ் சுருதி. 48

பரிந்துவந்து பார்வதியும்
பாரதியும் கஞ்சப்
பார்க்கவியும் யார்க்கிதுபோல்
வாய்க்குமென வாழ்த்த,
அருந்ததியும் அம்ம!
இஃதருங்கதி யென் றஞ்ச
ஆர்வம் உலகார்க வென
ஆரணங்கள் ஆர்த்தி. 49

ஆழிபுடைசூ ழுலகம்
யாவும் நலம் மேவ!
அறத்துறை புகுந்துயிர்கள்
அன்புவெள்ளம் மூழ்க!

Koviloor Digital Library

பாழில் அலைவே னுடைய
பந்தனைகள் சிந்த
பரிந்தருள் சுரந்தமை
நிரந்தரமும் வாழ்க! 50

மனோ : வாணி! மங்காய்! பாடிய பாட்டும்,
வீணையின் இசையும் விளங்குநின் குரலும்
தேனினும் இனியவாய்ச் சேர்ந்து ஒருவழி
படர்ந்து 40
ஊனையும் உயிரையும் உருக்கும் ஆ! ஆ! –
[இருவரும் சற்று மௌனமாயிருக்க]
உனது காதலன் எங்கு உளனோ? உணர்வைகொல்?

வாணி : எனது சிந்தையில் இருந்தனர்; மாறார்.

மனோ : ஆயினும் வெளியில்?

வாணி : அறியேன். அம்ம!

மனோ : போயின இடம் நீ அறியாய்?

வாணி : நாரணன்
முனிவர் தம்மடத்து ஏகினர் : தனியென
ஓதினர் ஓர்கால்.

மனோ : ஓகோ! ஓகோ! – (மௌனம்)
கடைநாள் நிகழ்ந்தவை யென்னை? கழறாய்

வாணி : அடியனேற்கு அந்நாள் கெடுநாள் மிகவும்!
ஒருநாள் அந்தியில் இருவரும் எதிர்ச்சையாக் 50
கடிபுரி கடந்துபோய் நெடுவயற் பாயும்
ஒருசிறு வாய்க்காற் கரைகண்டு ஆங்கே,
பெருமலை பிறந்த சிறுகாற் செல்வன்
தெண்ணீர்க் கன்னி பண்ணிய நிலா நிழல்
சிற்றில் பன்முறை சிதைப்பவன் போன்று
சிற்றலை யெழுப்பச் சிறுமி முறுமுறுத்து
அழுவது போல விழுமிய பரல்மேல்

Koviloor Digital Library

ஒழுகும் தீம்புனல் ஓதையுங் கேட்டுப்
பழுதிலாப் பால்நிலா விழுவது நோக்கி
இருவரும் மௌனமாய் நெடும்பொழுது இருந்தோம். 60
கரையிடை அலர்ந்த காவியொன்று அடர்த்துஎன்
அருகே கொணர்ந்து எனக்கு அன்பா யீந்தனர்.
வருவது இங் கறியா மதியிலி அதனைக்
கண்ணிணை யொற்றிலன்; உள்மணம் உகந்திலன்;
மார்பொடு சேர்த்திலன்; வார்குழல் சார்த்திலன்;
ஆர்வமும் அன்பும் அறியார் மான
ஓடுந் தீம்புனல் மாடே விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தேன்.
முறுவலோடு அவரும் ஏதோ மொழிய
உன்னு முன்னர்என் அன்னையங்கு அடைந்தாள். 70
தீமொழி பலவுஞ் செப்பினள் யானோ?
நாளழல் இன்றி நின்றேன் நண்பர்
மறுமொழி யொன்றும் வழங்காது ஏகினர்
அதுமுதல் இதுகாறும் அவர்தமை ஐயோ!
கண்டிலேன் இனிமேற் காண்பனோ? அறியேன்
ஒருமுறை கண்டு என்உளக் கருத்து அவருடன்
உரைத்த போதன்றி யொழியாது உயிரே!

மனோ : உரைப்ப தென்? வாணீ! உளமும் உளமும்
நேர்பட அறியா என்றோ நினைத்தாய்?

வாணி : ஓர்வழிப் படரின் உணரும் என்று உரைப்பர். 80

மனோ : ஏன் அதில் ஐயம்! எனக்கு அது துணிபே!
பூதப் பொருட்கே புலன் துணை யன்றிப்
போதப் பொருட்குப் போதும் போதம்
இரவியை நோக்கற்கு ஏன் விளக்கு உதவி?
கருவிநுண் மையைப்போல் காட்சியும் விளங்கும்.
பட்டே உணரும்முட் டாளர்கள்போல்
தொட்டே உணருந் துவக்கி இந்திரியம்.

Koviloor Digital Library

நுண்ணிய கருவியாங் கண்ணோ உணரும்
எண்ணறச் சேய்தாம் நுண்ணிய ஒளியை!
கண்ணினும் எத்தனை நுண்ணியது உள்ளம் 90
களங்கம் அறுந்தொறும் விளங்கும் அங்கு எதுவும்.
உண்மையாய் நமது உளம் உருகில் அவ்வுருக்கம்
அண்மை சேய்மை என்றிலை! சென்றிடும்
எத்தனை பெட்டியுள் வைத்து நாம் பூட்டினும்
வானுள மின்னொளி 'வடக்கு நோக்கி'யைத்
தான் அசைத்து ஆட்டுந் தன்மை தீ கண்டுளை?
போதங் கரைந்து மேற் பொங்கிடும் அன்பைப்
பூத யாக்கையோ தடுத்திடும்? புகலாய்!

வாணி : கூடும்! கூடும்! கூடும் அக்கொள்கை.
நம்பலாம் தகைத்தே! 100

மனோ : நம்புவதன்றி மற்று
என்செய நினைத்தாய்? இவ்அரும் பொருள்கள்
தருக்க வாதத்தால் தாபித் திடுவோர்
கரத் தாற் பூமணங் காண்பவரே யாம்!
அரும்பிற் பூமணம் ஆய்குதல் ஏய்ப்பத்
தரும் பக்குவ மிலார் தமதுளம் போய
வழியே வாளா மனக் கணக்கிட்டு
மொழிவார் முற்றுந் துணிவாய் என யான்
இச்சிறு தினத்தின் இயைந்தவை தம்மால்
நிச்சயித்து உணர்ந்தேன். வாணீ! ஐயோ!
நம்பல் என்பதுவே அன்பின் நிலைமை! 110
தெளிந்தவை கொண்டு தெளிதற்கு அரியவை
உளந்தனில் நம்பி யுறுதியாய்ப் பிடித்துச்
சிறிது சிறிதுதன் அறிவினை வளர்த்தே!
அனுபவ வழியாய் அறிவதை அந்தோ!
'அனுமான ஆதியால் ஆய்ந்து அறிந்திடுவோம்.
அலதெனில் இலையென அயிர்ப்போம்' எனத் திரி

Koviloor Digital Library

வாதியர் அன்பு ஒருபோதுமே அறியார்.
தாய் முலைப்பாலுள் நஞ்சு ஆய்பவர் அவரே!
முற்றுங் களங்கம் அற்றிடில்! ஆ! ஆ!

[உடல் புளகாங்கிதமாய் நடுங்க]

ஏதோ வாணீ! இப்படி என்னுடல்? 120

வாணி : சீதமோ? தாயே!

மனோ : சீ! சீ! இன்றெலாம்
இப்படி அடிக்கடி என்னுடல் நடுங்கும்!

வாணி : இக்குளிர் காற்றின் இடையே இருத்தல்
தக்கதன்று இனி. தாயே பாராய்!
அம்மழை பெய்யும் இம்மெனு முன்னம்,

மனோ : நனைந்திடில் என்னை? கரைந்திடுமோ உடல்

[எழுந்து மேகம் பார்க்க]

வாணி : (தனதுள்) ஐயோ! ஏன் நான் அத்திசை
பொய் எப்படி யான் புகல்வன்! (காட்டினேன்?)

மனோ : வாணீ
ஊர்ப்புறம் அத்தனை ஒளி ஏன்! ஓ! ஓ!
ஆர்ப்பு ஏன்? ஊ! ஆ! அயிர்ப்பு ஏன்? அறைகுதி. 130
போர்க்குறி போலும், புகலுதி உண்மை

[மழை இரைந்து பெய்ய]

அஞ்சலை, அஞ்சலை, இதோ என் நெஞ்சிடை
வெஞ்சரம் பாயினும் அஞ்சிலேன்! விளம்பு.

வாணி : இம்மழை நிற்கலை அம்ம! அறைகுவன்....
விளம்புவன், வீட்டுள் வருக!
தெளிந்ததோர் சிந்தை தீர நற்றிருவே! 1

[இருவரும் போக]

மூன்றாம் அங்கம் – மூன்றாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : சுந்தர முனிவர் ஆசிரமம் **காலம் :** வைகறை

[நிஷ்டாபரர் கருணாகரர் இருவரும் அளவளாவி இருக்க]

நேரிசை ஆசிரியப்பா

நிஷ்டாபரர் : ஏதுஇஃது உமக்குமோ இத்தனை மயக்கம்,
வேத வேதாந்தம் ஓதி நீர் தெளிந்தும்
இரவெலாம் இப்படி இமை இமையாதே
பரிதபித்திருந்தீர் கருணாகரரே!
பாரினில் புதிதோ போரெனப் புகல்வது!
போரிலை ஆயின்என்? யார்உறார் மரணம்?
எத்தினம் உலகில் எமன் வரா நற்றினம்?
இத்தினம் இறந்தோர் எத்தனை யென்பீர்?
ஒவ்வொரு தினமும் இவ்வனம் ஒன்றில்,
எறும்பு முதலா எண்ணிலா உயிர்கள் 10
உறுந் துயர் கணக்கிட்டு உரைப்போர் யாவர்?
சற்று இதோ மனங்கொடுத்து உற்றுநீர் பாரும்.
குரூரக் கூற்றின் விரூபம்இச் சிலந்தி!
பல்குழி நிறைந்த பசையறு தன்முகத்து
அல்குடி யிருக்க, அருளிலாக் குண்டுகண்
தீயெழத் திரித்தும் பேய்வாய் திறந்து
கருக் கொளுஞ் சினைஈ வெருக் கொளக் கொவி
விரித்துஎண் திசையிலும் நிறுத்திய கரங்களில்
முன்னிரு கையில் வெந்துறக் கிடத்தி,
மார்பொடு வயிறுஞ் சோர்வுறக் கடித்துப் 20

Koviloor Digital Library

பறித்திழுத்து இசித்துக் கறிக்க, மற்ற அவ்வா
றொந்து நொந்து அந்தோ! சிந்தனை மயங்கி
எய்யாது ஐயோ! என்று அழு குரல் இங்கு
யார் கேட்கின்றார்? யார் காக்கின்றார்?
கைகால் மிகில்நம் மெய் வேறாமோ?
நோவும் சாவும் ஒன்றே. அன்றியும்
உலகெலாம் நோக்கில் நம்உடல் ஒரு பொருளோ?
பஞ்சாசத் கோடி யெனப் பலர் போற்ற
எஞ்சா திருந்தஇப் புவி யனைத்தும்
இரவியின் மண்டலத்து ஒருசிறு திவலை. 30
பரவிய வானிடை விரவிய மீனினம்
இரவியில் எத்தனை பெரியது ஒவ்வொன்றும்
இரவியும் இம்மீன் இனங்களுள் கூடில்
ஒரு பிரமாண்ட மென்று உரைப்பர், இதுபோல்
ஆயிரத்தெட்டு மற்று உண்டென அறைவர்.
ஆயிரத்தெட்டு எனல் அலகிலை என்பதே
இப் பெரும் உலகெலாம் ஒப்பறு திருமால்
உந்தியந் தடாகத்து உதித்தபன் முளரியில்
வந்ததோர் நறுமலர் தந்தபல் இதழில்
ஓர் இதழ் அதனில் ஓர்சார் உதித்த 40
நான்முகச் சிலந்திய நாற்றிய சிறுவலை.
ஏன்மிக? நாம்இங்கு ஓதிய மாலும்.
ஒரு பெருங்கடலில் உறு துரும்பு என்ப.
அப் பெருங்கடலும் மெய்ப் பொருட்கு எதிரில்
எப்படிப் பார்க்கினும் இசையாப் பேய்த்தேர்.
இங்குஇவை யுண்மையேல், எங்குநாம் உள்ளோம்!
நீர்யார்? நான்யார்? ஊர் எது? போர் எது?
போரெனப் பொறுக்கலீர்! ஓ! ஓ! பாரும்!
மறுவறு மாயா மகோததி யதனிற்
புற்புதம் அனைய பற்பல அண்டம் 50
வெடித்து அடங்கிடும் இங்கு அடிக்கடி அதனைத்

Koviloor Digital Library

தடுப்பவர் யாவர்? தாங்குநர் யாவர்?
விடுத்திடும்! விடுத்திடும்! வீண்இவ் விசனம்
இந்திரஜாலம் இவ் எந்திர விசேடம்.
தன்தொழில் சலிப்பற இயற்றும் மற் றதனுட்
படுபவர் திரிகையுட் படுசிறு பயறே.
விடுபவர் யாவர் பின்! விம்மி விம்மி நீர்
அழுதீர்; தொழுதீர்; ஆடினீர்; பாடினீர்!
யார் என் செய்வர்! யார் என் செயலாம்!
அடித்திடில் உம்மையும் பிடிக்கும் இம் மாயை. 60
பிடித்திடிற் பின்நும் படிப்பும் ஞானமும்,
குருட் டரசனுக்குக் கொளுத்திய விளக்கும்
இருட்டறை யிருந்து கண் சிமிட்டலும் என்ன?
ஆர்க்கும் இங்கு உமக்கும் பிறர்க்கும் என்பயக்கும்?
பார்க்கப் பார்க்க இப்படியே துயரம்
மீக்கொளும் அதனால் விடும் உல கெண்ணம்
சுட்டதோர் சட்டிகை விட்டிடல் என்னத்
துறப்பது இவ் உலகம் மறப்பதற்கு அன்றோ!
மறக்கிற் சுயமே மறையும், மறைய
இறக்கும் நும்உளம், இறக்கும் அக்கணமே. 70
பிறக்கும் பிரத்தியக் பிரபோதோதயம்!
நீரும் உலகமும் நிகழ்த்திய போரும்
யாரும் அங்கில்லை. அகண்ட சித் கனமாய்
எதிரது கழிந்த பேரின்பமே திகழும்!
உரை யுணர்வு இறந்தஇந் நிருபாதிகம் யான்
உரைதரல், பிறவிக் குருடற்கு ஒருவன்
பால்நிறம் கொக்குப்போல் எனப் பகர்ந்த
கதையாய் முடியும்! அதனால் சற்றே
பதையாது இருந்து நீர் பாரும்
சுதமாம் இவ் அனுபூதியின் சுகமே. 1 80

கருணாகரர் : சுகம் யான் வேண்டிலேன் சுவாமி!
எனக்கு மற்று
இகம் பரம் இரண்டும் இலையெனில் ஏகுக.

Koviloor Digital Library

யான் என ஒருபொருள் உளதாம் அளவும்
ஞான தயாநிதி நம்குரு நாதன் சுந்தரமுனிவர்
ஈனனாம் என்னையும் இழித்து அடி சேர்த்த
வானநற் கருணையே வாழ்த்தி யிங்கு என்னால்
ஆன தோர் சிறுபணி யாற்றலே எனக்கு
மோனநற் சித்தியும் முத்தியும் யாவும்,
ஐயோ! உல கெலாம், பொய் யாயினும் என்?
பொய்யோ பாரும்! புரையறு குரவன் 90
பரிந்துநம் தமக்கே சுரந்த இக்கருணை?
இப்பெருந்தன்மை முன்இங்கு உமக்குஏது?
செப்பிய நிட்டையுஞ் சித்தநற் சுத்தியும்
எப்படிநீர் இங்கு எய்தினீர்? எல்லாம்
ஒப்பறு நுந்திறம் என்றோ உன்னினீர்?
அந்தோ! அந்தோ! அயிர்ப்பு இது வியப்பே!
சுந்தரர் கடைக்கண் தந்திடு முன்னம்
பட்ட பாடு எங்ஙனம் மறந்தீர்? பதைப்பறு
நிட்டை யாயினும் என்? நிமலவீடு ஆயின்என்?
ஆவா! யாம்முன் அல்லும் பகலும் 100
ஓவாப் பாவமே உஞற்றி எப்போதும்
ஒருசாண் வயிறே பெரிதாக் கருதியும்,
பிறர்புகழ் அதுவே அறம்எனப் பேணியும்;
மகிழ்கினும் துயருழந்து அழுகினும் சினகரம்
தொழுகினும் நன்னெறி யொழுகினும் வழுவினும்
எத் தொழில் புரியினும் எத்திசை திரியினும்
"நாமே உலகின் நடு நாயகம், நம்
க்ஷேமமே ஜகசிருஷ்டியின் ஓர் பெரும் பயன்"
என்ன இங்கு எண்ணி எமக்கு எமக்கு என்னுந்
தந்நய மன்றிப் பின்நினை வின்றி, 110
முடிவிலா ஆசைக் கடலிடைப் பட்டும்;
தடை சிறிது அடையில் சகிப்பறு கோபத்

Koviloor Digital Library

தீயிடைத் துடித்தும்; ஐயஞ் சிறிது அடையில்
வாய்மண் நிறைய மதக்குழி அதனுட்
குதித்துக் குதித்துக் குப்புற விழுந்தும்;
பிறர் புகழ் காணப் பெரிது அகம் உடைந்தும்;
பிறர் பழி காணப் பெரிது அகம் மகிழ்ந்தும்;
சிறியரைக் காணில் செருக்கியும்; பெரியரைக்
காணில் பொறாமையுட் கலங்கி நாணியும்;
எனைத்துஎன எண்ணுகேன் நினைக்கினும் உடலம் 120
நடுங்குவது அந்தோ! நம்மை இங்ஙனங்
கொடும் பேய் ஆயிரங் கூத்தாடிய வழி,
விடும் பரிசின்றி நாம் வேதனைப்படும் நாள்
"ஏ! ஏ! கெடுவாய் இதுவல உன் நெறி
வா வா இங்ஙனம்" என மனம் இரங்கிக்
கூவியது ஆர்கொல்? குடிகொண் டிருந்த
காம மாதி களுடன் கடும்போர் விளைக்க
ஏவியது ஆர்கொல்? இடைவிடாது அவைகள்
மேவிய காலை மெலிந்து கையறு நம்
ஆவியுள் தைரியம் அளித்தவர் யார் கொல்? 130
சுந்தரர் கருணையோ நந் திறமோ இவை?
உளம் எனப் படுவதோ அளவிலாப் பெருவெளி;
கோட்டையும் இல்லை; பூட்டு தாழ் அதற்கிலை;
நஞ்சே யனைய பஞ்சேந்திரியம்,
அஞ்சோ வாயில்? ஆயிரம்; ஆயிரம்;
அரை நொடி யதனுள் நரகென நம்முளம்
மாற்றிடக் கணந்தொறும் வருந் தீ நினைவோ
சாற்றிடக் கணித சங்கேதமே யிலை
இப் பெரும் விபத்தில் எப்படிப் பிழைப்பீர்?
அரு ளாதரவால் யாதோ இங்ஙனம் 140
இருள் தீர்ந்து இருந்தீர்; இலை யெனில் நிலை யெது?
விட்டதும் தொட்டதும் வெளிப்படல் இன்றி
நிட்டையும் நீருங் கெட்டு அலைந்திடுவீர்!

Koviloor Digital Library

கட்டம்! கட்டம்! கரதலா மலகமாய்க்
கண்டுமோ அருளிற் கொண்டீர் ஐயம்!
"யார் கேட்கின்றார்? யார் காக்கின்றார்?
என்றீர் நன்றாய் நண்பரே! நம் நிலை
கண்டு உளமிரங்கிக் காத்து அருள் புரிந்து
தொண்டு கொண்டு ஆண்ட சுந்தரன் கருணை
நமக்கென உரித்தோ? நானா உயிர்கள். 150
எவர்க்கும் அது பொது அன்றோ? இயம்பீர்;
எங்கு இலை அவனருள்? எல்லையில் அண்டம்
தங்குவது அனைத்தும் அவன் அருட் சார்பில்
அண்ட கோடிகள் இங்கு ஒன்றோ டொன்று
விண்டிடா வண்ணம் விக்கிய பாசம்,
அறியில் அருளால் பிறிதேது ஆகருஷணம்?
ஒன்றோடொன்று யாப்புற்று உயர் அன்பில்
நின்றஇவ் வுலகம், நிகழ்த்திய கருணை
பயிற்றிடு பள்ளியே யன்றிப் பயன்அறக்
குயிற்றிய பொல்லாக் கொடிய யந்திரமோ? 160
பாரும்! பாரும்! நீரே கூறிய
சிலந்தியின் பரிவே இலங்கிடு முறைமை!
பூரிய உயிர் இஃதாயினும், தனது
சீரிய வலையிற் சிக்குண்டு இறந்த
ஈயினை ஈதோ இனியதன் குஞ்சுகள்
ஆயிரம் அருந்த அருகிருந்து ஊட்டி
மிக்கநல் அன்பெனும் விரிந்த நூல்தெளிய
அக் கரம் பயில்வது அதிசயம்! அதிசயம்!
இப்படி முதற்படி இது முதலா நம்
ஒப்பரும் யாக்கையாம் உயர்ப டிவரையுங் 170
கற்பது இங்கு இந்நூற் கருத்தே அதனால்
இத் தனி யுலகில் எத்துயர் காணினும்
அத்தனை துயரும், நம் அழுக்கெலாம் எரித்துச்
சுத்தநற் சுவர்ணமாச் சோதித்து எடுக்க

Koviloor Digital Library

வைத்த அக்கினியென மதித்தலே, உயிர்கட்கு
உத்தம பக்தி யென்று உள்ளுவர் ஒருகால்
காரண காரியம் காண்குவம் அல்லேம்,
யார்இவை யனைத்தும் ஆய்ந்திட வல்லார்?
பாரிசா தாதிப் பனிமலர் அந்தியின்
அலர்தலே அன்னவை விளர் நிறங் கிளர 180
நறுமணங் கமழ்தற்கு உறு காரணம் என
நேற்றிரா நடேசர் சாற்றிடும் முன்னர்
நினைத்தோம் கொல்லோ? உரைத்தபின் மற்று அதன்
உசிதம்யார் உணரார்? நிசியலர் மலர்க்கு
வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்
எவ்வணம் அவற்றின் இஷ்ட நாயகராம்
ஈயினும் அறிந்து வந்து எய்திடும்? அங்ஙனம்
மேவிடில் அன்றோ காய்தருங் கருவாம்?
இவ்விதம் நோக்கிடில் எவ்விதத் தோற்றமுஞ்
செவ்விதிற் பற்பல காரணச் செறிவால் 190
அவ்வவற்றுள் நிறை யன்பே ஆக்கும்.
சிற்றறிவு ஆதலால் முற்றும் நாம் உணரோம்.
அந்தியில் இம்மலர் அலர்வது ஏன் என்பதிங்கு
அறிகிலோ மாயினும் அதற்கும் ஓர் காரணம்
உளதென நம்பலே யூகம். அதனால்
உலகிடைத் தோன்றும் உறுகணுக்கு ஏது
நலமுற நமக்கு இங்கு இலகாத தினால்
பலமுறை நம்மையே பரிந்து இழுத்து ஆண்டவர்
இலை உலகிடை யென எண்ணுவது எங்ஙனம்?
யார் இங்கு உலகெலாம் அறிந்திட வல்லார்? 200
பாரும் இங்கு ஈதோ! பரம தயாநிதி
நம்குரு நாதன் என்பது ஆர் ஒவ்வார்?
நம்புவம் நீரும் நானும் இங்கு ஒருப்போல்
ஆயினும் பாரும்! அம்மணி மனோன்மணி,
ஏதோ ஊழ்வினை இசைவால் தனது

Koviloor Digital Library

காதாற் கேட்கவும் கண்ணாற் காணவும்
இல்லா வொருவனை யெண்ணி மயங்கினள்.
அல்லல் இதுவே போதும், அஃதுடன்,
அப் புருடன் தான் ஆர் என ஆயில்
ஒப்பறு புருஷோத்தமனே என்ன 210
எப்படி நோக்கினும் இசையும், அப்படியே
செப்பினர் யாவுந் தெரிந்த நம் குருவும்
ஏதோ ஒருவன் சூதா ஏவிய
தூதால் வந்ததோ ஈதோ பெரும்போர்!
போர் புரிந்திடவரு புருஷோத்தமனும்
வார்குழல் மனோன்மணி மாதும், நோக்கில்
நம்மிலும் எத்தனை நம்பிய அன்பர்!
இம்மென ஒருமொழி யிசைத்து இவர் தம்மை
ஒருவரை யொருவர் உணர்த்திடப் பண்ணில்,
வெருவிய போரும் விளைதுயர் அனைத்தும் 220
இருவர்தம் துக்கமும் எல்லாம் ஏகும்.
இப்படிச் சுலப சாத்தியமா யிருக்க
அப்படி யொன்றும் அடிகள் எண்ணாமல்
சுருங்கை தொட்டிடவே துவக்கித் தன்றிரு
அருங்கை வருந்தவும் ஆற்றும்அப் பணியே.
சுருங்கை யிதற்கும் சொல்லிய துயர்க்கும்
நெருங்கிய பந்தம் நினைத்தற்கு என்ன?
ஒன்றுந் தோற்றுவதென்று என் தனக்கே,
என்றுநான் எண்ணி யெம்குரு நாதன்
திருமொழி மறுத்து என் சிற்றறிவினையே 230
பெரிதெனக் கருதலோ, அலதுஅவர் பேணிய
இவ்வழி நம்மதிக்கு எட்டா விடினுஞ்
செவ்விது இதுவெனத் தெளிதலோ தகுதி?
இப்படியே யாம் இவ்வுலகின் நிலை
அற்பமும் அதில்இல்லை ஐயம் நமது மற்று
எய்ப்பினில் வைப்பா யிருந்த பேரருளைக்

Koviloor Digital Library

கைப்படு தனியெனக் கண்டபின், உலகில்
எப்பொருளையும் இப்படியே இவ்அருள்
தாங்கிடும் என்பதில் சமுசயம் என்னை?
இல்லா மாயை என்செய வலதாம்? 240
எல்லாம் அவனருள் அல்லாது இல்லை
என் அனுபவம் இது மன்னிய இவ் அருள்
தன்னிடை மூழ்கித் தானெனல் மறந்து,
நெருப்பிடை இழுதென நெக்குநெக்கு உருகி
இருப்பவர் பிறர்க்கா யிராப்பகல் உழைப்பர்.
ஒருபயன் கருதார், அருள் கருதுவது என்?
அகிலமுந் தாங்கும் அருளில் ஓர் அங்கமாச்
சகலமுஞ் செய்வர், அஃது அவர் சமாதி
எங்கெலாம் துக்கங் காணினும் அங்கெலாங்
அங்கங் கரைய நின்று அரற்றி "ஐயோ! 250
எம்மையுங் காத்த இன்னருள் இவரையும்
செம்மையிற் காக்க" என மொழி குளறி
அழுது வேண்டுவதே அன்றி
விழுமிய முத்தியும் வேண்டார் தமக்கே. 2

[சுந்தரமுனிவரும் நடராஜரும் வர; கருணாகரர், நிஷ்டாபரர் இருவரும் எழுந்து வணங்க]

சுந்தர : எல்லாம் நடேசரே! உமது பேரருளே
அல்லாது என்னால் ஆகுமோ? சுருங்கை
இத்தினம் எப்படி முடியும் நீர் இலரேல்?
எத்தனை கருணை? என்னை கைம்மாறு?

நட : நல்லது! நல்லது! சொல்லிய முகமன்!
வேலை எனதோ? உமதோ? விநோதம்; 260
ஏவிய வழியான் போவதே யல்லால்
ஆவ தென், என்னால்? ஆ! ஆ! நன்றே!

சுந்தர : கருணாகரரே! களைப்பற நீர் இங்கு
ஒருவாறு உறங்க என்று உன்னி யன்றோ

Koviloor Digital Library

இவ்விடம் அனுப்பினோம்? என்னை சிறிதுஞ்
செவ்விதில் தூங்காது இருந்தீர்! சீச்சீ!
எத்தனை நாளாயின நீர் தூங்கி
இத்தனை வருந்தியும் ஏன்இலை தூக்கம்?
பன்னாள் இரவும் பகலும் உழைத்தீர்,
எந்நாள் ஆறுவீர் இவ் அலுப்பு இனிமேல்? 270

கருணா : அடியேற்கு அலுப்புஎன்? அருளால் அனைத்தும்
முடிவது மேலும், யான் வரும் வேளை
இட்டமாம் நிஷ்டாபரருந் தனியாய்
நிட்டை விட்டு எழுந்தார். இருவரும் அதனால்
ஏதோ சிலமொழி ஓதி மற்று இருந்தோம்.
ஈதோ உதயமும் ஆனதே. இனியென்?

சுந்தர : விடிந்த தன்றிது; வெள்ளியின் உதயம்
படும். படும். மிகவும் பட்டீர் வருத்தம்.
உங்கள் பேச்சு அறிவோம். ஓயாப் பேச்சே!
இங்கு அது முடியுமோ? ஏன் உங்கட்கும் 280
சமயிகட்கு ஆம் சச்சரவு?
அமையும் உங்கட்கு அவரவர் நிலையே. 3

[யாவரும் போக]

மூன்றாம் அங்கம் : நான்காம் களம் முற்றிற்று.

கலித்துறை

சாற்றரும் ஆபதந் தான் தவிர்த்து இன்பந் தர முயன்று
தோற்றருங் கற்படை யேதோ அமைத்தனன் சுந்தரனே.
வேற்றுருவாய் அகம் வேதித்து நம்மை விளக்கும் அவன்
மாற்றம் அனுபவம் வந்தபின் அன்றி மதிப்பரிதே.

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : படை பயில் களம் **காலம் :** காலை

[பலதேவன் படையணி வகுக்க : குடிலன் அரசனை
எதிர்பார்த்து ஒருபுறம் நிற்க]

நேரிசை ஆசிரியப்பா

குடிலன் : (தனிமொழி) பருதியும் எழுந்தது; பொருதலும்
வந்தது.... [பெருமூச்செறிந்து]
கருதுதற்கு என்னுள? காணுதும் ஆ! ஆ!
ஒருவனது ஆசைப் பெருக்கால் உலகில்
வருதுயர் கடலிற் பெரிதே! வானின்
எழுந்தஇவ் இரவி விழுந்திடு முன்னர்
ஈண்டு அணி வகுக்கும் இக்காண்டகும் இளைஞரில்
மாண்டிடு மவர்தொகை மதிப்பார் யாரே!
மாண்டிடல் அன்றே வலிது. மடுவுள்
இட்ட கல்லால் எழும் வட்டமாம் விரிதிரை
வரவரப் பெரிதாய்க் கரைவரை வரல்போல், 10
நின்றஇவ் வீரரை யொன்றிய மனைவியர்
உற்றார் பெற்றார் நட்டார் என்று இப்
படியே பரவுமே படியெலாந் துயரம்!...
[சற்று நிற்க]
என்னை யென்மதி யிங்ஙனம் அடிக்கடி
என்னையும் எடுத்தெறிந்து ஏகுதல்? சிச்சீ!
மன்னவர்க்காக மாள்வது இவர் கடன்.
மன்னவன் என்போன் மதியில் வலியோன்,
அன்றியும் பல நாளாக நம் அன்னம்

Koviloor Digital Library

தின்று இங்கு இருந்து அவர் செய்ததென்? அவர்தம்
உடன்பாடு இதுவே. கடம்பாடு ஆற்றுங் 20
காலம் விடுவதார்: மேலும் இயல்பாய்ப்
பலபெயர் துக்கப் பட்டால் அன்றி
உலகில் எவரே யொருசுகம் அணைவார்?
இயல்பு இதுவாயின் இரங்கல் என்பயன்?
வயலுழும் உழவோர் வருத்தமும் குனிந்திருந்து
ஆடை நெய்வோர் பீடையும் வாகனந்
தாங்குவோர் தமக்குள் தீங்கும் நோக்கி
உலகிடை வாழாது ஒடுவரோ பிறர்?
அலகிலா மானிடர் யாவரும் அவரவர்
நலமே யாண்டும் நாடுவர். மதிவலோர் 30
களத்தொடு காலமுங் கண்டு மீன் உண்ணக்
குளக்கரை யிருக்குங் கொக்கென அடங்கிச்
சம்பவம் சங்கதி யென்பவை நோக்கி
இருப்பர்; நலம்வரிற் பொருக்கெனக் கொள்வர்
நண்ணார் இதுபோல் நலமிலா ஐயம்.
எண்ணார் துணிந்தபின் பண்ணார் தாமதம்.
ஏழைய ரலரோ இரங்குவர் இங்ஙனம்?
கோழையர்! எங்ஙனங் கூடுவார் இன்பம்?
வந்தனன் அஃதோ மன்னனும் –

[ஜீவகன் வர]

வந்தனம் வந்தனம் உன்திரு வடிக்கே. 1 40

நிலைமண்டில ஆசிரியப்பா

ஜீவ : குடிலா! நமது குறைவிலாப் படைகள்
அடையும் அணி வகுத்தனவோ?

குடில : அடியேன்
நாரணர்க்கு அன்றோ நீள்அரண் காப்பு?
சொன்னது அப்படி யென வுன்னினன்.

ஜீவ : ஆமாம்!

Koviloor Digital Library

அதற்கு ஏன் ஐயம்?

குடில: அவர்க்கு அது முற்றும்
இதக்கேடு என்றனர். ஆயினும் போயினர்.

[படைகள் வணங்க]

படைகள் : ஜய ஜய! ஜீவக வேந்த! விஜயே!

குடில: அதிர்கழல் வீரரும் அரசரும் ஈதோ
எதிர்பார்த் திருந்தனர் இறைவ, நின் வரவே.
நாற்றிசை தோறும் பாற்றினஞ் சுழல் 50
நிணப் புலால் நாறிப் பணைத்து ஒளி பரப்பும்
நெய்வழி பருதி வைவேல் ஏந்திக்
கூற்றின்நா என்னக் குருதிகொப் புளித்து
மாற்றலர்ப் பருகியும் ஆற்றாது அலையும்
உறையுறு குறுவாள் ஒருபுறம் அசைத்துக்
காற்றினும் மிகவுங் கடுகிக் கூற்றின்
பல்லினுங் கூரிய பகழி மல்கிய
தூணி தோளில் தூக்கி, நான் நின்று
எழு மொலி உருமு போன்று எழுப்பி ஆர்த்தவர்
கடிபுரி காக்கும் நின்காற் படையாளர் 60
இருப்புக் கலினம் நெரித்துச் சுவைத்துக்
கருத்தும் விரைவு கற்குங் குரத்தாற்
பொடி யெழப் புடைக்கும் புரவிகள், போர்க்கு
விடை கேட்டு உதடு துடித்தலும் வியப்பே.
நிணங்கமழ கூன்பிறைத் துணை மருப்பு அசைத்து
மம்மர் வண்டினம் அரற்ற மும்மதம்
பொழியும் வாரணப் புயலினம், தத்தம்
நிழலொடு கறுவி நிற்பதும் அழகே.
முன்னொரு வழுதிக்கு வெந்நிட்டு ஓடிய
புரந்தரன் கைப்படாப் பொருப்புகள் போன்ற 70
கொடிஞ்சி நெடுந்தேர் இருஞ்சிறை விரித்து
"வம்மின்! வம்மின்! வீரரே! நாம் இனி

Koviloor Digital Library

இம்மெனு முன்னம்அவ் இந்திர லோகமுஞ்
செல்லுவம்! ஏறுமின்; வெல்லுவம் எனப்பல
கொடிக்கரங் காட்டி யழைப்பதுங் காண்டி...

ஜீவ : கண்டோம். கண்டோம். களித்தோம் மிகவும்.
உண்டோ இவர்க்கெதிர்? உனக்கெதிர் ஓ! ஓ!

[படைகளை நோக்கி]

வேற்படைத் தலைவரே! நாற் படையாளரே!
கேட்பீர் ஒருசொல்! கிளர்போர்க் கோலம்
நோக்கி யாம் மகிழ்ந்தோம், நுமது பாக்கியமே 80
பாக்கியம். ஆ! ஆ! யார்க்கு இது வாய்க்கும்?
யாக்கையின் அரும் பயன் வாய்த்தது இங்குமக்கே!
தாயினுஞ் சிறந்த தயையூண் டிருந்தநும்
நேயமாந் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்தஇவ் வஞ்சரை யெணுந்தொறும் எணுந்தொறும்
அகந்தனில் அடக்கியும் அடங்காது எழுந்து,
புகைத்து உயிர்ப்பு எறியப் பொறிகண் பொரிய
நெடுந் திரள் புருவம் கொடுந் தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையுங் கிளர்ந்தெழுந்து ஆடக்
களங்கமில் நும்முகங் காட்டும்இச் சினத்தீ 90
கண்டு அப் பாண்டியே கொண்டனள் உவகை.
அலை யெறிந்து ஈதோ ஆர்த்தனள். கேண்மின்!
முலைசுரந்து ஊட்டிய முதுநதி மாதா!

படைகள் : தாம்பிரபன்னிக்கு ஜே! ஜே

ஜீவ : ஒரு துளியேனும் நீர் உண்டுளீ ராயின்
கருதுவீர் தாம்பிர பன்னியின் கட்டுரை
"மக்காள்! அருந்தி வளர்மின்! நுமக்கு
மிக்கோ ரில்லா வீரமாய்ப் பரந்து
முது சுதந்தரத்தின் முத்திரையாகி;
இது பரிணமித்து உம் இதயத்து உறைக!

Koviloor Digital Library

அன்னியன் கைப்படா இந்நீர் கற்பிற்கு 100
இழிவுறின் மார்பினின்று இதுவே சோரியாய்ப்
பொழிக நீர் பொன்றிடும் அளவும்!'' என்றன்றோ
வாழ்த்தி நுந்தமை வளர்த்தினள்? அவளுரை
தாழ்த்தாது இவண்நீர் போர்த்த போர்க்கோலம்
பார்த்தாள் ஆர்த்து அவள் வாழ்த்தாது என் செய்வள்'

படைகள் : ஜே! ஜே!

ஜீவ : விந்தம் அடக்கினோன் தந்த நற்றமிழ் மொழி
தற்சுதந்தரம் அறும் அற்பர் வாய்ப் படுமோ?

படைகள் : தமிழ்மொழிக்கு ஜே! ஜே!

ஜீவ : பழையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
மன்னிய அன்பின் நும்அன்னையர் பாடி
நித்திரை வரும்வகை யொத்தறுத்து உமது 110
தொட்டில் தாலாட்ட, அவ்இட்டமாம் முன்னோர்
தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணி யிருகணுங் கண்ணீர் நிறையக்
கண் துயிலாது கனிவுடன் கேட்ட
வண் தமிழ் மொழியால் மறித்து இக்காலம்
''ஆற்றிலம்; ஆண்மையும் உரிமையும் ஒருங்கே
தோற்றனம்'' எனச் சொலத் துணிபவர் யாவர்?

படைகள் : சிச்சீ!

ஜீவ : பொதிய மாமலையிற் புறப்பட்டு இங்கு தன்
படியே யுலாவும் இச் சிறுகால், பணிந்து மற்று
''அடியேம்'' எனத் திரிபவர்க்கோ உயிர்ப்பு! 120

படைகள் : ஹே! ஹே!

ஜீவ : கோட்டமில் உயிர்ப்போ கூறீர், அன்ன
நாட்டு அபிமானமில் நடைப்பிண மூச்சும்?

படைகள் : சிச்சீ! சிச்சீ!

Koviloor Digital Library

ஜீவ : சேனையோடு இவ்வழி திரிந்து நேற்று இரவில்நும்
திருவனை யார்களுஞ் சேய்களுங் கொண்ட
வெருவரு நித்திரைக்கு உறுகண் விளைத்து, நும்
பாஷாபி மானமும், தேசாபி மானமும்
பொருளெனக் கருதாது அருள்நிறை நுமது
தாய்முலைப் பாலுடன் வாய்மடுத்து உண்டநல்
ஆண்மையும் சுதந்திரக் கேண்மையும் ஒருங்கே
நிந்தை வஞ்சியர் செயவந்த நும்கோபம் 130
முற்றும் இயல்பே மற்றுதன் குகையுள்
உற்று அரி முகமயிர் பற்றிடின் அதற்குஅக்
குறும்பால் எழுஞ்சினம் இறும்பூது அன்றே!
உரிமைமேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்,
பெருமையில் பிணத்திற் பிறந்தோர் சீதம்.
அந்தணர் வளர்க்குஞ் செந்தழல் தன்னிலும்
நாட்டு அபிமானம் உள்மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு!
வந்தஇக் கயவர்நும் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற்கு அவரே இந்தனம் ஆகுக! 140

படைகள் : ஆகுக! ஆகுக

ஜீவ : இன்று நீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும்,
நின்று உகம் பலவும் நிகழ்த்துமே: "இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்;
தீண்டன்மின் திருந்தலீர்! அவர் தஞ் செருக்கு
சுதந்தரம் அவர்க்கு உயிர்: சுவாசம் மற்றன்று
நிலையுமின் நன்றாய்க் கனவினும் இதனை."–
என முரசு அறையுமே யெத்திசை யார்க்கும்,
இத்தனிப் போரில் நீர் ஏற்றிடுங் காயம்
சித்தங் களித்து, ஜயமாது உமக்கு 150
முத்தமிட்டு அளித்த முத்திரையாகி
எத்தனை தலைமுறைக்கு இலக்காய் நிற்கும்!

படைகள் : ஜே! ஜே!

ஜீவக : போர்க்குறிக் காயமே புகழின் காயம்
யார்க்குஅது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்!

Koviloor Digital Library

அனந்தத் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினம் தாம் அநுபவிக்கும் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தை யன்புஉருகிச் சிந்துவர் கண்ணீர்,
என்றால் அப்புண் 'இறந்து கோட்டக்கது'
அன்றோ? அறைவீர். ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே. எவரே 160
புண்படாது உலகிற் புகழுடம்பு அடைந்தார்?
புகழுடம்பு அன்றிஇவ் இகழுடம்போ மெய்?
கணங்கணம் தோன்றிக் கணங்கணம் மறையும்
பிணம் பல, இரவெலாம் பிறந்தார் என்பவோ!
உதும்பர தருவில் ஒருகனி அதனுள்
பிறந்து இறு மசகம் இவரிலுங் கோடி.
பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்.
அப்பெரும் புகழுடம்பு இப்படி இன்று இதோ!
சுலபமாய் நுமக்கெதிர் அணுகலால், துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியந்தோம். 170
ஒழுக்கம்மற் றன்று. அதுவெனினும், உம்மேல்
அழுக்காறும் சிறிது அடைந்தோம், நும்மொடு
இத்தினம் அடையும் இணையிலாப் பெரும்புகழ்
எத்தனை ஆயிரம் ஆயிரங் கூறிவிட்டு
ஒத்ததோர் பங்கேயுறும் எனக்கு எனவே
ஓடும் ஓர் நினைவு இங்கதனால், வீரர்காள்!
நீடுபோர் குறித்து இவண் நின்றோர் தம்முள்
யாரே யாயினுஞ் சீராந் தங்கள்
உயிருடம்பு ஆதிகட்கு உறும் உயர்வு உன்னிச்
சஞ்சலம் எய்துவோர் உண்டெனிற் சாற்றுமின் 180
வஞ்சகமில்லை. என் வார்த்தை ஈது உண்மை.
மானமோடு அவரை யிம்மாநக ரதனுள்
சேமமாயின்று இருத்திடுவம். திண்ணம்,
உத்தம மாதர்கள் உண்டு மற்று ஆங்கே
எத்தனையோ பேர், இவர்க்கு அவர் துணையாம்.

படைகள் : இல்லை! இல்லையிங்கு அத்தகைப் புல்லியர்!

Koviloor Digital Library

ஜீவ : குறைவு எனக் கருதன்மின். எம்புகழ்க் கூறு
சிறிதாம் எனஉனிச் செப்பினோம். அதனாற்
பிறிதுநீர் நினையீர். பேசுமின் உண்மை.

படைத்தலைவர் : இல்லையெம் இறைவ!
இந்நாடதனுள் 190
இல்லை அத்தகையர்.

யாவரும் : இலை யிலை! இலையே,

ஜீவ : நல்லது அப்படியேல், நாமே நும்சுய
நாட்டின்நல் லுரிமை பாராட்டும் பெரிய
மேன்மையும் அதனால் விளைபுக முதுவும்
மறுக்கிலம். பொறுக்குமின். வம்மின்! விஜய
இலக்குமி காத்திருக்கின்றாள்! அன்றியும்
ஒலிக்கும்நும் ஜயபேரிகை கேட்டலது மற்று
ஒய்கிலன் நோன்பு நம்தாய் மனோன்மணியே.

படைவீரர் : மனோன்மணிக்கு ஜே! ஜே! ஜே!

யாவரும் : இளவரசிக்கு ஜே! ஜே! ஜே!

குறளடி வஞ்சிப்பா

ஜீவ : நம்தாய் தமர்நம் காதலர்
நம்சேய் பிறர்நந்தா வுரை
நம் தேயமேல் வந்தே நனி
நொந்தாழ் துயர் தந்தே இவண்
நிந்தா நெறி நின்றாரிவர்
தந்தா வளி சிந்தா விழ,
அடிப்போம் அடல் கெடுப்போம் முகத்
திடிப்போம் குடல் எடுப்போம் இடுப்
பொடிப்போம் சிரமுடைப்போம் பொடி
பொடிப்போம் வசை துடைப்போம் உயிர்
குடிப்போம் வழி தடுப்போம் பழி
முடிப்போம் இனி நடப்போம் நொடி.
என வாங்கு,

Koviloor Digital Library

பெருமுர சதிரப் பெயருமுன்
கருமுகி லீர்த்தெழும் உருமென ஆர்த்தே!

[படைகள் முரசடித்து நடக்க, படைப்பாணர் பாட]

கலித்தாழிசை

படைப்பாணர் : தந்நகரமே காக்கச் சமைந்தெழுவோர் ஊதுமிந்தச்
சின்ன மதிசயிக்குமெமன் செருக்கொழிமின் தெவ்வீர்காள்!
சின்னமதி! சயிக்குமெமன் எனச்செருக்கி நிற்பீரேல்,
இன்னுணவிங் குமக்கினிமே லெண்ணீரே
எண்ணீரே யிசைத்துளோமே. 1

படைகள் : ஜே! ஜே!

பாணர் : மறுகுறுதம் ஊர்காக்கும் வயவர் புயமே
விஜயை
உறைவிடமா இவர்வாளென் றோடிடுமின் தெவ்வீர்காள்!
உறைவிடமா? இவர் வாளென் றோடீ ராயின் இனி
மறலிதிசை யொருபோதும் மறவீரே மறவீரே
வழங்கினோமே. 2

படைகள் : ஜே! ஜே!

பாணர் : ஒல்லுமனை தான்காக்க வுருவிய கை வாளதற்குச்
செல்லுமுறை பின்னரிலை திரும்பிடுமின் தெவ்வீர்காள்!
செல்லுமுறை பின்னரிலை யெனத்திரும்பீ ராயின் நுங்கள்
இல்லவர்க்கு மங்கலநாண் இற்றதுவே
யிற்றதுவே யியம்பினோமே 3

படைகள் : ஜே! ஜே!

[படைகளும் ஜீவகன் முதலியோரும்
போர்க்களம் நோக்கிப் போக]

நான்காம் அங்கம் : முதல் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : கோட்டை வாசல் **காலம் :** காலை

[கோட்டை காக்கும் படைஞர்]

நேரிசை ஆசிரியப்பா

முதற் படைஞன் : இப்படை தோற்கின் எப்படை ஜயிக்கும்?
எப்படி யிருந்தது ராஜன் பேச்சு!
கல்லும் உருகிக் கண்ணீர் விடும். இப்
புல்லும் கேட்கிற் புறப்படும் போர்க்கு.

2-ம் படை : முற்றும் கேட்டைகொல்?

முதற்படை : முற்றும் கேட்டேன்.
சற்றும் மனமிலை திரும்புதற்கு எனக்கு.
சரியல ஆணையில் தவறுதல் என்றே,
வெருவி நான் மீண்டேன். இல்லையேல் உடன்சென்று
ஒருகை பார்ப்பேன். ஓகோ! சும்மா
விடுவனோ? பார்க்கலாம் விளையாட்டு அப்போது 10
என்செய்! என்செய! எத்தனை பேரையான்
பஞ்சாய்ப் பறத்துவன்! துரத்துவன்! பாண்டியில்
வஞ்சஇவ் வஞ்சியர் என்செய வந்தார்?
நெஞ்சகம் பிளந்து இந்நெடுவாள் தனக்குக்
கொஞ்சமோ ஊட்டுவன் குருதி! என்செய!
நினைதொறும் உடலெலாந் தின்பது தினவே!
பாக்கிய மில்லையென் கைக்கும் வாட்கும்!

2-ம் படை : பாக்கிய மன்றுஅது பறைப்பயல் பாவி
குடிலனோடு உலாவுங் கோணவாய்க் கொடியன்.
சடையன், தலைவனோடு எதுவோ சாற்றித் 20
தடுத்தே நமையெலாம் விடுத்தான் இப்பால்.

Koviloor Digital Library

3-ம் படை: கெடுத்தான் அவனே என்னையும், அன்றேல்
முடித்தே விடுவன்என் சபதம் முற்றும்.
சண்டிஅச் சங்கரன் வந்துளான் சமர்க்கு.
கண்டேன், கையிற் கிடைக்கிற் பண்டுஎன்
தாயையும் என்னையும் சந்தையிற் பழித்த
வாயினை வகிர்ந்து மார்பினைப் பிளந்து....
[வாய்மடித்துப் பற்கடிக்க]

4-ம் படை : வஞ்சியர் அனைவரும் மானமில் மாக்கள்.
பிஞ்சிற் பழுத்த பேச்சினர். யான் எலாம்
நன்றாய் அறிவன். ஒன்றார் என்னுடன். 30
சென்றுளேன் ஜனார்த்தனம். கண்டுளேன் வைக்கம்

3-ம் படை : விடுவேன் அல்லர். அடுபோர் ஆயினும்
நடுநிசி யாயினும் அடுகளமுழுதுந்
தேடுவன், சங்கரன் செத்தானாயினும்
நாடி அவன்தலை நசுக்கி மிதித்து
வாயிடை நெடுவேல் இறக்கி....

முதற்படை : சீ! சீ!
சேவகனா நீ? செப்பியது என்னை!
யாவரே பிணத்தோடு ஆண்மை பாராட்டுவர்?
பிணமோ பிணத்தோடு எதிர்க்க!

3-ம் படை: போ! போ!
பெருமைநீ பேசேல், பெற்றஉன் தாயேல் 40
அருமைநீ அறிகுவை.

முதற்படை : யாராயினும் என்?
பிணத்தொடு பிணக்கு எது? சீ! சீ! அன்றியும்
ஒருவன் தனக்கா உண்டாங் குரோதம்
கருதி இங்குஎவன் வாள் உருவினன். நமக்கெலாம்
மாதா இவ்வயின் மகா நாடு யிதுவே.
ஏதோ அவளையும் நம்மையும் இகழ்ந்து யிவ்
வஞ்சியர் வஞ்சமாய் வந்தனர். அதனால்
நெஞ்சகங் கொதித்து நெடியநம் சுதந்தரம்
தனக்காய் உயிரையும் உவப்பொடு அளிக்கத்

Koviloor Digital Library

துணிந்தே நம்மையும் மறந்தே நின்றோம். 50
என்னில் அவரவர் இழுக்குஆர் கருதுவர்?
உன்னுதி நன்றாய் ஒருவன் தனக்கா
வந்தபோர் அன்று; இஃது ஊர்போர். அதனால்
இதோ அங்கு எய்தினோர் யாரே யாயினும்
சுதேசாநு ராகத் தொடர்பால் அன்றிப்
பலவாந் தமது பழம்பழி மீட்போர்
கொலைபாதகஞ் செயும் கொடுமையரே யாம்.

[நாராயணன் படைக்கோலமாகிக் குதிரையின் மேல்வர]

2-ம் படை : பாரும்! பாரும்! நாராயணர் இதோ –

நாரா : உன் பெயர் முருகன் அன்றோ? 60

முதற்படை : அடியேன்.

4-ம் படை : என் பெயர் சாத்தன், சுவாமி!

நாரா : ஓகோ!
எத்தனை பேருளர் இவ் வாயிலின் கண்?

முதற்படை : பத்தைந் நூறுஉளர். மெத்தவும் உத்தமர்.
மிகு திறத்தார். போர் விரும்பினர். இவர்தம்
தகுதிக்கு ஏற்பதன்று இக்காவல்.

நாரா : பொறு! பொறு! முருகா! புரையற்றோர்க்கு மற்று
உறுபணி, இன்னதென்று உண்டோ? எதிலும்
சிறுமையும் பெருமையும், செய்பவர்க்கு அன்றிச்
செய்வினை தனக்கு எது? மெய்ம்மையில் யாவுந்
திருத்தமாச் செய்தலே பொருத்தம் உத்தமர்க்கு

2-ம் படை : வேணும் என்றாயினும் எங்களை விடுத்தல் 70
நாணமும் நோவுமாம் நாராயணரே!

நாரா : வேண்டுமென்று ஆரே விடுப்பர். சிச்சீ!
அப்படியேதான் ஆயினும் நமக்குக்
கைப்படு கடமையே கடமை. முருகா!
எத்தனை பேரால் ஏலும்இக் காவல்?

முதற்படை : நாலில் ஒன்றாயின் சாலவும் மிகுதி.

நாரா : அத்தனை வல்லவர் கொல்லோ? ஆயின்

Koviloor Digital Library

இத்தனை பேர்க்கு உளதொழிலெலாந் தம்மேல்
ஏற்றிட வல்லரை மாற்றிநீ நிறுத்திக்
காட்டுதி யெனக்கு. 80

முதற்படை : காட்டுவன் ஈதோ!

[அணிவகுத்துக் காட்ட]

நாரா : (தனதுள்) நல்லன்இத் தலைவன். வல்லவர் இவரும்.

முதற்படை : ஈதோ! நின்றனர்!

[காவற்படைகளை விலக்கி நிறுத்திக் காட்டி]

நாரா : போதுமோ இவர்கள்?

முதற்படை : போதும்! போதும்!

காவற்படைகள் : போதுமே நாங்கள்...

நாரா : எண்ணுமின் நன்றாய் ஏற்குமுன்! பின்பு நீர்
பண்ணுந் தவறு நம் பாலாய் முடியும்.

காவற்படை : தவிர்க்கிலம் கடமையில். சத்தியம் தலைவ!

நாரா : தகுதியன்று எனச் சிலர் சாற்றியது ஒக்க
மிகுபழி நீவிரும் மொழிவிரோ என்மேல்?

காவற்படை : மொழியோம் ஒன்றும். மொழியோம். நும்மேல்

நாரா : சரி! சரி! ஆயின் தாங்குமின் காவல். 90
பரிமற்றை யவர்க்கும் எலாம் உளவோ?

3-ம் படை : ஓகோ!

4-ம் படை : பெரியது என் பரிபோற் பிறிதிலை.

நாரா : காணுதும்.
அணிவகுத்து இவ்வயின் அமர்மின்! முருகா!
மற்றை வாயிலிலும் மாற்றிஇவ் விதம்யான்
வைத்துள படையும் அழைத்து இப்புறம்நீ
நொடியினில் வருதி

முதற்படை : அடியேன். அடியேன்.

[முதற் படைஞன் போக]

நாரா : ஆம்பொழுது அழைப்போம். வாம்பரி அமர்மின்.

[கோட்டைமேல் உலாவி நின்று]

Koviloor Digital Library

(தனதுள்) அரும்படை யிரண்டும் அதோ! கை கலந்தன.
வரும்பழி யாதோ? மன்னவர்க்கு ஏதோ?
ஆவது இங்கு அறியேன் ஜீவக! ஜீவக! 100
முற்றும் நான் அறிவன் நின்குற்றமுங் குணமும்.
குற்றம் மற்று என்னுள கூறற்கு உன்வயின்?
வித்தையும் உன்பெருஞ் சத்திய விருப்பமும்
உத்தம ஒழுக்கமும் எத்துணை ஐயோ!
வறிது ஆக்கினையே வாளா அனைத்தும்
அறியாது ஒருவனை அமைச்சா நம்பி!
இன்னது ஒன்றன்றி மற்றுஎன் பிழை யுன்னுழை?
மன்னவன் நல்லனா வாய்க்குதல் போல
என்னுளது அரியவற்று அரியது இவ்வுலகில்?
வாய்த்தும் இங்கு உனைப்போல் வாணாள் வறிதாத் 110
தீத்திற லொருவன் சேர்க்கையால் வீதல்
மண்ணுளோர் பண்ணிய புண்ணியக் குறைவே!
சுதந்திரம் அறிவோர்க்கு இதம்தீங்கு உண்டோ?
கூறுவோர் அறிவின் குறைவே? வேறுஎன்?
அன்றியும் உன்மிசை நின்றிடும் பெரும்பிழை
ஆயிரமாயினுந் தாய் மனோன்மணி நிலை
கருதுவர் உன்நலங் கருதாது என்செய்வர்?
வருவது வருக! புரிகுவம் நன்மை.
முருகன் வரவிலை?

[2–ம் படைஞனை நோக்கி]

2-ம் படை : வருவன் விரைவில். 120

நாரா : அதுவென் ஆ! ஆ!

2-ம் படை : ஆ! ஆ! அறியேம்.

நாரா : பலதேவன் படையலவோ?

2-ம் படை : ஆம்! ஆம்!

நாரா : மன்னவன்?

2-ம் படை : நடுவே.

நாரா : வலப்புறம்

2-ம் படை : குடிலன்

Koviloor Digital Library

நாரா : என்னை இக்குழப்பம் இடப்புறம்?

2-ம் படை : ஏதோ

நாரா : வருவது முருகன் போலும், முருகா!

[முருகன் வர]

(படை வீரரை நோக்கி) வயப்பரி வீரரே!

மன்னவர்க்கு அபஜயம்

இமைப்பு அளவின்கண் எய்தினும் எய்தும்.

இம்மெனு முன்னம் நாம் எய்துவோம்; வம்மின்!

முதற்படை : வந்தனர் ஈதோ மற்றைய வீரரும்.

நாரா : தந்தனம் உனக்கு அவர் தலைமை. நொடியில்

வலப்புறஞ் செலுத்துதி மன்னவன் பத்திரம்! 130

இருபுறங் காக்குதும். வருக என் அருகே!

(முருகன் காதில்) குடிலனை நம்பலை.

முதற்படை : அடியேன் அறிவேன்.

நாரா : அறிந்தவாறு ஆற்றுதி! மறந்திடேல் மெய்ம்மை!

வம்மின் வீரரே! வம்மின்!

உம்வயின் உளதுநம் செம்மலது உயிரே.

[யாவரும் விரைவாய்க் குதிரைமேற் செல்ல]

நான்காம் அங்கம் : இரண்டாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : அரண்மனையில் ஒரு சார் **காலம் :** நண்பகல்

[ஜீவகன் தனியாய்ச் சோர்ந்து கிடக்க :
சேவகர் வாயில் காக்க]

நேரிசை ஆசிரியப்பா

முதற் சேவகன் : செய்வ தென்? செப்பீர். கைதவற்கு யாமோ
ஆறுதல் கூறுவம்?

2-ம் சேவ : கூறலும் வீணே!
பெருத்த துயரிற் பேசுந் தேற்றம்
நெருப்பிடை நெய்சொரிந் தற்றே யென்பர்.

3-ம் சேவ : பணிந்து யாம் அருகே நிற்போம் அன்றித்
துணிந்து மற்றஅது தான் சொல்லுவர் யாவர்?

4-ம் சேவ : நாராயணரேல் தீரமாய் மொழிவர்.

3-ம் சேவ : மெய்ம்மை! மெய்ம்மை! விளம்புவர் செம்மையாய்!

முதற் சேவ : எங்குமற்று அவர்தாம் ஏகினர்? உணர்வைகொல்?

4-ம் சேவ : மங்கைவாழ் மனைக்குநேர் ஓடுதல் கண்டேன். 10

2-ம் சேவ : சகிப்பளோ கேட்கில் தமியள் –

3-ம் சேவ : ஆயினும்,
மகளா லன்றி மன்னவன் தேறான்.
அதற்கே சென்றனர் போலும். ஆ! ஆ!

2-ம் சேவ : நாராயணரே நன்மதி யுடையோர்.

4-ம் சேவ : பாரீர்! இன்று அவர் பண்ணிய சாகசம்.
இன்று யாம் பிழைத்ததிங்கு இவரால் அன்றே....

[ஜீவகன் எழுந்து நடக்க]

Koviloor Digital Library

3-ம் சேவ : அரசன் அஃதோ எழுந்தான் காணீர்.

முதற் சேவ : உரை தருகின்றான் யாதோ? ஒதுங்குமின்.
அடுத்து இவண் நிற்பீர் அமைதி! அமைதி!

ஜீவகன் : கெடுத்தேன் ஐயோ! கெடுத்தேன்! நாணம் 20
விடுத்து உயிர் இன்னும் வீணில் தரித்தேன்.
ஆ! ஆ! என்போல் யாருளர் வீணர்
யாருளர் வீணர்! யாருளர்! யாருளர்!
பாண்டியன் தொல்குலம் பட்டபாடு இன்றுமற்று
இதுவோ! இதுவோ! மதிவரு குலமே!
மறுவறு நறவே! மாசறு மணியே!
அழியாப் பழிப்பு உனக்கு ஆக்கவோ உனது
வழியா யுதித்தேன் மதியிலா யானும்!
அந்தோ! இந்து முதலா வந்த
முன்னோர் தம்முள் இன்னார்க்கு இரிந்து 30
மாண்டவர் அன்றி மீண்டவர் உளரோ!
யாதுஇனிச் செய்குவன்! ஐயோ பொல்லாப்
பாதகன் மக்களுள் வெட்கமில் பதடி. [பற்கடித்து]
போர்முகத்து ஓடிப் புறம் கொடுத்தேற்குக்
கார்முகம் என்செய! கடிவாள் என்செய!
[வில்லும் வாளும் எறிந்து]
ஓ! ஓ! இதனால் உண்டு ஓர் பெரும் பயன்.
[மறுபடியும் வாளை எடுத்து நோக்கி நிற்க
சேவகர் ஓடிவர]
போ! போ! வெளியே போரிடைப் பொலியாது
வாளா இருந்த வாளுக்கு ஈதோ! (நாராயணன் வர)
எனாது உயிர் ஈவேன். வினாவுவர் யாவர்;

நாரா : மனோன்மணி தன்னை மறந்தாய் போலும்! 40

ஜீவ : குழந்தாய்! குழந்தாய்!... (விழுந்து மூர்ச்சிக்க)

சேவகர் : கொற்றவா! கொற்றவா!

நாரா : பேசன்மின்! (அரசனை மடியில் தாங்கி)

முதற் சேவ : பேசன்மின்!

நாரா : வீசுமின்! அகன்மின்!

Koviloor Digital Library

முதற்சேவ : வெளியே!

4-ம் சேவ : பனிநீர் –

நாரா : தெளி நீ சிறிது!

ஜீவ : குழந்தாய்! குழந்தாய்! கொன்றேன் நின்சீர்!

[எழுந்து சோர்வாயிருக்க]

நாரா : இழந்தால் இருப்பளோ? என்செயத் துணிந்தாய்?

ஜீவ : நஞ்சே எனக்கு யான்! என் செய்வேன் இனி!
இருதலைக் கொள்ளியில் எறும்பு ஆனேனே!
செருமுகத்து இரிந்துஎன் மானஞ் செகுத்தும்
உயிரினை யோம்பவோ உற்றது? ஓர் சிறு
மயிரினை யிழக்கினும் மாயுமே கவரிமா. 50
பெருந் தகை பிரிந்தும் ஊன் சுமக்கும் பெற்றி
மருந்தா யெனக்கே யிருந்ததே நாரணா!

நாரா : மன்னவ! யார்க்குந் தன்உடல் மாய்த்தல்
அரிதோ? பெரிதாம் அஞர்வந்து உற்றுழிக்
கருதிய தமரைக் காட்டிவிட்டு ஓடி
ஒளிப்பதோ வீரம் என்று உன்னினை?

ஜீவ : ஓ! ஓ!
போரிடை யோடுவோன் வீரன் நாடுவனோ?

நாரா : காலமுங் களமுங் கண்டு திரும்புதல்
சாலவும் வீரமே தக்கவை யுணருந்
தன்மையில் சௌரியம் மடமே சூழ்ச்சி சேர் 60
வன்மையே வீரத்து உயிராம் மன்னவ!

ஜீவ : போதும்! போதும் நின் போலி நியாயம்!
சாதலுக்கு அஞ்சி யோர் தனையளுக்காகச்
சூதக வுடம்பைச் சுமக்கத் துணிந்தேன்.
மன்னனும் அல்லன். வழுதியும் அல்லன்!
(சேவகரை நோக்கி) என்னுடன் இருமின்! ஏன் நிற்கின்றீர்?

Koviloor Digital Library

முதற் சேவ : இறைவ! ஈது என்னை!

ஜீவ : இறைவன் என்று என்னை
இசைப்பது வசையே. இஃதோ காண்மின்!
அசைந்தது ஒரு நிழல். அஃதே யானெனப்
பாருமின். பாண்டியன் போரிடைப் பட்டான். 70
வாரும்! வாரும் இருமின் யாவரும்.

நாரா : வீணாய் வெற்றுரை விளம்பலை வேந்தே!
காணாய் அஃதோ! அவர் விடுங் கண்ணீர்.
[சேவகர் அழுதலை நோக்கி]

ஜீவ : வம்மின்! வம்மின்! எம்மனீர் ஏன் இது?

முதற் சேவ : பருதி கண்டு அன்றோ பங்கயம் அலரும்?
அரச நீ துயர் உறில் அழுங்கார் யாரோ;

ஜீவ : பிரிய சேவகரே! பீடை ஏன்! துயர் ஏன்?
இழந்தனம் முற்றும் என்றோ எண்ணினீர்!
அழிந்ததோ நம் அரண்? ஒழிந்ததோ நம்படை?
மும்மையில் இம்மியும் உண்மையில் இழந்திலம். 80
வெல்லுவம் இனியும்; மீட்போம் நம்புகழ்.
அல்லையேற் காண்மின்!

நாரா : அதற்கு என் ஐயம்?
இறைவ! இப்போது நீ இசைத்தவை சற்றுங்
குறைவிலை. தகுதியே. கூறியபடியே
ஆவது காண்குவம். அழகார் அம்புயப்
பூவினது உயர்வு பொய்கையின் ஆழத்து
அளவு ஆவதுபோல், உளமது கலங்கா
ஊக்கம் ஒருவனது ஆக்கத்து அளவெனத்
துணிவார்க்கு உறுதுயர், தொடுமுன் எவ்வும்
உணியார் பந்து உறும் அடிபோல், முயற்சியில் 90
இயக்கிய இன்பம் பயக்கும் என்று இசைக்குஞ்
சான்றோர் சொல்லும் சான்றே யன்றோ?

Koviloor Digital Library

ஆதலின் இறைவநீ ஓதிய படியே
உள்ளத்து எழுச்சியும் உவகையோடு ஊக்கமும்
தள்ளா முயற்சியும் தக்கோர் சார்பும்,
[குடிலனும் பலதேவனும் வர]
உண்டேல் ஊழையும் வெல்லுவம் மண்டு அமர்
அடுவதோ அரிது வடிவேல் அரசே!

குடிலன் : (தனதுள்) இப்பரிசாய் அரசு இருப்பது வியப்பே!
தக்கோர் என்றனன் சாற்றியது என்னோ?
[அழுவதாகப் பாவித்து ஒருபுறம் ஒதுங்கி
முகமறைந்து நிற்க]

ஜீவ : ஏன் இது குடில! ஏன் பலதேவ! 100
ஆனது ஏன்? அமைச்ச! ஆ! ஆ!

குடில : அடியேன்.

ஜீவ : வருதி யிப்புறம்! வருதி யென்னருகே!

குடில : (அழுது) திருவடிச் சேவையில்...

ஜீவ : செய்தவை அறிவோம்.

குடில : (ஏங்கி) ஜனித்த நாள் முதலா....

ஜீவ : உழைத்தனை! உண்மை!

குடில : உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே....

ஜீவ : விடுத்தனை. உண்மை. விளம்பல்என்?

குடில : உண்மையிற்
பிசகிலன் என்பது...

ஜீவ : நிசம்! நிசம்! அறிவோம்!

குடில : (விம்மி) எல்லாம் அறியும்ஈசன் சான்றுஎனக்கு
அல்லால் இல்லை....

ஜீவ : அனைவரும் அறிவர்.

குடில : அருமை மகன் இவன் ஒருவன்... 110

ஜீவ : அறிகுவம்.

Koviloor Digital Library

குடில : பாராய் இறைவ!

[பலதேவன் மார்பினைச் சுட்டிக்காட்டி]

ஜீவ : (பலதேவனை நோக்கி) வாராய்!

குடில : இப்புண்

ஆறுமாறு என்னை? தேறுமாறு என்னை?
உன் அருளன்று மற்று என்னுளது எமக்கே...

ஜீவ : அன்பின் குறி யன்று, யாது இது?

குடில : அடியேம்.

அன்பின் குறி யிது!

ஜீவ : ஆ! ஆ!

குடில : ஆயினும்

பொல்லாப் பகைவர் – பொய்யர் – அவர்பலர் –
இல்லாது ஆக்குவர் இறைவஎன் மெய்ம்மை...

[அழ]

ஜீவ : வெல்வோம் நாளை! விடு விடு துயரம்

குடில : (தனதுள்) அறிந்திலன் போலும் யாதும்!

[சிறிது உளம் தெளிந்து]

ஜீவ : அழுங்கலை.

வெறுந் துயர் ஏன் இது? விடு விடு! உலகில் 120
வெற்றியும் தோல்வியும் உற்றிடல் இயல்பே;
அழுவதோ அதற்காய் விழுமிய மதியோய்!

குடில : (தனதுள்) சற்றும் அறிந்திலன்! என்னை யென் சமுசயம்!

ஜீவ : முற்றிலும் வெல்லுதும் நாளை, அதற்கா
ஐயுறேல்! அஞ்சலை! ஆயிரம் வஞ்சியர்
நணுகினும் நாளை....

குடில : நாயேற்கு அதனில்

அணுவளவேனும் இலையிலை அயிர்ப்பு.
நெடுநாளாக நின் பணிவிடைக்கே
உடலோடு ஆவியான் ஒப்பித்து இருந்தும்,

Koviloor Digital Library

கெடுவேன், அவைஇக் கிளர்போ ரதனில் 130
விடுமாறு அறியா வெட்கமில் பதடியாய்க்
கொடியார் சிலர்செய் கொடுஞ் சூததனால்
தடுமாறு அடைந்து என் தகைமையும் புகழும்
கெடுமாறு உகுத்த கெடுமதி யொன்றே
கருத்திடை நினைதொறுங் கண்ணிடு மணல்போல்,
உறுத்துவது இறைவ! ஒவ்வொரு கணமும்,
பகைவர்தம் படைமேற் படுகிலா உடலம்
கெடுவேற்கு என்னோ கிடைத்தது இங்கு அறியேன்!
அடுபோர்க் களத்து யாண்டு அடைந்திலன்! ஐயோ!
வடிவேல் ஒன்றுஎன் மார்பிடை யிதுபோல் 140

[பலதேவனைக் காட்டி]

படுமா றில்லாப் பாவியேன் எங்ஙனம்
நோக்குவன் நின்முகம்? காக்குதி! ஐயோ!
தாக்குறு பகைவர் தம்படை யென்னுயிர்
போக்கில் நீயே நோக்குதி! காக்குதி!
இரக்கம் உற்றுஉன் திருக் கரத்து உறைவாள்இவ்
உரத்திடை ஊன்றிடிலுய்குவன். அன்றேல் –

[அழுது]

ஜீவ : உத்தம பத்தியில் உன்னைப்போல் யாரோ!

நாரா : (தனதுள்) மெத்தவும் நன்று இந்நாடகம். வியப்பே!

மற்றுஅக் கோழைக்கு உற்றதெப்படிப் புண்?
போரிடை யுளதன்று, யார் செய்தனர் பின்? 150
உணர்குவம். இப்பேச்சு ஒய்விலாப் பழங்கதை.

[நாராயணன் போக]

குடில : சித்தம் மற்றுஅவ் வகை தேர்ந்துளது என்னில்,
இத்தனை கருணையும் எனக்கென அருளுதி,
பாதநற் பணிவிடை படைத்த நாள் முதலா
யாதும் ஒன்று எனக்கா இரந்திலன், உணர்வை
ஓதியபடி யென்உரங் கிழித்து உய்ப்பையேற்

Koviloor Digital Library

போதும் இங்கு எனக்கு. அப்போதலோ காண்குவர்
மன்னுல குள்ளார் என்உள நிலைமை!
உன் பெயர்க்கு உரிய ஒவ்வோ ரெழுத்தும்
என்னுரத்து அழியா எழுத்தினில் எழுதி 160
இருப்பதும் உண்மையோ இலையோ என்பது
பொருக்கெனக் கிழித்து இங்குணர்த்துதி புவிக்கே
[முழந்தாள் ஊன்றி நின்று அழ]

ஜீவ : அழுவது ஏன்! எழு! யார் அறியார்கள்!
உன்னுளம் படும்பாடு என்னுளம் அறியும்,
என் அனுபவம் கேள், குடிலா! ஈதோ
சற்றுமுன் யானே தற்கொலை புரியத்
துணிந்து வாள் உருவினேன். துண்ணென நாரணன்
அணைந்திலனாயின் அக்காலை....

குடில : ஐயோ!

ஜீவ : தடுத்தான்; விடுத்தேன்!

குடில : (தனதுள்) கெடுத்தான் இங்கும்!

ஜீவ : அரியேறு அன்ன அமைச்ச! பெரியோர் 170
தரியார்; சகியார் சிறிதொரு சழக்கும்,
ஆயினும் அத்தனை நோவதற்கு என்னே?
வாள் உறை சேர்த்திலம்! நாளையும் போர் செயக்
கருதினோம்! உறுதி! வெருவியோ மீண்டோம்?

குடில : வஞ்சியர் நெஞ்சமே சான்று மற்று அதற்கு.
மீண்டதிற்குறைவுஎன்? ஆ! ஆ! யாரே
வெருவினார்? சீ! சீ; வீண்அவ் எண்ணம்
இரு தினம் பொருதனர் சிறுவனை வெலற்கு என்று
ஒருமொழி கூறநம் உழையுளார் சிலர் செய்
[நாராயணன் நின்ற இடம் நோக்கி]
சதியே யெனக்குத் தாங்காத் தளர்ச்சி! 180
அதுவலால் என் குறை மதிகுல மருந்தே!
சென்று நாம் இன்று திரும்பிய செயலே
நன்றெனப் போர்முறை நாடுவோர் நவில்வர்.

Koviloor Digital Library

செவ்விதில் ஓடி நாய் கௌவிடும்; சிறந்த
மடங்கலோ எதற்கும் மடங்கியே குதிக்கும்.
குதித்தலும் பகையினை வதைத்தலும் ஒரு கணம்.
நாளை நீ பாராய்! நாம் தூது அனுப்பும்
வேளையே யன்றி விரிதலை அனந்தை
யூரார் இவ்வயின் உற்றதொன்று அறியாச்
சீராய் முடியும் நம் சிங்கச் செருத்திறம்! 190
மீண்டோம் என்று உனித் தூண்டிலின் மீன்என
ஈண்டு அவன் இருக்குக; இருக்குக வைகறை
வரும்வரை யிருக்கில் வந்தஇவ் வஞ்சியர்,
ஒருவரும் மீள்கிலர். ஓர்கால்இக் குறி
தனக்கே தட்டிடில் தப்புவன் என்பதே
எனக்கு உள துயரம். அதற்குஎன் செய்வோம்?
ஆதலின் இறைவ! அஞ்சினோம் என்றுஒரு
போதுமே நினையார் போர்முறை அறிந்தோர்.

ஜீவ : எவ்வித மாயினும் ஆகுக. வைகறை,
இதுவரை நிகழ்ந்தவற்று எது குறைவுஎனினும் 200
அதுவெலாம் அகல நின்று அரும் போர் ஆற்றுதும்.

குடில : வஞ்சியான் இரவே அஞ்சி மற்று ஒழிந்திடில்
அதுவும் ஆம் விதம் எது?

[சேவகன் வர]

சேவகன் : உதியன் தூதுவன்.
உற்று மற்று உன்றன் அற்றம் நோக்கினனே.

குடில : சரி! சமாதானஞ் சாற்றவே சார்ந்தான்.

ஜீவ : பெரிதே நின்மதி! ஆ! ஆ! வரச்சொல்.

[வஞ்சித்தூதன் வர]

தூதன் : தொழுதனன். தொழுதனன். வழுதிமன்னவா!

[வணங்கி]

அருளே யகமாத் தெருளே மதியா
அடலே யுடலாத் தொடைபுகழேயா
நின்றஎன் இறைவன் நிகழ்த்திய மாற்றம் 210

Koviloor Digital Library

ஒன்றுளது உன் வயின் உரைக்க என்றே
விடுத்தனன் என்னை யடுத்த தூதுவனா
இன்றுநீர் இருவரும் எதிர்த்ததில் யாவர்
வென்றனர் என்பது விளங்கிடும் உனக்கே.
பொருதிட இனியுங் கருதிடில் வருவது.
அறிகுவை! அதனால் அறிகுறி உட்கொண்டு
உறுவது முன்னுணர்ந்து உறவு ஆவதற்கே
உன்னிடில் தாம்பிர பன்னியி னின்று ஒரு
கும்ப நீரும் ஓர் நிம்ப மாலையும்
ஈந்து அவ னாணையில் தாழ்ந்திடில் வாழ்வை! 220
மதில் திறம் மதித்து இறுமாப்பையேல் **நதியிடை**
மட் பரி நடாத்தினோர்க்கு ஒப்பு ஆகுவையே;
ஆதலின் எங்கோன் ஓதிய மாற்றம்
யாதெனிற் கைதவ! வைகறை வருமுன்
தாரும் நீரும் நீ தருவையேற் போரை
நிறுத்துவன். அல்லையேல் நின்புரம் முடிய
ஒறுத்திட உழிஞையுஞ் சூடுவன். இரண்டில்,
எப்படியுன் கருத்து அப்படி அவற்கே.

ஜீவ : நன்று! நன்று! நீ நவின்றனை, சிறுவன்
வென் றதை நினைத்தோ அலதுமேல் விளைவதைக் 230
கருதித் தன்னுளே வெருவியோ உன்னை
விடுத்தனன் என்பது இங்கு எடுத்து உரையாதே
அடுத்து இவண் உள்ளார் அறிகுவர். ஆயினும்,
மற்று அவன் தந்த சொற்கு உற்ற நம்விடை
சாற்றுதும் கேட்டி. வன்பொரு ளாயின்
ஏற்று இரந்தவற்கு யாம் யாதும் ஈந்திடுவோம்.
அருந்திடச் சேரன் அவாவிய புனலும்
விரும்பிய சுரும்பார் வேம்பும் விதுகுலம்
வரும் பரம்பரைக்கு ஆம் அல்லான் எனக்கே
உள வல; அதனால் ஒருவன் ஈந்திடுதல் 240
களவெனக் காணுதி. மற்றுநீ கழறிய

Koviloor Digital Library

உழிஞை அங்கு உளதெனில் வழுதிபாற் பழுதில்
நொச்சியும் உளதென நிச்சயம் கூறே.

தூதன் : ஐயோ! கைதவா! ஆய்ந்திலை உன்றன்
மெய்யாம் இயல்பு. மிகும் உன் சேனையின்
தீரமும் திறமும் உனதரும் வீரமும்
கண்முற் படுமுன் கவர்ந்த சேரர்க்கு இம்
மண்வலி கவர்தலோ வலிதென்று உன்னினை?
என்மதி குறித்தாய்! எடுத்தகைப் பிள்ளாய்!

குடில : நில்லாய் தூதுவ! நின் தொழில்உன் இறை 250
சொல்லிய வண்ணஞ் சொல்லி யாங்கள்
தரும் விடை கொடுபோய்ச் சாற்றலேயன்றி
விரவிய பழிப்புரை விளம்புத லன்றே.
அதனால் உன்னுயிர் அவாவினை யாயின்
விரைவாய் ஏகுதி விடுத்தவ னிடத்தே,

தூதன் : குடிலா உன்மனப் படியே! வந்தனம்;
மருவிய போர்இனி வைகறை வரையிலை.
இரவினில் வாழுமின் இவ் அரணகத்தே.

[தூதுவன் போக]

குடில : தூது இது சூதே. சொன்னேன் அன்றோ?

ஜீவ : ஏதமில் மெய்ம்மையே யாயினும் என்னை? 260
தீரும் தாரும் யாரே யளிப்பர்?
எனவோ அவைதாம் யாதே வரினும்
மனவலி யொல்கலை மானமே பெரிது.
சிதைவிடத்து உரவோர் பதையார் சிறிதும்.
புதைபடுங் கணைக்குப் புறங்கொடாது உம்பல்.
மதிகுலம் இதுகாறு ஒருவரை வணங்கித்
தாழ்ந்து பின் நின்று வாழ்ந்ததும் அன்று!
மாற்றார் தமக்கு மதிகுல மாலையும்
ஆற்று நீருடன் நம் ஆண்மையும் அளித்து
நாணாது உலகம் ஆளல்போல் நடித்தல் 270
நாணாற் பாவை யுயிர் மருட்டுதலே.

Koviloor Digital Library

ஒட்டார் பின்சென்று உயிர் வாழ்தலினும்
கெட்டான் எனப்படல் அன்றே கீர்த்தி?
அதனாற் குடிலா! அறிகுதி துணிபாய்.
எதுவாயினும் வரில் வருக. ஒருவனை
வணங்கி யான் இணங்குவன் எனநீ மதியேல்.

[எழுந்து]

வருவோம் நொடியில். மனோன்மணி நம்குலத்
திருவினைக் கண்டு உளந் தேற்றி மீள்குவம்.
கருதுவ பல வுள. காணுதும்.
இருநீ அதுகாறு இவ்வயின் இனிதே! 1 280

[ஜீவகன் போக]

குடில : கருதுதற்கு என்னே! வருவது கேடே.
தப்பினாய் இருமுறை. தப்பிலி நாரணன்
கெடுத்தான் பலவிதம். மடப்பயல் நீயே

[பலதேவனை நோக்கி]

அதற்கெலாம் காரணம்.

பலதே : அறிகுவை, ஒருவன்
இதுபோல் வேல் உன் நெஞ்சிடை யிறக்கிடில்

குடில : உன் நடக்கையினால்!

பலதே : உன் நடக்கையினால்!
மன்னனைக் குத்திட உன்னினை; ஊழ்வினை
என்னையே குத்திட இசைந்தது; யார் பிழை?

குடில : பாழ்வாய் திறக்கலை. ஊழ்வினை! ஊழ்வினை
பகைக்கலை யெனநான் பகலாற் பகர்ந்துளேன். 290

பலதே : பகையோ! பிரியப் படுகையோ? பாவி

குடில : பிரியமும் நீயும்! பேய்ப் பயல்! பேய்ப் பயல்!
எரிவது என்னுளம் உனை எண்ணுந்தோறும்
அரியஎன் பணமெலாம் அழித்து மற்று இன்று –

பலதே : பணம் பணம் என்று ஏன் பதைக்கிறாய் பிணமே

Koviloor Digital Library

நிணம்படு நெஞ்சுடன் நின்றேன். மனத்திற்
கண்டுநீ பேசுதி! மிண்டலை வறிதே!

[பலதேவன் போக]

குடில : விதியிது! இவனுடன் விளம்பி யென்பயன்?
இதுவரை நினைத்தவை யெல்லாம் போயின!
புதுவழி கருதுவம்! போயின போகுக! 300

[மௌனம்]

எதுவும் இந் நாரணன் இருக்கில்,
அபாயம். ஆ! ஆ! உபாயம் இங்கு இதுவே. 2

[குடிலன் போக]

நான்காம் அங்கம்: மூன்றாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library

இடம் : அரண்மனையில் ஒருசார் **காலம் :** மாலை

[ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை :
பலதேவன் ஒருபுறம் நிற்க]

நேரிசை ஆசிரியப்பா

ஜீவகன் : ஆதி யின்னதென்று ஓதுதற்கு அரிய
வழுதியின் தொழுகுல வாணாள் ஓர்இரா
என மதிப்பதற்கும் இருந்ததே! குடில!
இத்தனை கேடு இன்று எங்ஙனம் விளைந்தது?
சற்றும் அறிந்திலேன் தையலர் புகலுமுன்.
மாற்றார் நமது மதிற்புறத்து அகழைத்
தூர்த்தார் எனப்பலர் சொல்லுவது உண்மைகொல்!

குடில : (தனதுள்) ஓரிடம் அன்றே. உணர்ந்திலை போலும்.
வேர்அறக் களைகுதும். இதுவே வேளை.

ஜீவ : என்னை! என்னை! 10

குடில : மன்னவா! யான்இங்கு
என்னென ஒதுவன் இன்றையச் சூது?

ஜீவ : மருவரு மதிலுள கருவியென் செய்தன?

குடில : கருவிகள் என்செயும் கருத்தா இன்றியே!

ஜீவ : காவல் இல்லைகொல்? சேவகர் யாவர்?

குடில : ஏவலின்படி யாம் எண்ணாயிரவர்
ஆதியர் காவலா ஆக்கியே அகன்றோம்.

Koviloor Digital Library

ஜீவ : ஏதிதுபின் இவர் இருந்தும் மற்று இங்ஙனம்?

குடில : இருந்திடில் இங்ஙனம் பொருந்துமோ இறைவ!

ஜீவ : செவ்விது! செய்ததென்?

குடில : எவ்விதம் செப்புகேன்?
நாரணர் காவலின் நாயகர் ஆக்கினோம் 20
போரிடைக் கண்டனை நாரணர் தம்மை

ஜீவ : மெய்ம்மை! கண்டனம். விட்டதென் காவல்?

குடில : ஐய! யான் அறிகிலன். அவரிலும் நமக்கு
மெம்மையர் யாவர்? வேலியே தின்னில்
தெய்வமே காவல் செய்பயிர்க்கு என்பர்

ஜீவ : துரோகம்! துரோகம்!

குடில : துரோகமற் றன்று!
விரோதம்! அடியேன் மேலுள விரோதம்,
திருவடி தனக்கு அவர் கருதலர் துரோகம்.

ஜீவ : கெடுபயல்! துரோகம்! விடுகிலன் சிறிதில்.

குடில : மடையன்! ஐயோ! மடையன்! சுவாமி! 30
எலிப்பகை தொலைக்க இருந்ததன் வீட்டில்
நெருப்பினை இடல்போல் அன்றோ நேர்ந்தது.
விருப்பம் மற்று அவர்க்கு உன் வெகுமதி யாயின்
திருத்தமா யொரு மொழி திருச்செவி சேர்க்கில்
அளிப்பையே களிப்புடன் அமைச்சுந் தலைமையும்!
அத்தனை அன்புநீ வைத்துளை! [அழுது]

ஜீவ : ஆ! ஆ!
எத்தனை துட்டன்! எண்ணிலன் சற்றும்!

குடில : ஐயோ! எனக்குஇவ் அமைச்சோ பெரிது?
தெய்வமே அறியும் என்சித்த நிலைமை!
வெளிப்பட வொருமொழி விளம்பிடில் யானே 40
களிப்புடன் அளிப்பன் அக் கணமே யனைத்தும்.

Koviloor Digital Library

விடுவேம் அதற்கா வேண்டில்எம் உயிரும்!
போர் முகத்து இங்ஙனம் புரிதலோ தகுதி?
[பலதேவன் மார்பைக் காட்டி]

ஜீவ : யார்? யார்? நாரணன்?
[பலதேவனை நோக்கி]

பலதேவன் : ஆம்! அவன் ஏவலில்
வம்பன் அங்கு ஒருவன்....

ஜீவ : நம்பகை யன்றுயின்!

குடில : நின்பகை யன்று மற்று என் பகை யிறைவ

ஜீவ : உன்பகை யென்பகை; ஓ! ஓ! கொடியன்
செய்குவன் இப்போதே சிரச்சேதம்!
இடங் குழம்பியது இங்கு இதனாற் போலும்!

குடில : அடங்கலும் இதனால் ஐய! அன்றேல், 50
இடப்புறம் வலப்புறம் யாதே குழம்பும்?
மடப்பயல்! கெடுத்தான்! மன்னநம் மானம்!
ஒருமொழி யல்லாது இருமொழி யாயின்
வெருவர வைப்படை வெல்லுவது எங்ஙனம்!

ஜீவ : அழை நாரணனை
[முதற் சேவகனை நோக்கி]

முதற் சேவ : அடியேன்.

ஜீவ : நொடியில்.
[சேவகன் போக]

பழமையும் பண்பும்நாம்! பார்க்கிலம். பாவி!
இத்தனை துட்டனோ? ஏன்இது செய்தான்?

குடில : சுத்தமே மடையன் சுவாமீ! பொறுத்தருள்.
என்னதே அப்பிழை. மன்ன! நீ காக்குதி! 60
வருபவை உன் திருவருளால், வரு முன்
தெரிவுறும் அறிவு எனக்கு இருந்தும், திருவுளம்

Koviloor Digital Library

நிலவியபடியே பலதேவனைப் படைத்
தலைவனா யாக்கிடச் சம்மதித்து இருந்தேன்.
எனதே அப் பிழை. இலதேல் இவ்விதம்
நினையான் இவனுயர் நீக்கிடப் பாவி!
அதன்பின் னாயினும் ஐயோ! சும்மா
இதமுற இராது போர்க் களமெலாம் திரிந்து
கடிபுரிக் காவற் படைகளும் தானுமாய்
இடம்வலம் என்றிலை; இவுளிதேர் என்றிலை;
கடகயம் என்றிலை; அடையவும் கலைத்து, 70
கைக்குள் கனியாய்ச் சிக்கிய வெற்றியை.... (விம்மி)

ஜீவ : கண்டனம் யாமே,

குடில : காலம்! காலம்!

ஜீவ : கொண்டுவா நொடியில். (2–ம் சேவகனை நோக்கி)

2-ம் சேவ : அடியேன்! அடியேன்!

[2–ம் சேவகன் போக]

குடில : சென்றது செல்லுக. ஜயிப்போம் நாளை.
ஒன்றுநீ கேட்கில் உளறுவன் ஆயிரம்.
கெடுநா வுடையான். கேட்டு இனி யென்பயன்?

ஜீவ : விடுவோம் அல்லேம். வெளிப்படை கேட்பதென்?
எழுமுன் அவன்கழு வேறிடல் காண்குதும்.

குடில : தொழுதனன் இறைவ! பழமையன்! பாவம்!
சிறிதுசெய் கருணை. அறியான்! ஏழை!

ஜீவ : எதுவெலாம் பொறுக்கினும் இது யாம் பொறுக்கிலம்.
எத்தனை சூதுஉளான்! எத்தனை கொடியன்!

குடில : சுத்தன்!

ஜீவ : சுத்தனோ? துரோகி! துட்டன்!

[நாராயணன் உள்ளே வர]

இட்டநம் கட்டளை யென்னை இன்று உனக்கே

[முருகன் முதலியோர் வாயிலில் நிற்க]

Koviloor Digital Library

நாரா : எப்போது இறைவ!

ஜீவ : இன்று போர்க்கு ஏகுமுன்!

நாரா : அப்போது ஆஞ்ஞையா
அறைந்ததொன்று இல்லை.
கடிபுரி காக்க என்று ஏவினன் குடிலன்.

ஜீவ : குடிலனை யாரெனக் கொண்டனை கொடியாய்?

நாரா : குடிலனைக் குடிலன் என்றேஉட் கொண்டுளேன்.

ஜீவ : கெடுவாய்; இனிமேல் விடுவாய் பகடி 90
குடிலன் என் அமைச்சன்.

நாரா : நெடுநாள் அறிவேன்

ஜீவ : நானே யவன் இங்கு அவனே யானும்.

நாரா : ஆனால் நன்றே. அரசு அமைச்சு என்றிலை.

ஜீவ : கேட்டது கூறுதி.

நாரா : கேட்டிலை போலும்!

ஜீவ : கடிபுரி காத்தைகொல்?

நாரா : காத்தேன் நன்றாய்!

ஜீவ : காத்தையேல் அகழ்க்கணந் தூர்த்ததென் பகைவர்?

நாரா : தூர்த்தது உன்பகையல. துரத்திய படைப்பிணம்.
பார்த்து மேற் பகருதி,

ஜீவ : பார்த்தனம் உன்னை
ஆர்த்த போர்க் களத்திடை! அதுவோ காவல்?

நாரா : உன்னையுங் காத்திட உற்றனன் களத்தில் 100

ஜீவ : என்னை யுன்கபட நாடகம்? இனிதே!
அவன் உரம் நோக்குதி. அறிவைகொல்?
[பலதேவனைக் காட்டி]

நாரா : அறிவேன்.

ஜீவ : எவன் அது செய்தவன்?

நாரா : அவனே அறிகுவன்.

Koviloor Digital Library

ஜீவ : ஒன்றும் நீ உணர்கிலை?

நாரா : உணர்வேன் இவன்பால்
நின்றதோர் வீரன்; இப் பொற்றொடி யுடையான்.
"என் தங்கையின் இழிவு இப்படி யெனக்கே"
என்றுதன் கைவேல் இவன் உரத்து எற்றிப்
பொன்றினன் எனப் பலர் புகல்வது கேட்டேன்.

ஜீவ : நன்று நன்று உன் கதை!

குடில : நன்று இது நன்றே!
[பொற்றொடி காட்டி]
பூண் இது நினதே! அரண்மனைப் பொற்றொடி 110
காணுதி முத்திரை! வாணியுஞ் சேர்ந்துளாள்.
இச்செயற்கு இதுவே நிச்சயங் கூலி.
அடியேந் தமக்கு இனி விடையளி. அகலுதும்.
அஞ்சிலேம் உடலுயிர்க்கும் அஞ்சுவம் மானம்.
வஞ்சகர் கெடுப்பர். வந்தனம்.
[தன் முத்திரை மோதிரம் கழற்றி நீட்ட]

ஜீவ : (நாராயணனை நோக்கி) நில்! நில்!
இத்தனை சூதெலாம் எங்கு வைத்திருந்தாய்!
உத்தமன் போல மற்றும் எத்தனை நடித்துளாய்!
சோரா! துட்டா! சுவாமித் துரோகி!
வாராய் அமைச்ச! வாரீர் படைகாள்!
[முருகன் முதலிய தலைவரும் படைஞரும் வர]
நாராயணன் இந் நன்றிகொல் பாதகன்,
இன்றுயாம் இவனுக்கு இட்ட கட்டளையும்
நன்றியும் மறந்து நன்னகர் வாயிற்
காவல் கைவிடுத்துக் கடமையிற் பிறழ்ந்தும்,
மேவருந் தொடியிது எம்கோவிலில் திருடியும்.
ஏவலர்க்கு அதனை யீந்தே பலதேவன்
ஓவலில் உயிரினை யுண்டிடத் தூண்டியும்,
அனுமதியின்றி யின்று அமர்க் களத்து எய்திக்

Koviloor Digital Library

கனைகழற் படைபரி கரிரதங் கலைத்துச்
சுலபமா யிருந்தநம் வெற்றியுந் தொலைத்துப்
பலவழி இராஜத் துரோகமே பண்ணியும் 130
நின்றுளான். அதனால் நீதியாய் அவனை
இன்றே கொடுங் கழுவேற்றிட விதித்தோம்!
அறிமின் யாவரும்! அறிமின்! அறிமின்!
சிறிதன்று எமக்கு இச்செயலால் துயரம்;
இன்றுநேற் றன்று எனக்கு இவனுடன் நட்பு

நாரா : வெருவிலேன் சிறிதும் வேந்த நின்விதிக்கே!
அறியா யாயின் இது காறாயும்
வறிதே மொழிகுதல்! வாழ்கநின்குலம்!

ஜீவ : நட்புஅல; மக்களே யாயின்என்? நடுநிலை
அற்பமும் அகலோம். ஆதலின் இவனை 140
[படைத்தலைவரை நோக்கி]
நொடியினில் கொடுபோய் இடுமின் கழுவில்!

முருகன் : அடியேம். நொடியினிம் ஆற்றுதும் ஆஞ்ஞை
குடிலரே வாரும்?

ஜீவ : - மடையன் இவன் யார்?

முருகன் : கூறிய பலவும் குடிலரோடு ஒவ்வும்.
வேறுயார் பிழைத்தனர் வேந்தே?மற் றின்றே!

குடில : கேட்டனை யிறைவ! கெடுபயல் கொடுமொழி.
(காதில்) மூட்டினன் உட்பகை!

நாரா : முருகா! சீ! சீ;
[முருகனை அருகு இழுத்து]

ஜீவ : மாட்டுதிர் இவனையும் வன்கழுவதனில்.
[சேவகனை நோக்கி]

முருக : ஆயிற்கழு பதினாயிரம் வேண்டும்.
[வாயிற் சேவகன் வர]

சேவ : சுந்தரமுனிவர் வந்தனர் அவ்அறை.
சிந்தனை விரைவிற் செய்தற்கு உளதாம்.

Koviloor Digital Library

ஜீவ : வந்தது எவ்வழி யிவர்! வந்தனங் குடிலா
நடத்துதி யதற்குள் விதிப்படி விரைவில்.

குடில : மடத்தனத்தால் இவர் கெடுத்து எனைப் புகல்வர்!
விடுத்திட அருளாய்!

ஜீவ : விடுகிலம்.

குடில : ஆயின்,
அடுத்து நின்று இதுநீ நடத்தலே அழகாம்

ஜீவ : அடைத்திடு சிறையினில், அணைகுதும் நொடியில்.
[ஜீவகன் போக]

குடில : (தன் சேவகனை நோக்கி)
சடையா! கொடுபோய் அடையாய் சிறையில்.
[சடையன் அருகே செல்ல]

முருக : அணுகலை! விலகிநில்! அறிவோம் வழியாம்.
[சடையன் பின்னும் நெருங்க]
வேணுமோ கோணவாய் விக்கா! 160

சடையன் : கொக் கொக்! (விக்கி)

முருக : கூவலை! விடியுமுன் கூவலை!

சடையன் : கொக் கொக்.

சேவகர் யாவரும் : சேவலோ! சேவலோ! சேவலோ! சேவலோ!
[கைதட்டிச் சிரித்து]

குடில : ஏது இது? இங்ஙனம் யாவரும் எழுந்தார்?
வீதியிற் செல்லலை. வீணர் அபாயம்?
ஒழிகுவம் இவ்வழி? வழியிது வா? வா?
[குடிலனும் பலதேவனும் மறைய]

சேவகரிற் சிலர் : பிடிமின் சடையனை!
[சடையனும் குடிலன் சேவகரும் ஓடிட,
சில படைஞர் துரத்திட, சிலர் ஆர்த்திட]

மற்றைய சேவகர் : பிடிமின்! பிடிமின்!

Koviloor Digital Library

சேவகரிற் சிலர் : குடிலன் எங்கு உற்றான்?

குடில : கொல்வரே! ஐயோ!

[நன்றாய் மூலையில் மறைய]

சேவகரிற் சிலர் : விடுகிலம் கள்வரை

மற்றைய சேவகர் : பிடிமின்! பிடிமின்!

[கூக்குரல் நிரம்பிக் குழப்பமாக]

நாரா : முருகா நிகழ்பவை சரியல சிறிதும்

[ஒரு திண்ணையிலேறி நின்று]

அருகு நில், சீ! சீ! அன்பரே அமைதி 170

[குழப்பங்குறைந்து அமைதி சிறிது பிறக்க]

முருகன் : அமைதி கேண்மின்!

முதற் சேவகன் : அமைதி! அமைதி!

நாரா : நல்லுயிர்த் துணைவரே! நண்பரே! ஒருமொழி
சொல்லிட ஆசை! சொல்லவோ?

[குழப்பம் தீர]

சேவகரிற் சிலர் : சொல்லுதி.

[சிறிது சிறிதாய்ப் படைஞர் நெருங்கிச் சூழ]

சேவகர் யாவரும் : சொல்லாய்! சொல்லாய்! பல்லாயிரந்தரம்

நாரா : நல்லீர் மிகவும் அல்லாது இங்ஙனம்
முன்பின் அறியா என் போலிகள் மேல்
அன்பு பாராட்டீர். அனேக வந்தனம்!

[கைகூப்பி]

சேவகர் : அறியார் உனை யார்? அறிவார் யாரும்.

[முற்றிலும் அமைதி பிறக்க]

நாரா : அறிவீராயினும் யான் என் செய்துளேன்?
என்செய வல்லவன்! என் கைம்மாறு! 180
பாத்திரமோ நும் பரிவிற்கு இத்தனை

சேவகர் : காத்தனை! காத்தனை! காவற் கடவுள் நீ!

Koviloor Digital Library

நாரா : கெட்டார்க்கு உலகில் நட்டார் இல்லை!
ஆயினும், வீரர் நீராதலின், நும்முடன்
ஈண்டு ஒரு வேண்டுகோள் இயம்பிட ஆசை
அளிப்பீரோ அறியேன்?

[படைஞர் நெருங்கிச் சூழ]

சேவகர் : அளிப்போம் உயிரும்.

குடில : (பலதேவன் காதில்) ஒளித்தது இங்கு
உணர்வனோ? ஓ! பலதேவ!

நாரா : ஒரு தினமேனும் பொருதுளேன் நும்முடன்.
கருதுமின் என் அவமானமும் சிறிதே.

சேவகர் : உரியதே யெமக்கு அது பெரிதன்று உயிரும்! 190

[யாவரும் கவனமாய்க் கேட்க]

குடில : (தனதுள்) எரி யிடுவானோ இல்லிடை? ஐயோ!

நாரா : அத்தனை அன்புநீர் வைத்துளீ ராயின்
என் மொழி தனக்குநீர் இசைமின், எனக்காத்
தீதே யாயினும் செமித்து அருள் புரிமின்!

சேவகர் : யாதே யாயினும் சொல்லுக!

நாரா : சொல்லுதும்!
போர்க்களத்து உற்றவை யார்க்கும் வெளிப்படை.
ஊர்ப்புறத்து இன்னம் உறைந்தனர் பகைவர்.
நாற்புறம் நெருப்பு நடுமயிர்த் தூக்கின்
மதிகுலக் கொழுந்தாம் மனோன்மணி நிலைமை
இதனிலும் அபாயம் இங்கு எய்துதற்கு இல்லை. 200

நுந்தமிழ் மொழியும் அந்தமில் புகழும்
சிந்திடும்; சிந்திடும்; நும் சுதந்தரமும்.
இத்தகை நிலைமையில் என்னை நும் கடமை?
மெய்த்தகை வீரரே! உத்தம நண்பரே!
எண்ணுமின் சிறிதே! என்னைநம் நிலைமை!

Koviloor Digital Library

களிக்கவும் கூவவும் காலம் இங்கு இதுவோ?
வெளிக் களத்து உள பகை, விண் கூக்குரல் இதைக்
கேட்டிடிற் சிறிதுங் கேலியென்று எண்ணார்;
கோட்டையுட் படை வெட்டே யெனக்கொள்வர்.
பெரிதுநம் அபாயம்! பேணி யதற்குநீர் 210

உரியதோர் கௌரவம் உடையராய் நடமின்.
விடுமின் வெகுளியும் வீண்விளை யாட்டும்.
படையெனப் படுவது கரையிலாக் கருங்கடல்.
அடலோ தடையதற்கு ஆணையே யணையாம்.
உடைபடில் உலகெலாம் கெடும்ஒரு கணத்தில்.
கலை மருந்து அறையிற் சிறு பொறி சிதறினும்
பெரு நெருப்பு அன்றோ? பின்புஆர் தடுப்பர்?
அதனால் அன்பரே! ஆணைக்கு அடங்குமின்.

குடில : (மூச்சு விட்டு) ஆ!

நாரா : இதுபோலில்லை யெனக்கு உபகாரம்!

(மௌனம்)

இரந்தேன். அடங்குமின்! இரங்குமின் எமக்கா; 220

1-ம் சேவ : நாராயணரே! நவின்றவை மெய்யே!
ஆரேயாயினுஞ் சகிப்பர் அநீதி?

நாரா : ஏதுநீர் அநீதி யென்று எண்ணினீர்? நண்பரே!
ஓதிய அரச னாணையை மீறி
எனது உளப்படி போர்க்கு ஏகிய அதற்கா
மனுமுறைப் படிநம் மன்னவன் விதித்த
தண்டனையோ அநியாயம்? அலதுயான்
உண்ட சோற்று உரிமையும் ஒருங்கே மறந்து மற்று
அண்டிய அரச குலத்திற்கு அபாயம்
உற்றதோர் காலை உட்பகை பெருக்கிக் 230
குற்றமில் பாண்டியனுக்கு அற்றமில் கேடு
பண்ணினேன் என்னப் பலதலை முறையோர்
எண்ணிடும் பெரும் பழிக்குஎன் பெயரதனை

Koviloor Digital Library

ஆளாக்கிட நீர் வாளா முயலலோ
யாதே அநீதி? ஓதுமின், அதனால்
என்புகழ் விரும்புவ ராயின், நண்பரே!
ஏகுமின் அவரவ ரிடத்திற்கு ஒருங்கே!

1-ம் சேவ : எங்குஇனி ஏகுவம் இங்கு உனை யிழந்தே?

2-ம் சேவ : உன் கருத்து இருப்பிற்கு உரியதோ இவ்விதி?

நாரா : கருத்தெலாம் காண்போன் கடவுள். விரித்த 240
கருமமே யுலகங் காணற்கு உரிய.
ஒருவனோ அலதுஇவ் வுலகமோ பெரிது?
கருதுமின் நன்றாய். காக்குமின் அரசனை.
செல்லுமின்! நில்லீர்! செல்லில்என் தனக்கு
நல்லீர் மிகவும்!

சேவகர் : நாராயணரே!
உமக்குஆம் கொடிய கழுமரம் எமக்கும்
நன்றே யென்றே நின்றோம் அன்றிக்
கெடுதி யொன்று எண்ணிலம். கொடும் அதற்கு அநுமதி.

நாரா : தென்னவன் சிறைசெயச் செப்பினன்; அதனால்
இன்னம் பிழைப்பேன் இக்கழு, உமக்குயான் 250
சொன்னவாறு அடங்கித் துண்ணென ஏகில்.
இல்லையேல் எனக்குஇனி யெய்துவது அறியேன்.
வல்லைநீர் செல்லுமின்! செல்லுமின்! வந்தனம்.
செல்லுமின்! சத்தியம் செயிக்கும்! செயிக்கும்!
நல்லது! நல்லது!

[படைஞர் விடைபெற்றுப் போக]

முருகன் : நாராயணரே;
நும்சொல் என்சிரம். ஆயினும் நும்செயல்
சரியோ என்று எனக்கு உறுவதோர் ஐயம்.
சத்தியம் ஜயிக்கும் என்றீர். எத்திறம்?
குடிலன் தனக்கு அநுகூலமா யனைத்தும்
முடிவது கண்டும் மொழிந்தீர் முறைமை! 260

Koviloor Digital Library

நாரா : பொறு! பொறு! முடிவில் அறிகுவை.

முருகன் : முடியும்
தருணம் யாதோ? மரணமோ என்றால்,
மரண மன்று அது; மறுபிறப்பு என்பீர்!
யாதோ உண்மை?

நாரா : (இருவரும் நடந்து) ஒதுவம். வா வா!
நன்று இது; தீது இது; என்றுஇரு பான்மையாய்த்
தோற்றுதல் துணிபே அதனால்
தேற்றம் இதே யெனச் செய்க நல்வினையே. 1

[நாராயணனும் முருகனும் சிறைச்சாலைக்குப் போக]

பலதே : என்னையுன் பீதி? எழுஎழு. இவர்க்கு உன்
பொன்னோ பொருட்டு?

[பலதேவனும் குடிலனும் வெளியே வந்து]

குடில : போ! போ! மடையா
உன்னினன் சூதே.

பலதே : உன் குணம். நாரணன் 270
சொன்னது கேட்டிலை?

குடில : சொல்லிற்கு என் குறை?
முன்னிலும் பன்னிரு பங்கு அவன் துட்டன்.

[சேவகன் வர]

சேவகன் : மன்னவன் அழைத்தான் உன்னை மற்று அப்புறம்

குடில : வந்தனம் ஈதோ! சுந்தரர் போயினர்

சேவ : போயினர்.

குடில : ஓ! ஓ! போ இதோ வந்தோம்.

[சேவகன் போக]

(தனதுள்) ஆயினது என்னையோ அறிகிலம். ஆயினுஞ்
சேயினும் எளியேன். திரும்பவும் நொடியே. 2

[குடிலனும் பலதேவனும் போக]

நான்காம் அங்கம் : நான்காம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : அரண்மனையில் ஒரு சார் **காலம் :** மாலை

[ஜீவகனும் சுந்தர முனிவரும் மந்திராலோசனை]

நேரிசை ஆசிரியப்பா

சுந்தரர் : வளையும் வேய் நிமிரும்; வளையா நெடுமரம்
கிளையுடன் கெடுமே கிளர்காற் றதனில்!

ஜீவகன் : முளையும் ஓர் மரமோ? முனிவ! புல்லினம்;
களைகுவர்! களைகிலர் காழ்பெறுந் தருக்கள்
சேண் உயர் தேக்கு திசையெறி சூறையில்
ஆணிவேருட னெழுந்து அதிர்ந்து அசைந்தி றினும்
பேணுவர் அதனைப் பெரியோர்! யாரே
காணுவர் காழறு நாணமில் நாணலை?
ஓர் உயிர்ப்பேனும் உண்டேல் அடிகாள்?
போரிடைப் போக்குவன்; புகழ் எனக்கு அதுவே! 10

சுந்தர : பொறு பொறு! ஜீவக! வெறு மொழி புகலேல்
அரியது செய்வதே ஆண்மையும் புகழும்!
அரிதுஉயிர் தரித்தலோ மரித்தலோ அறைதி.
வேட்டையார் ஓட்டிட வெருவி தீக்குருவி
நீட்டிய தன்சிரம் நீள்மணற் புதைத்துத்
தனதுகண் காணாத் தன்மையர் பிறருந்
தனது உடல் காணார் என நினைவதுபோல்
என்னையிம் மயக்கம் மன்னவ! உனக்கும்!
சிறுபசி தாங்காச் சிறுமையர் பற்பலர்;
அறவழி யிதுவென அறியாக் கயவர்; 20

Koviloor Digital Library

பிறர் பொருள் வௌவியும் பிறவுயிர் கவர்ந்தும்
அலையுந் தீமையர் அநேகர், அகப்படின்
மலைவு அற மரணமும் வெருவார் மான,
கலக்க மொன்று இன்றிக் கழுவேறிடுதல்
புலப்படக் கண்டுளாய் இலக்கமில் முறையே.
துரத்திடுந் துயர்க்கணம் வருந்திடுங் காலை
மரித்தலோ அவையெலாஞ் சகித்தலோ தகுதி?
தன்னுயிர் ஈவர் தக்கோர் சார்ந்த
மன்னுயிர் காத்திடும் மார்க்க மற்று அஃதேல்
வார்கடல் முகட்டில், மாநிதி வழிஞர் 30

ஆர்கலன், அலையெறி புயல்கால் ஆதியாற்
சேர்திசை திரிந்து தியங்குமேல், மீகான்
களமுங் காலமுங் கருதித் தனக்கு உறு
தளர்வு பாராட்டுதல் தவிர்த்து, சாய்ந்து, மற்று
எதிருறு காற்றிற்கு இசைவுற வதிந்து,
தன்திசை செல்லத் தக்க கால் வரும் வரை
சென்று ஒரு கரை சேர்ந்து ஒன்றுவன அல்லால்,
உவப்புஉறு நிதிகெட உழையுளார் களும்பரி
தவித்திட மரக்கலம் துறப்பனோ? சாற்றாய்.
தக்கோர் செயலெலாம் தமக்கா அலவே.
முக்கியம் புகழோ தக்கவன் கடமையோ?
அதனால் ஜீவக! அகற்றுஅந் நினைப்பு.
மதிகுலம் வந்த மதிவலோர் பலரும்
செலாவழி நின்திமில் செலுத்தினை; தீங்காய்
உலாவிற் சுழல்காற்றோடு ஒரு சுழியிடைப்
பட்டனை; நம்பிய பாய்மரம் பழுது,
விட்டிடுஇக் கோட்டையாம் வெளிக்கட லோட்டம்.
மண்டிய பெருங்காற்று அடங்கும் வரையும்
அண்டையில் உளதோர் கைவழி யதனில்
ஒண்டுநீ ஒதுங்கி உன்தொல் நகராந்
துவாத சாந்தத் துறைபோய்
நிவாதமா நிலைபெறலே நெறிமுறையே!

Koviloor Digital Library

ஜீவ : என்குல முனிவ! இயம்பிய மாற்றம்
நன்கே. உன்றன் நயப்பிற்கு என்செய!
கழுமரக் கதையதைக் கண்டேன் இன்றே.
பழுதுபாய் மரம்எனப் பகர்ந்ததும் உண்மை!
வழுவெனக் கண்டு அது மாற்றினன். அநேக
வந்தனம் வந்தனம்! ஆயினும் ஒரு சொல்
சிந்தையிற் சேர்த்து எனைத் தெருட்டிடவேண்டும்.

வேற்றுமை யுருவாய் விளங்கிய காலம் 60
காற்றினுங் கடுகிய கடுநடை யுடையது
அன்றோ? அதில் அகப்பட்டார் முந்திச்
சென்றால் நின்றார்! சிறிது சிந்தித்து
நிற்பரேற் பெரிதும் பிற்பட்டு ஒழிவர்.
ஆதலால் அடிகாள் பூதலத்து உயர்ந்த
மேதையின் மிகுந்த மானிடர்க்கு அரசராய்
வந்தவர், தந்தமக்கு உற்ற மதித் திறம்
எட்டிய மட்டுங் குற்றம் விடுத்துக்
கால கதிக்கு அனுகூலமாய் நவீனச்
சீர்பல திருத்தி ஓர்இயல் புதிதா 70

நாட்டித் தமது நாட்டுளோர் சுகம் பா–
ராட்டிலரேல் அவராண்ட நாட்கு எல்லை
காட்டுமோ கொடிய காலக் கரப்பே!
இவ்வழி தனக்கெனத் துணிந்ததோர் இயல்பே
அவ் அரசனுக்காம் யாக்கை. அஃதின்
அழிவே அவனது ஒழிவாம். அதனால்
எல்லாம் அறிந்த இறைவ! இவ்விடத்து யான்
பல்லாயிரம் நாட் பரிவுடன் உழைத்தே
அமைத்தஇப் புரியும் சமைத்தஇவ் அரணும்
நன்றே யாயினும் ஆகுக: அன்றிப் 80

பொன்றினும் பொன்றுக. பொறித்தஎன் அரசியல்
மற்றுஅவை தம்மொடு மாண்டிடும்; மாண்டபின்
அற்றதோர் கவந்தம் அமர்க்களத்து ஆடும்

Koviloor Digital Library

பெற்றிபோல் மூச்செறி பிணமா யானும்
நடித்தலோ உன் திருவடித் தாமரையைப்
பிடித்ததற்கு அழகாம் பேசாய் விடுத்தே!

சுந்தர : எடுத்த தன் முயற்சி யாதே யாகுக!
முடித்திடு முன்னர் அடுத்த தன் மதியால்
தீங்கெனத் தேர்ந்திடின் ஆங்கு அவற்றுட் பின்
வாங்கலே யார்க்கும்ஆம் பணி யென்ப. 90
தீமை கைவிடற்கு வேளை சிந்திப்போர்
சேய்மை யுனிமனை திரும்பார் ஒப்பர்.
ஆதலால் ஜீவக! தீதென வருதற்கு
யாதோர் ஐயமும் இலைநீ தொடர் இயல்
எனஇன்று எய்தியவற்றால் உனது
மனத்திடை மயக்குஅற மதித்துளை யாயின்,
ஒழுங்கா இவையெலாம் ஒழித்து யான் குறித்த
மருங்கே யணைந்து வாழலே கருமம்.
வேறிலை தேறு மார்க்கம்.
கூறுதி யதனால் உன்மனக் கோளே. 2 100

ஜீவ : ஐய! யான் உரைப்பதென்? அடுத்தவை இவையெலாம்
கைவிடில் என்னுயிர் கழியும். அதனில்
இன்று யான் பட்ட இகழ்ச்சி முழுதும்
பொன்றிடப் பொருது பின் பொன்றுதல் அன்றோ
சிறப்பது செப்புதி! சிறியேன் ஒரு சொல்
மறுத்தது பொறுத்தருள் மாதவக் கொழுந்தே!

சுந்தர : சங்கரா! சற்றோ தாதான்மிய பலம்!
வெங்கரா பிடித்தவை விடினும் விடுமே!
நல்லது ஜீவக! நண்டு எனும் புல்லிய
அற்பமாஞ் சிற்றுயிர் அரிய தன் உடலையும் 110

பிற்கிளைக்கு இரையென வீந்து அவை பேணல்
கண்டும் புகழிற் கொண்டனை பிராந்தி.
இவ் உயிரியல் உலகியற்கை யென்று எண்ணினேன்.
செவ்விதின் நின்நிலை தேர்ந்தபின் ஐயம்

Koviloor Digital Library

வருவது. அதனால், மதிகுலம் வந்த
ஒரு மலர் நின்னுழை யுள்ளது; தமிழர்
ஆவோர் யார்க்கும் அஃது உரித்தாம்; நீ
காவாயாகிற் காப்பது எங் கடனே;

ஜீவ : இதுபோல் இல்லை அடிகள் செய்யும்
உதவி தமியேற்கு உளதுயர் இதுவே; 120

கண்மணி தனையெணிப் புண்படும் உள்ளம்
அருளுதி காக்கும் உபாயம்.
இருள் நிறை யிடுக்கணுக்கு இயைந்திடு மருந்தே.

சுந்தர : நல்லது! கேட்டி! சொல்லுதும், உரிய நீர்
விட்டால் முதலையும், விரும்பி அதில் அகப்
பட்டாற் களிறும் பலம் இலவாகி
விடுமென அறிந்த கெடுவினை யாளர்
தொடர்பினால். அவர்இடு தூண்டிலிற் சிக்கி
இடமது பெயர்ந்துழி, எடுத்தஎவ் வினைக்கும்
கேடுமுன் கருதிக் கோடலே முறையெனும், 130

அறிவோர் மொழி அயர்ந்து இறுமாப்பு அகத்துட்
கொண்டுநீ நின்றதைக் கண்டு இக்கடிபுரி
தொட்டுஎன் உறையுள் மட்டும்ஓர் சுருங்கை
அதிரகசியமாய் அமைத்துளேன். அவ்வழி,
சதமென நம்பும்இச் சாலி புரமும்,
அதன் புறம் ஊன்றிய அடர் புலப் படையும்
அறிந்திடா வகையவை கடந்து சென்று உன்னை
மறந்திடா மாபதி யடைந்திடச் செயுமே.

ஜீவ : தேவரீர் செய்யும் திருவருளுக்கு மாறு
ஆவதும் உளதோ ஆ! ஆ! அடிகாள்! 140
வழுதியர் பலர்பலர் வழிவழி காக்கும்
முழுமதித் தொழுகுலத் தெய்வம் நீ போலும்.
பழுதற நீ யிவண் பகர்ந்த தோர் வழியிது
திருத்திட எடுத்த வருத்தம் எத் தகைத்தே!

சுந்தர : நல்லது! முகமன் நவின்றனை. நிற்க.
சொல்லிய சுருங்கை யுனக்கும்இவ் இடுக்கணில்
உதவுமோ அன்றோ உரைக்குதி விரைந்தே!

Koviloor Digital Library

ஜீவ : அடியேன் ஆசை திருவடி அறியும்.
கடிபுரி விடில்உயிர் நொடியும் இங்கிராது.
பாண்டியர் குலமெனும் பாற்கடல் உதித்த 150
காண்தகு கன்னியை இவ்வழி உன்திரு
உளப்படி கொடுபோய் அளித்தரு ளுதியேல்,
இந்துவின் குலமெனும் முந்திய பெயர் போய்ச்
சுந்தரன் குலமெனச் சந்ததம் வழங்கும்.
நீங்காது இதுகாறு என்னுளம் நிறைந்த
தாங்காப் பெரும்சுமை தவிர்தலால், யானும்
ஒருமனம் உடையனாய் மறலியும் வெருவ
ஆற்றுவன் அரும்போர். அதனிடை யமபுரம்
ஏற்றுவன் எம்குலந் தூற்றிய சேரனை;
வென்றிடில் மீளுவன் அன்றனிற் பண்டே 160

அனையிலாத் தனையளுக்கு அம்மையும் அப்பனும்
தயாநிதி! நின்திருச் சரணமே யென்ன
வியாகுலம் அறவே விடுவன் என்னுயிரே!

சுந்தர : விடுகிலை, ஆகினும் வெளிக்கட லோட்டம்!
நடுநிசி நாம்இனி வருகுதும் கொடிய
கடிபுரிக் கனலிடைக் காய்ந்திடும் உன்றன்
சிறுகொடி மறுஇடம் பெயர்த்துதும், சிறந்த.
அந்தமில் செழியரைத் தந்திட உரித்தே.

[எழுந்து]

ஜீவ : கட்டளைப் படியே; கட்டிய கற்படை
கண்டிட ஆசையொன்று உண்டு அடியேற்கு. 170

சுந்தர : காட்டுதும் இன்றிரா கற்படை சேர்முறை.
ஒருவர் ஒருபொருள் அறியில் இரகசியம்;
இருவர் அறிந்திடிற் பரசியம் என்ப.
கைக்கு எட்டியது தன் வாய்க்கு எட்டுதற்குள்
வந்துறும் அந்தமில் பிரதிபந்தங்களே.

[முனிவர் போக]

Koviloor Digital Library

ஜீவ : (தனிமொழி) வந்தனம். வந்தனம். அடிகாள்! வந்தனம்.
என்னே! என்னே! இந்நாள் இயன்றவை!
கொன்னே கழிந்தன்று ஓர்இமைக் கொட்டும்.
குருநாள் மழையொடு மிகு காற்று எறிந்த
பரவையின் பாடெலாம் பட்டது என்னுளமே. 180
இரவினில் வருபவை எவையெலாங் கொல்லோ?
தாயே! தாயே! சார்வன சற்றும்
ஆயேன், எங்ஙனம் பிரிந்து உயிர் ஆற்றுவேன்?
விடுக்குமாறு எவன்என் விளக்கே? உன்னைக்
கெடுக்குமாறு எவன்இக் கிளர் போரிடை? அது
தடுக்கு மாறுஎவன் இனி? சமழ்ப்பு அற்று உடலம்
பொறுக்குமாறு எவன்?இப் பொல்லா வல்லுயிர்
துறக்குமாறு எவன்உனைத் துணையற விடுத்தே?
அந்தோ! அந்தோ! என்றன் தலைவிதி!
நாற்புற நெருப்பு உறின் நளியுந் தனது 190
வாற்புற நஞ்சால் மாய்த்திடும் என்ப.
நரனலன்; நரேந்திரன்; நான் அதுபோற் சுதந்
தரன்அலன் எனில்என் தலைவிதி கொடிதே!
பிரிவுஎன என்னுளம் கருதிடு முனமே
பிரையுறு பாலென உறைவதுஎன் உதிரம்.
நாணாது உன்முகம் காணுவது எவ்விதம்?
நடுநிசிப் பொழுது தொடு கற்படை வழி
முனிவரன் பிறகு உனைத் தனிவழி விடுத்து இவண்
தங்குவன் யானும்! தங்குவை நீயும்!
இங்கு அதற்கு இசையேன். இறக்கினும் நன்றே! 200

[மௌனம்]

கற்படை யிதுதான் எப்புறத் ததுவோ?
உரைத்திலர் முனிவர் ஒளித்தனர். இஃதும்
உளதோ? இலதோ? உணர்பவர் யாவர்?
களவழி யிது முனி கட்டற் பாற்றோ?
முனமே முனிவன் மொழி மணம் அன்றோ
இனைய இப்போர்க் கெலாம் ஏதுவாய் நின்றது!
கூடிய தன்றுஅது! ஏ! ஏ! குடிலனை

[சேவகன் வர]

Koviloor Digital Library

ஓடி யிங்கு அழையாய்!

[சேவகன் போக]

உண்மை யெப்படி யென
நாடுமுன் வாடி நலிதல் என்பயன்?
நம்புதல் எல்லாம் துன்பமே தருவது. 210

நம்பினோம் நாராயணனை. அதற்கா
வம்பே செய்தான் மாபாதகன் அவன்.
நட்பே நமக்கு இங்கு உட்பகை யானது!
முனிவரோ முதுநகர் விடுத்த நாள் முதலா
மனத்திடைக் களங்கம் வைத்துளர். அஃதுஅவர்
விளம்பிய மொழியே விளக்கிடும் நன்றாய்
ஆராயா முனம் அனுப்புதல் தவறே.

[குடிலன் வர]

வாராய் குடில! மந்திரி உனக்கு
நேர்தான் ஆரே! நிகழ்ந்தவை அறிவை கொல்?
சுந்தர முனிவர்ஓர் சுருங்கை தொட்டுளராம்; 220

நந்தமை யழைத்தனர் ஒளித்திட அவ்வழி;
மறுத்திட, மனோன்மணியேனும் அங்கு அனுப்பென
ஒறுத்தவர் வேண்டினர்; உரியநம் குலமுனி
ஆதலின் ஆமென இசைந்தோம்; அவ்வழி
யாதென வினாயதற்கு ஓதாது ஏகினர்;
பாதிரா வருவராம் பகர்ந்தஇக் கற்படை
மெய்யோ பொய்யோ? மெய்யினில் எவ்வயின் 230

உளதென உணர்தியோ? ஒழுங்கு கொல், நமது
இளவரசியை யங்கு அனுப்புதல்?

குடில : இறைவ!
முன்னர் நாம் ஒருநாள் இந்நகர் காண
அழைத்தோம்! அந்நாள் யாதோ பூசை
இழைத்திட ஓரறை இரந்தனர்!

ஜீவ : ஆம்! ஆம்!

Koviloor Digital Library

குடில : அவ்வறை யெவ் அறை?

ஜீவ : அது யான் அறிவேன்.
செவ்வே வடக்குத் தேம் பொழிற்கு இப்புறம்.
மறு முறி மணவறை.

குடில : (தனதுள்) அறிவு இது வெகு நலம்!
(ஜீவகனை நோக்கி) உறுவது அங்கு என்னென
உணர்ந்தனை?

ஜீவ : உணர்ந்திலேன்.

குடில : அதுவே கற்படை. அறிந்துளேன். பழுது
செயத்தகு வினையல ஆதலின் திருவுளம்
உணர்த்திலேன். முனிவர் ஒதியது இதுவே.
இவ்அரண் முற்றும் இயற்றிய நமக்குச்
செவ்விதில் இதுவோ செய்தற்கு அரியது? 240

சுந்தரர் நமையெலாம் புந்தி யற்றவரென
நொந்து தாம் உழைத்ததை நோக்கிடில் நகைப்பே!

ஜீவ : நந்தொழில் பழித்தலே சிந்தை யெப்பொழுதும்
பண்டே கண்டுளோம், பாங்கோ அனுப்புதல்?

குடி : பழுதல்; பாலுணுங் குழவி கை யிருப்ப
மல்யுத்தம் செய வல்லவர் யாரே?
அனையினை யொருபாற் சேமமாய் அனுப்பிய
பினையிலை கவலையும் பீதியும் பிறவும்.
உட்பகை வெளிப்பகை யெப்பகை யாயின்என்? 250

கவலை யொன்றிலதேல் எவர்உனை வெல்வர்?
ஆதலால் முனிவர் ஒதிய படியே
அனுப்புதல் அவசியங் குணப் பிரதம்மே.
ஆனால் அறியா அரச கன்னியர்கள்.
தேனார் தெரியல் சூடுமுன் இரவில்
தனி வழி அநியர்பால் தங்குதல்...?

ஜீவ : தவறே!

Koviloor Digital Library

குடி : முனிவரே யாயினும், அநியரே, உலகம்
பைத்தியம்; பழித்திடும்! சத்தியம் உணராது.

ஜீவ : மெய்ம்மை. வதுவைமுன் விதியன்று அனுப்புதல்.

குடி : அனுப்பினும் அதனால் ஆம்பயன் என்னே! 260
மனத்துள கவலை மாறுமோ? கவலை
முன்னிலும் பன்னிரு பங்காய் முதிரும்.

ஜீவ : அதுவே சரி! சரி! ஐயமொன்று இல்லை.
வதுவைக்கு இதுவோ தருணம்?

குடி : மன்னவ!
அடியேன் அறிவிப்பதுவும் இங்கு அதுவே!
கொடிதே நம்நிலை. குற்றம் எப்புறமும்.
அடிகள் அறைந்தவாறு அனுப்பாது இருக்கில்
உட்பகைச் சதியால் ஒருக்கால் வெற்றி
தப்பிடின் நம்குலம் எப்படி யாமோ?
வைப்பிடம் எங்குபின்? எய்ப்பிடம் எங்கே? 270

திருமா முனிவரோ கருநா வுடையர்.
நம்பிய தலைவரோ வம்பினர். துரோகர்.
இத்தனை பொழுதும் அங்கு எத்தனை கூச்சல்!
எத்தனை கூட்டம்! எத்தனை குழப்பம்!
முருகனும் நாராயணனும் மொழிந்த
அருவருப்பு உரை யிங்கு அறையேன். அவர்தம்
சேவகர் குழாங்களைத் திரட்டி யென்மேல்
ஏவினர்; அதற்கு அவரிசைந்திலர். பிழைத்தேன்.
வேண்டினர் பின்னையும்; தூண்டினர் உன்எதிர்

வ : காண்டும்! காண்டும்! கடுஞ்சிறை சேர்த்தனை! 280

குடி : சேராது இவரை மற்று யாரே விடுவர்?
ஆயினும் தலைவர் நிலைமை இஃதே!
வெல்லுவதெலாம் நம் வீரமே யல்லால்
இல்லை யவர் துணை யென்பது தெளிவே.
அல்லொடு பகல் போல் அல்லல் செய் கவலையும்
வீரமும் எங்ஙனம் சேருமோ அறியேன்.

Koviloor Digital Library

கவலை தீர் உபாயங் கருத்தில், நுவல் தரு
கல்லறை நன்றே கடிமணம் முடியில்...
கடிமண மதற்கோ, முடிபுனை மன்னர்
வேண்டும்என் றன்றோ ஆண்டகை நினைத்துளை? 290

வருடக் கணக்காய் வேண்டும் மற்று அதற்கே
ஒருநலங் காணின் ஒருநலங் காணேம்.
ஏற்ற குணமெலாம் இருப்பினும் இதுபோல்
மாற்றலன் ஆய்விடின் மனோன்மணி யென்படும்?
பிரிதலே யரிதாம் பெற்றியீர்! பிரிந்தபின்
பொருதலே ஆய்விடிற் பொறுப்பளோ தனியள்!
பூருவ புண்ணியம் அன்றே மன்றல்
நேருமுன் இங்ஙனம் நெறியிலான் துர்க்குணம்.
வெளியாயினதும்? எளிதோ இறைவ!
வேந்தராய்ப் பிறந்தோர்க்கு உனைப்போற் சாந்தமும் 300

பிறர் துயர் பேணும் பெருமையும் ஒழியா
அறம் நிறை அகமும் அறிவும் அமைதல்.
பாண்டமேல் மாற்றலாங் கொண்டபின்! என்செய!
ஆண்டுகள் பழகியும் அறிகிலஞ் சிலரை.
ஐயோ! இனிநாம் அந்நிய ராயின்
நன்றாய் உசாவியே நடத்துதல் வேண்டும்.
அன்றேற் பெரும் பிழை!

ஜீவ : ஆ! ஆ! சரியே!

குடி : ஆதலின், இறைவ! ஆய்விடத்து எங்கும்
ஏதமே தோன்றுவது என்னே இந் நிலை?

ஜீவ : அரசு அலவெனின் நமக்கு ஆம்பீழை யென்னை!

குடி : திருவுளப் பிரியம், தீங்கு என் அதனில்? 310

உன்றன் குலத்திற்கு ஊன்றுகோல் போன்று
முடிமன்னவர் பலர் அடி தொழ நினது
தோழமை பூண்டுநல் ஊழியம் இயற்றும்
வீரமும் மேதையும் தீரமும் திறமும்

Koviloor Digital Library

குலமும் நலமும் குணமும் கொள்கையும்
நிரம்பிய நெஞ்சுடைப் பரம்பரை யாளராய்
நிற்பவர் தமக்கு மற்று ஒப்பு எவ் அரசர்?
அற்பமோ ஐய! நின் அடிச் சேவகமே?

ஜீவ : என்னோ மனோன்மணிக்கு இச்சை? அறிகிலேன்! 320

குடி : மன்னோ மற்றது வெளிப்படை யன்றோ?
அன்னவட்கு இச்சை யுன்னுடன் யாண்டும்
இருப்பதே யென்பதற்கு என்தடை? அதற்கு
விருத்தமாய் நீகொள் கருத்தினைச் சிந்தையிற்
பேணியே கலுழுநள் போலும் பிறர்பால்
நாணி யிங்கு ஒதாள். வாணியேல் நவில்வள்.

ஜீவ : உத்தமம்! உத்தமம்! மெத்தவும் உத்தமம்!
பலதேவன் தன் நலம் அவள் கண்டுளாள்?

குடி : பலகால் கண்டுளாள், கண்டுளான் இவனும்.
ஆர்வமொடு அஃதோ மார்பிடைப் பட்டபுண் 330

'மனோன்மணி! மனோன்மணி' எனும் மந்திரத்தால்
ஆற்றுவாள் போலவே அவ்அறை யிருந்துஅவன்
சாற்றலுஞ் சற்றுமுன் ஜாடையாய்க் கேட்டேன்.
ஆயினும், அரச! பேயுலகு என் குணம்
அறியாது. அதனால் வறிதே பலவுஞ்
சாற்றும். தன்னயம் கருதல்போற் பிறர்க்குத்
தோற்றும். அதனால் தூற்றுவர். அதுவும்
மாற்றலே மந்திரத் தலைவர்தம் மாட்சி.
ஆதலின், இறைவ! அவைக் களத்து அநேக...

ஜீவ : ஒதலை. ஒதலை. உனதன்று அத் தொழில். 340
தனையைக்கு உரியது தந்தையே உணருவன்!
இணையதே யென் மகட்கு இந் நிலைக்கு ஏற்பதும்
அரசனாய் ஆய்கினுஞ் சரி இம் முடிபு.
மிகை தெரிந்து அவற்றுள் மிக்கது கொளல் எனுந்
தகைமையில் தகுவதும் இதுவே. அதனால்;
குடிலா! மறுக்கலை.

Koviloor Digital Library

குடி : அடியேன். அடியேன்.

ஜீவ : இந்நிசி இரண்டாஞ் சாமம் அன்றோ
முன்னம் நாம் வைத்த முகூர்த்தம்?

குடி : ஆம்! ஆம்!

ஜீவ : செவ்விது செவ்விது! தெய்வ சம்மதமே!
ஆவா! எவ்வளவு ஆறினது என்னுளம் 350
ஓவா என் துயர்க்கு உறுமருந்து இதுவே!
பிரிந்திடல் ஒன்றே பெருந்துயர்.

குடி : பிரிந்து நீர்
இருந்திடலெல்லாம் ஒருநாள். அதற்குள்
வெல்லுதும் காண்டி. மீட்குதும் உடனே.

ஜீவ : நல்லது! வேறிலை நமக்காம் மார்க்கம்.
ஒருமொழி மனோன்மணியுடன் கேட்டு இஃதோ
வருகுதும். அதற்குள் வதுவைக்கு
அமைக்குதி அவ்அறை அமைச்சர் ஏறே! 4

[ஜீவகன் போக]

குடி : (தனிமொழி) தப்பினன் நாரணன்? சாற்றற்கு இடமிலை.
இப்படி நேரும் என்று எண்ணினர் யாவர்? 360
முனிவரன் வந்ததும், நனி நலம் நமக்கே!
மறுப்பளோ மனோன்மணி? சீ! சீ! மனதுள்
வெறுப்புள ளேனும் விடுத்து அவளொன்றும்
மொழியாள். சம்மதக் குறியே மௌனம்,
அழுவாள்; அதுவும் பிரிவாற்றாமையே
ஆய்விடும், அரசன் ஆய்விலா உளத்துள்
நடு நிசி வருமுன் கடிமணம் இவண் நாம்
முடிக்கின் முனி பின் தடுப்பதும் எவ்விதம்?
ஏய்த்திட எண்ணினன் என்னையும்! பேய்ப்பயல்!
வாய்த்தது இங்கு எனக்கே மற்று அவன் கற்படை. 370

[மௌனம்]

ஊகஞ் சென்றவாறு உரைத்தோம். உறுதி
யாக மற்று அதன் நிலை அறிவதார்? உளதலது

Koviloor Digital Library

உரைப்பரோ முனிவர்? உளதெனில் உரைத்தவாறு
இருத்தலே யியல்பாம். எதற்கும் ஈது உதவும். [மௌனம்]

சென்று கண்டிடுவம். திறவு கோல் இரண்டு
செய்தது எதற்கெலாம் உய்வகை யானதே!
எத்தனை திரவியம் எடுத்துளேம்; கொடுத்துளேம்.
அத்தனை கொடுத்தும் அறிவிலாப் படைஞர்,
நன்றியில் நாய்கள் இன்று அஃதொன்றும்
உன்னாது என்னையே யோட்டிடத் துணிந்தன. 380

என்னோ நாரணன் தனக்கும் இங்கு இவர்க்கும்?
எளியனென்று எண்ணினேன். வழிபல தடுத்தான்.
கெடுபயல் பாக்கியம், கடிமணம் இங்ஙனம்
நடுவழி வந்ததும்! விடுகிலம்
கொடியனை இனிமேல் விடுகிலம் வறிதே.

நான்காம் அங்கம் : ஐந்தாம் களம் முற்றிற்று

கலித்துறை

அரிதா நினைத்ததன் அங்கங்கள் யாவும் அழிந்தபின்னும்
புரியே பொருளெனப் போற்றிய ஜீவகன் புந்தி யென்னே!
பிரியாத சார்பு பெயர்ந்து விராகம் பிறந்திடினுந்
தெரியாது தன்நிலை ஆணவம் செய்யுந் திறஞ்சிறிதே!

நான்காம் அங்கம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : கோட்டைக்கும் வஞ்சியர் பாசறைக்கும் நடுவிலுள்ள வெளி. **காலம் :** யாமம்

[குடிலன் தனியே நடக்க]

நேரிசை ஆசிரியப்பா

குடி : (தனிமொழி)

திருமணங் கெடினுந் தீங்கில்லை ஈங்கினி.
இருசர மின்றி யெப்போ ரிடையும்
ஏகார் மதியோர். இதில்வரு கேடுஎன்?
ஆகாவழியும் அன்று இது. சேரனை
அணைந்துஅவன் மனக்கோள் உணர்ந்ததன் பின்னர்
சுருங்கையின் தன்மை சொல்லுதும் ஒருங்கே
இசைவனேற் காட்டுதும். இன்றேல் மீள்குதும்!
பசையிலா மனத்தன்; பணிதலே விரும்புவன்.
பாண்டி நாடு ஆளவோ படையெடுத்தான் இவன்!
தூண்டிடு சினத்தன்; தொழுதிடின் மீள்வன்! 10

வேண்டிய நீரும் விழைந்ததோர் தாரும்
பாண்டில் பாண்டிலா யாண்டுகள் தோறும்
அனுப்புதும். குறைவுஎன் அதனில்? இதுவே
மனக்குறை நீக்கு மார்க்கம், – வதுவை
போயின்என்? ஆயின்என்? பேயன்நம் மகன்.
எடுத் தெறிந்திடுவன் இப்போதே நம் மொழி
அடுத்தநம் படைஞரோ பகைவர், அவர்நமைக்
கெடுத்த நாரணற்கே கேளொடு கிளைஞர்

Koviloor Digital Library

ஆதலில் இஃதே தீதறும் உறுதி.....
என்னைநம் ஊகம்! என்னைநம் ஊக்கம்! 20

முன்னர் யாம் அறியா இன்ன நற் சுருங்கையில்
துன்னிருள் வழிதனி தொடர்ந்து இவண் சேர்ந்தோம்.
ஊக்கமே பாக்கியம்; உணர்விலார் வேறு
பாக்கியம் ஊழ் எனப் பகர்வதெல்லாம் பாழ்.
சாக்கியம் வேறு என்? சாத்தியா சாத்தியம்
அறிகுறி பலவால் ஆய்ந்து அறிந்து ஆற்றுந்
திறமுள வூகமே யோகம்; அன்றி
(நக்ஷத்திரங்களை நோக்கி) வான்காடதனில் வறிதே சுழலும்
மீன்காள்! வேறும் உளதோ விளம்பீர்
மதியிலா மாக்கள் விதியென நும்மேற் 30
சுமத்துஞ் சுமையும் தூற்றுஞ் சும்மையும்
உமக்கிடு பெயரும் உருவமும் தொழிலும்,
அமைக்குங் குணமும், அதில்வரு வாதமும்,
யுக்தியும் ஊகமும் பக்தியும் பகைமையும்,
ஒன்றையும் நீவீர் உணரீர்! – அஃது என்?
வென்றவர் பாசறை விளங்குவது அஃதோ
இங்கு மற்று உலாவுவன் யாவன்? பொங்குகால்
வருந்தொறுஞ் சிலமொழி வருவ. அஃதோ
திரும்பினன்! ஒதுங்குவம். தெரிந்துமேற் செல்குவம்.

[புருஷோத்தமன் தனியா யுலாவி வர]

குறள் வெண் செந்துறை

புரு : (பாட) உண்ணினைவில் ஒருபோதும் ஓய்வின்றிக்
கலந்திருந்தும் உயிரே யென்றன்
கண்ணிணைகள் ஒருபோதுங் கண்டிலவே
நின்னுருவங் காட்டாய் காட்டாய். 1

அவத்தை பல அடையுமனம் அனவரதம்
புசித்திடினும் அமிர்தே யென்றன்
செவித்துளைகள் அறிந்திலவே தித்திக்கும்
நின்னாமஞ் செப்பாய் செப்பாய். 2

Koviloor Digital Library

பொறிகள் அறியாதுள்ளே புகும்பொருள்கள்
இலையென்பர் பொருளே யுன்னை
அறிய அவாவிய கரணம் அலமாக்க அகத்திருந்தாய்
அச்சோ அச்சோ.

[புருஷோத்தமன் சற்றேயகல]

ஆசிரியப்பாவின் தொடர்ச்சி

குடில: (தனிமொழி) மனிதன் அலன் இவன்! புனித கந்தருவன்! 40
தேவரும் உளரோ? யாதோ? அறியேன்.
இருளெலாம் ஒளிவிட இலங்கிய வுருவம்
மருள் தரு மதனன் வடிவே! மதனற்கு
உருவிலை யென்பர். – ஓசையும் உருவும்! –
பாடிய பாட்டின் பயன்என்? அஃதோ!
நாடி யறிகுதும். நன்று நன்று.

[புருஷோத்தமன் திரும்பிவர]

குறள்வெண் செந்துறை தொடர்ச்சி

புரு: (பாட) புலனாரக் காண்பதுவே பொருளென்னும்
போதமிலாப் புன்மையோர்க்கிங்
குலவாதென்னுளம் நிறையும் உனதுண்மை
யுணர்த்தும் வகையுண்டே யுண்டே. 4
பெத்தமனக் கற்பிதமே பிறங்கு நினைவெனப்
பிதற்றும் பேதையோர்க் கோர்
யத்தனமற்றிருக்க என்னு ளெழுமுனது நிலை
ணயுரைப்ப தென்னே யென்னே. 5
தேர்விடத்தென்னுள்ளம் நிறைதெள்ளமுதே
யுன்னிலைமை தேராதிங்ஙன்
ஊர்விடுத்தும் போர்தொடுத்தும் உனையகல
நினைத்ததும் என் ஊழே ஊழே! 6

குடில : சேரனே யாம்இது செய்வினோன் போரினில்
ஒருபுறம் ஒதுங்கி யரசனை யகற்றி

Koviloor Digital Library

நின்னதாற் கண்டிலேன். நிறைந்த காமுகன்.
ஒன்று அநுகூலம் உரைத்தான். நன்றே 50
ஊர் இவன் விடுத்ததும் போர் இவண் தொடுத்ததும்.
எண்ணிய கொள்கைக்கு இசையும் புகன்றவை.
நண்ணுதும் நெருங்கி. நல்லது! திரும்பினன்.

[புருஷோத்தமன் திரும்பி வர]

புரு: (தனிமொழி) என்றும் கண்டிலம் இன்று கண்டதுபோல்.
எத்தனை முகத்திடைத் தத்துறு துயரம்!
இவ்வயின் யான்வந்து இறுத்த நாள் முதலாக்
கௌவையின் ஆழ்ந்தனை போலும். ஐயோ!

[குடிலன் எதிர்வர]

(குடிலனை நோக்கி) ஜடிதி! பெயரென்! சாற்றுதி! தத்க்ஷணம்!

குடி: அடியேன்! அடியேன்! குடிலன்! அடிமை!

புரு: வந்ததென் இருள்வாயின்? வாளிடு என் அடியில்! 60

குடி: வெந்திறல் வேந்தநின் வென்றிகொள் பாசறை
சேர்த்து உன் அமையந் தேர்ந்து தொழுது ஓர்
வார்த்தை நின்திருச் செவி சேர்ந்திடக் கருதி
வந்தனன் அடியேன்: தந்தது தெய்வம்
உன்றன் திருவடி தரிசனம் உடனே!
சிந்தை யெப்படியோ அப்படி யென்செயல்

புரு: செப்புதி விரைவில். செப்புதி வந்தமை!

குடி: ஒப்பிலா வீர! எப் புவனமும் நின்
மெய்ப்புகழ் போர்த்துளது அதனால், இப் புவி
நீவரு முனமே நின்வசப் பட்டுத் 70

தாவரும் இன்பந் தடையறத் துய்ப்பப்
பாக்கியம் பெற்றிலம் பண்டே யென்று உனி
ஏக்கம் உற்றிருந்தமை யான் நெடுநாளாய்
அறிந்துளன். இன்றுநீ யாற்றிய போரிற்
செறிந்து இருபடையுஞ் சேர்தரு முனமே
முறிந்துயாம் ஓடிய முறைமையுஞ் சிந்தையிற்

Koviloor Digital Library

களிப்பு அடையாமலே கைகலந் தமையும்
வெளிப்படை யன்றோ? வேந்த! இப் புவியோர்
வெல்லிடம் வெலா இடமும் யாவும்
நல்லவாறு அறிவர். நாயினேன் சொல்வதென்? 80

வேசையர் தங்கள் ஆசையில் முயக்கம்
அன்றோ இன்று அவர்? ஆற்றிய போர் முறை?
என்செய்வார் அவர்? என்செய்வார்? ஏழைகள்
நின்புகழ் மயக்கா மன்பதை யுலகம்
யாண்டும் இன்றெனில், அணிதாம் இந்தப்
பாண்டியும் நின்பாற் பகைகொளத் தகுமே!
ஒருவாறு அறமே யாயினும், மருவாக்
கொற்றவர் பிழைக்காக் குற்றமில் மாக்களை
மற்றுஅவர் மனநிலை முற்ற அறிந்தபின்
கருணையோ காய்தல்? தரும நல்லுருவே! 90

புரு : (தனதுள்) யாதோ சூது ஒன்று எண்ணினன். அறிகுவம்.
(குடிலனை நோக்கி) வேண்டியது என்னை யதனால்?
விளம்புதி.

குடி : ஆண்டகை யறியாதது என்? இன்று
மாண்டவர் போக மீண்டவரேனும்
மாளாவழி நீ யாளாய் என்னத்
கைகுவிப்பதே யலாற் செய்வகை யறியா
அடியேன் என்சொல! ஆ ஆ! விடியில்
வாளா மாளும் மனிதர் தொகுதி
எண்ணி யெண்ணி யெரிகிறது என்னுளம்.
எண்ணுதி கருணை! இவர்க்குள் தாய்க்கு ஒரு 100

புதல்வராய் வந்த பொருநர் எத்தனையோ?
வதுவை முற்றுறா வயவர் எத்தனையோ?
புதுமணம் புரிந்த புருடர் எத்தனையோ?
நொந்த குலினர் நோவு பாராது
வந்துஇவண் அடைந்த மள்ளர் எத்தனையோ!
தாய்முகம் வருந்தல் கண்டு அழுந் தன்சிறு

Koviloor Digital Library

சேய்முகம் மறவாச் செருநர் எத்தனையோ?
செயிருற முழந்தாள் சேர்ந்துஅழு பாலரைத்
துயிலடைத் துறந்த சூரர் எத்தனையோ?

புரு : சரி, சரி! இவையுன் அரசர்க்கு ஆங்கு 110
சாற்றாது ஒழிந்த தென்?

குடி : சாற்றில் என்?
போற்றான் யார் சொலும் புந்தியுஞ் சற்றும்.
அன்புஇலன்; பிறர்படுந் துன்பஞ் சிறிதும்
அறியா வெறியன். அன்பொடு இம் மாலை
குறியா நீவிடு தூதையுங் கொண்டிலன்.
அண்டிய ஜீவராசிகள் அனைத்தையும்
மண்டு அமர் இதில் நின் வைவாள் தனக்கே.
இரையிட லொன்றே விரதமாக் கொண்டனன்.
பித்தனொருவன் தன்னால்இத் தமிழ்
நாடெலாம் வெறுஞ் சுடுகாடாய் விடுமே. 120

ஆவ! இப்பெரும் பாவமும் பழியும்
அஞ்சினேன். அஞ்சினேன். எஞ்சலில் கருணை–
யுருவே! அடியேற்கு ஒருமொழி தருவையேல்
ஒருவர்க்கேனும் உறு துயரின்றி
அரசனும் புரிசையும் அரைநொடிப் போதில்உன்
கரதலமாம் ஒரு கௌசலம்.
காட்டுகேன் அடியேன் கேட்டருள் அரசே!

நிலைமண்டில ஆசிரியப்பா

புரு : (தனதுள்) பாதகா! விசுவாச காதகா! ஆ! ஹா! (சிரித்து)

குடி : அரசன் கைப்படில் ஆங்குளார் யாரும்என்
உரை தவறாது உன்குடைக்கீழ் ஒதுங்குவர், 130
மங்கல மதுரையும் இங்கு இவர் வழியே
உன் ஆணைக்கீழ் ஒதுங்குதல் திண்ணம்.
தொல்புவி தோற்றியது தொட்டு அரசுரிமை
மல்கிய புவி யிஃது அதனால், 'மன்னவன்'
என்ற பேரொன்று நீ ஈவையேல் என்றும்,

Koviloor Digital Library

நின் ஆணையின் கீழ் நின்று நீ முன்னர்
வேண்டிய தாரொடு நீருமே யன்றி மற்று
ஈண்டுள எவையே யாயினும் வேண்டிடில்,
சிரமேற் சுமந்துஉன் முரசார் அனந்தைக்
கோயில் வாயிலிற் கொணர்ந்துஉன் திருவடி 140

கண்டு மீள்வதுவே கதியடியேற் காம்.
பண்டு ராகவன் தன் பழம்பகை செற்று
வென்றதோர் இலங்கை விபீஷணன் காத்தவாறு
இன்றுநீ வென்ற நாடு இனிது காத்திடுவேன்.

புரு : சமர்த்தன் மெத்தவும்! அமைத்த தந்திரம் என்?

குடி : அரசனது அந்தப் புரமது சேர
யாவரும் அறியா மேவருஞ் சுருங்கை
ஒன்று உளது; அவ்வழி சென்றிடில் அக்கணங்
கைதவன் கைதியா யெய்துவன் உன்அடி.

புரு : உண்மை? 150
(சேவகரை நோக்கி) யாரது!

குடி : உதியன் கண்முன்
மெய்மையலாது எவர் விளம்புவர்?

[அருள் வரதன் வர]

அருள் : அடியேன்!

புரு : கைத்தளை கால்தளை கொடுவா நொடியில்.

[அருள்வரதன் போக]

(குடிலனை நோக்கி) எத்திசை யுளதுநீ இயம்பிய சுருங்கை?

குடி : அணிதே! அஃதோ, சரணம் புகுந்த
எளியேற்கு அபயம் இயம்புதி யிறைவ!

புரு : அவ்வழியோ நீ யணைந்தனை?

குடி : ஆம்! ஆம்!
செவ்விதின் ஒரு மொழி செப்பிடில் உடனே
காட்டுவன் அடியேன்.

[அருள் வரதனும் சேவகரும் விலங்கு கொண்டு வர]

Koviloor Digital Library

புரு : (குடிலனைச் சுட்டி) பூட்டுமின்! நன்றாய்!

குடி : ஐயோ! ஐயோ! ஓஹோ! செய்ததென்?
மெய்யே முற்றும். பொய்யிலை! பொய்யிலை! 160

[அருள்வரதன் விலங்கு பூட்ட]

புரு : எத்திசை யுளதுஅச் சுருங்கை? ஏகாய்!
சித்திர வதையே செய்வேன் பிழைப்பில்!

குடி : தேடியே வந்து செப்பிய அடியேன்
ஓடியோ போவேன்? ஓஹோ! உறுதி
முந்தியே தந்திடல்.....

புரு : மூடு நின் பாழ் வாய்.
சேரன் விஜயமும் திருடான். அறிகுதி.
(சேவகரை நோக்கி) சூரர் பதின்மர் சூழுக இருபுறம்!
(குடிலனை நோக்கி) நடவாய் உயிர்நீ நச்சிடில். கெடுவாய்!
எத்திறம் பிழைப்பினும் சித்திரவதையே!

[யாவரும் சுருங்கை நோக்கிப் போக]

ஐந்தாம் அங்கம்; முதற் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம் : கன்னிமாடத்து ஒரு சார் **காலம் :** யாமம்

[சில தோழிப்பெண்களும் ஒரு கிழவியும் அளவளாவியிருக்க]

நிலைமண்டில ஆசிரியப்பா

கிழவி : எதுக்கும் இவ்விளக்கும் இச் சிறு செம்பும்
ஒதுக்கி வை அம்மா! உதவும் வழியில்.

முதல் தோழி : என்னடி கிழவி சொன்னால் அறிகிலை.
போம் வழி அறியோம்! போம் இடம் அறியோம்!
மந்திரக் குளிகையோ! அந்தர மார்க்கமோ!
மூட்டையேன்? முடிச்சு ஏன்! கேட்டியோ தோழி!
காதும் இல்லை! கண்ணும் இல்லை!
ஏதும் இல்லை! ஏன் உயிர் இருப்பதோ!

கிழவி : கிழவி பேச்சு ஏற்குமோ கின்னரக்காரிக்கு!
படும்போது அறிவை! இப்படியே பண்டு 10
முன் ஒரு சண்டையில் உன்னைப் பெறுமுன்
ஓடினோம். . . . .

முதல் தோழி : போடீ! உன் கதை யறிவோம்

[கிழவி போக]

சிரிக்கவா! என்செய! சிவனே! சிவனே!

[நகைக்க]

2-ம் தோழி : அம்மணி யென் செய்தாள்! அக்காள்! அதன்பின்
எப்படி யரசன் மீண்டான்'. செப்பாய்!

முதல் தோழி : எப்படிச் செப்ப யான்! ஏந்திழை பட்டபாடு
அய்யோ! அத்துயர் தெய்வமே யறியும்!
மன்னவன் வாசல் கடந்தான் எனுமுனந்

Koviloor Digital Library

தன்நிலை தளர்ந்தாள், சாய்ந்தாள். வாணியும்
அரு குள செவிலியும் யானுமாய் விரைவில் 20

தாங்கினோம், பாங்குள அமளியிற் சேர்த்தோம்.
மூச்சிலை; பேச்சிலை; முகமெலாம் வெயர்வை.
இட்ட கை இட்ட கால் அப்படியே.
இப்படி முடிந்ததே! இனியென் செய்வோம்!
தப்புமோ இவ்வொரு தத்தும் என்று எண்ணி
ஏங்கினோம்; தியங்கினோம்; பாங்கிருந்து அழுதோம்

2-ம் தோழி : ஐயோ தெய்வமே! அப்போது அவளுயிர்
பட்டபாடு எதுவோ கட்டம்! கட்டம்!

முதல் தோழி: விதியிது! அலது இது கதையிலும் உளதோ?
நொந்தபுண் ணதனிலே வந்திடும் நூறு இடி. 30
தந்தை தேறிடத் தன்துயர் மறைத்து
மகிழ்ச்சி காட்டினள், வந்தது இத் தளர்ச்சி
மூடிடில் தீயும் மூளும் மும் மடங்காய்.

2-ம் தோழி : எத்தனை வேதனை எத்தனை சோதனை!
யாதும் அறியாட்கு ஏதுஇத் துணிபு?
ஓதிய கட்டுரை யொருமுறை இனியும்
நவிலுதி அக்காள்!

1-ம் தோழி : நங்கை நன்மொழி யென்
செவியிடை யினியும் மணிபோல் திகழும்!
அரசனை யடிபணிந்து ஒருசார் ஒதுங்கி
நீக்கமில் அன்பும் ஊக்கமும் களிப்பும் 40

காட்டிய மதிமுகங் கோட்டியே நின்ற
தோற்றம்என் கண்ணின் மாற்றுதல் அரிதே!
"என்னோ இதற்கும் யோசனை எந்தாய்!
கொன்னே வருந்தலை! கொள்கையிற் பிறழா
நீதி நம்பால் எனின் நேர்வது ஐயமே,
ஏது அதற்கு ஐயம்? இது விட்டு அடிமை
பெயர்வது பெரிதல. பேருலகு அதற்குத்

Koviloor Digital Library

துயர்வரும் எல்லைநம் துயர் நோக்குதலோ
பெருமை! அண்ணிதே முனியிடம்; கருதிய
பிரிவோ ஒரு தினம்; குருவுந் தந்தையுஞ் 50

சமமெனிற் சுந்திர விமலன் தன்திருப்
பாதாதரவே போதாதோ துணை?
ஆயினும் அத்தனை அவசரமாயின்.
ஆகுக ஆஞ்ஞைப்படியே தடையிலை.
அன்னையும் நின்னை யன்றி வேறு அறியேன்.
உன்னதே இவ்வுடல், உன் திருவுள்ளம்
உன்னிய படியெல்லாம் உவப்பச் செய்குவன்
அடிமையின் கவலையால் அரசர்க்கு இயல்பாங்
கடமையிற் பிறழுங் கலக்கம் விலக்குவை!
அன்பாம் உன்பால் ஐய! உன்மகள் 60
வேண்டும் வரமெலாம் யாண்டும் இவ்வொன்றே."

2-ம் தோழி: மொழியோ இதுவும்? ஆ ஆ! ஆ ஆ!
இதுவெலாங் காணவோ எழுதினன் பிரமன்?

1-ம் தோழி: எது வெலாங் காணவோ இருப்பது இக்கண்?

2-ம் தோழி: என் செய்கின்றனள் இப்போது ஏழை?

1-ம் தோழி: வஞ்சிஇவ் அறையே வருவள் இல்லை!
ஏதோ எழுதுகின்றனள், வாணி
கோதி நின்று ஆற்றுகின்றனள் கூந்தல்.

2-ம் தோழி: நீராடினளோ இந்நிசி? ஆம்! ஆம்!

1-ம் தோழி: ஆம்! ஆம்!
எழுந்து வாச நீராடி முன்கரந்து
அழுந்திய அன்றுதான் அணிந்த வெண்பட்டினைக் 70
கொடுவரப் பணித்து அங்கு அதுவே தரித்து
நெடுநுதல் திலகமும் நேர்படத் தீட்டி,
அன்றிரா அணிந்த முத்தாரமும் அணிந்து,
நின்றுதான் நிலையெலாம் ஆடியில் நோக்கி
'நன்றோ நங்காய்! வாணி! நவிலுதி;

Koviloor Digital Library

அன்றுபோ லன்றோ இன்றுஎன் நிலைமை'
என்று சிறுமுறுவலித்தனள், என் சொல்!
உருவமும் உடையும் உரையும் நடையும்
சருவமும் பாவனை பண்ணியும்... 80

[அழ]

[மனோன்மணியும் வாணியும் வர]

2-ம் தோழி: அஃதோ!
வந்தனன் காணுதி. வாணியும் பின் உளள்.
மறைகுவம் அவ்வறை வருகஇவ் வழியே!

[தோழிமார் போக]

மனோன்மணி: எந்தை போல் தயாநிதி யெங்கணும் இல்லை.
வந்தனம் வழங்கவும் வாய்கூசுவதே!
ஏதோ ஒருவிதம் எழுதினேன் என்க!
வாணி! உன் மணத்திற்கு இசைந்தான் மன்னன்.
காணாய் ஈதோ அதற்குள் கட்டளை.

[திருமுகங் காட்ட; வாணி வாசிக்க]

சொன்னேன் அன்றே வாணீ! முன்னமே
அன்னை தந்தையர் அன்பு அறியார் சிறார்.

வாணி: இத் தருணத்தில் இது வென்? அம்மணி, 90
சத்தியம், உனக்கு இது சம்மதம் அன்று
நினைப்பருந் துவரில்நீ இவண் வருந்த
எனக்கு இது தகும் தகும்! ஏதிது தாயே!
உன்மனம்படி யெலாம் உறுங்காற் காண்குவம்,

மனோ: என்மனப்படி யெது? எனக்கு ஒரு மனதோ!
எந்தையின் மனப்படி யென்மனப் படியே.
வந்தஇச் சுரத்திடை மாண்டது என் சித்தம்.

வாணி: ஆயினும் அம்மா! யார் இஃது அறியார்?
பாயிருள் தொகுதியும் பரிதியும் கொடிய
வெஞ்சினக் கழுகும் அஞ்சிறைக் கிளியும் 100
பொருந்தினும் பொருந்தீர், ஐயோ! இத்தகைப்
பெருந்துயர்க்கு எங்ஙனம் இசைந்தனை யென்க

Koviloor Digital Library

என்னையுன் நினைவோ! என்னையுன் துணிபோ!
இன்னை மகிழ்ச்சியில் உன்மனமே குறை!

[அழ]

மனோ: வருந்தலை வாணி! வா வா. இன்னும்
தெரிந்திலை ஐயோ! சிறுமியோ நீயும்?
உண்மை யான் உரைத்தேன். உணருதி. உறுதி.
என் மனமாரவே யிசைந்தேன். மெய்ம்மை.
ஏதென எண்ணினை இவ்வுயிர் வாழ்க்கை?
தீதுஅற இன்பந் துய்ப்ப நீயெண்ணில் 110

ஈதுஅல அதற்காம் உலகம், இமையவர்
வாழ்க்கையிலுந் துயர் வந்துறும் எனில்இவ்
யாக்கையில் அமையுமோ நீக்கமில் இன்பம்.
எனக்கு எனக்கு என்றெழும் இச்சையாதிக ளெனும்
மனக் களங்கங்களாம் மாசுகள் அனைத்துந்
தேய்த்து அவை மாற்றித் திகழொளி யேற்றி
மண்ணிய மணியாப் பண்ணிட என்றே
வைத்த இக்கடிய வாழ்க்கையாஞ் சாணையை
பைத்த பூஞ் சேக்கையாப் பாவித்து உறங்க
யத்தனஞ் செய்திடும் ஏழையர் போல 120

என்னை நீ யெண்ணினை வாணி! இந்தச்
சுகவிருப்பே நமைத் தொழும்பு செய்பந்தம்.
தவமே சுபகரம். தவமென? உணருவை!
உடுப்பவை யுண்பவை விடுத்து அரணடைந்து
செந்தீ ஐந்திடைச் செறிந்து அமைந்து உறைதல்
ஆதியா ஒதுப அல்ல. அவற்றைத்
தீதறு தவமெனச் செய்யிடார் மேலோர்.
இவ்வுயிர் வாழ்க்கையில் இயைந்திடுந் துயரம்.
ஐயோ! போதாது என்றோ அன்னோர்
போனகந் துறந்து கானகம் புகுந்து
தீயிடை நின்று சாவு அடைகின்றார்?
தந்தை தாய் ஆதியா வந்ததன் குடும்ப
பந்த பாரத்தினைப் பேணித் தனது

Koviloor Digital Library

சொந்தமாம் இச்சைகள் துறந்து மற்றவர்க்கு
எந்த நாளுஞ் சுகம் இயைந்திடக் கடமையின்
முந்துகின்றவரே முதல் தவ முனிவர்!

வாணி: அத்தகைத் தவம் இங்கு அடியேன் தனக்கும்
ஒத்ததே யன்றோ?

வாணி: ஒத்ததே யார்க்கும்.
மேம்படக் கருதிடில் ஓம்புதி நீயும்.
அடுத்தவர் துயர்கெடுத்து அளித்தலே யான்
இங்கு 140
எடுத்தநல் தவத்தின் இலக்கணம் ஆதலின்,
நடேசனை நச்சம்நின் நன்மண மதுவும்
விடாது எனையடுத்த வீர நாராயணன் தன்
கடுஞ்சிறை தவிர்த்தலும் கடனெனக் கருதி
எழுதினேன். இஃதோ! வழுதியும் இசைந்தான்.
என்கடன் இதுவரை: இனியுன் இச்சை.

வாணி: ஆயிடிற் கேட்குதி அம்மணீ! என்சூள்.
கண்டவர்க் கெல்லாம் பண்டைய வடிவாய்
நீ யிவண் இருக்க நின்னுளம் வாரி
வெள்ளிலா மெள்ள விழுங்கி யிங்ஙனம் 150
வேதகஞ் செய்த போதக யூதபம்;
பேரிலா ஊரிலாப் பெரியோன் அவன்தான்
யாரே யாயினும் ஆகுக, அவனை நீ
அணையும் நாள் அடியேன் மணநாள், அன்றேல்,
இணையிலா உன்னடிக்கு இன்றுபோல் என்றும்
பணிசெயப் பெறுவதே பாக்கியம் எனக்குக்
கடமையும் பிறவுங் கற்றறியேன்: விடை
மடமையே யாயினும் மறுகலை மணியே.

மனோ: பேதைமை யன்றோ ஓதிய சபதம்?
ஏதிது வாணி! என்மணந் தனக்கோ,

Koviloor Digital Library

இனிஅரை நாழிகை. இதற்குள் ஆவதென்?
அன்பின் பெருக்கால் அறைந்தளை போலும்.
மன்பதை யுலகம் வாஞ்சா வசமே.

வாணி: உடலால் உயிரும் விழியால் உணர்வும்
கடபட சடமலாற் கடவுளும் இலையேல்
வேண்டிய விளைக! விசனம் என்? அன்றேல்
காண்டி யவ்வேளை கருணையின் இயல்பே. 1

[இருவரும் போக]

ஐந்தாம் அங்கம்: இரண்டாம் களம் முற்றிற்று.

Koviloor Digital Library



இடம்: அரண்மனையில் மணமண்டபம் **காலம்:** நடுநிசி

[அமைச்சர் படைவீரர் முதலியோர் அரசனை எதிர்பார்த்து நிற்க]

நிலைமண்டில ஆசிரியப்பா

முதற்படைத்தலைவன்: அடிகள்பின் போயினர்
யாவர்? அறிவீர்?

2-ம் படை : நடராசனை நீர் அறிவீர் போலும்!

முதற்படை : அறிவேன்! ஆ! ஆ! அரிவையர் யாரே
வெறிகொளார் காணில்! வீணில் வாணியைக்
கெடுத்தான் கிழவன்.

3-ம் படை : அடுத்தது அம் மணமும்
தெரியீர்போலும்!

முதற்படை : தெரியேன், செய்தி யென்?

3-ம் படை : கோணிலா நாராயணன் கொடுஞ்சிறை தவிர்த்தலும்
வாணியின் மனப்படி மன்றல் நடத்தலும்
இவ்வரம் இரண்டும் அம்மணி வேண்ட
அளித்தனன் அனுமதி களிப்புடன் அரசன். 10

முதற்படை : இருதிரை யிட்டவாறு இப்போது அறிந்தேன்.
ஒருதிரை வாணிக்கு ஒருதிரை மணிக்கே.

3-ம் படை : எத்திரை தாய்க்கென்று இயல்புதி கேட்போம்.

முதற்படை : இத்திரை தாய்க்காம்

3-ம் படை: சீ! சீ! அத்திரை

Koviloor Digital Library

2-ம் படை : எத்திரை யாயினென்? ஏன்? இரைகின்றீர்?

முதற்படை : இருதிரை வந்தவாறு இதுவே யாயினும்
ஒருதிரைக் கொருதிரை யெத்தனை தூரம்?

3-ம்படை : அதோ அவன் அறிகுவன். அறிந்திதோ வருவேன்.

[3–ம் படைஞன் மற்றோர் இடம் போக]

முதற்படை : ஐயோ, பொய்யறும் அன்னை அம்மணிக்கும்
பொய்யன் பலதேவனுக்குமோ பொருத்தம்? 20

2-ம்படை : வருத்தம் ஏன் உனக்கு? மன்னன் திருவுளக்
கருத்து அனுசரித்து நாம் காட்டலே கடமை.

[3–ம் படைஞன் மீண்டும் வர]

3-ம்படை : (முதற்படை நோக்கி) இப்புறம் வருதி
செப்புவன் ரகசியம்.
சத்தியம் செய்தபின் சாற்றினன், நீயும்.
எத்திற்தோர்க்கும் இயம்பலை. பத்திரம்!
அத்திரை மணத்திற்கு அன்று. மற்று அப்புறம்
நெருங்கிய சுருங்கை யொன்று உளதாம். அவ்வழி
செல்லில் வெகுதொலை செலுமாம். இப்போர்
வெல்லும் வரையும் அவ்வழி மணந்தோர்
இருவரும் எய்தி வாழ்ந்திருப்பராம் 30

முதற்படை : சரி! சரி!
பொருவரும் புத்திமான் குடிலன். எத்தனை
விரைவினிற் சமைத்தான்! வெகுதிற முடையான்.

3-ம்படை : இப்போது அன்று அது; நகராரம்பம்
எப்போது அப்போதே வரும் துயரம்
கருதி முன் செய்தனன்.

முதற்படை : ஒருவரும் அறிந்திலம்!

[முருகன் வர]

3-ம் படை : யாரது? முருகனோ? நாரணன் எங்கே?

முருக : நாரணன் அப்புறம் போயினன்; வருவன்.

Koviloor Digital Library

3-ம் படை : பிழைத்தீர் இம்முறை.

முருக : பிழைத்திலம் என்றும்!

3-ம் படை : அத்திரைச் செய்தி யறிவாய்.
வைத்தது ஆர்?

முருக : வைத்தது ஆர் ஆயினென்?
வெந்தது வீடு! 40
[இருவரும் நகைக்க]

2-ம் படை : வாயினை மூடுமின். வந்தனன் மணமகன்

முருக : ஈயோ வாயில் ஏறிட நாயே!

முதற்படை : அரசனும் முனிவரும் அதோ வருகின்றார்.
[ஜீவகன், சுந்தரமுனிவர், கருணாகரர், நிஷ்டாபரர்,
பலதேவன், நடராஜன், நாராயணன் முதலியோர் வர]

ஜீவ : இருமின் இருமின்! நமர்காள் யாரும்.
[ஜீவகன் முனிவர் முதலியோர் தத்தம் இடத்து இருக்க]
கொலுவோ கொல்இது! மணவறை இருமின்.
பலதேவரே நும் பிதா இது காறும்
வந்திலர் என்னை?

பலதேவன் : மன்னவர் மன்ன!
அந்தியிற் கண்டேன் அடியேன். அதன்பின்
ஒருவருங் கண்டிலர். நனி போயினராம்.

ஜீவ : இரும் இரும் நீரும். எங்கு ஏகினும் நம் 50
காரியமே யவர் கருத்து எப்பொழுதும்.
(நாராயணனை நோக்கி) பாரீர் அவர் படும் பாடு!

நாராயணன் : பார்ப்பேன்!
சத்தியஞ் சயிக்குமேற் சாற்றிய படியே!

ஜீவ : இத்தகை யுழைப்போர் எப் புலனமும் இலை.
எண்ணி நிச்சயித்த இத்தொழில் இனி யாம்
பண்ணற்கு என்தடை? சுவாமி! அடிகள்
தந்த நன்முகூர்த்தம் வந்ததோ?

Koviloor Digital Library

சுந்தரர் : வந்தது!

[புருஷோத்தமனும், குடிலனும், அருன்வரதன் முதலிய மெய்க் காப்பாளருடன் கற்படை வழிவர]

புருஷோத்தமன்: நின்மின்! நின்மின்! பாதகன் பத்திரம்.

[கற்படையில் அருள் வரதனை நோக்கி]

என் பின் இருவர் வருக.

(தனதுள்) இதுவென்?

இந்நிசி யெத்தனை விளக்கு! ஏதோ 60

மன்னவை போலும்! மந்திரா லோசனை!

இவர் சுந்தரரே! அவர் நடராஜர்!

இவர்கள் இங்கு உளரோ! எய்தியது எவ்வழி?

இத்திரை யெதற்கோ? அத்திரை எதற்கோ?

இத்தனை கோலாகலம் என் சபைக்கு?

மாலையுங் கோலமுங் காணின் மணவறை

போலாம். அறிந்து இனிப் போவதே நன்மை.

மந்திரமாயின் மற்று அதும் அறிவோம்.

இந்த நல்திரை நமக்கு எத்தனை உதவி

[திரைக்குப் பின் மறைந்து நிற்க]

ஜீவ: என் குலங் காக்க வென அருள் ப்ழுத்துக் 70

கங்கணங் கட்டிய கருணா நிதிகாள்!

மனத்திறத்து ஆழ்ந்த மதி மந்திரிகாள்!

எனக்கென உயிர்வாழ் என்படை வீரர்காள்!

ஒருமொழி கூறிட அனுமதி தருமின்.

ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே;

பாடையின் சிறப்பெலாம் பயில்வோர் சிறப்பே;

எள்ளரும் மதிகுலச் சிறப்பெலாம் எமர்காள்

கள்ளமில் நும்முனோர் காப்பின் சிறப்பே.

ஆதலில் உமக்கு உபசாரம் யான் ஓதுதல்

மெய்க்கு உயிர் கைக்குநா விளம்புதல் மானும் 80

ஈண்டு காத்திடுவல் யான்எனக் கடன் பூண்டநும்

மதிகுல மருந்தாய் வாய்த்தஎன் சிறுமி

Koviloor Digital Library

விதைபடும் ஆலென விளங்கினள். அவளைக்
காத்திடும் உபாயங் கண்டிட இச் சபை
சேர்த்தனன் என்பது தெரிவீர் நீவீர்.
இன்றுநாம் பட்டதோர் இழுக்குஇவ் வைகறை
பொன்றியோ வென்றோ போக்குவம் திண்ணம்.
ஒருகுலத் தொருவன் ஒருமரத் தோரிலை.
அப்படி யன்றுநங் கற்பகச் சிறு கனி!
தப்பிடின் மதிகுலப் பெயரே தவறும். 90

அறியஇச் சத்தியைப் பெரிதுங் கருதுமின்.
இருந்திடச் சிறியள்; அபாயம்! தனியே
பிரிந்திடப் பெரியள்; பிழை! அஃது அன்றியுங்
குலமுடிவு எண்ணிக் குலையும்நம் உளத்திற்கு
இலை யதனாலோர் இயல் சமாதானம்.
ஆதலில் அரிய தற்காலத்து யியல்பை
யாதென நீவிர் ஆய்ந்து நான் இப்போது
ஓதிடும் உபாயத்தால் உறு நன்மையும்
தீமையும் நன்றாய்த் தெரிந்து செப்புமின்!
குடிலனை யறியார் யார்இக் கொற்றவை? 100

2-ம் படை : குடிலனை யறியுமே குவலயம் அனைத்தும்!

ஜீவ : அறிந்திடில் இறும்பூது அணையார் யாவர்?
மதியுளார் யார் அவன்பதி அதிசயித்திடார்?
நெஞ்சுளார் யார் அவன் வன்திறற்கு அஞ்சார்
யார் வையார் அவனிடத்து ஆரா ஆர்வம்?
உண்மைக்கு உறைவிடம் திண்மைக்கு அணிகலம்
சத்திய வித்து; பத்தி யுன் மத்தன்.
ஆள்வினை தனக்கு ஆள்; கேள்வி தன் கேள்வன்
ஏன்மிக? நமர்காள்! இந்நடு நிசியிலும்
யான் அறியாது உழைக்கின்றனன் எனக்கா. 110

நன்றேஇங்கு அவன் இலாமையும்; அன்றேல்
தற்புகழ் கேட்க அற்பமும் இசையான்.

புரு : (தனதுள்) எத்தனை களங்கமில் சுத்தன்! கட்டம்!

Koviloor Digital Library

ஜீவ : பற்பல பாக்கியம் படைத்துளார் பண்டுளோர்.
ஒப்பறும் அமைச்சனை யிப்படி யொருவரும்
முன்னுளோர் பெற்றிலர்; பின்னுளார் பெறுவதும்
ஐயமென்று உரைப்பேன். அன்னவன் புதல்வன்
மெய்ம்மைம், வாரமும், வீரவாசாரமும்.
பத்திசேர் புத்தியும், யுத்திசேர் ஊக்கமும்
உடையனாய் அடையவுந் தற்பிரதிமைபோல் 120

இனியொரு தலைமுறை நனிசேவகஞ் செய
இங்குவீற் றிருந்திலனாயின். எமர்காள்!
எங்குநீர் கண்டுளீர் இச்சிறு வயதிற்
பலதேவனைப் போல் பலிதமாஞ் சிறுதரு?

2-ம் படை: இலையிலை யெங்கும்! இவர்போல்வார் யார்?

ஜீவ : எனது அரசுரிமையும் எனது அரசியல்பும்
தமது ஆருயிர் போல்தாம் நினைந்த இதுவரை 2
எவ்வளவு உழைத்துளார் இவ்இருவரு மெனச்
செவ்விதின் எனைவிட நீவிரே தெரிவீர்.
இக்குலம் அவர்க்கு மிக்கதோர் கடன்பாடு 130

உடையதென்று ஒருவரும் அயிர்ப்புறார். அதனால்
தடையற அக்கடன் தவிர்க்கவும் நம்முளம்
கலக்கிடும் அபாயம் விலக்கவும் ஒருமணம்
எண்ணினேன். பண்ணுவேன் இசைவேல் நுமக்கும்.
மணவினை முடிந்த மறுகணம் மணந்தோர்
இருவரும் இவ்விடம் விடுத்துநம் முனிவரர்
தாபதஞ் சென்று தங்குவர். இத்தகை
ஆபதங் கருதியே அருட்கட லடிகள்
தாமே வருந்திச் சமைத்துளார் அவ்இடம்
போமாறு ஒருசிறு புரையறு சுருங்கை. 140
அவ்வழி யிருவரும் அடைந்தபின், நம்மைக்
கவ்விய கௌவையும் கவலையும் விடுதலால்,
வஞ்சிய னொருவனோ, எஞ்சவில் உலகெலாம்
சேரினும் நம்முன் தீச்செறி பஞ்சே,

Koviloor Digital Library

இதுவே என்னுளம். இதுவே நமது
மதிகுலம் பிழைக்கும் மார்க்கமென்று அடிகளும்
அருளினர் ஆஞ்ஞை. ஆயினும் நுமது
தெருளுறு சூழ்ச்சியும் தெரிந்திட விருப்பே. 1

நேரிசை ஆசிரியப்பா

உரையீர் சகடரே உமது அபிப்ராயம்.

சகட : அரசர்குலம் அன்று. ஆயின்என்; சரி! சரி! 150

நாரா : (தனதுள்) மருமகன் தப்பிய வருத்தம் போலும்.

ஜீவ : குலந் தேர்வதுநற் குணந் தேர்வதுவே;
பெயரால் என்னை? பேயன்? இவ் வஞ்சியான்
பெயரால் அரசன்! செயலாற் புலையன்!

2-ம் படை : செய! செய! சரி சரி! தெளிந்தோம்! தெளிந்தோம்!

நாரா : மனிதரால் ஆவதொன்று இல்லை. மன்னவா!
இனியெலாம் ஈசனது இச்சை.

சகட : சரி! சரி!

யாவரும் : சம்மதம்! சம்மதம்! சர்வ சம்மதமே?

ஜீவ : வாராய்! நாரணா! ஆனால் அப்புறஞ்
சென்று நம் மனோன்மணிச் செல்வியை யழைத்து 160
மன்றல் திரைப்பின் வரச் செய்

[நாராயணன் போக]

யார்க்கும்

சம்மத மெனில் இச் சடங்கினை முடிப்போம்.
வம்மின்! இணியிது மங்கல மணவறை!
கவலை யகற்றுமின் கட்டுடன்! பனிநீர்த்
திவலை சிதறுமின்! சிரிமின் களிமின்!
இன்று நாம் வென்றோம் என்றே எண்ணுமின்!
இனி நாம் வெல்லற்கு என் தடை! தினமணி
வருமுன் ஏகுவம். அரைநாழிகைத் தொழில்!
ஆற்றுவம் அரும்போர் கூற்றுமே யஞ்ச.
நாளை நல்வேளை! நம் மணி பிறந்த நாள். 170

Koviloor Digital Library

பாரீர்! பதினாறாண்டும் இந்நாளில்
ஓரோர் மங்கல விசேடம்!

சகட : ஓ! ஓ!
சரி! சரி! ஒவ்வொரு வருடமும் அதிசயம்!
[நாராயணன் திரும்பிவர மனோன்மணி, வாணி முதலிய தோழியருடன் திரைப்பின் வந்து நிற்க]

நாரா : இட்ட நின் கட்டளைப்படியே எய்தினர்.

ஜீவ : மற்றுஇவர் கவலை மாற்றிட ஒருபா
(நாராயணனை நோக்கி) சாற்றிசைத்திடுவளோ வாணீ?
சாற்றுதி!

கொச்சகக் கலிப்பா

வாணி: (பாட) நீர்நிலையின் முதலையின்வாய்
நிலைகுலைந்த வொருகரிமுன்
ஓர்முறை யுன்பெயர் விளிக்க வுதவினைவந் தெனவுரைப்பர்
ஆர்துயர அளக்கர் விழும் அறிவிலி யான் அழைப்பதற்குன்
பேர்தெரியேன் ஆயிடினும் பிறகிடல் நின்
பெருந்தகையோ. 1

பாரரசர் துகிலுரியப் பரிதவிக்கும் ஒரு தெரிவை
சீர்துவரை நகர்கருதிச் சிதைவொழிந்தாள் எனவுரைப்பர்.
ஆர்துணையும் அறவிருக்கும் அறிவிலி யான் அழைப்பதற்குன்
ஊர்தெரியேன் ஆயிடினும் உறுதிதரல் உனக்குரித்தே. 2

மறலிவர மனம் பதறும் மார்க்கண்டன் உனது லிங்கக்
குறிதழுவி யழிவில்வரங் கொண்டான்முன் எனவுரைப்பர்;
வெறிகழுமிப் பொறியழியும் வெம்பாவி விரவுவதற்குன்
நெறியறியேன் ஆயிடினும் நேர்நிற்றல் நினதருளே. 3

ஆசிரியப்பாவின் தொடர்ச்சி

சுந்தரர்: எதுவோ இதனினும் ஏற்புடைப் பிரார்த்தனை?
மந்திரம் தந்திரம் வழங்கும் நற்செபம்
யாவையும் இதுவே. பாவாய்! மனோன்மணி!
வருதி இப்புறம். வாங்குதி மாலை. 180
[மனோன்மணி மணமாலை கொண்டு பலதேவனெதிர் வர]

Koviloor Digital Library

ஒருதனி முதல்வன் உணர்வன் உன்னுளம்.
உன் அன்பு உண்மையேல் இன்னமுங் காப்பான்.

[புருஷோத்தமன் திரைவிட்டு வெளிவந்து நிற்க]

முதற்படை: ஆற்றேன்! ஆற்றேன்! ஐய! இத் தோற்றம்

3-ம் படை: ஊற்றிலிருந்து ஒழுகிஉள் வறந்தது கண்.

4-ம் படை: அமையா நோக்கமும் இமையா நாட்டமும்,
ஏங்கிய முகமும் நீங்கிய இதழும்,
உயிரிலா நிலையும் உணர்விலா நடையும்
பார்த்திடிற் சூத்திரப் பாவையே! பாவம்.

[மனோன்மணி புருஷோத்தமனைக் காண;
உடன் அவன் நிற்குமிடமே விரைவில் நடக்க]

யாவரும் : எங்கே போகிறாள்? இதுயார்? இதுயார்!

புரு : இங்கோ நீ யுளை! என்னுயிர் அமிர்தே! 190

[புருஷோத்தமன் தலை தாழ்க்க, மனோன்மணி மாலை
சூட்டி அவன் தோளோடு தளர்ந்து மூர்ச்சிக்க]

சுந்தரர் : மங்கலம்! மங்கலம்! மங்கலம் உமக்கே!

யாவரும் : சோரன்! சோரன்! சோரன்! சோரன்!

நிஷ்டாபரர் : கண்டேன்: [illegible]டேன்! கருணாகரரே!

[கருணாகரரைத் தழுவி]

யாவரும் : பற்றுமின்! பற்றுமின்! சுற்றுமின்! எற்றுமின்!

பலதே : கொன்மின்! கொன்மின்!

[யாவரும் புருஷோத்தமனைச் சூழ:
சுந்தரர் கூட்டம் விலக்க]

சுந்தரர் : நின்மின்! நின்மின்!

[அருள்வரதனும் மெய்க்காப்பாளரும் வர]

அருள்வரதன்: அடையின் அடைவீர் யமபுரம்.
அகன்மின்!

[புருஷோத்தமனையும் மனோன்மணியையுஞ் சூழ்ந்து நின்று
காக்க]

யாவரும் : படையுடன் பாதகன்!

Koviloor Digital Library

அருள் : (யாவரும் பின்னிடவிலங்குடன் குடிலனைக் காட்டி)
பாதகன் ஈங்குளான்.

ஜீவ : குடிலா உனக்கும்இக் கெடுதியேன்? ஐயோ!
அடிகாள்! இதுவென்! அநீதி!
அறியேன் இச் சூது அறியேன்: அறியேன்! 200

சுந்தரர் : பொறு! பொறு! ஜீவக! அறிகுதும் விரைவில்!

புரு : வஞ்சியான் வஞ்சியான்! மன்னவ! உன்சொல்
அஞ்சினேன். சூதுஉன் அமைச்சன் செய்கை.
சுருங்கையின் தன்மை சொல்லி யென்னை யிங்கு
ஒருங்கே யழைத்தான் உன்னகர் கவர.
உன் அரசுரிமையும் உன் நகர் நாடும்
என்னிடம் இரந்தான் இச் சூதிதற்கா!
ஓதிய சுருங்கையின் உண்மைகண்டு இவன்தான்
சூதும் துரோகமும் சொலியுனைத் தெருட்ட
எண்ணியான் வந்துழி இவ்வொளி விளக்கும் 210

பண்ணியல் பாட்டும் பழைய புண்ணியமும்
தூண்டிட ஈண்டு மற்று அடையவும், யாண்டும்
எனது உயிர் அவாவிய இவ் அருமருந்தை
நனவினிற் காணவும் நண்ணவும் பெற்றேன்.
பிரிகிலம் இனிமேல். உரியநின் உரிமை
யாதோ யாயினும் ஆகுக. ஈதோ!
மீள்குவன். விடைகொடு. நாளையும்
வேட்பையேற் காண்போம் ஞாட்பிடை நாட்பே.

ஜீவ : உண்மையோ! குடிலா! உரையாய்...
[குடிலன் முகங்கவிழ்ந்து நிற்க]

நாரா : இதுவும் நின்
உண்மையோ! மௌனம் என்? 220

யாவரும் : ஓகோ! பாவி!

நாரா : படபடத்திடு நின் பாழ்வாய் திறவாய்!...

சுந்தரர் : விடுவிடு! விசாரணைக்கு இதுவன்று அமையம்

Koviloor Digital Library

நன்மையே யாவும் நன்மையாய் முடியின்.
வாராய் ஜீவக பாராய் உன் மகள்
தாராத் தன்னிரு கைதோள் சூட்டி
எண்படு மார்பிடைக் கண்படும் நிலைமை.
இருமனம் ஏன்இனி? என்றும் இப்படியே.
மருகனும் மகளும் வாழ்க! வாழ்த்துதியே.

ஜீவ : கண்மணீ! அதற்குள் கண் வளர்ந்தனையோ!
உன்னையும் மறந்து உறங்குதியேல் இனிமேல் 230
என்னை யெங்கு எண்ணுவை? இறும்பூது இருவரும்
ஒருவரையொருவர் உணர்ந்தமை!

[மனோன்மணி திடுக்கிட்டு விழிக்க]

வெருவலை! மணியே! பிரியிர் இனியே!

வாழ்த்து-மருட்பா

பள்ள உவர்க் கடலில் பாய்ந்தோடும் வெள்ளமென
உள்ளம் உவந்தோடி யொன்றனாய் – விள்ளா
மணியின தொளியும் மலரது மணமும்
அணிபெறு மொழியின் அருத்தமும் போல,
இந்நிசி யாக எஞ்ஞான்றும்
மன்னிய அன்புடன் வாழ்மதி சிறந்ததே!

[யாவரும் வாழ்த்த]

ஐந்தாம் அங்கம்: மூன்றாம் களம் முற்றிற்று.

கலித்துறை

சிறிதாயினும் பற்றிலாது கையற்ற திருமகள்தன்
குறியாந் தலைவன் குடிலன்பின் எய்திய கொள்கை கண்டீர்
அறிவாம்எனும் நம்அகங் காரம்ஆறும்அவத்தையினிற்
செறிவா யிருக்குந் திருக்கு வெளிப்படுஞ் சீரிதுவே.

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

உரைக் குறிப்புக்கள்

பாயிரம் (முகவுரை)

வேதசிகை–வேதத்தின் முடிபான உபநிடதம், போதம்–அறிவு. நுதல்–நெற்றி, ஆரியம்–வடமொழி, தெக்கணம்–தென் இந்தியா, கவின்–அழகு, வாழ்த்தும்–வாழ்த்துவோம், குடமுனி–அகத்தியன்.

தொடுகடல்–தோண்டப்பெற்ற கடல். சகரபுத்திரர் கடலைத் தோண்டினார்கள் என்பது புராணக் கதை. அதனால் கடலுக்குச் சாகரம் என்றும் ஒரு பெயருண்டு.

புகழாமே–புகழாமோ. ஏகாரத்திற்கு இங்கே எதிர்மறைப்பொருள். உரையிழந்து விழிப்பாரேல்: இருபொருள்.

அற்புதமாமே–அற்புதமாமோ. இந்தத் தாழிசையில் 'குற்றம் குற்றமே' என்று சொல்லிச் சிவபெருமானது நெற்றிக் கண்ணுக்கும் அஞ்சாது இலக்காகித் துன்புற்ற நக்கீரரின் கதை குறிக்கப்பெறுகின்றது.

சதுமறை–நால்வேதம். இத்தாழிசையின் கருத்தை ஆசிரியர் பின்வருமாறு விளக்கியுள்ளார்: 'ஆரிய பாஷை பிரபலப்படுமுன் தமிழ் போன்ற ஒரு மூல பாஷை ஐரோப்பாவிலும் ஆசியா கண்டத்திலும் பரவியிருந்ததென்பது பல பாஷைகளையும் கற்றுணர்ந்த ஆங்கிலேய பண்டிதர்களின் துணிபு'.

வேகவதி–வைகையாறு.

கரவாக்காரணத்தின்–மறைந்துவிடாது என்ற காரணத்தின். இத்தாழிசையில் திருஞான சம்பந்தரின் கதை குறிக்கப்படுகிறது. கூன் பாண்டியன் காலத்தில் சமணர்கள் சம்பந்தரோடு வாதம் நிகழ்த்தியபோது, சம்பந்தர் பாட்டை எழுதி நீரில் விட்ட ஏடு நீரோட்டத்தை எதிர்த்துச் சென்றதாம்.

கடைஊழி–ஊழியின் கடைசியில்; கற்பாந்த காலத்தில். அம்பலத்துள் உடையார்–பொன்னம்பலத்துள் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். வாசகம்–திருவாசகம். இந்தத் தாழிசையில், மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்களுக்கு நடராஜப் பெருமான் ஒரு பிரதி எழுதி வைத்துக்கொண்டார் என்ற கதை குறிக்கப்படுகின்றது.

Koviloor Digital Library

இலகும்–விளங்கும். வியஞ்சனம்–அறிகுறி. ஏழாம் தாழிசை குறித்து ஆசிரியர் எழுதியிருப்பது: 'உத்தமமான கிழக்குத் திசையே முகமாகக் கலைமகளிருக்கில் அவள் வலப்புற விழி தென்புறமாக இருக்கும் என்பதுபற்றி வலது, விழி தென்மொழி எனக் கற்பனையாகக் கூறப்படுகிறது.' இக்கற்பனை அடுத்த இரண்டு தாழிசைகளில் விளக்கம் பெறுகின்றது.

வீறு–வேறு யாருக்கும் இல்லாத சிறப்பு.

குணதிசை– (1) கீழ்த்திசை, (2) நற்குணத்திற்கு இசைந்த வழி.

பூர்வ திசை– (1) கீழ்த்திசை, (2) பழைய நிலைமை.

பத்துப்பாட்டு–ஒரு சங்க இலக்கியத் தொகை நூல்

எத்துணையும்–எவ்வளவும், பொருட்கு இசையும் இலக்கணம்–பொருளிலக்கணம்.

உள்ளுவரோ–நினைத்துப் பார்ப்பார்களோ. கனம் சடை–வேதத்தை உருவேற்றும் முறை.

முதல் அங்கம்: முதற் களம்

ஜீவகன் என்ற பாண்டிய மன்னன் மதுரையைவிட்டுத் திருநெல்வேலியைப் புதிய தலைநகரமாக ஆக்கிக்கொண்டு அங்கே கோட்டை கொத்தளங்கள் அமைந்த பிற்பாடு, சுந்தர முனிவரும் திருநெல்வேலிக்கு வரவே, அவரை அரசன் வரவேற்பதுடன் நாடகம் தொடங்குகிறது.

திகழ்தர–திகழ. சேர்மின்–கொணர்ந்து வையுங்கள். கடி மலர்–மணமுள்ள மலர்கள். கழை கறி களிறுகள்–கரும்பைக் கடிக்கும் யானைகள். பிளிறுதல்–யானை போடும் சத்தம்.

கொய் உளைப் புரவி–கொய்த பிடரி மயிர் உடைய குதிரைகள். குரத்து எழும் ஓதை–குளம்புகளால் ஏற்படும் ஓசை. கேண்மின்–கேளுங்கள். அணைந்தனன்–அணுகி வந்துவிட்டான். ஒருசார்–ஒரு பக்கம்.

ஒதுங்குமின்–ஒதுங்குங்கள்.

ஜீவகன் சுந்தர முனிவரை உபசரிப்பது வில்லி பாரதத்திலே விதுரன் கண்ணனுக்குக் கூறும் உபசார மொழிகளை நினைப்பூட்டுகிறது.

பவ பாசம்–பிறவிக்குக் காரணமான பாசபந்தம். இரிந்திட–நிலை குலைந்து ஓட.

கூடல்–மதுரை, பீடு–பெருமை, கடக்கரும்–கடக்க முடியாத; கடத்தற்கு அரிய. நனி–மிகவும். புரி–அரண். அத்த–என் அப்பனே; என்சுவாமி. கடிபுரி–கட்டுக்காவல் அமைந்த கோட்டை வாதவூரர்–மாணிக்கவாசக சுவாமிகள்.

Koviloor Digital Library

48–50: இவ்வரிகளின் பொருள் பூகோளப் படம் நோக்கில் எளிதில் விளங்கும். நிலப்பகுதியை ஒரு பசுவாகவும் அதிற் பரதகண்டமாகிய இந்தியாவை அப்பசுவின் மடியாகவும் பாவிக்கில் தென்பாண்டிநாடு அம்மடியினின்றும் பால் சுரக்கின்ற சுரையாகத்தானே தோற்றும், என்பது ஆசிரியரின் குறிப்பு. பனிவரை–பனிமலை; இமயம். துலை–தராசு. வாயசம்–காகம்.

கங்கை தன்னுடைய யாக குண்டத்தை அழித்துவிடுமே என்று அந்த ஆற்றைப் பருகிய சந்நு முனிவர் பகீரதன் முதலானோர் வேண்டிக் கொண்டதும் தன் செவி வழியே அந்தக் கங்கையை விட்டுவிட்டார் என்பதும், பொதிய மலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அகத்திய முனிவருடைய கமண்டல நீரைக் கணபதி, காக்கை வடிவில் வந்து கவிழ்த்துவிட அந்த நீர் காவிரியாகப் பெருகியது என்பதும் புராணக் கதைகள்.

வேழ வெண் மருப்பு–யானைகளின் வெண்மையான தந்தம். காழ் அகில்–வைரம் பாய்ந்த அகிற்கட்டை. சந்தனாடவி–(சந்தனம்+அடவி) சந்தனக்காடு. குங்குமம்–ஒருவகை மரம். தடம்பணை பெரிய பள்ளத்தாக்கு. வாரம்–ஓரம்.

தாமிரவருணியின் வருணனை நைடதத்தில் வரும் நாட்டு வருணனைப் பாடல்கள் இரண்டை நினைவூட்டுகிறது.

துணுக்குறும்–நடுக்கமடையும். அடையலர்–பகைவர். கட்செவி–பாம்பு. (இங்கே) ஆதிசேஷன். சுடிகை–உச்சிக்கொண்டை. மஞ்சு–மேகம். இஞ்சி–மதில். உரிஞ்சி–உராய்ந்து. உதயன்–சூரியன். பதாகை–கொடிச்சீலை. மீனம்–மீன். உவாமதி–முழுமதி; பூர்ணசந்திரன். வெயில்–(இங்கே) ஒளி.

எயில்–மதி. வெறி–மயக்கம். கிறிகள்–வஞ்சக வழிகள் துன்னலர்–பகைவர். வெருவுவர்–பயப்படுவர். உள்ளற்பாற்றோ–எண்ணும் தன்மையதோ. புரை–குற்றம். கறங்கு–காற்றாடி. ஆயற்பாற்றது–ஆராயத்தக்கது.

படிறுகள்–வஞ்சகங்கள். உவர்த்தே–வெறுத்தே. துனி–வெறுப்பு. மலைமகள்–பார்வதி. கமலை–இலட்சுமி. கீண்டு–கிழித்து. இமையவர்–தேவர்கள். முயன்றுழி–முயன்றபோது. வன்னி–அக்கினி. துன்னிய–நெருங்கியிருந்த. வெய்துயிர்த்து–பெருமூச்சுவிட்டு. அங்கி–அக்கினி. புங்கவர்–பெரியோர். இக்கு–கரும்பு. வம்மின்–வாருங்கள்.

இரண்டாம் களம்

எற்பாடு–முன்மாலைப் பொழுது. சுடுகணை–சுடுகின்ற அம்பு. சுடுகணை தூர்ப்பவன்–(இங்கே) மன்மதன். அழலாடும் தேவர்–

Koviloor Digital Library

சிவபெருமான். ஏழையர்–பெண்கள். கடுவுண்ட கண்டர்–விஷத்தை உண்ட கழுத்தையுடைய சிவபெருமான்; நீலகண்டமூர்த்தி. பலி–(இங்கே) பிச்சை. அம்பலத்து ஒருவர் சிவபெருமான். கரந்தான்–மறைந்தான்.

இந்தக்கழல் விளையாட்டுப் பாடல்கள் 'பாடுதுறை'யிலுள்ள கழல் விளையாட்டுப் பாடல்களை நினைவூட்டுகின்றன. இப்பாடல்களில் காமதகனக் கதை குறிக்கப்படுகிறது. 'அரையுருவானார்' என்பதில் சிவபெருமானுடைய அர்த்த நாரீசுர வடிவம் குறிக்கப்படுகிறது. வாணி காதலனாகிய நடராசனது உடல் மெலிவும் தொனிப் பொருளாகக் குறிக்கப்படுகிறது.

மன்றல்–திருமணம், 'மணந்த பின்னர் நாயகன் பெயர் நவிலாமை வழக்கானதால்' என்பது ஆசிரியர் குறிப்பு.

வார்குழல்–நீண்டகூந்தல், (இங்கே) பெண். பிறைபழி நுதலாய்–பிறைச் சந்திரனைப் பழிக்கும் அழகிய நெற்றியையுடைய பெண்ணே, கபோலம்–கன்னம், நுவன்று–சொல்லி, இயம்புகோ–இயம்புவேன். வார் குழல் திருவே–நீண்ட கூந்தலையுடைய மகாலட்சுமி போன்றவளே.

எட்பூ–எள்ளுப் பூ. மூக்கை எள்ளுப் பூவுடன் ஒப்பிடுவதுண்டு. வறிதே–வீணாக. கைரவம்–(இங்கே) செவ்வாம்பல் மலர். வள்ளையின்–வள்ளை இலையின். இந்த இலையைக் காதுக்கு உவமையாகக் கூறுவதுண்டு.

வலம்புரி–வலம்புரிச்சங்கு. இது கழுத்திற்கு உபமானம்.

நலம் திகழ்மதி–அழகு திகழும் சந்திரன். பெட்பு–விருப்பம்; (இங்கே) காதல். கண்டு–கற்கண்டு.

காரிகை அணங்கே–மிகவும் அழகுடைய பெண்ணே. (ஒருபொருட் பன்மொழி).

காந்தள் காட்டும் கை–காந்தள் மலர் போன்ற கை.

மன்பதையுலகு–மக்களுடைய உலகம்; மின்புரை–மின்னலை ஒத்த. வற்கலை–மரவுரி. சிந்துர அடி–சிவந்த அடிகள். வாரிசம்–தாமரை. புரையறும்–குற்றம் அற்றிருக்கும்.

மாந்தளிர் வாட்டும் மேனி–மாந்தளிரையும் வென்ற மென்மையும் அழகும் வாய்ந்த மேனி. கதுவுங்காலை–பற்றிக்கொள்ளும்போது, படர்சுழி... உதரவாணி; சுழி கொப்பூழுக்கும் திரை அல்லது அலை வயிற்று மடிப்புக்கும் வடதளம் அல்லது ஆலிலை வயிற்றுக்கும் உவமை.

வாசிட்டாதி–வைராக்கிய நூல். வாசிஷ்டம் முதலான ஞான நூல்கள். வழுதிக்கு–பாண்டியனுக்கு.

Koviloor Digital Library

ஆமையின்... எழிற்கால்; ஆமை புற அடிக்கும், அலவன் அல்லது நண்டு முழந் தாளுக்கும் உரிமை.

வதுவை–திருமணம். நச்சினேன்–விரும்பினேன் பிச்சி–(பித்தி) பைத்தியக்காரி.

அயிராவதத்தன்–ஐராவதம் என்ற யானையை வாகனமாகவுடைய இந்திரன். அழுங்கலை–வருந்தாதே.

அனிச்சமும்... அடியாய்; அனிச்சப் பூ பெண்ணின் அடிகளின் மென்மைக்கு உவமை.

நெருஞ்சில்–ஒருவகை முள். இதை நெரிஞ்சி என்றும் சொல்வதுண்டு.

கஞ்சனக் கதுப்பு–கண்ணாடிபோன்ற கன்னம். அணங்குறல்–(நீ) வருந்த வேண்டாம். சுணங்கு–தேமல்.

நீயே வளர்த்த... முகிழ்த்தது, 'தாமே நட்டு வளர்த்த முல்லை பூக்குங்கால் இராஜ கன்னியர்க்கு விவாகம் நேரிடுமென்பது காவிய. வழக்கு' என்பது ஆசிரியர் குறிப்பு.

வல்லை–விரைவு. போது–(இங்கே) தாமரைப் பூ மையுண்கண் மை தீட்டிய–கண். சந்தம் ஆர்–அழகு நிறைந்த. துன்று இரா–நெருங்கிய இருட்டு. தோகாய்–மயில் போன்ற பெண்ணே.

மூன்றாம் களம்

புரிசை–கோட்டை. நறையார் வேப்பந் தாராய்–வாசனை நிறைந்த வேப்பமாலை பூண்டிருக்கும் பாண்டிய அரசனே.

ஓவல் இலாதே–இடையறாமல். உஞற்றுமின்–செய்யுங்கள் பூபதியே–அரசனே.

சினகரம்–கோயில். முசிப்பில்லா–முடிவில்லாத. சிட்ட முனிவர்கள்–சிஷ்டர்களான முனிவர்கள். புரந்தரன்–இந்திரன். கோற்றொடியார்–அழகிய வளையல் அணிந்த பெண்கள்.

நாராயணன் சொல்லும் வெண்பாவைக் குறித்து ஆசிரியர் 'உண்மைத் துறவியாகிய முனிவர்மேல் குடிலன் அவமே பொருளாசை ஆரோபித்ததைப் பழித்து நாராயணன் செவியறிவுறுத்தும் துறையாகக் கூறும் கூற்று' என்பர். குடிலன் பிரமாதப்படுத்தும் பதவியும் செல்வாக்கும் முனிவரால் வெற்றெலும்பாகவே மதிக்கப்படுகின்றன என்பது இந்த வெண்பாவின் உட்பொருள்.

Koviloor Digital Library

மானும்–ஒக்கும். அறத்தாறு–தரும வழி. அரந்தை–துன்பம். இடியேறு–பேரிடி.

படைஅடு–படையை அழிக்கவல்ல. தொழும்பு–அடிமை. மொய்குழல்–பெண்.

ஓராள்–நினைத்துப் பார்க்க மாட்டாள். நேராள்–உடன்படமாட்டாள். திரைத்தது–சுருங்கிப் போயிற்று. வாழ்தும் இவ்வயின்–இங்கே வாழ்ந்து கொண்டிருப்போம். மாற்றலர்–பகைவர். ஏந்தலே–அரசனே!

சோற்றதற்காய்: வெண்பாவின் இத் தனிச்சொல் சகடனைக் குறிக்கும்போது 'சோற்றுக்காக' என்று பொருள்படும்; 'அரிச்சந்திரனைக் குறிக்குங்கால் "சொற்றதற்கா" என்பதின் நீட்டல் விகாரமாய் அவனது தவறாமொழியையும் சுட்டி நிற்கின்றது' என்பது ஆசிரியர் உரைக் குறிப்பு.

அறிவிர்கொல்–அறிவீரோ. பொருவரும் ஒப்பற்ற. பூவை–நாகணவாய்ப்புள். அரந்தை–துன்பம்.

நறவுமிழ் நளினம்–தேன் ததும்பும் தாமரை.

லீலைச் சோலை–சிங்காரப் பூங்காவனம். குமுதம்–செவ்வாம்பல். விண்டு–திறந்து. குயிலின் மிழற்றி–குயில் போலக் கொஞ்சிப் பேசி. மலைய மாருதம்–தென்றற் காற்று. மேன்மந்திரம்–மேல்வீடு. கண்படும் எல்லை–உறங்கும்போது. அகற்றப் புக்குழி–போக்கத் தொடங்கியதும். கழலும் வளையும்–வளைகளும் கழன்று போகும். நாலி–முத்து.

பொரியும்–(உடம்பின் வெப்பத்தால்) பொரிந்து போகும். கட்டழல்–கண்+தழல். நெட்டுயிர்ப்பு–பெருமூச்சு. ஒல்கும்–தளரும். நெரியா–நெரித்து. அயினிநீர்–ஆலத்திநீர். பூதி–விபூதி. சாந்தம்–சந்தனம். இழுது–நெய். மம்மர்–மயக்கம். வாயசம்–காகம். கங்குல்–இரவு. சிரசிரா–(சிரசு+இரா) தலைபோகும் தண்டனை கிடைக்கும் என்பது பொருள். வெருவி–பயந்து. நிமித்திகர்–சோதிடர். கூஉய்–கூவி. .

பெண்ணையந் தார்–பனம்பூ மாலை. இது சேர மன்னருக்கு உரியது. 'பனம் பூ மாலை சூடும்படி நும் மகளை மணஞ் செய்யுமின்–அதாவது வஞ்சியரசனுக்கு விவாகம் செய்து கொடுமின் என்பது பொருள்' என்பர் ஆசிரியர். பெண்ணை அந்தார் சூட்டு–பெண்ணுக்கு அழகிய மணமாலையைச் சூட்டு. கண்டுழி–கண்டபோது. அங்கணம்–முற்றம்.

நான்காம் களம்

விசும்வில்–வானத்தில். மாய்ப்பன்–கொன்றொழிப்பேன். உறுத்தும்–அனைவரையும் பயமுறுத்தி வருத்தமுறச் செய்யும். ஒறுத்தே–தண்டித்தே

Koviloor Digital Library

வனக்கிளி–(இங்கே) வர்ணக்கிளி. பிசிதம்–வேம்பு. வானவன்–தேவன். சேயதோர் போந்தையில்–தூரத்திலுள்ள பனைமரத்தில். 'இவ்வரிகளில் (12–22), பஞ்சவன் பிசிதம் வானவன் போந்தை என்ற மொழிகள் முறையே பாண்டியனையும், அவனது மாலையாகிய வேம்பையும், சேரனையும் அவனது மாலையாகிய பனம்பூவையும் குறிப்பித்து நிற்பதால், பாண்டியன் மகளாகிய மனோன்மணி சேரனது பேரழகுகண்டு மயங்கி இச்சையுறுவதையுணர்த்த அறிகுறியாக வந்த ஒரு கனாக்காட்சி தொனியருத்தமாகக் கூறியதாயிற்று' என்பது ஆசிரியர் உரைக்குறிப்பு.

துப்பிதம்–பவளம் போன்ற இதழ். காம்பு அடு தோளீ. மூங்கிலைப் பழிக்கின்ற தோளையுடையவளே. போன்மே–போலுமே. உனி–உன்னி; நினைத்து. பரிதி வந்துழி–சூரியன் உதயமானபோது, மிகை–துன்பம். செயிர்நீர்அறம்–குற்றம் தீர்ந்த தருமம். விழுமம்–துன்பம். மின் ஏய்மருங்குல்–மின்னலை ஒத்த இடை, நச்சியது–விரும்பியது. தனிபுரத்து–தனியுரிமையாகக் காத்து. தாரு–தரு; மரம். ஆறலை–வழிப்பறி. அயர்ச்சி–சோர்வு, வீக்கிய கழற்கால்–வீரக் கழல் கட்டிய கால்.

சுந்தரபங்கர்–சுதந்தரம் அற்றவர்கள். விரை–வாசனை. அரிவையர்–பெண்கள். 'அரிவையர் பிழைப்பர்?' என்ற வாணியின் வாக்கை. 'எங்ஙனம்?' என்ற ஜீவகன் சொல்லோடு சேர்த்து மறுமொழி கூறுகிறாள் வாணி. இப்படிப் பேசி, அரசன் தன்மேல் சாட்டிய பிடிவாதத்தை அவன் மேலேயே சுமத்தி மறுமொழி கூறும் வாணியின் நெஞ்சுத் துணிவும் அறிவுத் திறனும் வியக்கத்தக்கன.

மாற்றலர் ஏறே–பகைவர்களுக்கு ஆண்சிங்கம் போன்றவனே. யார்வயின்–யாரிடம். மண்ணாள் மேனி–உடம்பையும் கழுவாள். படியாள் இசையும்–இசையிலும் ஈடுபடமாட்டாள்.

அனம்–அன்னம். விதிர்த்து–நடுங்கி. கதித்து–மிகுத்து. பெற்றி–தன்மை. முருகு அவிழ்–மணம் வீசுகிற. நிசிதவேல் கூர்மையான வேல். அரசாடவி–அரசராகிய காட்டிலே. துன்னலர்–பகைவர். துனி–வருத்தம். கோடு–எல்லை. பொருவிலா–ஒப்பற்ற. கெடல் அறுசூழ்ச்சி–கேடில்லாத ஆலோசனைத்திறன். உசாவி–விசாரித்து.

ஐந்தாம் களம்

கற்றை–ஒன்று சேர்ந்திருக்கும் தொகுதி. அயர்த்தோம்–மறந்தோம். ஆயிழை–ஆராய்ந்து எடுத்த நகைகளை அணிந்துகொண்டிருப்பவள், பெண்.

செருக்கினைக் கிள்ளில்–கர்வத்தைக் கிள்ளிவிட்டால். ஆங்கில மரபுச் சொற்றொடர் ஒன்றைத் தழுவியது இது. உற்பவம்–தோற்றம். இந்து–சந்திரன். இரவி–சூரியன். தோடம்–தோஷம்.

Koviloor Digital Library

சுவான சக்கரம்: 'நாய் கடியாதிருக்க உபாயம் வினாவிய ஒருவனுக்கு உள்ளங்கையில் நவகோண சக்கரம் வரைந்து காட்டுக என்றும், ஆனால் அது பல விதமாவதற்கு மரத்தின் உந்நதக் கிளையிலேறி இருந்து கொண்டு, அச்சக்கரம் வரைவதே விதியென்றும் ஒரு குரு உபதேசித்தான் கதை' என்பர் ஆசிரியர்.

இந்தா–இதோ(வழக்கச் சொல்). சோறடு பாத்திரம்–சோறு சமைக்கும் பாத்திரம்.

கலித்துறை

நிதனம்–அழிவு. தனு–உடம்பு. கரணம்–கருவி.

இக்கலித்துறை இவ்வங்கத்துள் நடந்த கதையைத் தொகுத்துக் கூறி ஞானப்பரமாகப் பொருட்படுத்துகிறது என்பர் ஆசிரியர். 'மதுரையாகிய கூடஸ்தலநிலை தவிர்ந்த ஜீவனாகிய இவன் நெல்வேலியாகிய அன்னமயாதி பஞ்ச கோச சரீரபிமானத்தால் குரு வாசமாகிய அருள் வழி விடுத்துக் குடிலனாகிய மாயா வசத்தனாய்த் துக்கத்திற்காளாகின்றான்' என்பது ஆசிரியர் கூறும் தத்துவ உட்பொருள்.

இரண்டாம் அங்கம்: முதற் களம்

பொறையன்–சேரன். மருமான்–மருமகன்; மாப்பிள்ளை. மன்றல்–திருமணம். இப்பரிசே–இந்த வகையே. அற்றம்–சமயம். பொருநை–தாமிர வருணி. காண்டகும் ஆண்டகை–காணத்தக்க அழகு வாய்ந்தவனும், ஆண்மைக் குணமுள்ளவனுமாக இருப்பவன்.

ஞானம் மாண்ட–ஞானத்தில் மேம்பட்ட. பனந்தார் வெய்ந்தோன்–பனைமாலை சூடிய சேரன். அனந்தைப்பதி–திருவனந்தபுரம். கண்ணகன் ஞாலம்–இடம் அகன்ற பூமி. ஆடவர் இல்–புருஷர் வீடு. கொங்கன்–சேரன். ஏதிலன் அன்றே–அன்னியன் அல்லவா. மருதம்–வயல்கள் உள்ள வளநாடு. நெய்தல்–கடல் சார்ந்த இடம். மழலை–இளஞ்சொல். வண்டானம் நாரை. புலர்மீன்–உலர்த்தப்படுகிற மீன்: கருவாடு. ஓம்புப–ஓம்பி; பேணிக்காத்து, நுளைச்சியர்–நெய்தல் நிலப் பெண்கள். குழை–காதணி. புன்னை நுண்தாது–புன்னை மலர்களின் நுட்பமான மகரந்தப் பொடி. இருஞ்சிறை–கரிய சிறகு அலக்கண்–துன்பம்.

'நெய்தல் நிலத்தில் உலர்த்தப்படும் மீனை மருத நிலத்து வண்டானக் குருகு கவர, அதை ஒட்ட நுளைச்சியர் எறிந்த பொற்குழை, கடற்கரையிலுள்ள புன்னை நிழலில் உறங்கி அம்மலர்த் தாதுக்களால் பொன்னிறம் பெற்றுத் திரும்பி மருத நிலத்திற்குச் சென்ற எருமையின் மேலிருந்து சிறகுலர்த்தும்

Koviloor Digital Library

கடற்காக்கையை வருத்திற்று' என்பது ஆசிரியர் உரைக்குறிப்பு. மருதம்–நெய்தல் திணை மயக்கம் இது. கேதகை–தாழை. சார்தர–சாரவந்து சேர. கோங்குஅலர்–கோங்குமலர்.

'நெய்தலுக்குரிய கைதை மலரின் நிழலைத் தனது பெடையென மயங்கிச் சென்ற மருத நிலத்துத் தாராக் குருகை ஏளனஞ் செய்து சிரித்த ஆம்பல் மலரின் வாய் நிறையத் தன் மலர்த் தாதினைக் கொட்டிக் கோங்கு மரம் விலக்கும்' என்பது ஆசிரியரின் உரைக்குறிப்பு.

வால்வளை– ஒளி பொருந்திய வெண்ணிறச் சங்கு. சூல் உளைந்து–கர்ப்பநோயுற்று.

ஓதிமம்–அன்னம். குடம்பை–முட்டை. உன்னபு–உன்னி; எண்ணி.

அடம்பிடை–அடம்புக் கொடியினிடையே. அடம்பு நெய்தல் நிலத்துக் கொடி.

கரும்பு அடுசாலை–கருப்பஞ்சாறு பிழியும் சாலை.

காரா–காரம்பசு; எருமை. அலகமும்–கலப்பை நுனி. தாக்குழி–தாக்குமிடத்து. அலமரும்–வருந்தும்.

அன்றில்–இணைந்தே வாழும் ஒரு வகைப் பறவை. நளி–பெருமை.

கோட்பறை விளி–கொன்று கொள்ளுவதற்கு இசையக் கொட்டுகிற ஓசை.

வேய்–மூங்கில். சாலி–நெல். உப்பார்பஃறி–உப்பு நிறைந்த ஓடம். நிரை–வரிசை. பிணிப்பர்–கட்டுவர்.

கொண்மூ–மேகம். கொள்கலம்–பாத்திரம். அவ்வயின்–அந்த நன்செய் நாட்டில்.

செல்புழி–செல்லும்போது. மிடிதீர் சாரல்–நமது வறுமையைத் தீர்க்கும் சாரல் மழை.

முந்நீர்நீத்தம்–கடல் வெள்ளம். ஓம் என– ஓம் என்ற சப்தத்துடன். ஓ–மதகுநீர் தாங்கும் பலகை. வாய்த்தலை–கால்வாய்.

பிரணவ நாதம்–ஓம் என்ற ஓசை. இரணம்–உப்பளம் பழனம்–வயல். தூமம் இல்–புகையில்லாத. கவடி–சோழி. அலவன்–நண்டு.

துகிர்க்கால்–செம்பவளம் போன்ற கால். புகர்க்கால்–மயங்கிய செந்நிறமுள்ள கால்.

செங்கண் போத்து–சிவந்த கண்களையுடைய செம்போத்து. கம்புட்கோழி–கம்புள் என்ற சம்பங்கோழி.

Koviloor Digital Library

குழீஇ–கூடி. அந்தியங்காடி–மாலைக் காலத்துக் கடைவீதி.

சந்தம்–அழகு. குழூஉ–கூட்டம். ஆர்தரும்–நிறைந்திருக்கும்.

வீறு–வேறு எதற்கும் அல்லது யாருக்கும் இல்லாத சிறப்பு: (இங்கே) இறுமாப்பு.

எருத்தினம் (எருது+இனம்) எருதுக்கூட்டம். அடுபவர்–கொல்பவர்.

கடைசியர்–பள்ளியர்; பள்–ஒருவகை இசை; கார் என–மேகம் என்று சொல்லும்படி. கறங்கும்–சப்திக்கும். கிணைப் பறை–மருத நிலப்பறை. நீவிடில்–தடவினால். உலப்பறு–கேடில்லாத. ஒப்புரவு–இணக்கம்.

அரச அவாம் பண்பு–அரசர் அவாவும் (விரும்பும்) குணம். வென்றி–வெற்றி. வைவேல்–கூர்மையான வேல்.

மேலவர்–பகைவர். உதியன்அவை–சேரனுடைய சபை.

இராச்சிய பாண சூத்திரம்–இராச்சிய பரிபாலனத்திற்காக ஏற்பட்டிருக்கும் விதிகளின் தொகுப்புக் கலை.

விளம்பனம்–தாமதம் செய்தல். காண்டி–காண்காய். வம்மின்–வாருங்கள்.

சுரகுரு–தேவகுருவான பிரகஸ்பதி என்ற வியாழ முனிவன்–பிரசுரன். வெள்ளிஎன்ற அசுரகுருவான சுக்கிரன்.

தரளமாலை–முத்துமாலை. ஆடி–கண்ணாடி.

சுமித்திரை பயந்த புத்திரன்–சுமித்திரை பெற்ற புதல்வனாகிய லட்சுமணன். வீரவாகு–முருகப் பெருமானின் விசேஷ நம்பிக்கைக்கு உரிய துணைவன்.

நாராயணன் மூக்கில் கரி தேய்த்து வருவது.

"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியர் உடைத்து"

என்னும் குறளைக் குறிப்பித்துக் குடிலனுடைய வஞ்சநெஞ்சைக் காட்டுவதற்காகத்தான். 'எனைவகை...மேலாம்' 'எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான். வேறாகும் மாந்தர் கலர்' என்ற குறளை ஒப்பிடுக.

உன்னுவ–நினைப்பவை. ஆளும் பார்–பார் ஆளும் இராச்சியம். ஓரில்–நினைத்துப் பார்த்தால். உறுகண்–துன்பம்.

Koviloor Digital Library

இரண்டாம் களம்

நீவியக்கிழி–சித்திரம் எழுதும் சீலை (ஒரு பொருட் பன்மொழி)

தூரியம்–சித்திரம் எழுதும் கோல்.

வணம்–வண்ணம். சூட்டு–உச்சிக்கொண்டை. சிறை–சிறகு. அங்காந்து–திறந்து.

உழையுளார்–பக்கத்தில் உள்ளவர்கள். இரவி–சூரியன். அயிர்த்து–சந்தேகித்து. இரு சிறைக் கையால்–சிறகுகளாகிய இரண்டு கைகளாலும்.

மெய்யாம் தம் பெயர்–காகா என்று காகம் தன் பெயரைச் சொல்லுகிறது என்பது கருத்து.

தொழுதி–கூட்டம். அஞ்சிறை–அழகிய சிறகுகளை. ஒத்தறுத்த அடியா–தாள அறுதிக்கு இசைய ஒலி எழுப்பி அடித்து.

இசையெறி மாக்கள்–சங்கீத வித்வான்கள். ததையும்–நெருங்கும். கதுவும்–பற்றும். இரு குருகும்–இரண்டு பறவைகளும்.

துகிர்–பவளம். துண்டம்–மூக்கு. பரற்கல்–கூழாங்கல்.

உழை ஒழை–அப்பக்கமும் இப்பக்கமுமாக. கூடமாய்–மறைவாய்.

முருகு அவிழ்குவளை–மணம் கமழும் நீலமலர். அழுங்கலை–வருந்தாதே.

காரிகை–பெண்,(இங்கே) நற்றாய். (ஈன்ற தாய்) உகுத்து–சிந்தி. வீவுறும்–கெடும்

கள்ளலம்–களவு செய்யமாட்டோம். வௌவலம்–பற்றிக் கொள்ளமாட்டோம். விரும்பலை–விரும்பாதே. காணிய–காண.

இந்த ஆசிரியத் துறைகள் மூன்றையும் குறிப்பிட்டு, 'களவு வழியாகப் பலதேவனது கைவசப்பட்ட ஒரு கன்னிகையின் தாய். அவனுக்கும் வாணிக்கும் விவாகம் நிச்சயிக்கப்பட்டமை கேட்டு, அவனோடு அந்நற்றாய் கூறும் கூற்றாய் நிற்கின்றன' என்று ஆசிரியர் எழுதியுள்ளார்.

பொற்றொடி–பொன்வளை–மைச்சினி– 'தன் சோரக் காதலிக்குப் பலதேவன் வைத்துக்கொண்ட முறை' என்பர்ஆசிரியர்.

அலகை–பிசாசு–கணிசம்–கண்ணியம்(வழக்கச்சொல்).

கடு–விஷம். உசிதன்–பாண்டியன். நிண்ணயம்–நிர்ணயம்.

திரைபொரல்–அலைஅடித்தல், கயம்–ஆழம். தியக்கம்–வாட்டம். விள்ளாமுரண்–விடாது பற்றிக்கொள்ளும் மன உறுதி.. கறங்கு–காற்றாடி.

Koviloor Digital Library

எற்றுண்டு–மோதப்பட்டு. வேட்டவை–விரும்பியவை. கம்மியன்–கொல்லன், மனக்கோள்–மனக்கோணல்; மனக்குற்றம். மா–மிருகம்.

மூன்றாம் களம்

நுதிவேல்–கூர்மையான வேல். தரளநீர்–முத்துப் போன்ற கண்ணீர்!

பரிபுரம் அணிந்த பங்கயம்–சிலம்பு அணிந்த தாமரை போன்ற அடிகள். வருந்துபு–வருந்தி. விண் அணங்கு–தெய்வப் பெண்கள்.

தயிரில்–தயிர் போல. நவ்வி–அழகு. பொருசிலைப்புருவம்–போர் செய்ய வளைந்த வில்லைப் போன்ற புருவம்.

உழுவல்–பேரன்பு. வெய்யோன்–சூரியன். வாரி–கடல். செக்கர்–செவ்வானம்.

ஊர்கோள் நாப்பண்–பரி வேடத்தின் நடுவிலே. உவாமதி–முழுமதி.

மைந்தர்–(இங்கே) ஆடவர். அயர்க்கு மாறிலையே–மறக்கும்படியாகவும் இல்லையே. கைதவன்–பாண்டியன். போன்மே–போலுமே. பொங்கு அலைப் புணரி–பொங்குகின்ற அலைகளையுடைய சமுத்திரம்.

ஒன்னார்–பகைவர். திகிரி–ஆக்ஞாசக்கரம்.

குறும்பர்–குறுநில மன்னர்; சிற்றரசர்.

வேம்பு ஆர்– வேப்ப மாலையை அணிந்த

பொருந்தலர்–பகைவர். குடங்கை–உள்ளங்கை.

துணுக்குறும்–நடுங்கும். புல்லார் ஈட்டம்–பகைவர் கூட்டம்.

அரவினது அரசு–ஆதிசேஷன்–பௌவம்–கடல். வலம்தொட்டு–பலமான அகழி தோண்டி.

மதிற்கணம்–மதிற்கூட்டம்; விடயத்து–விஷயப் பொருள்களிலே. புலன்களின்–புலன்களைப்போலே. சாக்கியம்–சாட்சியம். கிழமை–உரிமை. இறுத்து–தங்கி.

உதியனும் செழியனும்–சேரனும், பாண்டியனும். கதிர்க்கடுங்கடவுள்–சூரியபகவான். அரிஏறு–ஆண்சிங்கம். தேடுஅளி–தேடுகின்ற வண்டு. சுரிகுழல்–(இங்கே)மனோன்மணி.

அடியிறை–பாதகாணிக்கை. அரிக்கு–சிங்கத்திற்கு. தென்னன்–பாண்டியன். பகடி–பரிகாசம். பெரும்போர்இலா நாள் பிறவா நாளே; இப்படைவீரன் கூற்று. 'கடவுளைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்ற பக்தர் கூற்றை நினைவூட்டுகிறது.

Koviloor Digital Library

உலண்டு–பட்டுநூலை உண்டாக்கும் ஒருவகைப் புழு.

இக்கலித்துறையில் காதலர் இருவருக்கும் ஏற்பட்ட கனாக் காட்சியின் தத்துவ உட்பொருளைக் காணலாம். இதுபற்றிய ஆசிரியர் குறிப்பு வருமாறு: 'பாசத்துக்குட்பட்ட ஜீவர்கள் செயும் ஈசுர பக்தியும், ஈசுரன் ஜீவர்களிடத்தில் வைத்திருக்கும் காருண்ணியமும் கேவல சாக்ஷாத்காரத்திற்கேதுவாயினும், அவ்வனுபூதி நிலையில் இல்லாது நீங்குவது பற்றி அவற்றையும் அஞ்ஞானத் தசையில் தோற்றும் தீர்க்க சொற்பனமான ஜகதாதி திரிபுடியோடு சேர்த்து விவகரித்தல் தத்துவ சாஸ்திர வழக்கம்.

மூன்றாம் அங்கம்-முதற்களம்

ஐயுறல்–ஐயம் அடையாதே. மருளும்–மயங்கும். கன்றும்–கோபிக்கும். திருவும் வெருவும் உருவும்: லட்சுமியும் மனோன்மணியின் அழகுக்குத் தோற்று அஞ்சுகிறாள் என்பது பொருள்.

செறுத்திடும் சிறை–அடைந்திருக்கும் அடைப்பு. மம்மர்–மயக்கம் பரிவுறல்–அன்புற்றிருப்பது. ஒரு படித்து–ஒரு தன்மையது.

ஏமாப்பு–இறுமாப்பு; இன்ப உணர்ச்சியோடு கூடிய செருக்கு. பிரபுத்துவம்–பிரபுவின் நிலைமை. நயந்திலன்–விரும்பிலன். வெருவலை–பயப்படாதே.

பொருநைத் துறைவன்–சேரன். வெறுக்கை–செல்வம்.

ஒன்னலர் ஏறே–பகைவர்களுக்கு ஆண்சிங்கம் போன்றவனே. அற்றம்–சமயம். அடையவும்–முழுவதும்.

நண்ணலர் கூற்றே–பகைவர்களுக்கு யமன் போன்றவனே. செருமுகம்–போர்முனை. ஆலவாய்–மதுரை. நிகாதார்–வஞ்சகர்கள்.

தவிர்–கொட்டு. விழுமிய–சிறந்த. நிருபன்–அரசன். ஓர்ந்து–ஆராய்ந்து விதிர்விதிர்ப்பு–நடுநடுக்கம். வெளவும்–அபகரித்துக் கொள்ளும். ஓவாது–நீங்காமல்.

இரண்டாம் களம்

எற்பாடு–முன்மாலைப் பொழுது.

நமது வேலை; (இங்கே) சுருங்கை அமைக்கும் வேலை. முடுக்குதல்–விரைவுபடுத்துதல். துன்று அரா–நெருங்கிய பாம்பு. காட்சியிற் செவ்விதாம்–காட்சியைக் காட்டிலும் அழகாய் அமைந்திருக்கும்.

எவ்வினையோர்க்கும்–எத்தொழில் செய்வோர்க்கும்.

Koviloor Digital Library

இலக்கு–லட்சியம்; குறி.

குறிப்பொடு–குறியே நோக்கமாக (இங்கே) பாரம்பரிய அபிவிருத்தி குறிக்கப்படுகிறது.

அடி–அடிஇதழ்

பூம்பராகம்–பூந்தாது. பரப்பித்து–பரவச்செய்து.

ஆசிலா–உள்ளீடு இல்லாத.

தூசிடை–ஆடையில்.

தோட்டி–துறட்டி.

சிறார் நீர்–சிறுவர்களே! நீங்கள்–அண்மைவிளி.

அயத்து–ஆடுகளிடம். புலன்–அறிவு.

கண் பனிப்ப–ஆனந்தக் கண்ணீர் துளிக்க.

'தாவர சிருட்டிகளின் செய்கை விசித்திரங்களிலும் தெய்வ அருள் நிறைந்து கிடக்கும் தன்மையை இவ்வரிகள் விளக்குகின்றன' என்பது இப்பகுதிக்கு ஆசிரியர் குறிப்புரை. தாவர நூல் உண்மைகளை இப்படிப் பயன்படுத்திக் கொள்ளும் கவிஞர் மனோபாவம் பாராட்டத்தக்கது.

'சிறு வாய்க்கால் குறித்த நடராஜன் தனிமொழி குறித்து பூத பௌதிகங்களாகிய ஜட சார்த்தங்களின் சலனங்களிலும் விளங்கும் அருள் விசேஷத்தை இவ்வரிகள் காடுகின்றன' என்பர் ஆசிரியர்.

முந்நீர்மடு–சமுத்திரமாகிய மடு.

அண்டயோனி–சூரியன்.

தூங்கியும்–தொங்கியும்.

எழலியாய்–மேகமாய். பினை–பின்னே.

பாடு–உழைப்பு; துன்பம்.

வேதித்து–பேதித்து. பொறை–பொறுமை.

நாங்கூழ்ப்புழுவை நோக்கி நிகழும் தனிமொழியில், 'அற்ப ஜீவ ஜந்துக்களிடத்திலும் பேரருள் அமைவுற்றிருப்பதற்குச் சான்று காணலாம்' என்பது ஆசிரியர் குறிப்புரை. இப்படி உயிர் நூல் உண்மைகளைப் பயன்படுத்திக் கொள்வதும் இந்த ஆசிரியரின் விஞ்ஞான மனப்பான்மைக்கு உரியதொரு சிறப்பியல்பாகும்.

Koviloor Digital Library

அலகிலாத் தோற்றம்–எல்லையில்லாத தோற்றம். சிற்றாடி–சிறுகண்ணாடி. தீயன்–(இங்கே)பலதேவளை மங்குலுக்கு–மேகத்திற்கு. செந்நிறப்படாம்–சிவந்ததுகில். பொதியில்–பொதியமலை. பொற்பு உறு–அழகமைந்த.

கரு–பொன்னை உருக்கி வார்க்கும் இடம். ஆடகப்பெருக்கு–உருக்கி ஓடவிட்ட தங்கம். அருக்கன்–சூரியன். துவண்டு–அசைந்து. பதாகை–கொடி. வஞ்சியன்–சேரன்.

வஞ்சித் தாழிசை

அரிகாள்–பகைவர்களே. சஞ்சிதப் பெருவாழ்வு–மிஞ்சியிருக்கும் பெருவாழ்வு. மஞ்சுளம்–அழகு.

கடிஞை–பிச்சையெடுக்கும் மண்டையோடு. எள் நெஞ்சிலும் நினையார்; தர்ப்பண எள்ளைப் பிதிர்க்கூட்டம் இனி இழந்துவிடும் என்பது பொருள். வார்கழல்–நீண்ட வீரக்கழல். வயப்படை–வலிமை வாய்ந்த படை.

வஞ்சித் தொடை–(போருக்குப் புறப்படுவோர் அணிந்து கொள்ளும்) வஞ்சிப் பூமாலை. தண்ணுமை பொருவு–மத்தளத்தை ஒத்திருக்கும்.

பொருப்பில்–மலையில். உருமு–இடி. இருகனல்–(இங்கே) கண்கள்.

முகில்–மேகம். இங்கே முகத்தைக் குறிக்கும். கோப மிகுதியால் கண்கள் சிவக்க, முகம் மேகம் போலக் கறுத்து மின்னல் போல வெளிப்படுகிறதாம் கோபச்சிரிப்பு. (சினநகை). குரத்த–காற் குளம்பையுடைய கொய்யுளைத் திரைக் கடல்–கொய்த பிடரி ரோமங்களையுடைய அலைகடல், (இங்கே) அலை கடல்.

பெய்மத மைம்முகில் ஈட்டம்–மதங்கொண்ட கருமேகங்களின் கூட்டம், (இங்கே) யானைக்கூட்டம். விலோதனப் பெருஞ்சிறை–கொடிகளாகிய பெருஞ்சிறகு.

அசலத்திரள்–மலைக்கூட்டம் (இங்கே) தேர்கள், தேருக்குச் சிறகு கொடி.

படிறன்–வஞ்சகன். மலையன்–சேரன். கேட்டி–கேட்பாய்.

ஆமைப் பலகை–ஆமை வடிவாகச் செய்திருக்கும் பலகை.

குடகன்–சேரன். படியோர்–உலகினர். திருவார் வாணி–லட்சுமியை ஒத்த வாணி. தேற்றமில்–தெளிவில்லாத.

சுகம் தரும் மொழி–கிளிப் பிள்ளையின் பேச்சு. முனும்பினும்–முன்னும் பின்னும்.

Koviloor Digital Library

அங்காடி–கடைத்தெரு. புரைவழி–ஒட்டை வாயிலாக.

உழையுளார்–பக்கத்தில் உள்ளவர்கள்

மூன்றாம் களம்

கையறு நித்திரை–செயலற்ற உறக்கம். கீண்டலும்–கிளறுதலும்.

சித்திர ரேகை–சித்திரலேகை. உஷையின் தோழி–இவள் உருவங்களைச் சித்திரித்துக் காட்டுவதில் வல்லவள்.

பண்இயல் வாணீ–இசையில் வல்லவளான வாணியே.

பாடு–துன்பம்.

சிவகாமியின் சரிதம்

ஈயீயன்–ஈந்தால். பாழ்அடவி இதில்–பாழான இந்தக் காட்டில். உறுவை–மிகுதியாக அடைவாய். சாரும் வரை–அடையும் கோடு. ஆரிருளில்–நிறைந்த இருளில். உடலம் ஆறும்...நெறியருளாய்: இதற்கு இரு பொருள் உண்டு. முத்திநெறி அருளால் என்பது தொனிப்பொருள்.

சிந்தையற...பந்தம்:–விடுதலை நெறி விரும்பியவனுக்கு விடை இது. சிந்தை என்பதே அற்றுப் போகும்படி செய்துகொண்டவருக்கு வீடு வாசல் என்ற பந்தங்கள் சேர்வதற்கு இல்லை என்பது பொருள். பணிப்பாய்–அலங்காரமாகச் செய்யப்பட்ட பாய். பூஅணை–மலர்ப்படுகை.

என்பாலுறுவது–என்னிடம் பொருந்தியிருப்பது. பனித்து–நீர் துளித்து. வணங்கா–வணங்கி. தாரகை–நட்சத்திரம் அன்றில்–ஒருவகைப் பறவை. விளிப்பவரில்–அழைப்பவரைப்போல. வாவல்–வௌவால்.

இறைவி–அரசி. இறுத்தனள்–தங்கினாள். பொறியரவு–புள்ளிகளையுடைய பாம்பு. சுடிகை–முடி.

பொலன்மணி–அழகிய நாகரத்தினம். கறையடி– யானை (உரல் போன்ற அடிகளையுடையது). புலை–இழிவு மருப்பு–கொம்பு. அறிவரிய–அறிதற்கரிய. உழுவை–புலி. அடவியிடை–காட்டிலே.

ஒருங்கு ஆர–ஒன்றாக நெருங்கியிருப்பதால். நிறைமுளரியுழை–நிறைந்த முட்காடுகளை. சார்பு இலர்–பற்றுக்கோடு இல்லாதவர். தனித்துணை–ஒப்பில்லாத துணை. நேர்ந்தவரை–அடைந்தவரை. நும் நிறுவு–நுட்பமாகப் பொருந்திய. நிமலவிறகு–சுத்தமான விறகுகள். ஒன்றிய மெய்ப்பத்தரில்–மெய்ம்மை வாய்ந்த பக்தர்களைப்போல.

பனிப்பு–நடுக்கம். பலமூலம்–இது பழமும் கிழங்குமாகிய உணவு.

Koviloor Digital Library

நம் நாவில் ஒரு விரலை–தம்முடைய நாவினாலே ஒரு விரற்கிடை தூரத்தை நவினாலே கிண்டொலியை எழுப்பி ஒரு விரற்கிடை தூரத்தைத் தாண்டிவிட்டால் அமுத கலையை உண்ண வகையுண்டு என்பது ஹடயோகியர் கொள்கை.

கந்தம் முதல் அனந்த இனம்–கிழங்கு முதலிய அளவற்ற வகைகளை. வகுத்து–ஒழுங்குபடுத்தி. வருந்தினவ– வருந்தினவனே. இருவருமே ஒருவர்–இது வேதாந்தக் கொள்கை. செறிந்து–நெருங்கி. உறைதிட– உறைவாய்; தங்குவாய். மனம் இறந்து–(இங்கே) மனம் ஒடுங்கி. மலைவு– மயக்கம்.

வெளிவரும் வகை–உள்ளத்தில் உள்ளது வெளிவரும் விதமான வார்த்தைகளை. பதுமம்–தாமரை. கருதிடுவான் எண்ணுவான். இவண்– இங்கே. மெய்விடுத்துக் கழறாய்–உண்மையை மனம்விட்டுச் சொல்வாய்.

கையாரும்–கை நிறைந்த. இலவு–இலவம்பழம். இலவு காத்த கிளிபோல் என்பது பழமொழி. வறிதே–வீணானதே. இடுகலன்–இட்டு வைத்த பாண்டம். பிறங்கும்–விளங்கும். ஏதிலன்–அந்த அன்னியன். யதி–துறவி. இறும்பூது– அதிசயம். ஆன–ஆயின. நின்மலவிபூதி–தூய்மையானவிபூதி. நீறுபடி– சாம்பல் பூத்த. உள் கூசி–உள்ளம் கூசி. தெரிக்கும்–தெரிவிக்கும்.

வீசு உலையின் மூக்கு– காற்றை வீசும் உலைக்களத்திலுள்ள துருத்தியின் மூக்கு. விம்மிய–அதிகரித்த. வெய்து உயிர்ப்பு–வெம்மையான பெருமூச்சு வீங்க.

அடல் பெரியர்–வலிமையால் பெரியவர். அலகில் வடிவுடையவர்– அளவில்லாத அழகுடையவர். புளகம் மூடி–மயிர்க்கூச்செறிய. இளம்பிடி– இளம்பெண்; யானை போன்ற இளம்பெண். தலை தடுமாறா–தலை தடுமாறி, ஒழுங்கு தவறி. தமியளது–தனியாளாகிய எனது தகைமை–பெருந்தகைமை. வடிறு–வஞ்சகம். பொலம் அழகு.

திருவாருஞ்சேடியர்–அழகு பொருந்திய தோழிமார்கள். ஆயத்தார்– தோழிமார்கள். வேலை–கடல். அகோராத்திரம்–பகலும் இரவும். காலும்– காற்றும். கட்டம்–கஷ்டம். ஒல்லை–விரைவில். இல்லிடம்–வீட்டினிடம். கதுவ– பற்ற. கரந்து–மறைந்து. திருக்கறு–மயக்கமற்றிருக்கிற. பல்குருக்கள்– பலகுருமார்கள். மன்றுஅதைத்தும்–அம்பலங்கள் எல்லாம். வறிய–(அவர் இல்லாமையால்) வறுமையுற்றனவாய்க் காணப்பட்டன.

மறுத்துறங்கும்–மயக்க நித்திரையை மறுத்து யோக நித்திரை கொள்ளும்.

Koviloor Digital Library

மான் மறவா–பெண்மானை மறவாத. கலையினமே–ஆண்மானின் கூட்டமே. பிடி–பெண்யானை.

மதம் பெருகும் மாகுலமே–மதம் பெருகுகின்ற ஆண்யானையின் கூட்டமே. வன்பிகமே–வன்மையுள்ள குயிலே. சுகமே–கிளியே. எஞ்ஞான்றும்–எப்பொழுதாவது. நவில்விர்–சொல்லுவீர். நாள் அனந்தம்–பல தினங்கள்.

இப்பகுதிக்கு ஆசிரியர் குறிப்புரை: அஞ்ஞானி மயக்கம் விடாத அறுபத்து நான்கு கலை ஞானங்களே! பிடிவாதமே வாழ்க்கையாகக் கொண்ட மதச்சரவுகளாலெழும் ஆரவாரமே! அனிர்த சட துக்கரூபமாகிய இஹலோகமே! சுகம் சுகம் என்று கூறப்படும் இந்திராதிபத மோக்ஷங்களாகிய பரலோகமே என்னும் தத்துவார்த்தம் ஒருவாறு தொனித்தல் காண்க.

காயம்–(இங்கே) உடம்பு. உளதே–உளதோ. சிறிசாயை! (உருவத்தின்) சில சாயை. மூதுருவம் விளக்கி–பழைய உருவத்தை நன்றாகக் காட்டி. முந்திமொழி குளறி–முற்பட்டு மொழிகள் தடுமாறி. சுருதி–வேதம்.

பாரதி–சரஸ்வதி, கஞ்சப் பார்க்கவி–செந்தாமரை மலரில் தங்குகிற லட்சுமி. அருங்கதி–வேறு யார்க்கும் கிடைத்தற்கு அரிய கதி அல்லது அன்பு நிலை. ஆர்க–நிறைவதாக. ஆரணங்கள்–வேதங்கள். ஆர்த்த–ஆரவாரம் செய்தன.

நலம் மேவ–நன்மையடைய. பந்தனைகள் சிந்த–கட்டுகள் (இங்கே) துன்பங்கள் கெட. உணர்வைகொல்–உணர்வாயோ; தெரிந்திருக்கிறாயோ. சிறுகாற் செல்வன்–தென்றற்காற்றாகிய அருமைச் செல்வன். கடிபுரி–கட்டுக்காவல் அமைந்த கோட்டை. எதிர்ச்சியா–எதிர்பாராத நிலையில். தெண்ணீர்க் கன்னி–தெளிந்த நீராகிய பெண். நிலா நிழற் சிற்றில்–நீரில் பிரதிபலிக்கும் சந்திரனது நிழலாகிய சிறிய வீடு.

"சிற்றில் சிதைத்தல்" என்பதைப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தில் ஓர் உறுப்பாகக் காணலாம். காவி–நீல மலர். அடர்த்து–கொய்து. உள்மணம் உகந்திலன்–அந்தப்பூவின் மணத்தை நான் உகந்தேன் இல்லை. அதாவது அந்தப்பூவை அடிக்கடி மோந்து பார்த்து அம்மணத்தில் எனக்குள்ள உகப்பை வெளிப்படுத்தவில்லை.

அறியார்மான–அறியாதவர் போல். தீம்புனல் மாடே–இனிய நீர்ப் பெருக்கிலே (மாடு–பக்கம்) பூதப் பொருட்கே–ஸ்தூலப் பொருள்களுக்கே. போகப்பொருள்–ஞானப்பொருள். இரவி–சூரியன். துவக்குஇந்திரியம்–தொட்டு உணரும் புலன்.

Koviloor Digital Library

சேய்த்தாம்–தூரத்தில் உள்ளதாகும். களங்கம்..... அங்கு எதுவும்: 'கள்ளம் போனால் உள்ளது காணும்' என்று நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் நந்தனார் கூறுவதை நினைவூட்டுகிறது. உண்மையாய... சென்றிடும்– 'அழுது முறையிட்டால் அம்பலத்தே கேட்கும்' என்ற கீர்த்தனை நந்தனார் கூற்றை நினைவூட்டுகிறது.

வடக்கு நோக்கி–திசையறி கருவி. ஏய்ப்ப–ஒப்ப. அனுமாதி–(அனுமான ஆதி) அனுமானம் முதலிய அளவுகள். வெஞ்சரம்–கொடிய அம்பு. நிற்கலை–நிற்கவில்லை. தீர நற்றிருவே!–தீரமுள்ள அழகிய லட்சுமி போன்றவளே.

நான்காம் களம்

குரூரக் கூற்றின் விரூபம்–குரூரமான யமனது ஓர் அவலட்சண வடிவம். பல்குழி–பல்குழிகள் பசையறு–இரக்கமற்ற, அல்–இருள். பேழ்வாய்–பெரியவாய். கருக்கொளுஞ்சினை ஈ–கர்ப்பமாக இருக்கும் ஈ. வெருகென–பயப்படும்படி. வெந்–முதுகு. இசித்து–இழுத்து. கறிக்க–கடிக்க. மிகில்–மிகுதியாக இருந்தால். பஞ்சாசத் கோடி–ஐம்பது கோடி யோசனை விஸ்தீரணம் உள்ளது உலகம் என்பது புராணக் கொள்கை. அலகில்–அளவில்லை.

உந்தியத் தடாகம்–கொப்பூழாகிய குளம். நான்முகச் சிலந்தி–பிரமனாகிய சிலந்திப் பூச்சி. நாற்றிய–தொங்கவிட்ட. பேய்த்தேர்–கானல்நீர். மகோததி–பெருங்கடல் (மகா உததி) புற்பதம்–நீர்க் குமிழி. திரிகை–திரிக்கும் இயந்திரம். ஆர்க்கும்–ஆரவாரம் செய்கின்ற. பிரத்தியக் பிரபோதோதயம்: உள்முகமான பிரபோதம் அல்லது மெய்ஞ்ஞானத்தின் உதயம். அகண்ட சித்கனம்–எல்லையற்ற அறிவின் நிறைவு.

நிருபாதிகம்–காலதேச விவகாரங்களைக் கடந்து நிற்கும் நிலை. பதையாதிருந்து–அமைதியாக இருந்து. சுதமாம்–தானே பலிக்கின்ற. அநுபூதி–அனுபவஞான நிலை. ஈனனாம்–இழிந்தவனாகிய. புரையறு குரவன்–குற்றமற்ற குரு. நிமல வீடு–தூய விடுதலை. உஞற்றி–செய்து. சினகரம்–கோயில். பரிசின்றி–தன்மையன்றி. கையறு–உதவியற்ற. சங்கேதம்–குறியீடு. கரதலாமலகம்–உள்ளங்கை நெல்லிக் கனி (கரதல ஆமலகம்).

விண்டிடாவண்ணம்–பிரிந்து போகாத வண்ணம். வீக்கிய–கட்டிய. பாசம்–கயிறு. ஆகருஷணம்–இழுத்து நிற்கும் சக்தி. யாப்புற்று–கட்டுண்டு அமைந்து. குயிற்றிய–இயற்றிய. பூரிய உயிர்–இழிவான உயிர். அக்கரம்–அட்சரம்.

Koviloor Digital Library

அத்தனை துயரும்...அக்கினி; 'சுடச் சுடரும் பொன் போல ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு'–குறள். பாரிசாதாதி பனிமலர்–பாரிஜாதம் முதலான குளிர்ந்த மலர்கள். அலர்தல்–மலர்தல். விளர்–வெளுத்த. உறுகாரணம்–பொருந்திய காரணம். நிசி–இரவு.

'பாரிஜாதம் முல்லை முதலிய பூக்கள் வெண்மை நிறமும் சுகந்தமும் உடையனவாயிருப்பதற்கு அவை இராக்காலம் அலர்தலே காரணம் என்பது ஜீவாசாஸ்திரிகளின் கொள்கை'என்பது ஆசிரியர் குறிப்பு. உறுகண்–துன்பம். அருங்கை–அருமையான கை. எய்ப்பினில் வைப்பு–இளைத்த காலத்தில் உதவுவதற்கு வைக்கப்பட்ட பொருள்; சேமநிதி.

கலித்துறை

ஆபதம்–ஆபத்து. கற்படை–சுருங்கை. மாற்றம்–சொல்.

இக்கலித்துறை, 'சுந்தலத் சமைத்த சுரங்கத்தைத் தத்து வோபதேசமாக உருவகப்படுத்தி அனுபூதியாலன்றி உபதேசார்த்தம் வெளிப்படாதென்று வற்புறுத்துகிறது'என்பது ஆசிரியர் குறிப்பு.

நான்காம் அங்கம்-முதற்களம்

காண்தகும்–காணத் தக்க (வலிமையும் வனப்பும் வாய்ந்த). கடம்பாடு–கடமை.(கடன்படுதல்). கொக்கென அடங்கி: 'கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்று அதன் குத்து ஒக்க சீர்த்த இடத்து' என்பது குறள்.

சம்பவம் சங்கதி–சம்பவம் நேரிடுவது. சங்கதி–தொடர்பு காப்புக–காவல். இதக்கேடு–நன்மைக்குக் கேடு. அதிர்கழல்–முழங்குகின்ற வீரக்கழல். பாற்றினம்–கமுகுக்கூட்டம் (பாறு+இனம்).நிணப்புலால்–கொழுப்பொடு கூடிய மாமிசம். பணைத்து–பருத்து. பருதிவை வேல்–பிரகாசிக்கும் கூர்மை. பருகியும்–எதிரிகளின் உயிரைக்குடித்தும். குறுவாள்–சிறுவாள். பகழி–அம்பு. மல்கிய–நிறைந்த. உருமு–இடி. கலினம்–கடிவாளம். சூரத்தால்–காற்குளம்புகளால். புரவிகள்–குதிரைகள்.

கூன்பிறைத் துணைமருப்பு–வளைந்த பிறைச் சந்திரனைப்போன்ற இரண்டு கொம்புகள். மர்மம்–மயக்கம். வாரணப் புயலினம்–மேகம் போன்ற யானைக்கூட்டம். கறுவி–கோபித்து. வெந்நிட்டு–முதுகுகாட்டி. புரந்தரன்–தேவேந்திரன்.

இந்திரனை முதுகு காட்டி ஓடச் செய்த பாண்டியன் உக்கிரம குமாரன் என்பது திருவிளையாடற் புராணம். பொருப்புகள்– மலைகள். இந்திரன் தன் வச்சிராயுதத்தால் மலைகளின் சிறகுகளை அரிந்தான் என்பதும், மைநாகம் போன்ற சில மலைகள் தப்பி மறைந்தன என்பதும் புராணக் கதை. கொடிஞ்சி–

Koviloor Digital Library

தாமரைப் பூப்போல் செய்து தேர்த்தட்டின் முன்னே வைக்கப்படுவது. இருஞ்சிறை–பெரிய சிறகுகள்.

யாக்கையின்–உடம்பின். சோரி–இரத்தம். பொன்றிடும் அளவு–சாகும் அளவும். விந்தம் அடக்கினோன்–விந்திய மலையின் கர்வத்தை அடக்கிய அகத்திய முனிவன். சிறுகால்–இளங்காற்று. கோட்டமில்–கோணல் இல்லாத திருவனையார்–லட்சுமி போன்ற மனைவியர். அரி–சிங்கம். இந்தனம்–விறகு. உகம்–யுகம். திருந்தலீர்–பகைவர்களே. இறந்து கோட்டக்கது–இறந்தும் கொள்ளத்தக்கது. உதும் பரதரு–அத்திமரம். இறும்–இறக்கும். மசகம்–கொசு.

குறளடி வஞ்சிப்பா

தமர் சுற்றத்தார். நந்தா–கெடாமல். நிந்தாநெறி–நிந்தையாகிய வழி. தந்தாவளி–பல்வரிசை. சிந்தா விழ–சிந்திவிழ. அடல்–வலிமை. பெயருமின்–புறப்படுங்கள். கருமுகில்–கருமேகம்.

கலித்தாழிசை

செருக்கொழியின்–கர்வத்தை ஒழித்துவிடுங்கள். தெவ்வீர்காள்–பகைவர்களே. சின்னமதி–அப்படிச் செய்யாமலிருப்பது சொற்ப புத்தி. சயிக்கும் எமன் எனச் செருக்கு–எமது அரசன் ஜெயிப்பான் என்று கர்வம் கொண்டு (யமன்–எம்மன்).

இரண்டாவது கலித்தாழிசைக்குப் பொருள்: விஜயலட்சுமி இந்த ஊர்காக்கும் வீரர் புயமே தன் குடியிருப்பாக உடையவள். ஆதலால் ஓடிப் போய் விடுங்கள் பகைவர்களேஇவர்களுடைய வாள் விஷமாகுமா என்று ஓடாமல் நிற்பீராயின் எமனுடைய திசையை நீங்கள் மறக்கமாட்டீர்கள். அத்திசையை உங்களுக்கு வழங்கினோம். 'இவர் வாள் உறைவிடம்' என்ற சொற்களுக்கு இப்பொருள் உண்டு.

மூன்றாம் கலித்தாழிசையின் பொருள்: நம்மனையைக் காக்க உருவிய வாளுக்குப்பின் இடும்படியான உறை இல்லை: அதாவது நோக்கம் நிறைவேறுவதற்கு முன் சமாதானப்படுத்தவில்லை. இதனை எதிரிகள் சிந்தனை செய்யவேண்டும். அப்படிச் சிந்திக்காமல் நாங்கள் முன் வைத்த காலை பின் வாங்கமாட்டோம் என்று பகைவர்களே நீங்கள் திரும்பாமல் நின்றுகொண்டிருப்பீராயின், இந்த வாள் தூரத்திலிருக்கும் உங்கள் மனைவியரின் மங்கல நாணை அறுத்துவிடும். இதை முன்கூட்டியே சொன்னோம்.

Koviloor Digital Library

இரண்டாம் களம்

அடுகளம்–போர்க்களம். குரோதம்–கோபம்,விரோதம். உன்னுதி–நினைத்துப் பார்ப்பாய். சுதேசஅநுராகம்–சுதேசப் பற்று; சொந்த நாட்டபிமானம். புரையற்றோர்–குற்றமற்றவர்கள். உறுபணி–பொருந்திய பணி. ஏலும்–இயலும். நம்பாலாய்–நமது வசமாய். பரி–குதிரை. வாம்பரி யமர்மின்–தாவும்குதிரை மீது அமருங்கள். உன்னுழை–உன்னிடம். வீதல்–கெடுதல்; சாதல். வயப்பரிவீரர்–வலிமை வாய்ந்த குதிரை வீரர்கள். இமைப்பளவின் கண்–கண் இமைக்கும் அளவில். சேம்மல்–(இங்கே)அரசன்.

மூன்றாம் களம்

கைவதற்கு–பாண்டியனுக்கு. தமியள்–தனியளான, ஒன்றியாய் இருப்பவள்; மனோன்மணி.

மதிவருகுலம்–சந்திரகுலம். மறுவறு–குற்றமற்ற. நறவே–தேனே. இன்னார்க்கு–பகைவர்க்கு. இரிந்து–நிலைகெட்டு. பதடி–பதர் போன்றவன். கார்முகம்–வில். கடிவாள்–கூர்மையான வாள். பேசன்மின்–பேசாதீர்கள். வீசுமின்–வீசுங்கள். அகன்மின்–விலகி நில்லுங்கள். செருமுகம்–போர்முனை. செகுத்து–அழித்து. ஓம்பவோ–காப்பாற்றவோ. மருந்தாய்–அமிர்தமாய். அஞர்–துன்பம். தனயள்–புதல்வி.

சூதக–அசுத்தமான உடம்பு. எம்மனீர்–எம்மைச் சேர்ந்தவர்களே. அழுங்கார்–துன்பமுறாதவர். இழந்திலம்–இழந்தோமில்லை. அழகு ஆர் அம்புயம்–அழகு நிறைந்த தாமரை. எவ்வும்–எழுந்து துள்ளுகிற. அணியார் பந்து–அழகு பொருந்திய பந்து. உறும் அடிபோல்–அடைகின்ற அடிபோல. தக்கோர் சார்பு–தகுந்தவர்களின் துணை. ஊழை–விதியையும். மண்டு அமர்–நெருங்கிப் புரியும் போர் தேறுமாறு–தெளியும் விதம். வஞ்சியர்–சேர மன்னனைச் சேர்ந்தவர்கள். கிளர்போர்–எழுகின்ற போர். யாண்டு–எங்கே; எப்பகுதியில். உரத்திடை–மார்பில். உய்ப்பையேல்– என்னை உய்ந்து போகச் செய்வாயானால். சழக்கு–குற்றம்.

வெலற்கு–வெல்வதற்கு. உழையுளார்–பக்கத்திலுள்ளவர்கள். மதிகுலமருந்தே–சந்திர குலமாகிய பாற்கடலில் அமுதம் போலத் தோன்றியவனே. மடங்கல்–சிங்கம்.

விரிதலை–இடம் அகன்ற திருவனந்தபுரம். இவ்வயின் உற்றது–இங்கே நடந்தது. சிங்கச் செருத்திறம்–சிங்கங்கள் போல நாம் செய்து முடிக்கும் போர்த்திறம். உனி–உன்னி. உதியன்–சேரன். அற்றம்–சமயம். தெருள்–தெளிவு. தொடை–மாலை. தூதுவனா–தூதுவனாக.

Koviloor Digital Library

கும்பநீர்–குடம்நீர். நிம்பமாலை–வேப்பமாலை. மதில்திறம் மதித்து–கோட்டை மதிலின் பலத்தை மதித்து. மட்பரி–மண் குதிரை. தாரும்–மாலையும். ஒடத்திறு–தண்டிக்க. உழிஞை–பகைவருடைய அரணை முற்றுகையிடுபவன். சூடிக்கொள்ளும் பூமாலை. உரையாதே–உரையாமலே. அவாவிய–விரும்பிய. சுரும்பார்வேம்பும்–வண்டுகள் மொய்க்கும் வேப்ப மாலையும். விதுகுலம்–சந்திரகுலம். நொச்சி–முற்றுகையிடப்பட்ட கோட்டையைக் காப்பவர் சூடும் பூ மாலை. என்மதி–என்ன புத்தி. உன் இறை–உன்தலைவன்; என் அரசன் ஏதம் இல் குற்றம்–குற்றம் இல்லாத. எனவோ– என்னுடையனவோ. ஒல்கலை–தளராதே. உரவோர்–மன வலிமையுடையவர்கள். உம்பல்–யானை. நாணால்–கயிற்றால். பாவை–மரப்பொம்மையை.

உயிர் மருட்டுதல்–உயிர் இருப்பது போல் அசைத்து மயங்கச் செய்வது. ஒட்டார்–பகைவர். தப்பிலி–போக்கிரி. பாழ் வாய்–பாழான வாய். பகைக்கலை–பகைத்துக்கொள்ளாதே. பிரியப்படுகை–பிரியம்கொள்ளுதல் (காம வழி நேரிட்ட பகையாதலால்) என்பது ஆசிரியர் குறிப்பு. மிண்டலை–பேசாதே (மலையாளச் சொல்).

நான்காம் களம்

மருவரு–அணுகுவதற்கு அரிய. அடங்கலும்–முழுவதும். இவுளி–குதிரை. கடகயம்–மதயானை. ஆஞ்ஞை–கட்டளை. அகழ்கணம்–அகழ்கூட்டம். உரம் நோக்குதி–மார்பைப்பார்.

என் தங்கையின் இழிவு இப்படி எனக்கே: 'இது பலதேவனுடைய சோரக் காதலியின் சகோதரன் பலதேவனை வேலால் குத்தியபோது கூறிய மொழி' என்பது ஆசிரியர் குறிப்பு.

மேவருந்தொடி–பொருந்துதற்கு அரிய வளையல். ஒவலில்–நீங்குதலில்லாத. கனை கழற்படை–ஒலிக்கும் வீரக் கழலையுடைய காலாட்படை. வறிதே பிழைத்தனர்– பிழை செய்தனர். ஆர்த்திட–ஆரவாரிக்க. என்போலிகள்–என்னைப் போன்றவர்கள். பொருதுளேன்–போர் புரிந்துள்ளேன். இல்லிளை–வீட்டில். நடுமயிர்த் தூக்கின்–நடுவிலே கட்டி இறக்கிய மயிர் உரியைப் போலும். கருமருந்து–வெடிமருந்து. இரந்தேன்–யாசித்துக் கேட்டுக்கொண்டேன். அற்றமில்–முடிவில்லாத. கருத்திருப்பு–கருத்தின் நிலை நுஞ்சல் என் சிரம் ஆயினும்–உம்முடைய சொல்லை என் தலைமேல் நான் கொண்டிருந்தாலும். உன்னினம் சூதே–நாராயணன் சூதே நினைத்தான். சேயினும் எளியன்–அரசன் குழந்தையைக் காட்டிலும் அறிவில் எளியவன்.

Koviloor Digital Library

ஐந்தாம் களம்

வேய்–மூங்கில். முளையும்–மூங்கிலும், அகத்தே வயிரம் இல்லாமல் புறத்திண்மை உள்ள மூங்கிலைப் புல்லினத்தைச் சார்ந்தது என்பர். காழ்பெறுந்தரு–அக உறுதி பெற்றிருக்கும் மரம். சேணுயர்–மிக உயர்ந்த. சூறை–சூறாவளி. காழறு–வயிரம் இல்லாத. ஒருயிர்ப்பேனும்–ஒருமூச்சேனும். அறைதி–சொல்லுவாய். வெருவுத்தீக்குருவி–பயப்படுகிற, ஆஸ்திரிச் என்னும் நெருப்புக் கோழி என்ற பறவை. வெருவார் மான–அஞ்சாதவர் போல. இலக்கமில் முறை–எண்ணிக்கையில்லாத தடவை. துயர்க்கணம்–பல துயரங்கள். மாநிதி வழிஞர்–பெருஞ் செல்வத்தோடு பிரயாணம் செய்வோர்.

ஆர்கலன்–பொருந்திய மரக்கலம். புயல்கால்–புயல் காற்று. திரிந்து தியங்குமேல்–மாறிக் கலங்குமானால் மீகான்–கப்பல் ஓட்டி; மீகாமன். வதிந்து–வசித்து (இங்கே) தங்கி. தக்க கால்–தகுந்த காற்று. ஒன்றுவன்–பொருந்துவன். உழையுளார்–பக்கமுள்ளவர் (இங்கே) மரக்கலத்திலுள்ளவர்கள்.

திமில்–மரக்கலம் (இங்கே) அரசாகிய மரக்கலம், பாய் மரம்; குடிலனைக் குறிப்பதாகச் சுட்டிக் காட்டுகிறார்.

துவாத சாந்தத் துறை–மதுரைக்கு ஒரு பெயர். நிவாதமா–நிவாதமாக; உறைவிடமாக நிவாதம் என்பது காற்றின்மை என்றும் பொருள்படும். நயப்பிற்கு–அன்புக்கு. என்செய–நான் என்ன கைம்மாறு செய்வது.

குடிலனைச் சுட்டிக் கூறிய பாய்மரம் நாராயனனைக் குறிப்பதாக மயங்குகிறான் ஜீவகன்.

தெருட்டிட–தெளிவிக்க. வேற்றமையுருவாய்; 'மாறுபாடு செய்தலே இலக்கமாக உடைய'என்பது ஆசிரியர் குறிப்புரை. ஓர் இயல்–ஓர் அரசியல் உபாயம்.

அவர் ஆண்ட நாட்டு எல்லை காட்டுமோ கொடிய காலக் கரப்பே–அவரது ஆட்சி காலகதியில் மறக்கப்பட்டு ஒழிந்துபோகாமல் என்றும் நினைவில் விளங்கித் தோன்றுமோ என்பது கருத்து.

பொன்றினும்–அழிந்தாலும். பொறித்த–நிறுவிய. அற்றதோர் கவந்தம்–தலையற்றதொரு முண்டம். பெற்றி–தன்மை. பேசாய் விடுத்தே–மனம் விட்டுப் பேசுவாய். சேய்மையுனி–தூரத்தை நினைத்து. நீ தொடர் இயல்–நீ பின்பற்றிவரும் ராஜ்ய தந்திர நயம். மருங்கு–இடம். மனக்கோள்–மனக்கொள்கை. பொன்றிட–அழிந்திட. பின் பொன்றுதல்பின் யானும் அழிந்து போவது தாதான்மிய பலம். ஒன்று மற்றொன்று தன்மையாதல்; சேர்க்கை–வாசனை.

Koviloor Digital Library

வெங்கரா–கொடிய முதலை. பிற்கிளை–சந்ததி. குழந்தை முதலியன. நின்னுழை–உன்னிடம். பெயர்ந்துழி–மாறிய போது. கோடல்–கொள்ளுதல். சுருங்கை–நிலத்துக்குள் குடைந்து தோண்டிய வழி. சாலிபுரம்–திருநெல்வேலி.

அதன்புறம் அடர் புலப்படை–அதன் வெளிப்புறத்தினிடத்திலே வந்து முற்றுகை செய்யும் சேனை.

மாபதி–(இங்கே) மதுரை. அளித்தருளுதியேல்–காப்பாற்றுவீரானால். மறலி–யமன். அனையிலா–தாயில்லாத. கற்படை–சுருங்கை. பிரதிபந்தம்–தடைகள். கொன்னே–வீணாக. இமைக்கொட்டும்–இமை கொட்டும் பொழுதும். குகுநாள்–அமாவாசை நாளில். பரவை–சமுத்திரம். சமழ்ப்பு–குற்றம்: நாணம். நளி–தேன். ஒறுத்து–வருத்தி. முறி–அறை(மலையாளச் சொல்).

குணப்பிரதம்–நன்மை தருவது. தேனார் தெரியல்–வண்டுகள் மொய்க்கின்ற மாலை:(இங்கே) மணமாலை. கருநா–விஷ நாக்கு. காண்டும்–காண்போம். அல்–இரவு. நுவல் தரு–சொல்லப்படும்.

பாண்டமேல்: 'மட்கலம் கடையிற்கொண்ட பொருள்களைக் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்; அப்படியன்றே, விவாகத்தில்கொள்ளல். இது ஓர் கிராமியப் பழமொழி என்பர் ஆசிரியர்.

உசாவி–விசாரித்து. விருத்தமாய்–எதிரிடையாய். கலுழுநள்–அழுகிறாள். நதம்–அழகு. ஒவா–நீங்காத. மீட்குதும்–மீட்டுக்கொள்வோம்.

ஐந்தாம் அங்கம்: முதற்களம்

இருசரம்–வில்லின் இரண்டு சரங்கள்; (இங்கே) இருவகை உபாயம். அணைத்து–அணுகி. மனக்கோள்–மனக் கொள்கை. பாண்டில்–வண்டி. கோளோடு இளைஞர். நட்புரிமை கொண்ட சுற்றத்தாராக அமைந்திருக்கிறார்கள்.துன் இருள்–நெருங்கிய இருள். சாத்தியா சாத்தியம். (சாத்திய அசாத்தியம்) இது சாத்தியம் இது அசாத்தியம் என்பது. கம்மை–ஒலி. பொங்கு கால்–வீசும் காற்று: காற்று.

இரண்டாம் களம்

கிழவிபேச்சு...சின்னரக்காரிக்கு: 'இது ஒரு கிராமியப் பழமொழி' என்பது ஆசிரியர் குறிப்பு.

பாங்குள–பக்கத்திலுள்ள. அமளி–படுக்கை. தத்து–(இங்கே) விபத்து, கோட்டியே–வளையத்தே. கொன்னே–வீணாகி அண்ணிது–அண்மையில்

Koviloor Digital Library
25133
KOVILOOR DIGITAL LIBRARY, KOVILOOR

உள்ளது. பாதாதரவு–பாதத்தின் ஆதரவு. சுரத்து–காய்ச்சலில். உறுங்கால்–நடக்கும்போது. பாயிருள்–பரவிய இருள். மண்ணிய–தழுவிய–சேக்கை–படுக்கை. தொழும்பு செய்–அடிமையாக்குகிற–சூழ்–சபதம். வெள்ளில்–விளா; (இங்கே) விளங்கனி. வேதகம் செய்த–வேறுபடுத்திய. போதக யூதபம்–யானைக்கூட்டத்தில் தலைவனாயிருக்கும் யானை. வஞ்சாவசம்–அன்பின் வசம். கடபட சடம்–பலவகை ஜடப்பொருள்கள். (இடம்–குடம்.படம்–துணி.சடம்–உடம்பு).

மூன்றாம் களம்

அரிவையர்–பெண்கள். கோண் இலா–குற்றம் இல்லாத. அவ்வுழி–அந்த இடம். பொருவரும்–ஒப்பற்ற. நமர்காள்–நம்மவர்களே. மந்திரமாயின்–மந்திராலோசனையாயின். எள்ளரும்–இகழ்தல் இல்லாத. காப்பின்–காவலின். மானும்–ஒக்கும். விதைபடும்–விதை பொருந்தும். சந்தி–நிலைமை காலம்.

இறும்பூது அணையார்–அதிசயம் அடையாதவர்கள். ஆரா ஆர்வம்–நீங்காத அன்பு. ஆள்வினை–முயற்சி. கேள்வன்–துணைவன்; தலைவன். வாரம்–அன்பு. வீர ஆசாரம்–வீரஒழுக்கம். தற்பிரதிமை–அவனுடைய பிரதிரூபம். பலிதமாம்–பலனைத் தருவதாகும். அயிர்ப் புறார்–சந்தேகமடையமாட்டார்கள். தாபதம்–தவப்பள்ளி. ஆபதம்–ஆபத்து. அருட்கடல் அடிகள்–சுந்தர முனிவர். செய–செய்க. தினமணி–சூரியன்.

ஆர் துயர அளக்கர்–நிறைந்த துயரக்கடல். பிறகிடல்–பின் வாங்குதல். மறவி–எமன். வெறி கழுமி–வெற்றி நிறைந்து. பொறி அழியும் ஐம்பொறிகளின் ஆற்றலும் வீணாக அழிந்துகொண்டிருக்கும். வெம்பாவி–கொடியபாவி. விரவுதற்கு–சேர்வதற்கு. அகன்மின்–விலகிப் போய்விடுங்கள். அடிகாள்–சுவாமிகளே. தெருட்ட–தெளிவிக்க. யாண்டும்–எப்பொழுதும். வேட்பையேல்–விரும்புவாயானால். ஞாட்பிடை–போர்க்களத்தில், நாட்பு–வலிமை. தாரா; தார் ஆக; மணமாலையாக–'மணமாலையாகத் தன் கையிரண்டும் சூட்டி; என்பது ஆசிரியர் குறிப்பு. விள்ளா–விடாத; விட்டுப்பிரியாத. இந்நிசியாக: 'இன்றெனை இருத்தி' என்று சீதை அனுமனை வாழ்த்தியதை இது நினைவூட்டுகிறது.

கலித்துறை

திருக்கு–குற்றம்; மாறுபாடு.

'இக்கலித்துறை தற்சுதந்தரம் விடுத்து அருள் வழி நின்ற போதம் அதீதப்படு முறையை விளக்குகின்றது' என்பது ஆசிரியர் குறிப்பு.

✪✪✪

Koviloor Digital Library

பேராசிரியர்
சுந்தரம்பிள்ளை
இயற்றிய

மனோன்மணீயம்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்
41–B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை– 600 098.

ISBN: 81-234-0078-0
9 788123 400785
Code No.: A 313 Rs. 75.00